
இந்தப் பூக்கள் உனக்காக
லட்சுமி சுதா
இந்தப் பூக்கள் உனக்காக ★ லட்சுமி சுதா
இந்தப் பூக்கள் உனக்காக
லட்சுமி சுதா

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/

# இந்தப் பூக்கள் உனக்காக#

1

**ஒரு பனிபடர்ந்த**
**அழகான**
**மார்கழி**
**இரவுப்பொழுது!**
**என்**
**வீட்டு**
**ஜன்னல்**
**எல்லாம்**
**கம்பிகளுக்கு**
**பதிலாக**
**பூமாலைகள்!**

ரோஜா மொட்டு
மலரும் சத்தம்
எனக்கு மட்டும்
கேட்கிறது!
என்ன இது
என்று கண்விழித்தேன்!
கனவுகள் கூட
அழகாக இருக்கிறது
உன்னைப் பார்த்த
நொடி முதல்!

குல்மொஹர் மரத்திலிருந்து விழுந்த பச்சைப் பூக்கள், பூமியை மார்கழியில் காலைக் குளிரில் இருந்து காப்பாற்றுவதற்காகத் தோன்றிய பச்சைக் கம்பளம் போல் தோன்றியது ஹரிணிக்கு.

காலை மணி ஐந்தரை. சென்னையில் பல்லாவரத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லை. பங்களா வாசல்களில் மார் கழிக் கோலங்கள் பார்க்க அழகாக இருந்தது. அதை மிதிக் காமல் தாண்டியபடி, சாலையின் நடுவில் நடந்தாள் ஹரிணி.

இப்போது ஆள் நடமாட்டம் இல்லாமல் இருக்கும் சாலை இன்னும் கொஞ்ச நேரத்தில் எட்டு மணி அளவில், ஆள் நடக்கக் கூட இடம் இருக்காது.

அவ்வளவு நெரிசல். மக்களும், வாகனங்களும் அலை அலையாய் சாலை முழுவதும் பரவி இருப்பர். வாகனங் களில் இருந்து வெளிப்படும் கரும் புகை மிரட்டும்.

காலை நேர அவசரம் எல்லார் முகத்திலும் தெரியும். பதட்டமாக இருப்பார்கள். நகம் கடித்தபடி, செல்போனில் பேசியபடி, டிராபிக் ஜாமை திட்டியபடி இருப்பர்.



ம்.. ம்.. பாவம் பூமி. இந்த நெரிசலை, புகையை பகலும் இரவும் தாங்கிக் கொண்டு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பொறுமையாக எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு கஷ்டம்தான்.

நூறு கோடிக்கு மேல் ஜனத் தொகை. அதை எப்படித் தான் தாங்குகிறதோ இந்தியா. இதில் மட்டும் வெட்க மின்றி நம்பர் ஒன் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது.

இதில் மட்டுமா? லஞ்சத்திலும் வன்முறையிலும் டாப் டென்னில் வந்திருக்கிறது. யார் காரணம் இதற்கு எல் லாம்? அரசாங்கமா? மக்களா? யார் யார்?

விடுதலை அடையும் போது இருந்த நிலமை வேறு. இப்போது இருக்கும் நிலமை வேறு. தகவல் தொழில் நுட்பத்தில் முன்னேறி இருக்கிறோம்.

ஏற்றுமதியில் மென்பொருள், ஆயத்த ஆடைகள் என நிறைய மாற்றங்கள். அது மட்டுமா, மருத்துவத் துறை யிலும் எவ்வளவோ முன்னேற்றங்கள்.

ஆனால் மனித மனம் குறுகி விட்டதோ? சுயநலம் அதிகமாகி விட்டதா? நான் முன்னேற வேண்டும். அதற் காக யார் அழிந்தாலும் பரவாயில்ல. எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்ல.

எனக்கு வேண்டும் என்ற சுயநலம் ஆட்டிப் படைக் கிறது. சகிப்புத் தன்மை குறைந்து விட்டது. வாழ்க்கைத் தரமே மாறி விட்டது.

அதனால் தான் தெருவுக்கு தெரு முதியோர் இல் லங்கள், அனாதைகளைப் பராமரிக்கும் விடுதிகள் பெருகி விட்டன. ஆனால் பெண்கள் நிலை எப்படி இருக்கிறது?

படிக்கிறார்கள். எல்லாத் துறையிலும் கால் பதித்து வெற்றி நடைபோடுகிறார்கள். விமானத்தில் பைலட்

டாக, ஆட்டோ ஓட்டுனராக, டாக்டராக, கலெக்டராக, இன்ஜினியராக என எவ்வளவோ ரோல்கள் களைப்பின்றி பணியாற்றுகிறார்கள்.

ஆனாலும் ஏன் பெண் குழந்தைகள் பிறந்தவுடன், மனசாட்சியை அடகு வைத்துவிட்டு, இரக்கமின்றி கொல்லுகிறார்கள்.

அதுவும் குழந்தையைப் பெற்ற தாயே.. எப்படி இது முடிகிறது? தாய்மை என்றால் இரக்கம், கருணை இதெல் லாம் சும்மா சுகர் கோட்டட் வார்த்தைகளா?

இல்லை தான் பெற்ற கஷ்டம் தன் குழந்தை படக் கூடாது என்ற எண்ணத்தில், நல்ல எண்ணத்தில், பெற்ற தாய் இந்த முடிவு எடுக்கிறாளா? அது தான் முக்கிய காரணமா?

நம் சமூக அமைப்பு அதற்குத் துணை புரிகிறது. பெண் எப்பவுமே யாரையாவது சார்ந்தே வாழ்ந்து இருக்குமாறு நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள்.

கல்யாணம் வரை பெற்றோர், பின் கணவன், பின் மகன் என வேலிகள் எப்பவுமே வேலிகள் அவளைச் சுற்றி.

அந்த வேலியை உடைத்து சுதந்திரக் காற்றை ஆனந்த மாக சுவாசிப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

அன்னை தெரசா, ஜான்சிராணி, அன்னி பெசண்ட், மேரி கியூரி, நைட்டிங்கேல்.. என ரொம்பக் குறைவு. அது வும் இந்தியாவில் இது சாத்தியமாவது ரொம்பக் கஷ்டம்.

ஒரு பக்கம் பெண் விடுதலை என்ற பெயரில் பெண் கள் புகை பிடிப்பதும், குடிப்பதும் இரவு கேளிக்கை விடுதிகளில் நடனமாடுவதும் அதிகமாகி வருகிறது.



இன்னொரு பக்கம், வறுமையில் வாடும் பெண்கள். பெண் குழந்தை பிறந்து விட்டால் வரதட்சிணை கொடுக்க முடியாது என்ற காரணத்திற்காக கருவிலேயே கொன்று விடும் தாய்மார்கள். குழந்தைத் தொழிலாளிகள், குழந்தைத் திருமணங்கள் என எவ்வளவோ திருத்த முடியாத கேவலங்கள்.

இந்த மாதிரி காலையில் நடந்து செல்லும் போது நான் யோசித்துக் கொண்டு நடக்கிறேன் எனத் தெரிந்தால் பரத் என்ன சொல்வான்.

'சம்திங் ராங் வித் யூ ஹரிணி. ஒரு அழகான இருபத்தி ஐந்து வயதுப் பெண் வாக் செய்யும்போது, ஹிர்திக் ரோஷன் பற்றி நினைக்கலாம், இல்லை சூர்யா, அஜீத் அட அதுவும் இல்லைன்னா, என்ன சமையல் செய்ய லாம் அப்படின்னு நினைக்கலாம்.

'அதெல்லாம் விட்டுட்டு இந்தியா, முன்னேற்றம், பிஃபோர் இண்டிபெண்டென்ஸ், ஆப்டர் இண்டிபெண் டென்ஸ் இதெல்லாம் ரொம்ப டூ மச்.

'நீ ஒரு நல்ல டாக்டரா செக் பண்ணு ஹரிணி. ஐ ஆம் நாட் ஜோக்கிங்' என்பான் என்று தனக்குள்ளே நினைத்து சிரித்துக் கொண்டாள்.

ஆனால் பரத் ரொம்ப நல்லவன். கண்களைப் பார்த்து முகம் பார்த்துப் பேசுபவன். அவளுடைய கதைகளைப் படித்து விமர்சிப்பான்.

இன்ஃபேக்ட் அவளுடைய கதைகளைப் பத்திரிகை யில் அனுப்பி, அவை பிரசுரம் ஆக அவன் தான் ரொம்ப முனைப்போடு பாடுபட்டான்.

''இது எல்லாருக்கும் வராது ஹரிணி. இட்ஸ் எ டேலண்ட். உனக்கு உன்னோட சக்தி தெரியலை. நீ ஆஞ்சநேயர் மாதிரி. உன் பலம் உனக்குத் தெரியாது. யாராவது உனக்கு அதை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கணும்'' என்று அவன் சொன்னது நினைவுக்கு வந்தது.

''ஸோ, என்னைக் குரங்கு அப்படின்னு சொல்ற, கரெக்டா? குரங்கோட பிரண்ட் யார்?'' என அவளும் விடாமல் அவனைக் கிண்டலடித்தது ஞாபகம் வந்தது.

அதை நினைத்து தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். பழைய நினைவில் மூழ்கியிருந்தவள் அந்த ப்ளைண்ட் டர்னிங்கில் சட்டென யார் மீதோ மோதினாள்.

வலுவான கரங்கள் இரண்டு, அவளை விலக்கின. ''ரோடில் நடக்கும்போது ரோட் சென்ஸ் வேணும். உன்னோட பாய்பிரண்டை நினைச்சு வாக் செய்தா இப்படித் தான் நடக்கும். இல்லை வேணும்னே ரோடில் வரும் பணக்காரர்கள் மீது மோதுவது உன் வாடிக்கையா?'' என அவளைக் கேவலமாக பார்த்தபடி கடுமையாகக் கேட்டான்.

ஹரிணிக்கு சுள்ளென கோபம் வந்தது. ஆனால் அவள் ரீஆக்ட் செய்வதற்குள் அவன் அவளைக் கடந்து போய் விட்டான்.

வேகமாக அவன் பின்னால் ஓடினாள். அவன் முன்னே சென்று அவன் நடக்க முடியாதபடி சட்டென வழிமறித்தாள். மூச்சு வாங்கியபடியே அவனைப் பார்த்து கண்களைப் பார்த்து நிதானமாகப் பேச ஆரம்பித்தாள்.



''ஹலோ, நீங்க சொன்ன மாதிரி நான் எந்த பாய் பிரண்டையும் நினைச்சுகிட்டு ரோடில நடக்கல. நம்ம நாட்டைப் பத்தி தான் நினைச்சுகிட்டு நடந்து வந்தேன்.

''நம்ம நாட்டில பெண்கள் எப்படி இன்னும் மனதளவில் முன்னேற முடியாம தவிக்கறாங்க, அப்படின்னு நினைச்சுகிட்டு வந்தேன்.

''உங்கள மாதிரி பணக்காரர்களே எனக்கு எரிச்சல். அதனால டோண்ட் ஜஸ்ட் லைக் தட் டிராப் வர்ட்ஸ்'' என்று சொல்லிவிட்டு கடகடவென அவனைக் கடந்து எதிர் திசையில் போனாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் தருண். 'நல்ல உயரமாகயிருக்கிறாள். ம்.. ம். ஐந்தரை அடியாவது இருப்பாள்.

'பேசும் கண்கள். கோபத்தில் துடித்த உதடுகள். ஆனால் தடுமாற்றம் இல்லாமல் நேராக கண்களை, என் கண்களைப் பார்த்து தெளிவாகப் பேசினாள்.

'நல்ல தைரியசாலி தான். பயமில்லாமல், தான் ஏதும் தப்பு செய்யவில்லை என்று அழகாக சொல்லிவிட்டுப் போகிறாள்.

'ம்.. ம். குட் ஐ லைக் இட். கண்டுக்காம வாக்கிங்கைத் தொடராம, திரும்பி வந்து நீ சொன்னது எல்லாம் தப்பு அப்படின்னு சொல்லிட்டுப் போறா.

'இந்தியாவைப் பத்தியும், பெண்களைப் பத்தியும் நினைச்சேன். அப்படின்னாளே, ஏதாவது விமன்ஸ் லிபரேஷனில் தலைவியோ?

'ஆளைப் பாத்தா அப்படித் தெரியலை. ஒப்பனை துளி கூட இல்லாத முகம். நோ பவுடர், நோ லிப்ஸ்டிக். புருவங்களுக்கு இடையே சின்ன பொட்டு தட்ஸ் ஆல்.

'அவளுடைய சல்வாரும் ரொம்ப கிராண்டாக இல்லை. ஆனால் நேர்த்தியாக இருந்தது. பார்க்கலாம் வெர்ல்ட் இஸ் ஸ்மால். ஐ மே மீட் ஹர்' என்று நினைத்தபடி வாக்கிங்கைத் தொடர்ந்தான் தருண்.

வாக் முடித்து விட்டு ஹரிணி வீடு திரும்பும்போது மணி ஆறு முப்பது ம்.ம். குளிச்சுட்டு ஸ்கூல் கிளம்பினா எப்படியும் ஒன்பது மணிக்குள்ள போயிடலாம் என நினைத்துக் கொண்டு கடகடவென குளித்து விட்டு ஒரு ஆரஞ்சு வண்ண காட்டன் புடவையை அணிந்து கொண்டாள்.

இரண்டு இட்லியை சாப்பிட்டு விட்டு, லன்ச் பாக்சில் லெமன் ரைஸும், கீரைக் கூட்டும் எடுத்துக் கொண்டு பேக் மாட்டிக் கொண்டு கதவைப் பூட்டினாள்.

ஸ்கூட்டியில் செல்லும் போது ரொம்ப சுதந்திரமான வளாக உணர்ந்தாள். இந்த ஸ்கூட்டி எவ்வளவு வசதி. ஆட்டோகாரர்களிடம் சண்டை வேணாம். பேரம் வேணாம். பஸ்ஸில் 'இடி' மன்னர்களிடம் இருந்து தப்ப லாம்.

ஆண்களின் குறுகுறு பார்வையும், துளைக்கும் பார்வையும் கிடையாது என நினைத்தவாறே சிக்னலில் பச்சைக்காக வெயிட் பண்ணிக் கொண்டிருந்தாள்.

சிக்னல் அருகே ஸ்கூல் பசங்க ரோட்டை கிராஸ் செய்து கொண்டிருந்தனர். அழகாக யூனிபார்ம் அணிந்து கும்பல் கும்பலாக கிராஸ் செய்து கொண்டிருந்த பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸை பாக்க அழகாக இருந்தது.

இந்த உலகில் சலிக்காதது குழந்தைகளும், இயற் கையும் மட்டுமே என நினைத்தவாறு ஸ்கூட்டியில் உட்கார்ந்திருந்தாள்.



சிக்னல் பச்சை விழும் முன் அவசரமாக ஒரு கார் அவளைக் கடந்து சென்றது. ஒரு சிறுமி கிராஸ் செய்து கொண்டிருந்தபோது சட்டென அவளை மோதாமல் வளைந்து வேறு பக்கம் சென்றது.

சட்டென பயந்து போன அந்தச் சிறுமி ரோடிலேயே அழத் தொடங்கினாள். 'சரியான காட்டுமிராண்டி அந்தக் கார் ஓட்டுனர். அப்படி என்ன அவசரம். சே, இரக்கமில் லாதவன்.

'இந்த சிக்னலில் போலீஸ் இல்லை என்பதை அறிந்து எப்படி வேகமாகச் செல்கிறான். அந்தக் கார் ரொம்ப வித்தி யாசமாக இருந்ததே. யெஸ் ஒரு வயலட் கலர். கொஞ்சம் ரேர் கலர்.

'வண்டி நம்பர் பேன்சியாக இருந்ததே' என யோசித் தவள். சட்டென ஐ காட் இட் என மனதிற்குள் குதித்தாள். நாலு இரண்டு நாலு மூணு அது தான் அந்த நம்பர்.

இப்ப பாவம் இந்தக் குழந்தையைச் சமாதானப்படுத் தலாம் என முடிவு செய்து, ஸ்கூட்டியை தள்ளியபடி குழந்தை அருகே சென்றாள்.

''ஷ். அழாதடா செல்லம். பயப்படாத நத்திங் வொரி'' என அவளை அணைத்து வண்டியில் உட்கார்த்தி வைத்தாள்.

''நான் உன்னை டிராப் பண்றேன். கலாலயா ஸ்கூல் தானே ஜம்முன்னு உட்கார்ந்துக்கோ இங்க'' என அவளை அந்தச் சிறுமியை முன்னாலே உட்கார்த்தி வைத்தாள்.

அவள் பேக்கையும் முன்னாடி வைத்து விட்டு ''போக லாமா உன் பேர் என்ன'' என கேட்டபடி ஸ்கூட்டியைக் கிளப்பினாள் ஹரிணி.

ஆபீஸ் போவதற்காக காரில் இருந்த தருணின் கண்களில் அந்தக் காட்சி பட்டது. அட காலையில் பார்த்த ஜான்சிராணி மாதிரி இருக்குதே என ஆர்வமாகப் பார்த்தான்.

அவள் குழந்தையை அணைத்து சமாதானப்படுத்தும் போது ஒரு நொடி தான் அந்தக் குழந்தையாக இருக்கக் கூடாதா என அவன் மனம் ஏங்கியது.

அதற்குள் சிக்னல் பச்சையாக மாறிவிட ஃபர்ஸ்ட் கிய ருக்கு மாற்றியபடி காரை செலுத்தினான். தன்னுடைய எண்ணம் ஒரு நொடி போன போக்கு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இதுவரை பெண்கள் அவன் பின்னாடி சுற்றி இருக்கிறார் களே தவிர அவன் அவர்கள் பின்னால் சென்றதில்லை. அதற்காக அவன் க்ளீன் ஹேண்ட் பெண்கள் விஷயத் தில் என சொல்ல முடியாது.

ரியல் எஸ்டேட் ஆரம்பித்து, டிபார்ட்மெண்டல் ஸ்டோர், தியேட்டர் என எல்லாத் துறையிலும் சக்ஸஸ் புல்லாக, கால் ஊன்றி ஆகிவிட்டது. பணம் வேண்டிய அளவு பத்து தலைமுறை உட்கார்ந்து சாப்பிட வேண்டிய அளவில் உள்ளது.

அதனால் பணம் இருப்பதால் ஒழுக்கமாக வாழ வேண்டிய அவசியமோ, நிர்பந்தமோ இல்லை. தட்டிக் கேட்க ஆள் இல்லை.

'அப்பா இருந்திருந்தால் நிலமை வேறு மாதிரி இருந் திருக்குமோ. பட் யார் இருந்திருந்தாலும், நான் இப்படித் தான் இருந்திருப்பேனா.

'ஒரு ஜாலியான லைஃப், கேள்வி கேட்க யாரும் இல்லாமல் ஜஸ்ட் என்ஜாய் என்ற மந்திரத்தோடு என்



வாழ்க்கையை அனுபவித்து, நன்றாக ரசித்து, என்ஜாய் பண்ணியிருப்பேன்.

'பட் தம்பியோட வாழ்க்கை என்னுடையது போல இருக்கக் கூடாது. நான் ஒரு நல்ல ரோல் மாடல் இல்லை. அவனுடைய பெர்சனல் வாழ்க்கைக்கு' என்று நினைத்து ஒரு பெருமூச்சோடு காரை மவுண்ட் ரோட் நோக்கி ஓட்டினான்.

ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு ஸ்கூல் ப்ரேயர் நடக்கு மிடத்திற்கு விரைந்தாள் ஹரிணி. ஸ்கூல் ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் வரிசையாக சீருடை அணிந்தபடி ப்ரேயருக்கு தயாராக இருந்தனர்.

மார்கழி மாதம் என்பதால் வெயில் உறைக்கவில்லை. ஒன்பது மணி ஆன போதும் வெயில் இதமாக இருந்தது. அவள் டீச்சராக பணிபுரியும் ஸ்கூலில் ப்ளஸ் டூ வரை உள்ளது.

அவள் ஆறாம் வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரை உள்ள மாணவ மாணவிகளுக்கு பாடம் எடுப்பாள் காலையில். ஆனால் ப்ரிகேஜி குழந்தைகளுக்கு, ரைம்ஸ் எடுப்பாள்.

அது அவளுக்கு ரொம்பப் பிடித்த ஒன்று. கள்ளம் கபடமில்லாத அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்க்கும்போது எல்லாக் கவலைகளும் பறந்து ஓடிவிடும்.

அழகழகாய் தலை அசைத்து கையையும் காலையும் ஆட்டியபடி குழந்தைகள் ரைம் சொல்வதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கும் அவளுக்கு.

குழந்தைப் பருவம் எவ்வளவு இனிமையானது. எந்தப் பிரச்சினையும் இல்லாமல், நிர்பந்தமும் இல்லாமல், நல்ல அழகான பருவம்.

வளர்ந்த பின் அந்த மாதிரி இருக்க ஏன் முடிய மாட்டேங்குது. நல்ல எனர்ஜி லெவலோடு, எதற்கும் பயப்படாமல் வெட்கப்படாமல் என தனக்குத் தானே பேசியபடி ப்ரேயரில் நின்றிருந்தாள்.

## 2

நிலவின்
அமுதைப்
பிழிந்து
படைத்தது
உன் முகம்!
நட்சத்திரங்களுக்கு
சவால் விடும்
உன் அழகான கண்கள்!
கார் கால
கருமையான
மேகம்
உன் கூந்தல்!
உன் மனதின்
எண்ண அலைகள்
கடல் அலைகளைக்
காட்டிலும் வேகமானது!

ஹரிணி அன்று மாலை டெஸ்ட் பேப்பர் எல்லாம் திருத்தி முடிக்கும்போது மணி ஏழாகி விட்டிருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது.

இங்கிருந்து பல்லாவரம் போக எப்படியும் ஒரு மணி நேரம் ஆகும். பேசாமல் வழியில் டின்னர் சாப்பிட்டு முடித்து விட்டுப் போக வேண்டியது தான்.



இனிமேல் வீட்டுக்குப் போய் டின்னர் செய்வது என்றால் ரொம்ப லேட்டாகி விடும். அதற்கு பதில் அதில் நேரம் செலவிடுவதற்கு பதில், கதை எழுதலாம். இன்னும் ஒரு தீம் எழுதினால் அந்தத் தொடருக்குத் தேவையானது முடிந்து விடும் என யோசித்தபடி ஸ்டாப் ரூமை விட்டு நடந்தாள்.

ஆழ்வார்பேட்டையிலிருந்து மவுண்ட் ரோடு வழியாக ஜி.எஸ்.டி. ரோடு போய், அங்கிருந்து பல்லாவரம் போவது தான் அவள் வழக்கம்.

மவுண்ட் ரோடில் ஸ்வாமிஸ் கே·ஃப் ரெஸ்டாரெண்ட் போகலாம் என முடிவு செய்து, ஸ்கூட்டியைக் கிளப்பினாள். அந்த ஹோட்டல் அவளுக்குப் பழக்கமானது. ஹோம் ·ஃபுட் டேஸ்ட் இருக்கும்.

அதனால் அங்கே வண்டியை நிறுத்தினாள். 'இன்று விடுமுறை. சிரமத்துக்கு மன்னிக்கவும்' என்ற போர்டு ஹோட்டல் முன் அவளை வரவேற்றது.

மை காட். பசி வேற ரொம்ப எடுக்குதே. இப்ப என்ன செய்யலாம் என சுற்றும் முற்றும் பார்த்தாள். எதிர் திசையில், 'ஹோட்டல் வசந்தம்' அவள் கண்ணில் பட்டது.

'சரி டிரை பண்ணி பாக்கலாம்' என நினைத்து ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு ரோடை க்ராஸ் செய்தாள்.

மவுண்ட் ரோடில் வேலையை முடித்துவிட்டு அன்று கிளம்பும் போதே தருணுக்கு டயர்டாக இருந்தது. ஏன் என்று யோசித்தவனுக்கு மத்தியான லன்ச் ஸ்கிப் செய்தது தான் காரணம் என புரிந்தது.

சரி பேசாமல் ஹோட்டல் வசந்தமில் ஏதாவது லைட்டா சாப்பிட்டு விட்டுப் போக வேண்டியது தான் என நினைத்தவாறே காரைச் செலுத்தினான்.

அந்த ஹோட்டலில் ஒரு வசதி. அவன் யார் என யாருக்கும் தெரியாது. அதனால் மத்த ஸ்டார் ஹோட்டலுக்கு இவன் போனால் நடக்கும் ராஜ மரியாதை, உபசாரம் அங்கே கிடைக்காது. அவனும் ஒரு கஸ்டமர் தட்ஸ் ஆல். அது அவனுக்குப் பிடிக்கும்.

காரை பார்க்கிங் லாட்டில் நிறுத்தி விட்டு ஹோட்டல் உள்ளே நடந்தான் தருண். அவன் கண்ணில் முதலில் பட்டது மெனு கார்டைப் பார்த்துக் கொண்டிருந்த ஜான்சி ராணி தான்.

காலையில் பார்த்தது இவளைத்தான். ஆரஞ்சு வண்ண புடவை. இதே ஆரஞ்சு வண்ணப் புடவையில் தான் காலையில் அவள் அந்தச் சிறுமியை அணைத்தது ஞாபகம் வந்தது தருணுக்கு.

அவள் டேபிளில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லாததால் அங்கே உட்காருவது என முடிவு செய்தான். அவள் டேபிளில் அவள் உட்கார்ந்திருந்த நாற்காலி எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

மெனு கார்டைப் பார்த்துக் கொண்டிருந்த ஹரிணி, தன் எதிரே யாரோ உட்கார்ந்தது போல் தோன்ற சட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவனைப் பார்த்ததும் அவளுக்கு எரிச்சல் வந்தது. கூடவே இவனை எங்கோ பார்த்திருக்கிறோமே என யோசனையும் கிளம்பியது.

யோசித்தபடி இருந்தவளுக்கு சட்டென ஞாபகம் வந்தது. காலையில் வாக் செய்யும் போது, பார்த்த அந்த சிடுமூஞ்சி தான். சே, காலையில் தான் அவன் முகத்தில் விழித்தேன். இப்பவுமா ஆல் டைம் என நினைத்தவாறே பேசாமல் மெனு கார்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹரிணி.



அதற்குள் பேரர் வந்து விடவே தனக்குத் தேவையானதை ஆர்டர் செய்தாள் ஹரிணி. ஒரு வெஜிடபிள் ப்ரை, ஒரு பனீர் டிக்கா, ஒரு டீ என பேரரிடம் சொல்லி விட்டுத் தொலைவில் தெரிந்த டிராபிக்கை, ஹோட்டலுக்கு வெளியே தெரிந்த டிராபிக்கைப் பார்த்தவாறு இருந்தாள் ஹரிணி.

அவளைச் சீண்டுவது என முடிவு செய்தான் தருண். வேண்டுமென்றே சத்தமாக 'அடியே கொல்லுதே' என்று அவளைப் பார்த்துப் பாடினான்.

அந்தப் பாடலை முழுசாகப் பாடி முடித்தான், அவளைப் பார்த்தவாறே. அவள் முகத்தில் எந்த ரீஆக்ஷனும் தெரியவில்லை அவனுக்கு.

பொது இடத்தில் இப்படிச் சத்தமாக பாடறதைப் பார் என மனதிற்குள் அவனைத் திட்டியபடி வேறு எங்காவது உட்கார இடம் இருக்கிறதா என சுற்றும் முற்றும் பார்த்தாள் ஹரிணி.

வேறு எங்கும் காலி இடம் இல்லாததால் ம்ம். வேறு வழி இல்லை. இன்னிக்கு நம்ம நேரம் சரியில்லை என நினைத்தவாறு இருந்தாள்.

அவன் ஆர்டர் செய்த அயிட்டங்கள் அதற்குள் வந்து விட, சாப்பிடத் தொடங்கினாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ. அந்த மெனுகார்ட்டை, பாஸ் செய்றீங்களா'' என அவன் குரல் கேட்க, தன் அருகில் இருந்த கார்டை அவனிடம் நீட்டினாள்.

இருவர் கண்களும் ஒரு நொடி சந்தித்தன. அவன் கண்களில் தெரிந்த கிண்டலும், குறும்பும் அவளுக்கு எரிச்சலை அதிகப்படுத்தியது.

''தேங்க்ஸ்'' என்று சிரித்துக் கொண்டே அவளிடம் இருந்து கார்டை வாங்கிக் கொண்டான் தருண். அப்பா என்ன கோபம் இவள் கண்களில் தெரிகிறது. சரியான கோபக்காரி போல என நினைத்தவாறு சப்பாத்தியைச் சாப்பிட ஆரம்பித்தான்.

'இவன் வந்ததால் நிம்மதியாக சாப்பிடக் கூட முடிய வில்லை. ஏன் இப்படிப் பார்க்கிறான். சே கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லாமல்' என திட்டியபடி சாப்பிட்டு முடித்தாள் ஹரிணி.

அவள் சாப்பிட்டு முடித்தாள் ஃபிங்கர்பௌல் வந்தது. அதில் கையை நனைத்து, டிஷ்யூ பேப்பரில் கையைத் துடைத்தாள் ஹரிணி.

அவள் சாப்பிட்டு முடித்ததைப் பார்த்த தருண் கடகடவென அவனும் சாப்பிட்டு முடித்தான்.

அதற்குள் பேரர் வந்து பில்லை ஒரு பவுச்சில் வைத்து டேபிள் நடுவே வைத்து விட்டுப் போய் விட்டார்.

அதற்குள் இருந்த பில்லை எடுத்தாள் ஹரிணி. எடுத்துப் பார்த்தவள் டோட்டல் ஐநூறு என கண்ணில் பட திடுக்கிட்டாள். எல்லா ஐயிட்டம்ஸையும் பார்த்தாள்.

சட்டென நடந்த தப்பு அவளுக்குப் புரிந்தது. எதிரில் இருந்த அந்த ஆள் சாப்பிட்டதற்கும் சேர்த்து பில் போடப்பட்டிருந்தது. அதான் ஐநூறு ரூபாய் என புரிந்த வுடன் எரிச்சல் அடைந்தாள்.



அந்த பேரர் பக்கத்து டேபிளில் இருப்பதைப் பார்த்து ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றாள். ''யெஸ் மேடம்'' என்று அவள் அருகே வந்து நின்றான் அவன்.

''பில்லிங்கில் தப்பு இருக்கு. நான் சாப்பிடாத அயிட் டம்ஸ்க்கு எல்லாம் பில் போட்டிருக்கீங்க. பாருங்க'' என்று பில்லை நீட்டினாள் அவனிடம்.

தருண் அவளை சுவாரசியமாகப் பார்த்தான். பில்லைப் பார்த்த பேரர் ''மேடம், இதெல்லாம் சார் சாப்பிட்டது. அதான்.. நான் நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா'' என அவன் முடிப்பதற்குள் ஹரிணி சீறினாள்.

''மிஸ்டர். என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க. ஒரு பெண் தனியா ஹோட்டலுக்கு வரக்கூடாதா? பசிச்சா சாப் பிடக் கூடாதா? எப்பவும், கூட யாராவது ஒரு ஆணோட வரணும். அப்படித்தானே? எந்த ஊர்ல இந்த மாதிரி சட்டம் இருக்கு? சொல்லுங்க.

''எனக்கு ரொம்ப எரிச்சலா இருக்கு. உங்கள மாதிரி ஆளுங்களப் பாத்தா சே. சீக்கிரம் என்னோட பில்லை எடுத்துட்டு வாங்க'' என படபடவெனப் பொரிந்தாள்.

அந்த பேரர் ''சாரி'' என்று முணுமுணுத்து விட்டு முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு சென்றான்.

அம்மாடி என்ன ஒரு கோவம் வருது இவளுக்கு. சரியான பேர் தான் வைத்திருக்கிறேன் ஜான்சி ராணி. வெரி இண்ட்ரஸ்டிங் கேரக்டர் என மனதில் நினைத்த வாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் தருண்.

கோபத்தில் சிவந்த முகம், அவளை மேலும் அழகி யாக்கிக் காட்டியது. 'பரவாயில்ல கத்தி ஆர்ப்பாட்டம் செய்யாமல் அந்த மட்டும் அவனுக்கு மட்டும், அந்த

பேரருக்கு மட்டும், காதில் விழுமாறு திட்டினாளே. தட்ஸ் குட்' என மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அதற்குள் அந்த பேரர் இரண்டு தனித் தனி பவுச்சுகளை கொண்டு வந்து, ஒன்றை ரொம்ப பவ்யமாக அவள் பக்கம் வைத்தார்.

இன்னொன்றை ''சார் இது உங்களுக்கு'' என அவனிடம் கொடுத்தார். பில் தொகையான முன்னூறு ரூபாயை கொடுக்க ஹரிணி ஹேண்ட் பேக்கை திறந்தாள்.

அவள் பர்ஸ் காணவில்லை. வழக்கமாக ஹேண்ட் பேக்கில் உள்ள இன்னொரு அறையில் தான் அவள் பர்ஸை வைப்பாள். பர்ஸ் மொபைல் எல்லாமே அதில் தான் இருக்கும்.

ஜிப்பைத் திறந்து இன்னொரு அறையையும் பார்த்தாள் அங்கேயும் பர்ஸ் இல்லை. மை காட் எங்கே போனது என குழம்பினாள்.

அதற்குள் அவள் பதட்டமடைந்ததால், ஏ.ஸி.யையும் மீறி நெற்றியில் வியர்வைப் பூக்கள். அவள் டென்ஷனாக தேடுவதைப் பார்த்தான் தருண்.

அந்த பேரரைப் பரிதாபமாகப் பார்த்தாள் ஹரிணி. ''நான் நான் பர்ஸை ஸ்கூலிலேயே வெச்சுட்டேன். பர்ஸ் அண்ட் மொபைல் ஸ்டாப் ரூமிலேயே வெச்சுட்டேன் ஞாபக மறதியா. ம்.. ம் நான் நாளைக்கு காலை பணம் கொடுக்கவா, ப்ளீஸ்'' என்றாள்.

''என்னம்மா, அப்ப அப்படிப் பேசனீங்க. பொண்ணுங்களுக்கு கவனக் குறைவு அதிகம். அதான் கூட எப்பவும் யாராவது ஒரு துணை அவங்களுக்கு வேண்டி இருக்கு'' என தன் பங்கிற்கு அவளை வெறுப்பேற்றினான்.



அதைக் கேட்ட தருணுக்கு சிரிப்பு வந்தது. அடக்க முடியாமல் சட்டென கடகடவெனச் சிரித்தான்.

ஹரிணிக்கு அவமானத்தால் முகம் சிவந்தது. சே.. போயும் போயும் இவன் முன்னாடி என் மானம் போச்சே என நினைத்தபடி அவனை முறைத்தாள்.

அவளைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தான் தருண்.

''பில்லை என்கிட்ட கொடுங்க. ஐ வில் பே ஃபார் யூ'' என்று கையை நீட்டினான்.

ஒரு நிமிடம் தயங்கிய ஹரிணி பின் அவனிடம் பில்லைக் கொடுத்து விட்டு ''தேங்க்ஸ்'' என்று முணுமுணுத்தாள்.

இருவருக்கும் உண்டான தொகை, மற்றும் டிப்ஸ் என எல்லாவற்றையும் பவுச்சில் வைத்து பேரரிடம் நீட்டினான் தருண்.

''சார், நான் இதத் தான் முதலிலேயே செஞ்சேன். சேத்து ஒரே பில்லா போட்டேன்'' என்றான் சிரித்தவாறு. ஹரிணிக்கு மீண்டும் அவமானத்தால் முகம் தொங்கிப் போனது.

''உங்க அட்ரஸ் கொடுங்க, ப்ளீஸ்'' என்றாள் தருணைப் பார்த்து.

''எதுக்கு. லவ் லெட்டர் அனுப்பவா. அச்சச்சோ அதெல்லாம் வேணாம்'' என பொய்யாக பயப்பட்டான் தருண்.

''மிஸ்டர். உங்களோட பைசா முன்னூறு ரூபாயை உங்களுக்கு மணி ஆர்டர் பண்ண கேட்டேன். சே, நீங்க சொல்றதை அனுப்ப வேற ஆளைப் பாருங்க'' என்றாள் பல்லைக் கடித்தபடி கோபமாக.

''நாளைக்கு பிரேக் ஃபாஸ்டுக்கு என்ன செய்யப் போறீங்க மிஸ்'' என்றான் அப்பாவியாக தருண்.

''புரியலை. என்ன இது. உங்க கேள்வி'' என்றாள் முழித்தபடி ஹரிணி.

''ம்... ம்... இல்ல இன்னிக்கு டின்னர். ஓசியில என்னால சாப்பிட்டு முடிச்சுட்டீங்க. இல்லாத பர்ஸை தேடற மாதிரி பாவ்லா செய்து. வாவ் என்ன ஒரு நடிப்பு சூப்பர். நாளைக்கு பிரேக் பாஸ்டுக்கு யாராவது வேற யாராவது ஒரு இளிச்சவாயன் மாட்டுவான் உங்களுக்கு.

''அப்படி யாரும் கிடைக்கலேன்னா ஐ ஆம் ஹியர் ஃபார் யூ'' என்றான் சீரியசாக.

''ஷட் அப். நான் ஒரு ஸ்கூல் டீச்சர். கவுரவமான வேலை'' என்று ஹேண்ட்பேக்கை வேகமாக திறந்தவள் உள்ளிருந்து ஒரு விசிட்டிங் கார்ட்டை எடுத்து அவன் முன் போட்டாள்.

சட்டென தன் கையில் இருந்த வாட்சைக் கழற்றி அவன் முன்னே விட்டெறிந்தாள்.

''இந்த வாட்ச் விலை ஆயிரம் ரூபாய். வாங்கி ஒரு மாதம் ஆச்சு. டிப்ரிசியேஷன் போக எப்படியும் எண்ணூறு ரூபா இருக்கும்.

''இப்ப நீங்க தான் எனக்கு ஐநூறு ரூபாய் தரணும். போதுமா. சே. யூ ஆர் எ டிஸ்கஸ்டிங் பெர்சன்'' என அழுத்தமாக அவனைத் திட்டிவிட்டு ஹோட்டலில் இருந்து வெளியேறினாள் ஹரிணி.

அவள் கடகடவென நடந்து செல்லுவதையே பார்த்துக் கொண்டிருந்தான் தருண். 'பரவால்ல நல்ல பிரசன்ஸ் ஆஃப் மைண்ட்.



'சட்டென வாட்சைக் குடுத்து விட்டு ஓடிப் போய் விட்டாளே. ம்.. ம் என்று வாட்சை சற்று நேரம் பார்த்தான். டைட்டன் ராகா பிராண்ட். அழகாக முத்து பதித்து இருந்தது. குட் நல்ல ரசனை தான்' என்று நினைத்தான் வாட்ச்சைப் பார்த்தபடி.

விசிட்டிங் கார்டில் இருந்த பேரைப் பார்த்தான். ஹரிணி என்றிருந்தது. 'ஹரிணி என்றால் என்ன அர்த்தம். கோபக்காரி என்றா?

'ஆனால் சுருக்கினால் வேறு மாதிரி பேர் இல்லை வருகிறது. 'ஹனி' ம்.. ம்.. நைஸ் நேம். லைக் ஹர்' என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

'அட, இந்த ஸ்கூலா. குட் அப்ப ஹனியை அடிக்கடி பாக்கலாம் போல இருக்கு' என வியந்தான் விசிடிங் கார்டைப் பார்த்து தனக்குள்ளே. நான் இப்படி எல்லாம் அவளைப் பற்றி நினைக்கிறேன் எனத் தெரிந்தால் என்ன செய்வாள்.

ம்.. ம்.. பளீரென அறைந்தாலும் அறைந்து விடுவாள். என சிரித்துக் கொண்டான் தனக்குத்தானே.

## 3

**உன் பார்வை**
**என்**
**மனதின்**
**காயங்களை**
**மயில் இறகால்**

**வருடுகின்றது!**
**பன்னீர் பூக்களில்**
**நான் அமிழ்ந்தது**
**போல் ஒரு**
**உணர்வு!**
**என்**
**மனம்**
**முழுவதும்**
**இன்பச் சாரல்!**
**இந்த**
**இனிமையான**
**அனுபவம்**
**ஒவ்வொரு முறையும்**
**கூடுதலாக இனிக்கிறதே! அது எப்படி?**

அன்று காலை எழுந்திருக்கும்போதே நேற்று ஹோட்டலில் நடந்த சம்பவம் தான் ஞாபகம் வந்தது ஹரிணிக்கு.

'சே, இந்த மாதிரியும் ஆள்கள் இருக்காங்க பாரு. இவ்வளவு கேவலமா பெண்களைப் பத்தி நினைச்சு கிட்டு. ம்.. ம் ஒரு வேளை யாராவது அவனை ஏமாற்றி இருப்பார்கள். எந்தப் புண்ணியவதியோ அது.

'அதனால் தான் அப்படிப் பேசினான் போல. நேற்று வாக் போகும் போதுகூட அப்படித் தானே சொன்னான். அவன் மேலே வேணும் என்றே விழுவது போல இல்ல பேசினான்.

'சரி, எப்படியாவது அவன் போகட்டும். நல்ல காலம், வாட்சை விட்டெறிந்து விட்டு வந்தேன். இல்லேன்னா அவன் பேசின பேச்சுக்கு ராத்திரி எல்லாம் தூக்கம்



வராமல் கொட்ட கொட்ட முழிச்சுகிட்டு இருக்க வேண் டியதுதான்' என வெறுப்பாக நினைத்தாள்.

ம்.. ம். அப்பாவிற்கு அந்த விபத்து நடந்த பின் தன்னுடைய வாழ்க்கை எப்படி தடம் மாறிவிட்டது என யோசித்தவள் கண் கலங்கினாள்.

ம்.. ம் அப்பா எவ்வளவு கம்பீரமாக காலேஜுக்கு போவார். அவர் க்ளாஸ் எடுக்கற ஸ்டைலே ரொம்ப நல்லாயிருக்கும் என பலர், பல பேர் அவள் சிறுமியாக இருக்கும்போது திருச்சியில் வீட்டுக்கு வந்து சொல்வதைக் கேட்டிருக்கிறாள், ரசித்திருக்கிறாள்.

அந்தக் கார் விபத்து மட்டும் அப்பாவுக்கு நேராமல் இருந்திருந்தால், கால்கள் போகாமல் இருந்திருந்தால், தான் இங்கே சென்னை வந்திருக்க வேண்டாம்.

வாழ்க்கையே மாறி விட்டது. அம்மா இறந்த பின் யாரையும் மனதில் நினைக்காமல், மறுமணம் செய்யா மல் தன்னை எவ்வளவு நன்றாக வளர்த்தார் அப்பா.

ம்.. ம்.. எல்லாருக்கும் அந்த மனமும், வைராக்கியமும் வராது தான். வாழ்க்கையை தைரியமாக, ரசித்து, அனுபவித்து நல்ல வழியில் வாழ வேணும் என தனக்குச் சொல்லிக் கொடுத்ததே அப்பா தான்.

'அப்பா ஐ மிஸ் யூ. இங்க சென்னைக்கே வாங்க அப்பா. வந்து என் கூட இருங்க' என பலமுறை அவள் சொன்ன போது அவர் மறுத்துவிட்டார்.

'எனக்கு பழக்கமான ஊர் இது ஹரிணி. என் வேர்கள் எல்லாம் இங்க தான். நீ போ. உலகத்தைச் சுத்த வேண் டிய வயசு இது' என அவளை என்கரேஜ் செய்து இந்த ஸ்கூல் டீச்சர் வேலையை ஒத்துக்க வைத்து சென்னை அனுப்பியது ஞாபகம் வந்தது.

அப்பா வேலை பார்த்தது பிரைவேட் காலேஜ் என்பதால், விபத்து நடந்த பின் கால் போன பின், நஷ்ட ஈடு தொகை ஏதும் கிடைக்கவில்லை.

அதோடு வேலையும் போச்சு. ஆனால் அப்பா மனம் தளர்ந்து போய் மூலையில் உட்கார்ந்து விடவில்லை. வீட்டிலேயே இருந்து காலேஜ் ஸ்டூடெண்ட்ஸ்க்கு மேத்ஸ் எடுப்பார்.

ம். ம் விபத்து நடந்து பத்து வருடங்களுக்கு மேல் ஓடி விட்டது. ஆனால் அந்த பாதிப்பு இன்னும் என் மனதை விட்டு அகலவில்லை.

அப்ப எனக்கு பதினைந்து வயது தானே. ஆமாம் அந்த நாள் மறக்கவே முடியாதது. காலேஜ் முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அந்த விபத்து நடந்தது.

ஒரு கார் அப்பா கிராஸ் செய்வதை கவனிக்காமல் நேரே.. நேரே வந்து வேகமாக மோதியது. தூக்கி எறியப் பட்ட அப்பா மரத்தில் மோதி நினைவிழந்தார்.

நினைத்துப் பார்க்கவே கொடுமையாக இருந்தது ஹரிணிக்கு. காரை ஓட்டியவன் பெரிய பணக்கார வாரிசு. வடநாட்டிலிருந்து இங்கே கார் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்காக திருச்சிக்கு வந்தனர் போல. அப்பாவும் மகனும்.

போலீஸ், பணக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு சாதகமாக இருந்தது. அப்பா குடித்து விட்டு நடந்ததாக பொய்யாக ஜோடித்து கேஸை இழுத்து மூடிவிட்டனர்.

நல்ல காலம் அந்தக் கார் தொழிற்சாலை அங்கே வரவில்லை. வந்தால் ஹரிணி அதை ஒரு வழி பண்ணியிருப்பாள்.



பின்பு அப்பாவின் கார் போனது. அதை விற்றார். பின் வீட்டில் ஒரு பகுதியை விற்றார். மருத்துவ செலவு எகிறியது.

ஹரிணியின் படிப்பு செலவு, அன்றாட செலவு என பாங்க் பேலன்ஸ் சுத்தமாக காலியானது அப்பாவுக்கு. பாவம் அப்பா, விபத்து நடந்த அந்த நொடி முதல் இன்று வரை ஆனால் தன்னிடம் எப்போதுமே ஒரு வார்த்தை அதிர்ந்து பேசியதில்லை.

அது தான் அப்பா. உற்சாகம் எப்பவும் இருக்கும் அவரிடம். அது அவர் கூட இருக்கிறவர்களையும் அப்படியே தொற்றிக் கொள்ளும்.

ஹரிணிக்கு சென்னையில் வேலை கிடைத்தது. முதலில் அப்பாவை விட்டுப் பிரிய வேண்டுமே என தயங்கியவள் வேலை வேண்டாம் என மறுத்தாள்.

பின் அப்பா அவளைக் கன்வின்ஸ் செய்து தேற்றி வேலைக்கு அனுப்பி ஐந்து வருடங்களுக்கு மேல் ஓடி விட்டது.

ஆனால் அதற்குப் பின் ஹரிணிக்கு பணக்காரர்களை கண்டாலே வெறுப்பு. ஏனோ அவள் மனதில் அப்பா விபத்துக்கு காரணம் பணக்கார இளைஞன் ஒருவன் தான் என்பது ஆழமாகப் பதிந்து விட்டது.

அதனாலேயே பணக்காரர்களைக் கண்டால் எரிந்து விழுவாள். அவள் எழுதும் தொடர்களிலும், கட்டுரைகளிலும் அவர்களைச் சாடியே எழுதுவாள்.

அவளுக்கே தெரியாமல், அவள் உள்ளத்தில் ஒரு ஆறாத வடு போல பதிந்து விட்டது அப்பாவின் விபத்து.

கைப்பேசி சத்தம் கேட்க பழைய நினைவிலிருந்து சட்டென வெளியே வந்தாள் ஹரிணி.

கைப்பேசியில் அப்பா நம்பர் வர, உற்சாகமாக அதை எடுத்தாள் ஹரிணி.

''அப்பா, சொல்லுங்க, அங்க குளிர் எப்படி இருக்கு? இங்க ஒரே குளிர் அப்பா. நீங்க எப்படி இருக்கீங்க?'' என்றாள் ஆர்வமாக ஹரிணி.

''நல்லா இருக்கேன்டா. நீ எப்படி இருக்க? உடம்பு நல்லா இருக்கு இல்ல அம்மா'' என்றார் பாசத்தோடு.

''ம். ம். நல்லா இருக்கேன் அப்பா. நீங்க இங்க என்கூட இல்லைங்கறது தான் ஒரு குறை. மத்தபடி எனக்கு எந்தக் குறையும் இல்லை இங்க'' என்றாள் ஹரிணி.

''உனக்கு அந்தக் குறையும் கொஞ்ச நாள் இருக்காது ஹரிணி. நான் ஒரு வாரம் உன் கூட வந்து தங்கப் போறேன் இன்னிக்கு நைட் அங்க வந்திடுவேன். மதிய டிரெயின்'' என்றார்.

''வாவ் அப்பா. மழை தான் கொட்டப் போகுது இங்க. நீங்க சொன்னதை என்னால நம்பவே முடியலை. ரொம்ப ஹேப்பியா இருக்கு அப்பா'' என்றாள் சந்தோஷமாக ஹரிணி.

''ம.. ம.. என் கூட ஜேம்ஸும் வரார். அவருக்கு சென்னையில ஏதோ வேலை இருக்காம். எப்படியும் முடிய ஒரு வாரம் ஆகும். அதான் இந்த சாக்கில நானும் அவரோட கிளம்பி வர்றேன்'' என்றார்.

''அதானே பார்த்தேன். ஜேம்ஸ் அங்கிள் வரதால நீங்க இங்க வர்றீங்க. என்னப் பாக்க இல்ல. போங்க அப்பா'' என பொய்க் கோபம் காட்டினாள் ஹரிணி.



''அட. அப்படி இல்லைடா. அவர் தானே என்னை இங்க பாத்துக்கறார். அவர் கிளம்பும்போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கலாம். அப்படின்னு தான்'' என்று இழுத் தார்.

''சரி அப்பா. வாங்க. டிரெயின் எத்தனை மணிக்கு வருது இங்க சென்னைக்கு, இன்னிக்கு'' என்றாள்.

''ம.. ம.. நைட் எட்டு மணிக்குடா. நாங்க வந்திட றோம். நீ ஸ்டேஷன் எல்லாம் வர வேணாம்'' என்றார்.

''அப்பா, எனக்கு இன்னிக்கு ஸ்கூல் நாலு மணியோட முடிஞ்சிடும். அப்புறம் நான் ஃப்ரீதான். அதனால நான் ஸ்டேஷன் வருவேன், ப்ளீஸ்'' என்றாள்.

''சரிம்மா. பாத்து வா. ஜாக்கிரதை வெச்சிடறேன்'' என்று சொல்லிவிட்டு போனை கட் செய்தார்.

அப்பா வருகிறார் என தெரிந்தவுடன் ஹரிணிக்கு ரொம்ப உற்சாகமாக இருந்தது. ம.. ம் இதுவே முதல் தடவை அப்பா இங்கே வருவது.

அவருக்குப் பிடித்தவற்றை சமைக்க வேண்டும். நல்ல சி.டி.க்கள் வாங்க வேணும். அப்பாவிற்கு, மேண்டலின் சீனிவாஸ் என்றால் உயிர். அதை வாங்கிவிட வேண்டும் என முடிவு செய்தாள்.

அன்று குளித்து விட்டு என்ன புடவை அணிவது என யோசித்தாள் ஒரு நிமிஷம். அப்பாவிற்கு, வெளிர் நீலம் பிடிக்கும்.

அவளுக்கும் பிடிக்கும். அதனால் வெளிர் நீல காட்டன் புடவை ஒன்றை அணிந்து கொண்டாள். வாட்ச் வைக் கும் இடத்திற்கு வழக்கம் போல் அவள் கை சென்று வாட்ச்சை துழாவி தேடியது.

பின் சட்டென ஞாபகம் வந்தது. நேற்று வாட்சை அந்த ஆளிடம் கொடுத்தது ஞாபகம் வந்தது. வேறு வாட்ச் கிடையாது. ஸோ, வேறு வழியில்லை என வலது கையில் இருந்த முத்து வளையல் ஒன்றை, இரண்டில் ஒன்றை, இடக்கையில் அணிந்து கொண்டாள்.

வீட்டைப் பூட்டி விட்டு ஸ்கூட்டியில் ஸ்கூலுக்குக் கிளம்பினாள் ஹரிணி.

அன்று ப்ரீகேஜி செக்ஷன் 'சி'யில் ஒரு பையன் ரொம்ப அழகாக சர்க்கிள் டைமில் ஒரு ஆக்டிவிடி செய்து காட்டினான். சர்க்கிள் டைம் போது ஏதாவது ஒரு ஆக்டிவிடி ஒவ்வொரு குழந்தையும் செய்யும்.

அதை மற்ற குழந்தைகள் திருப்பி செய்யும். சில குழந்தைகள் க்ளாப் செய்யும். சில அழகாக டான்ஸ் ஆடும். சிலது ஏதும் செய்யாமல் திருதிருவென முழித்துக் கொண்டிருக்கும்.

அன்று அந்தப் பையன் 'ஜெய்ஹிந்த்' என்று ஒரு சல்யூட் அடித்தான். அவனை மாதிரியே மற்ற குழந்தைகளும், அதைச் செய்ய முயன்றனர்.

எல்லாரும் கோரசாக ஜெய் ஹிந்த் சொல்ல ஹரிணிக்கு ஒரு நிமிடம் புல்லரித்தது. 'இப்படி இருக்கிற குழந்தைகள், பிற்காலத்திலும் இதே மாதிரி, இருக்க வேணும் கடவுளே நீ தான் அதற்கு உதவி புரிய வேணும்' என மனமுருகி வேண்டினாள்.

அன்று ஹரிணிக்கு நேரம் இறக்கை கட்டிப் பறந்தது. ஆறாம் வகுப்பில் பாடத்தை முடித்து விட்டு ரிகார்ட் நோட்டை எடுத்துக் கொண்டு, ஸ்டாப் ரூம் வந்தாள்.

ரிகார்ட் நோட்புக்கை ஒவ்வொன்றாக எடுத்து திருத்த ஆரம்பித்தாள்.



நவீன் நோட்புக்கை திருத்திக் கொண்டிருந்தாள். சட்டென பேன் காற்றில் ஒரு பேப்பர் அதிலிருந்து பறந்தது. கீழே விழும் முன் அதை சட்டெனப் பிடித்தாள் ஹரிணி.

அதை எடுத்துப் பார்த்தாள். அதைப் படித்தவுடன் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. அது ஒரு லெட்டர். அதுவும் அவளுக்கு எழுதிய லெட்டர். 'நீங்க எனக்கு அம்மாவாக வேணும் எனக்கு அம்மா கிடையாது ப்ளீஸ்' என்று முடித்திருப்பதைப் பார்த்து பெருமூச்சு விட்டாள்.

நவீன் முகம் சட்டென ஞாபகம் வந்தது. நல்ல குழந்தைத் தனமான முகம். பெரிய கண்கள். அவள் பாடம் நடத்தும்போது நன்கு கவனமாக இருப்பான்.

கேள்வி கேட்டால் பதில் சொல்வான். பரீட்சையில் எப்படியும் முதல் கிரேட் 'ஏ' வாங்கி விடுவான். ஏன் இப்படி எழுதியிருக்கான் எனக் குழம்பினாள்.

இதை பிரின்சியிடம் சொல்லலாமா என ஒரு நிமிடம் யோசித்தவள். பின் அது வேணாம் என முடிவு செய்தாள்.

'பாவம் சின்னப் பையன். அவனுடைய வாழ்க்கை இதனால் பாதிக்கப்படக்கூடாது. ஸோ பிரின்சியிடம் சொல்ல வேண்டாம்.

'இவனிடம், நவீனிடம் எப்படிப் பேசுவது. இது தப்பு என புரிய வைக்க வேண்டும். அதுதான் நல்லது. இல்லை அவள் வீட்டில் இருப்பவரை வரவழைத்துப் பேசலாமா' எனக் குழம்பினாள்.

கடைசியில் அவனை வரவழைத்துப் பேசலாம் என்று முடிவெடுத்தாள்.

இன்றே பேசி விடலாம் என நினைத்து, அவன் கிளாஸ் ரூம் சென்றாள். மணி அப்போது இரண்டு. அடுத்த கிளாஸ் இரண்டரை மணிக்குத் தான் ஆரம்பிக்கும் அதற் குள் பேசி விடலாம் என அவனைத் தேடினாள் ஹரிணி.

ஆனால் அங்கே நவீன் இல்லை. கிளாஸ் மானிடர் அனிஷிடம் ''வேர் இஸ் நவீன்?'' என்றாள்.

''ம்.. ம்.. மிஸ், வயித்த வலி, அப்படின்னு சொல் லிட்டு வீட்டுக்குப் போயிட்டான் மிஸ். உங்க கிளாஸ் முடிஞ்சவுடனே'' என்றான்.

''சரி'' என்று சொல்லிவிட்டு ஸ்டாப் ரூம் பக்கம் சென்றாள் ஹரிணி. நவீன் ஏன் அப்படிச் செய்தான் என மனம் முழுவதும் திரும்பத் திரும்ப அதையே யோசித்துக் கொண்டிருந்தது.

சாயங்காலம் மணி நான்கு என சுவர் கடிகாரம் நான்கு முறை அடித்து ஞாபகப்படுத்தியது ஸ்டாப் ரூமில் இருப்பவர்களுக்கு.

நவீனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த ஹரிணி மற்ற ரிகார்ட் நோட் புக்குகளைத் திருத்தாமல் இருந்தாள். சரி இப்போது உட்கார்ந்து திருத்தலாம் என நான்கு மணிக்கு மேல் மீண்டும் திருத்தத் தொடங்கினாள்.

எல்லாவற்றையும் திருத்தி முடித்தபோது மணி ஆறுக்கு மேல் ஆகியிருந்தது. இங்கேயிருந்து நேராகவே ஸ்டேஷன் போய் விடலாம்.

வீட்டுக்குப் போய் அங்கிருந்து டிரெயினில் போனால் லேட்டாகி விடும், என யோசித்தவாறே ஸ்கூட்டியைக் கிளப்பினாள்.



வானம் அன்று ஏனோ இருட்டிக் கொண்டு கடுமை யாக மழை பெய்யத் தயாராக இருந்தது போல் தோன் றியது அவளுக்கு.

மார்கழி மாசத்தில் மழை பெய்வது இப்போதெல்லாம் சாதாரண விஷயமாகி விட்டது. இயற்கையும் மனி தனைப் போல வித்தியாசமாக மாறி வருகிறது.

அதற்குக் காரணம் மனிதர்களே. பெட்ரோல் எனும் திரவம், டீசல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்பு. ஓசோன் மண்டலத்தில் ஓட்டை என ஏதேதோ விஞ்ஞானிகள் மணிக்கணக்காக பேசியபடி இருக்கிறார்கள்.

அடுத்த தலை முறைக்கு என்ன விட்டு வைப்போம் நாம்? சுத்தமான காற்று, நீர் இவை எல்லாம் கூட அவர் களுக்கு கிடைப்பது கஷ்டம் போல.

காற்றை, சுத்தமான காற்றை ஒரு பாட்டிலிலும், சுத்த மான நீரை ஒரு பாட்டிலிலும் அடைத்து, எக்சிபிஷனில் காட்சிப் பொருளாக அடுத்த ஜெனரேஷனுக்கு வைத் தால் கூட ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என நினைத்த வாறே ஸ்கூட்டியில் போய்க் கொண்டிருந்தாள்.

சடசடவென மழை திடீரென கொட்ட ஆரம்பித்தது. ஒதுங்க இடம் ஏதும் இல்லாததால் மழையிலேயே நனைந்த வாறு வண்டியை ஓட்டியபடி இருந்தாள் ஹரிணி.

மழை ரொம்ப வலுப்பெற்றது. தொப்பல் தொப்பலாக நனைந்து இருந்தாள் ஹரிணி. மவுண்ட் ரோடு அருகே வந்திருப்பாள். 'ம்.. ம்.. ஸ்டேஷன் கிட்ட போறதுக்குள்ள ஃபுல்லா நனைந்திடுவேன் போல' என யோசித்தவாறு சிக்னல் பச்சை விழுந்தவுடன் ஸ்கூட்டியைக் கிளப்பப் போனாள்.

ஆனால் அது கிளம்ப மாட்டேன் என அடம் பிடித்தது. மழை சற்று குறைந்திருக்க, அதைத் தள்ள முயன்றாள். ஆனால் அதுவும் கஷ்டமாக இருந்தது.

'ஓ டயர் பஞ்சர். மை காட். இப்ப என்ன செய்வது இங்க பஞ்சர் ஒட்டறதுக்குக் கூட யாரும் இல்லையே' எனப் பதட்டமானாள்.

மத்த நேரம் என்றால் பரவாயில்லை. ஆனால் அப்பா வேற இன்னிக்கு வரார். இன்னிக்கு சீக்கிரம் போகணுமே, இப்ப என்ன செய்வது என சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ஆஃபீஸ் வேலை முடித்துவிட்டு, வீட்டிற்கு தருண் காரில் போய்க் கொண்டிருந்தான்.

சாலையில் அவனுக்கு முன்னால் தண்ணீர் வெள்ள மாக ஓடிக் கொண்டிருக்க, ஒரு பெண் ஸ்கூட்டியோடு தள்ள முயன்று கொண்டிருப்பது தெரிந்தது.

டியூப் லைட் வெளிச்சத்தில் பார்க்க ஹரிணி போல் தெரிந்தது அவனுக்கு. ம்.. ம்.. அவளாய் இருக்குமா என அவன் இதயம் படபடத்தது.

சரி கீழே இறங்கிப் பார்க்கலாம் என முடிவு செய்து கீழே இறங்கினான்.

தன் பின்னால் கார் வெளிச்சம் பட, சட்டென திரும்பிப் பார்த்தாள் ஹரிணி.

அதற்குள் காரை ஆஃப் செய்துவிட்டு தருண் அவள் அருகே வந்தான்.

அந்த நிலவு வெளிச்சத்தில் நீல வண்ணப் புடவையில் ஒரு தேவதை போல் இருந்தாள் அவள். நனைந்து போய் கூந்தல் முகத்தில் ஒட்டிக் கொண்டு, உடை உடலோடு



ஒட்டிப் போய், அவளைப் பார்த்து ரசித்தவாறு நின்றான் தருண்.

அவனை அடையாளம் கண்டு கொண்டாள் ஹரிணி. சே, எப்ப பார் இவன் முன்னாடி ஏதாவது ஒரு பிரச் சினையில் மாட்டுவதே வழக்கமாயிடுச்சு.

வேண்டுமென்றே இப்படிச் செய்வதாக அவன் நினைப்பான். சே, என்று நொந்து போய் ஸ்கூட்டியைத் தள்ள முயன்றாள்.

''ஹலோ ஒரு நிமிஷம், தள்ளுங்க'' என்று சொல் லியவாறு அவள் அருகே வந்தான் தருண்.

''ம்.. ம்.. பஞ்சர் ஆயிடுச்சே. பேசாம உங்க ஸ்கூட் டியை என் கார் டிக்கியில போட்டிடலாம்'' என சொல்லிக் கொண்டே அவள் பதிலுக்கு காத்திராமல் ஸ்கூட்டியை டிக்கியில் போட்டான்.

''ஹலோ... வேணாம் குடுங்க. அப்புறம் நான் வேணும்னே செஞ்சேன் அப்படின்னு சொல்லுவீங்க. குடுங்க'' என்று அவள் பின்னாடி கத்தியவாறு சென்றாள் ஹரிணி.

அதைக் கேட்ட அவன் சிரித்தான். ''இட்ஸ் ஓ.கே. நான் உங்கள நம்பறேன். எங்க போகணும் சொல்லுங்க ஐ வில் டிராப் யூ'' என்றான்.

''இல்லை வேணாம். நான் ஆட்டோவில போறேன். உங்க அட்ரெஸ் கொடுங்க. நான் நாளைக்கு ஸ்கூட்டி வந்து வாங்கிக்கறேன்'' என்றாள் விடாப்பிடியாக.

''ஓகே உங்க இஷ்டம். நாளைக்கு ரெடியான பின் நான் உங்களுக்கு போன் செய்யறேன் ஹரிணி'' என்றான் சிரித்தவாறு.

அவள் விழிகள் ஒரு நொடி வியந்து பின் இயல்பு நிலைக்கு வந்ததை அவன் கண்கள் கவனித்தன. அவள் முகத்தில் இருந்து அவன் கண்கள் அவள் கை, மணிக் கட்டை கவனித்தது.

அதில் வாட்ச்சுக்கு பதிலாக வளையல் இருப்பதை அவன் பார்த்தான். ஏனோ சட்டென அவள் மேல் ஒரு பரிதாப உணர்ச்சி தோன்றியது.

''ஹரிணி. நான் உங்களுக்கு ஐநூறு ரூபாய் தரணும். உங்க கணக்குப்படி. அதுக்குப் பதிலாக உங்களை டிராப் செய்யறேனே ஆட்டோவுக்கு கொடுக்கற காசுக்கு பதிலா இது அப்படின்னு நினைச்சுக்கோங்க'' என்றான் நடந்து போய் கொண்டிருந்த அவளைப் பார்த்து,

எதுவும் சொல்லாமல் அவள் ஒரு ஆட்டோவைக் கூப்பிட்டு அதில் ஏறி அமர்ந்தாள்.

சரியான வியாபாரி ஆக இருப்பான் போல. நாளைக்கு ஸ்கூட்டி ரெடியானபின் முதல் வேலையாக வாட்ச்சை வாங்கிக் கொண்டு அவன் பணம் முந்நூறு ரூபாயை அவனிடம் கொடுத்து விட வேண்டும் என நினைத்த வாறே ஆட்டோவில் உட்கார்ந்திருந்தாள் ஹரிணி.

மழை சற்றே விட்டிருந்தது. ஸ்டேஷனில் இறங்கி டிரெயினுக்காக வெயிட் பண்ணிக் கொண்டிருந்தாள் ஹரிணி. ப்ளாட் பார்ம் இரண்டில் நின்று கொண்டிருந்த போது மனம் ரொம்ப உற்சாகமாக இருந்தது.

அப்பாவை இங்கே சென்னையில் பார்ப்பது, எவ் வளவு ஒரு இனிமையான ஃபீலிங். அவரையும் ஜேம்ஸ் அங்கிளையும் நன்றாக கவனிக்க வேணும் என நினைத்த வாறே ஆவலோடு அவர்கள் வரவிற்காக காத்திருந்தாள் ஹரிணி.



# 4

**நிலவின்**
**அழகை**
**ரசிக்கக்**
**கற்று கொடுத்தாய்!**
**மழையில்**
**நனையும்**
**சுகத்தை அனுபவிக்க**
**வைத்தாய்!**
**பூக்களின்**
**சிரிப்பை**
**எனக்கு**
**அறிமுகப்படுத்தினாய்!**
**கடல்**
**அலையின்**
**விடா முயற்சியைப்**
**பாராட்டினாய்!**
**இவ்வளவு செய்த நீ**
**இப்போது எங்கே இருக்கிறாய்?**

அன்று சனிக்கிழமை என்பதால், நிதானமாக எழுந்தாள் ஹரிணி. அன்று அப்பாவுக்குப் பிடித்த சமையல் செய்வது என முடிவு செய்தாள்.

வெஜிடெபிள் பிரைட் ரைஸுக்கு காயெல்லாம் கட் செய்து வைத்தாள். சைட் டிஷ் என்ன செய்வது என யோசித்தாள்.

ஃப்ரிட்ஜில் பேபி கார்ன் இருப்பது ஞாபகம் வந்தது.

அதை டீப் ப்ரையாக செய்வது என முடிவு செய்தாள். கூடவே டால் கிரேவி செய்தால் நன்றாக இருக்கும். அப்பாவுக்கு இது கண்டிப்பாகப் பிடிக்கும் என ஆர்வமாகச் செய்ய ஆரம்பித்தாள்.

காலை டிபனுக்கு தோசை, தேங்காய் சட்னியும் செய்து தயாராக வைத்தாள். அவள் எப்பவுமே நல்ல வேகமாக சமையல் முடிப்பாள்.

அன்றும் எல்லாம் அயிட்டம்ஸும் காலை பதினொரு மணிக்குள் தயார் செய்து முடித்தாள்.

காலிங்பெல் சத்தம் கேட்கவே யாராகயிருக்கும் என யோசித்தவாறே கதவு நோக்கிச் சென்றாள்.

கதவைத் திறந்தவளுக்கு எதிரில் பரத் இருந்தது நல்ல சர்ப்ரைசாக இருந்தது.

''பரத். வாட் எ சர்ப்ரைஸ். வா, வா, உள்ள வா. அப்பா வந்திருக்கார் ஊரில் இருந்து. உன்னை நான் அறிமுகப் படுத்தி வைக்கிறேன் வா'' என்றாள் உற்சாகமாக.

''தேங்க்ஸ் ஹரிணி. உங்க அப்பா வரப் போறார் அப்படின்னு தெரிஞ்சிருந்தா, நான் இப்படி வெறும் கையை வீசிகிட்டு வந்திருக்க மாட்டேன்.

''ஐ வுட் ஹேவ் காட் சம்திங் ஃபார் ஹிம்'' என்றான் பரத் வருத்தமான தொனியில்.

''ம்... ம்... பார், நீ எனக்கு இது வரைக்கும் ஏதும் வாங்கிட்டு வந்தது இல்ல. உனக்கு என்மேல அக்கறையே இல்ல. அப்பாவுக்குன்னா, எல்லாம் செய்வ இல்ல'' என்று பொய்யாகக் கோபப்பட்டாள் ஹரிணி.

''ஏய்.. என்ன இப்படிப் பொய் சொல்ற? நான் உனக்கு போன வாரம் கூட ஒரு புக் பிரசெண்ட் செய்தேனே.



''நீ கூட நல்லாயிருக்கு அப்படின்னு சொன்ன'' என்றான் ஆதங்கத்தோடு.

''ஏய் கமான். சும்மா உன்னைக் கிண்டல் தான் செஞ்சேன்'' என்றாள் சிரித்தபடி ஹரிணி.

''தேங்க்ஸ். நீ எப்ப சீரியஸா இருக்க. எப்ப சிரிச்சு ஜோக் அடிப்ப, அப்படின்னு கொஞ்சம் முன்னாடிய சொல்லிடு. நான் அதுக்கேத்த மாதிரி ரீ ஆக்ட் செய்வேன்'' என்றான் அவனும் சிரித்தபடி.

ஹாலில் சத்தம் கேட்க, ஜேம்ஸ் ஹரிணியின் அப்பாவை வீல் சேரில் தள்ளிக் கொண்டு வந்தார்.

''அப்பா வாங்க. இவர் பரத். என்னோட நல்ல ஃபிரண்ட். நான் எழுதற எல்லாத்தையும் விமர்சனம் செய்யறவர். ஒரு இலக்கிய கூட்டத்தில தான் இவரை முதல்ல சந்திச்சேன்.

''அதுக்கு அப்புறம் என்னோட எல்லா எழுத்தையும் முதல்ல படிச்சு இவர் தான் விமர்சிப்பார்'' என்றாள் ஹரிணி பெருமையாக.

''அப்படியா ஹரிணி. உட்காருங்க தம்பி. எங்க வேலை பாக்கறீங்க?'' என்றார் நாராயணன்.

''நான் கே.கே. எக்ஸ்போர்ட்ல வேலை பாக்கறேன் சார். அது ஒரு மென்பொருள் ஏற்றுமதி கம்பனி. எனக்கு நிறைய ஸ்பேர் டைம் இருக்கும், ஷிப்டில் வேலை என்பதால், அந்த டையத்துல ஆரம்பிச்சது தான் இதெல்லாம். நீங்க இதுதான் சென்னைக்கு முதல் தடவை வரதா'' என்றான்.

''ஆமாம் தம்பி. ஹரிணி ரொம்ப நாளா கூப்பிட்டுக்கிட்டே இருந்தா, இப்ப தான் டைம் கிடைச்சுது. எல்லாத்

துக்கும் ஒரு நேரம் வரணும் இல்ல. அது இப்ப தான் வந்தது போல'' என்றார் நாராயணன்.

''ஹரிணி இன்னிக்கு சாயங்காலம் ஆசிரமத்து குழந்தைகளோட பர்ட் வாட்சிங் போகலாம்னு ப்ளான் செய்தேன். நீ வர்றியா இல்ல அப்பா வந்திருக்கறதால அவரோட டைம் ஸ்பெண்ட் செய்யப் போறியா?'' என்றான் பரத்.

''ஏய் நல்லாயிருக்கும். பறவைகளைப் பாக்கறது. கண்டிப்பா பசங்களுக்கு ரொம்ப பிடிக்கும். அதுக்கும் பைனாகுலர் வேணும் இல்ல. இருந்தாத் தானே நல்லாப் பாக்க முடியும்'' என்றாள் ஆர்வமாக ஹரிணி.

''ம்.. ம்.. ஆமாம். ஹரிணி. என்னோட ஃபிரண்ட் ஒருத்தன் ஆபீஸில பைனாகுலர் ரெண்டுக்கு எடுக்கற துக்கு அரேன்ஜ் செஞ்சிருக்கேன். அவனே அதை ஸ்பான்சரும் செய்யறான். அதனால பிரச்சினை இல்லை'' என்றான்.

''குட். எனக்கும் வரணும் அப்படின்னு ஆசையாத்தான் இருக்கு. ஆனால்...'' என்று அவள் இழுப்பதைப் பார்த்த வுடன் நாராயணன் அவளைப் பார்த்து,

''ஹரிணி என்ன இது. இவ்வளவு யோசிக்கற. தம்பி கூப்பிடுது இல்ல. என்னைப் பத்தி கவலைப்படாதே. ஜேம்ஸ் இருக்கார் பேச்சுத் துணைக்கு. நீ போயிட்டு வா'' என்றார்.

''நீங்களும் வாங்களேன் சார். எல்லாருமே போகலாம். ரொம்ப நல்லா இருக்கும். வேடந்தாங்கல், கிட்ட தான் போயிட்டு வரலாமே, எல்லாரும்'' என்றான் பரத் ஆர்வ மாக.



''அப்பா... அப்பா, வாங்கப்பா, ப்ளீஸ்'' என சிறு குழந்தை போல் ஹரிணியும் நச்சரித்தாள்.

கூட இருந்த ஜேம்ஸ் அதைப் பார்த்து விட்டு,

''போகலாமே, ஐயா, குழந்தைங்க ஆசைப்படுது இல்ல'' என்றான்.

''சரி. நீங்க எல்லாம் இவ்வளவு சொல்லும் பொழுது, நான் மட்டும், மாட்டேன்னா சொல்லப் போறேன். போகலாம்'' என்றார் நாராயணனும்.

''ஐ. ஜாலி. அப்பா, தேங்க்ஸ் ஸோ மச். எப்ப கிளம்ப ணும் பரத்'' என்றாள் ஹரிணி உற்சாகமாக.

''ம்.. ம். மத்தியானம் ஒரு இரண்டு மணி கிட்ட கிளம்பலாம். இங்க இருந்து ஆசிரமத்துக்கு போயிடலாம். எப்படியும் அங்க குழந்தைங்க தயாரா இருப்பாங்க. பஸ்ஸில அவங்க கூட புறப்பட வேண்டியது தான்'' என்றான் பரத்.

''ஓ, சரி. ஈவினிங் எத்தனை மணிக்கு, ரிடர்ன் ஆவோம் ரொம்ப லேட்டாகுமோ'' என்றாள் ஹரிணி.

''சீக்கிரம். வந்திடலாம். எப்படியும் ஒரு ஐந்து, ஐந்தரை கிட்ட பர்ட்ஸ் எல்லா மூவ் ஆக ஆரம்பிச்சுடும்'' என்றான் பரத்.

''அப்பா, பரத்தோட ஹாபி பர்ட் வாட்சிங். அவருக்கு நிறைய விஷயங்கள், அதப் பத்தி தெரியும். அதனால நமக்கு யாரும் கைட் எல்லாம் வேணாம்'' என்றாள் ஹரிணி.

''சார் சும்மா ஓட்டறா சார், என்னை. எனக்கு பர்ட்ஸ் பிடிக்கும். கும்பல் கும்பலா, டீம் ஒர்க் ரொம்ப நல்லா பண்ணும் பர்ட்ஸ்.

''அதோட மனுஷங்களுக்கும் பறவைகளுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கு. தன்னுடைய குஞ்சுகளிடம் பாசமா இருக்கறது, ஆபத்துன்னு வந்தா எப்படித் தன்னோட குஞ்சுகளைக் காப்பாத்த தன் உயிரைக் கூடப் பொருட் படுத்தாம எதிரிகளிடம் இருந்து காப்பாத்தறது என நிறைய சொல்லிகிட்டே போகலாம்'' என்றான் பரத்.

''பரவாயில்லையே தம்பி. இவ்வளவு தெரிஞ்சு அதை அழகா சொல்றீங்களே. குட்'' என்றார் நாராயணன்.

''ஹரிணி. தம்பிக்கு சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வாம்மா. வந்து நேரம் ஆச்சு பாரு'' என்றார் அக்கறையாக.

''ம்... சார், நான் சாப்பாடை ஒரு பிடி பிடிச்சுட்டுத் தான், உங்களோட தான் கிளம்புவேன். அதனால சும்மா, காபி, டீயோடு என்னை அனுப்பிச்சிடலாம், அப்படின்னு நினைக்காதீங்க'' என்றான் பரத் கிண்டலாக.

''அட, என்ன தம்பி. நான் சும்மா இப்ப ஏதாவது சாப்பிட எடுத்துட்டு வரச் சொன்னேன். எனக்கு ஹரிணி சாப்பாடை சாப்பிட கொஞ்சம் பயம்.

''அதான் டெஸ்ட் ரேட் மாதிரி, முதல்ல உங்களை சாப்பிடச் செய்யலாம், அப்படின்னு தான் சொன்னேன்'' என்றார் அவரும் கிண்டலாக.

''அப்பா. என்ன அப்பா. நீங்களும் இவனோட சேர்ந்து கிட்டு'' என்று சிணுங்கினாள் ஹரிணி.

''சார். நீங்களே இவ்வளவு பயப்படறீங்க, அப்படின்னா, கண்டிப்பா, இவளோட சமையல்.. எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு'' என்று பொய்யாகப் பயந்தான்.

''அடப் பாவி. எவ்வளவு தடவை இடியாப்பம் ரொம்ப நல்லா இருக்கு. இந்த வெஜ் பிரியாணி ஸ்டார்



ஹோட்டல் டேஸ்ட் என எப்படி மிச்சம் வைக்காம சப்பு கொட்டிகிட்டு சாப்பிட்டு இருக்க. இப்ப இப்படி பிளேட்டை மாத்திப் போடற'' என் தன் பங்குக்கு கோபப் பட்டாள் ஹரிணி.

அவர்கள் இருவரும் பேசி, கேலி செய்வதை ரசித்தார் நாராயணன். ஏனோ அவர் நெஞ்சில் குறுகுறுவென ஒரு எண்ணம்.

பரத் பார்க்க நல்லா இருக்கான். நல்லாப் பேசறான். ரெண்டு பேரும், நல்லாப் பழகறாங்க. ஹரிணிக்கு இவன் மேல, ஏதாவது ஈர்ப்பு இருக்குமா?

என்கிட்ட பேச கூச்சப்பட்டு கிட்டு இருக்காளோ என ஒரு நிமிடம் யோசித்தார். பின் சே, ஹரிணி என் பெண் என்னிடம் அவள் எதுவுமே மறைக்க மாட்டாள்.

ஏதாவது என்றால் அவள் என்னிடம் பேசுவாள். அதனால் நான், இது பற்றி அவளிடம், நானாக ஆரம் பிப்பது சரியில்லை என முடிவு செய்தார்.

''அப்பா. நீங்க ரெஸ்ட் எடுங்க, பரத் பேச ஆரம்பிச்சா பயங்கரமா அறுப்பான்'' என்றாள் ஹரிணி.

''ஹலோ உன் சாப்பாட்டை நினைச்சு, அவர் அப் படியே சட்டுன்னு ஃப்ரீஸ் ஆயிட்டார்'' என்றான் பரத், சிரிக்காமல்.

அதைக் கேட்டு ஹரிணி உட்பட எல்லாரும் சிரித் தனர். ''சரி, தம்பி நீங்க பேசிகிட்டு இருங்க. நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு வர்றேன்'' என்றார் நாராயணன்.

''சரிங்க சார். நல்லா தூக்கம் போடுங்க. யூ வில் பீ சார்ஜ்ட்'' என்றான் பரத்.

சிரித்துக் கொண்டே, அதை ஆமோதிப்பது போல் தலை அசைத்தார் நாராயணன். ஜேம்ஸ் அவர் நாற்காலியை ரூம் உள்ளே தள்ளிக் கொண்டு போனார்.

''பரத். நான் உங்ககிட்ட ஒண்ணு பேசணும் அப்படின்னு நினைச்சுகிட்டு இருந்தேன்'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''சொல்லு, ஹரிணி, நீ ஆரம்பிக்கறதப் பார்த்தா மேட்டர் ஏதோ பெரிசு போல பீடிகை பலமா இருக்கே'' என்றான்.

''ம்.. ம்.. யெஸ் பரத். என்னோட கிளாஸ்ல ஒரு பையன், பேர் நவீன் சிக்ஸ்தான் படிக்கிறான் பட்'' என்று தொடர முடியாமல் பெருமூச்சு விட்டாள்.

''சொல்லு, ஹரிணி. சரியா படிக்க மாட்டேங்கறனா. ஃபுவர் பெர்பார்மென்சா, உன்னோட சப்ஜெக்ட் மட்டும் தானே'' என்றான் பரத் சிரிக்காமல் கிண்டலாக.

''ஷ். பரத். ஜோக் அடிக்காத. அவன் ஒரு லெட்டர், அவன் ரிகார்ட்டில், அவன் நோட்புக் கரெக்ஷன் வரும் போது என் கண்ல படற மாதிரி வைச்சிருந்தான்'' என்று நிறுத்தினாள் ஹரிணி.

''ஓ, சொல்லு. என்ன இருந்தது, அந்த லெட்டர்ல, எனி ப்ராப்ளம்'' என்றான் சீரியசாக.

''ம்.. ம்.. அது என்ன லெட்டர்ன்னு எனக்கு சொல்லத் தெரியலை பரத். பட் எனக்கு அம்மா கிடையாது. ஐ லவ் யூ மிஸ்'' என்று படிக்கவே பாவமா இருந்தது பரத் என்றாள்.

''ஓ, பாவம். சின்னப் பையன் இல்ல. அவன் அம்மா இறந்து எவ்வளவு நாள் ஆச்சு ஹரிணி. ஒரு வேளை



ரீசெண்டா ஏதாவது ஆயிருந்தா, பாவம் அந்த இழப்பில இருந்து அவன் வெளிய வரணும் இல்ல. மே பீ ஹி நீட்ஸ் எ கம்பர்ட் ஸ்பேஸ்'' என்றான் மெதுவாக.

''ம்.. ம்.. யூ ஆர் கரெக்ட். எனக்கு பெர்சனலா அந்தப் பையன் பத்தி தெரியாது. பட் கொஞ்சம் நல்ல, பணக்கார வீட்டுப் பையன்.

''ஸ்கூல் பில்டிங் ஃபண்ட், அப்புறம் ஏதாவது ஃபண்ட் ரெய்ஸர்ன்னா போதும். பிரின்சி அவன் கிட்ட பேசி, டீடெய்ல்ஸ் குடுத்திடுவாங்க.

''பையனும், சூப்பரா கலெக்ட் செஞ்சிடுவான். அது எனக்கு நல்லா தெரியும். மத்தபடி அவன் பேக்கிரவுண்ட் எனக்குத் தெரியாது'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''ஓ. நீ அவன்கிட்ட பேசிப் பார் ஹரிணி. அப்ப தான் அவனோட மனசில என்ன இருக்கு அப்படின்னு தெரியும். ட்ரை இட்'' என்றான் பரத்.

''ம். ம். யெஸ் பரத். அன்னைக்கு பேசணும். அப்படின்னு அவன் கிளாஸ் போனேன், பட் அவன் கிளம்பிப் போயிட்டான், கிளாஸ் மிஸ் கிட்ட உடம்பு சரியில்லை, அப்படின்னு'' என்றாள்.

''ஓ உனக்கு லெட்டர் குடுத்தவுடனே, கொஞ்சம் பயந்திட்டான் போல. ஏன் செஞ்சோம் அப்படின்னு, அதனால கூட அவசரமா போயிருப்பான்'' என்றான் சிரித்தவாறு.

''ம்.. ம்.. நானும் அப்படித்தான் நினைக்கிறேன் பரத். திங்கட்கிழமை, எப்படியாவது அவன் கிட்ட பேசிடணும். தென் ஒன்லி ஐ வுட் பீ ஓகே'' என்றாள் ஹரிணி.

''ம். ம். பேசிட்டு சொல்லு. உனக்கு ஏதாவது உதவி வேணும்னா ஐ ஆம் ரெடி டு டூ தட்'' என்றான் பரத் மெதுவாக.

## 5

**உன்னால்**
**நான்**
**காற்றில்**
**பறக்கிறேன்!**
**உயர உயர**
**மேலே**
**மேகக் கூட்டங்கள்**
**நடுவில்!**
**நட்சத்திர**
**அணிவகுப்பு**
**உள்ளே**
**உரிமையாக**
**நுழைகின்றேன்!**
**வெண்ணிலா**
**அருகே**
**வந்தேன்!**
**உன் முகம் நினைவுக்கு**
**வர வேகமாக பூமிக்கு**
**வந்தேன்! நீ எங்கே?**

தருண் அன்று காலையில் எழுந்திருக்கும்போது, இன்று நவீனை எங்கேயாவது அழைச்சுட்டுப் போகணும், அப்படின்னு முடிவு செய்தான்.



மத்த நாளில் எல்லாம் எதற்கும் நேரமே இருக்க மாட்டேங்குது. பல துறையில் கால் பதித்தால் இப்படித் தான் நடக்கும் போல.

ஆனால் சக்ஸஸ் என்பது ஒரு போதை தான். ஒன்று முடிந்த பின் அடுத்ததும் அந்த மாதிரி சக்ஸஸ்புல்லாக இருக்க வேண்டும் என்று ஒரு வேகம் பிறக்கிறது.

அதை விட்டு விட்டு வெளியே வருவது கஷ்டம் தான். அந்த ருசி தெரிந்துவிட்டால், அது மீண்டும் நமக்குக் கிடைக்க வேண்டும் என மனசு பறக்கிறது.

பாவம் நவீன். சின்னக் குழந்தை. நான் மிஸ் பண்ணின நிறைய விஷயம் அவன் மிஸ் பண்ணக்கூடாது. அதுக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய மனசு துடிக்கிறது.

இப்போதெல்லாம் ரொம்ப அவன் பேசுவதே இல்லை. ஏன் என்று தெரியலை. அவன் கண்களில் ஒரு ஏக்கம். 'இஸ் ஹி மிஸ்ஸிங் சம்திங் சீரியஸ்?' என தனக்குள்ளே கேட்டவாறு இருந்தான், தருண்.

'அவனுக்கு என்ன குறை இருக்க முடியும். எது கேட்டாலும், நான் அவனுக்கு வாங்கி தர்றேன். ஜஸ்ட் எனி திங்க், டென்னிஸ் கோர்ட் அவனுக்காக ப்ரைவேட் கோர்ட், வீட்டில் இருக்கிறது.

'அதைத் தவிர ஸ்விம்மிங் க்ளாஸ் ஃபிரண்ட்ஸ்க்கு பார்ட்டி அரேன்ஜ் செய்வது, கெட் டு கெதரில் பங்கேற்பது என எவ்வளவோ, அவனுக்காக செய்கிறேன் பட் ஹி இஸ் நாட் எ ஹேப்பி பாய்.

'இன்னும் என்ன செய்வது எனப் புரியலை?' என ஒரு குழப்பத்தோடு படுக்கையில் இருந்து எழுந்தான், தருண்.

மாடியிலிருந்து கீழே வரும்போது சமையல்காரர் முத்து அவனைப் பார்த்தவுடன் வேகமாக ''குட்மார்னிங் சார்'' என்றார்.

''குட்மார்னிங் முத்து. என்ன ஏதோ டென்ஷனா இருக்கீங்க?'' என்றான் தருண்.

''சார், நவீன் தம்பி, காலையிலேயே ஆறு மணிக்கே முழிச்சிட்டார். ஆனா ரூமை விட்டு வராம, வெளியே வராம, ஜன்னல் வழியா, எங்கோ வேடிக்கை பார்க்கறார். ரொம்ப டல்லாத் தெரியறார், அதான் உங்ககிட்ட சொல்ல வந்தேன்'' என இழுத்தார்.

''இப்ப மணி எட்டு ஆகுதே முத்து. என்னை எழுப்பி இருக்கலாம் இல்ல. பாவம் குழந்தை'' எனச் சொல்லிக் கொண்டு நவீன் ரூமிற்குச் சென்றான் தருண்.

''சாரி சார், நீங்க அசந்து தூங்கினதால உங்கள டிஸ்டர்ப் செய்ய வேணாம். அப்படின்னுதான்'' என்றான் மன்னிப்பு கேட்கும் தொனியில் முத்து.

''நவீன் குட் மார்னிங், ஹவ் ஆர் யூ'' என்றான் தருண்.

''ம்... ம். குட்மார்னிங் அண்ணா'' என்றான் தலையைக் குனிந்தபடி நவீன்.

''ஸ்கூல்ல இன்னிக்கு ஸ்பெஷல் கிளாஸ் ஏதும் இல்லையா நவீன்?'' என்றான்.

''ம்.. ம். இல்லை அண்ணா. ஸ்பெஷல் கிளாஸ் வெச்சா தேவலை. இங்க ஒரே போர்'' என்றான் வெறுப்பாக நவீன்.

ஏதோ ஒரு நூல் கிடைத்தது போல் உணர்ந்தான். மெதுவாகப் பேசி இவனிடம் இருந்து, என்ன விஷயம்



என்று கேட்க வேண்டும் என்று முடிவு செய்தான் தருண்.

''சரி, நவீன். வா நம்ம ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிடலாமா? ஃபார் எ சேன்ஜ், இன்னிக்கு உன் ரூமிலேயே சாப்பிடலாமா?'' என்றான் தருண் உற்சாகமாக.

''ம். ம். சரி அண்ணா வாங்க'' என்றான் நவீன் மெதுவாக.

அவன் கையைப் பிடித்துக் கொண்டு, சிரித்தவாறு அவன் ரூமிற்குள் அவனை அழைத்துச் சென்றான் தருண்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த முத்து, வேகமாக ப்ரேக் ஃபாஸ்ட்டை நவீன் ரூம் டைனிங் டேபிளில் வைத்தான்.

டேபிளில் சூடாக இருந்த உணவுப் பதார்த்தத்தில் இருந்து எழுந்த நறுமணம் அந்த அறையை நிறைத்தது.

''வாடா, நவீன். இன்னிக்கு நான் உனக்குப் பரிமாறு கிறேன். இட்லி சூடா இருக்கு. சாப்பிடு. வாவ் சாம்பார் வாசனை மூக்கைத் துளைக்குது. இந்தா நல்லா சாப்பிடு'' என தட்டில் இட்லி மேல் சாம்பார் ஊற்றினான்.

''அண்ணா, இதே வீட்டில அண்ணி இருந்தா அவங்க எனக்குப் பரிமாறுவாங்க. ம்.. ம், நீங்க உங்க வேலைய பாக்கலாம், கரெக்டா. அண்ணா'' என்றான் மெதுவாக நவீன்.

'ஓ சார் தலையில இது தான் வண்டாட்டம் குடையுது போல' என நினைத்து சிரித்துக் கொண்டான் தருண் மனதிற்குள்.

''என்ன அண்ணா கேட்டதுக்கு பதில் சொல்ல மாட்டேங்கறீங்க? என் மேல கோபமா?'' என்றான் நவீன் மெதுவாக.

''இல்லை நவீன். நத்திங். ஏன் திடீர்னு உனக்கு ஒரு அண்ணி வேணும் அப்படின்னு நினைக்கற?'' என்றான் தருண் ஆதரவாக.

''அண்ணா என்னோட கிளாஸ் மேட்ஸ். ஃபிரண்ட்ஸ் வீட்ல எல்லாம், அவங்களுக்கு அம்மா இருக்காங்க. அவங்க எல்லாம் அதைப் பத்தியே பேசறாங்க. எனக்கு... எனக்கு அழுகையா வருது. அம்மா தான், லஞ்ச் பேக் செய்வாங்களாம். நைட் கதை சொல்லித் தூங்க வைப் பாங்களாம். எல்லாம் அம்மா செய்வாங்களாம்.

''பட்.. பட் எனக்கு யாரும் இல்லை அப்படி'' என்று சொன்னபோது உண்மை தருண் மனதை அறைந்தது.

''நவீன்... நீ இப்ப சின்னப் பையன் கிடையாது. யூ ஆர் இன் சிக்ஸ்த் ஸ்டாண்டர்டு. அதுக்கு ஏத்த மாதிரி நடந்துக்கப் பழகிக்கோ.

''உனக்கு உன் ஃபிரண்ட்ஸுக்கு இல்லாத எவ்வளவோ திங்க்ஸ் இருக்கு. லீவ்ன்னா, டைம் ஸ்பெண்ட் செய்ய சிங்கப்பூர் போறது, உனக்காக டென்னிஸ் கோர்ட் வீட்டில், ஸ்விம்மிங் பூல்.. இன்னும் எவ்வளவோ. நீ அதையும் நினைச்சுப் பாக்கணும்'' என்றான் தருண்.

''அண்ணா, எனக்கு அதெல்லாம் வேணாம். எனக்கு என்னைப் பாத்துக்க அண்ணி வேணும்.வேற எதுவும் வேணாம்'' என சொல்லிவிட்டு, கோபமாகத் தட்டை வீசி எறிந்தான் நவீன்.



அவனைச் சமாதானப்படுத்தி, மறுபடியும் சாப்பிட வைத்தான் தருண். ஆனால் மனம் முழுவதும் அவன் சொன்னதையே சுற்றிச் சுற்றி வந்தது.

என்ன செய்வது இதற்கு என புரியாமல் ஒரு சோர்வு அவனை ஆட்கொண்டது. சிக்னலில் அந்த சிறுமியை அணைத்து சமாதானப்படுத்திய ஹரிணியின் முகம் கண் முன் ஒரு நொடி தோன்றி மறைந்தது.

ம்.. ம்.. இதற்கு, நவீனின் பிரச்சினைக்கு என்ன செய்வது? பாவம் குழந்தை, ரொம்பவே ஏங்கிப் போயிருக் கிறான். அவன் ஃபிரண்ட்ஸ் எல்லாரும் அம்மா புராணம் பாடிக் கொண்டிருந்தால் இவன் என்ன செய்வான், பாவம்.

சட்டென அம்மா மேல் கோபம் வந்தது. இறந்தவர் மேலே கோபப்படுவது தப்பு. ஆனால் ஏனோ அம் மாவைப் பற்றி நினைக்க நினைக்க மனதில் ஒரு எரிச் சல், கடகடவென உடல் முழுவதும் பரவியது.

சட்டென மனம் அவனையறியாமல் பின்னோக்கி, சென்றது.

நந்தினி இதுதான் அவனோட அம்மா பெயர். பிரபல சினிமா நடிகை. எப்பவும் கால்ஷீட், ப்ராக்டிஸ், ஷூட்டிங் என பறந்து கொண்டிருப்பவள்.

வீட்டிற்கு யார் யாரோ வருவார்கள் போவார்கள். அவனை வளர்த்தது பெரும்பாலும் வேலைக்காரர்களே. குளிப்பாட்டுவது, சாப்பாடு ஊட்டுவது என எல்லாமே அவர்கள் தயவில் தான்.

எப்போதாவது அம்மா, அவனிடம் பேசுவாள். 'நல்லா படி, நீ நல்லாயிருக்கணும், அப்படின்னு தான் நான்

எல்லாம் செய்யறேன். நீ தான் எனக்கு உலகம்' என்று ஏதேதோ பேசுவாள்.

தன்னுடைய பத்தாவது வயதில் தருணுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது. தனக்கு அப்பா என்பது, யார் என்று சொல்ல அம்மா மறுப்பது புரிந்தது.

எப்பவும் பணம், புகழ் வேணும் என்ற ஆசை அம் மாவை ஆட்டிப் படைத்தது. கூடவே நிறைய பேர், ஆண்களுடன் அம்மா நெருக்கமாக இருப்பதுபோல் பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்கள்.

இவை எல்லாம் ஞாபகம் வந்தது.

அம்மாவை எதிர்த்து தான் பேசியது நினைவுக்கு வந்தது. அம்மா அவனை அடித்து, இனி இங்க இருக்க வேணாம் நீ ரெசிடென்சியல் ஸ்கூலுக்கு போ என ஊட்டியில் ஒரு பிரபல பள்ளியில் அவனைச் சேர்த்தது என ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகம் வந்தது.

எல்லா இடங்களிலும் அப்பா யார் என யாராவது கேட்கும்போது, என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் பட்ட அவஸ்தை, ஒரு வலி அது, அந்த வேதனை யாருக்கும் வரக்கூடாது.

அதனாலேயே நெருக்கமான ஃபிரண்ட்ஸ் அவன் எந்த வயதிலும் ஏற்படுத்திக் கொண்டதில்லை. ம்ம்.. ம்.. ம்.. இந்த நினைப்பு வரக்கூடாது என எவ்வளவு முயன்றாலும், பல நேரம் மனதில் இந்த எண்ணம் ஆக்ரமித்து, வலியை ஏற்படுத்துகிறது.

ஆனால் அவனுக்கு சந்தோஷம் ஏற்படுத்திய ஒரு விஷயம், நடந்தது என்றால் அது நவீனின் பிறப்பு தான்.



காலேஜ் படிக்கும்போது, அம்மா போன் பண்ணி சொன்னது அந்த நொடி மறக்க முடியாதது. பெங்களூரில் இருந்து வேகமாக விமானம் மூலம் சென்னை பறந்தது. பூக்குவியல் போல ஒரு அழகான பிஞ்சுக் குழந்தையைக் கையில் ஏந்தியது. நினைவுக்கு வந்தது.

அருகில் இருந்த, பிசினஸ் மேன் கரணை அம்மா அறிமுகப்படுத்தினாள்.

''இது தான் இவனின் அப்பா, தருண். நான் நான் இனி ரொம்ப நேரம் உயிரோட இருக்க மாட்டேன். டாக்டர் சொல்லிட்டார் தருண்.

''கரண் ரொம்ப நல்லவர் தருண். உனக்கு அப்பா முறை, ஆனால் அப்பா கிடையாது. என் கடந்த கால வாழ்க் கையில் இருந்த சாக்கடைகளை, நன்றாகத் தெரிந்தவர். நான் செய்த தவறுகளையும் கேவலங்களையும் பொருட் படுத்தாமல், என்னை ஒரு பெண்ணாக, மனுஷியாகப் பார்த்தவர்.

''அந்தப் புனிதக் கடலில் நான் கரைந்து போய் விட் டேன் தருண். யாருக்கும் இவர் மாதிரி ஒரு பரந்த மனசு வராது தருண்'' என்று அம்மா தன் கையைப் பிடித்துக் கொண்டு அழுதது ஞாபகம் வந்தது.

ஆனால் ஏனோ அம்மா செய்த தவறை எல்லாம் தருணால் மன்னிக்க முடியவில்லை. மனதில் ஒரு தீராத வடு இருந்து கொண்டே இருந்தது.

ஒரு நல்ல விஷயம் கரண், ரொம்ப நல்லவராக இருந்தது தான். அவரே தனக்கு அப்பாவாக இருக்கக் கூடாதா என மனம் ஏங்கியிருக்கிறான் பல முறை.

அம்மா இறந்த பின் எந்தப் பெண்ணையும் திரு மணம் செய்யாமல், நவீனைக் கஷ்டப்பட்டு ரொம்ப நன் றாகவே வளர்த்தார் கரண்.

பிசினஸையும் பார்த்துக் கொண்டு, தருணையும் கவனித்து, நவீனையும் அவர் உயிரோடு இருக்கிற வரை அருமையாக கவனித்தார்.

''நந்தினியைப் பற்றி, அவள் மேல் உனக்குக் கோபம் இருப்பது நியாயம் தான் தருண். ஒரு அம்மாவாக இருந்து, உனக்குச் செய்ய வேண்டிய எதையும் அவள் செய்யவில்லை. ஐ அண்டர்ஸ்டாண்ட்.

''பட், கடைசியில் அவள் ரொம்ப மாறி விட்டாள் தருண். வாழ்க்கையில் தான் செய்த தவற்றை எல்லாம் அவள் உணர்ந்து விட்டாள். இட்ஸ் டூ லேட். பட் பெட்டர் லேட் தேன் நெவர், அதனால யோசிச்சுப் பார். அமைதியா, நிதானமா, யோசிச்சுப் பார். உன்னைப் பத்தி, அவ நிறைய தடவை என்கிட்ட பேசியிருக்காள்.

''உன்னை அடித்தது, உன் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்காமல், உன் மனதை நோகடித்தது என எல்லாமே பேசியிருக்கோம்'' என்று அவர் சொன்னது இப்போது பேசியது போல் இருக்கிறது.

அம்மாவின் சொத்து அவன் பேரில் இருந்த எல்லா வற்றையும் நவீன் பேருக்கு மாற்றி விடத் தான் தருண் முயன்றான்.

ஆனால் அவன் மைனர் என்பதால், கார்டியனாக இவனிடம் தான் எல்லாம் சொத்தும் இருக்க வேண்டும் என சட்டப்படி வக்கீல்கள் சொல்ல, வேறு வழியின்றி அந்த, சொத்து எல்லாம் பாதுகாத்து வரவேண்டியுள்ளது.



நவீனுக்கு பதினெட்டு வயது ஆகட்டும். அது வரை இதையெல்லாம் பொறுத்துக்க வேணும் தான். என பெருமூச்செறிந்தான்.

எம்.பி.ஏ. படித்ததால் பிசினெஸ், சுயமாகத் தொடங் குவது அவனுக்குக் கஷ்டமாக இல்லை. ராப்பகலாக உழைத்ததால், ரியல் எஸ்டேட் பிசினெஸில் கால் பதிக்க முடிந்தது.

பின் மெதுவாக மற்ற துறைகளிலும் பிசினெஸை விரிவு படுத்தினான். டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், தியேட்டர், ஷாப்பிங் மால் என ஒவ்வொன்றாக செய்து, வெற்றிகளை ஏற்படுத்தி தனக்கென ஒரு முத்திரையை ஏற்படுத்தி இருக்கிறான்.

அவன் பின்னால் அவன் பணத்துக்காக சுற்றிய பெண் கள் நிறைய, வாழ்க்கை வாழவே.. ஜஸ்ட் என்ஜாய், என அவனும் நிறைய அனுபவித்திருக்கிறான்.

பட்... பட் இப்ப நவீன் ஏக்கமாக அண்ணி வேணும் என கேட்டவுடன் ஏனோ மனம் துடித்தது. பெண்களைப் பார்த்தாலே அவனுக்கு, வெறுப்பும் எரிச்சலும் தான் வருகிறது.

அன்பு, கருணை இதெல்லாம் பெண்ணின் குணங் கள் என்பதெல்லாம் சும்மா. அதெல்லாம் இருந்திருந் தால் அம்மா அப்படி வாழ்ந்திருக்க மாட்டாள்.

அம்மாவையே நினைப்பதால் தான் பெண்கள் மீது ஒரு வெறுப்போ எனக்கு. அழகான பெண்கள், அவனை சலனப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அது கொஞ்ச நேர அட்ராக்ஷன் தான்.

அதற்கு அப்புறம் நிரந்தரமாக எப்போதும் தன் கூடவே ஒரு பெண் இருக்க வேண்டும் என அவன் ஒரு நாளும் நினைத்ததில்லை.

பட்... இப்ப நவீன் மூலமாக ஒரு பிரச்சினை புது, பிரச்சினை உருவாகியிருக்கிறது. என்ன செய்வது என மண்டையை உடைத்துக் கொண்டிருந்தான் தருண்.

நவீன் இதுவரை கேட்ட எதையும் அவன் மறுத்த தில்லை. கேட்காமலே வாங்கிக் குவித்திருக்கிறான் பட்.. இப்ப அவன் ரொம்ப தீவிரமாக இருப்பது அண்ணி என்ற பந்தம் மேல்.

இதுக்கு என்ன செய்வது, புரிகின்ற வயது என்றால் அவனுக்கு சொல்லிப் புரிய வைக்கலாம். ஆனால் அவன் அந்த ஸ்டேஜில் இல்லை. ஆனால் அவன் குரலில் தெரிந்த பிடிவாதம். அவன் நடவடிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் இதெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. நான் உலகில் நேசிக்கும் ஒரே ஜீவன் நவீன் என மனம் புழுங்கினான் தருண்.

## 6

**ஒரு**
**அமைதியான**
**அழகான**
**இரவு!**
**மேகத்**
**தோட்டத்தில்**
**நட்சத்திரப்**



**பூக்கள்**
**சிரிக்கின்றன!**
**வெள்ளை**
**ரோஜாவாக**
**நிலவு!**
**பார்க்கப் பார்க்க**
**திகட்டவில்லை!**
**இதை எல்லாம்**
**ரசிக்க என்னுடன்**
**சேர்ந்து ரசிக்கக் கூட**
**நீ இருந்தால்...**

ஹரிணி உற்சாகமாக வேடந்தாங்கல் கிளம்பத் தயாரானாள். ஆனால் ஸ்கூட்டியைப் பற்றி தகவல் ஏதும் தெரியாதது மனதைக் குடைந்தது.

ஒருவேளை... ஒரு வேளை ஏமாற்றுக்கார ஆளாக இருப்பானோ. இப்போதெல்லாம் இந்த மாதிரி நிறைய திருட்டுகள் நடக்கிறதே.

'பர்சை கீழே போட்டு விட்டீங்க. பெரியவரே' அப்படின்னு சொல்லிவிட்டு அவர் குனியும்போது, சட்டெனக் கையில் இருந்த பையை சுருட்டிக் கொண்டு ஓடி விட்டதாக, ஒரு நவீன திருட்டைப் பேப்பரில் ரீசெண்டாகப் படித்தது ஞாபகம் வந்தது.

'அது மாதிரி என் ஸ்கூட்டியை லூட் அடித்துக் கொண்டு போயிருப்பானோ. ஆனால் ஆளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. பணக்காரன் போலத் தெரிந்தான்.

'நான் ஒரு முட்டாள். ஸ்கூட்டியை ஏதாவது ஒரு கடையில் நிறுத்தி வைத்து விட்டுப் போயிருக்க வேண்டும்.

மழை பெய்ததால் நேரம் ஆகி விட்டதால் சட்டென அவன் டிக்கியில் ஸ்கூட்டியைப் போட்டவுடன் வேறு வழி இன்றி சும்மா இருந்து விட்டேன்.

'அதோடு அவனைப் பார்த்தாலே ஒரு எரிச்சல் வரு கிறது. பெண்களைக் கேவலமாக யாராவது பேசினால் சும்மாவே சுள்ளென்று கோபம் வரும் எனக்கு.

'இவன் பார்த்த முதல் தடவையே ஏதோ உளறினான். இரண்டாவது தடவையும் அப்படித் தானே சொன்னான். ஏதோ ஏமாற்றி சாப்பாட்டுக்கு அவனைப் பணம் கட்டச் செய்வதாக, அல்லவா பேசினான். முட்டாள்' என மனதிற் குள் அவனைத் திட்டினாள்.

சரி ஜாலியாக என்ஜாய் செய்ய வேண்டிய நேரத்தில், இவனைப் பற்றி நினைத்தால் மூட் அவுட் ஆகி விடும். அதனால் அவன் நினைப்பே வேணாம் என வலுக்கட் டாயமாக அவன் நினைப்பை உதறினாள்.

தனக்குப் பிடித்த பாசிப் பச்சை நிறத்தில் இருந்த ஒரு காட்டன் சல்வாரை அணிந்து கொண்டாள். தலை முடியை டைட்டாக ஒற்றை ஜாடையாக பின்னி ரப்பர் பேண்ட் போட்டாள்.

முகத்தைக் கழுவி லேசாகப் பவுடர் பூசி, பொட்டு வைத் தாள். அங்கிருந்த சின்னக் கண்ணாடியில், முகம் பார்க் கும் கண்ணாடியில் பொட்டு கரெக்டா வெச்சிருக்கோமா என செக் செய்து விட்டு ரூமை விட்டு வெளியே வந்தாள்.

ஹாலில் தயாராக அப்பா, ஜேம்ஸ் அங்கிள், பரத் எல்லாரும் இருந்தனர்.

''வாம்மா, கிளம்பலாம். உனக்குத் தான் வெயிட்டிங்'' என்றார் அப்பா.



''ஓ, சாரி அப்பா. ரொம்ப லேட்டாயிடுச்சா, பரத்'' என்றாள் பதட்டத்தோடு.

''அதெல்லாம் இல்லை. இன்னும் ஐந்து நிமிஷத்துல, நம்ம ஆசிரமத்துக்குப் போயிடலாம். அங்க பசங்கள பஸ்ஸில ஏத்திட்டு நம்மளும் கூடப் போக வேண்டியது தான்'' என்றான் பரத்.

வீட்டைப் பூட்டிவிட்டு எல்லாரும் வெளியே கிளம் பினர். ஜேம்ஸும், பரத்தும் மாறி மாறி அப்பாவை ரோடில் வீல் சேரில் தள்ளுவதைப் பார்த்து பெருமூச்சு விட்டாள் ஹரிணி.

அப்பாவின் வாழ்க்கையே இந்த வீல் சேரோடு முடங்கிப் போய் விட்டது எவ்வளவு பெரிய இழப்பு. ஆனால் அப்பாவாக இருப்பதால் தான் இந்த இழப்பைப் பொருட்படுத்தாது ரொம்ப பாசிடிவாக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ம். ம். இயற்கையும் மனிதனும் அப்படின்னு ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை அப்பா எழுதுவது நினைவுக்கு வந்தது.

இந்த அவசர இயந்திர உலகில், மனிதன் இயற் கையை மதிக்காமல் செய்யும் தவறுகள் என்னென்ன? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்று அழகாக எழுதியிருக்கிறார்.

பிளாஸ்டிக் பற்றி, பூச்சிக் கொல்லி மருந்துகள் பற்றி, அது எவ்வளவு அபாய கரமானது ஹெல்த்துக்கு என யோசிக்க வைக்கும் அவருடைய கட்டுரை இன்னும் முழுமையடையவில்லை.

மரபணுக்களின் உருவாக்க முறையில் விஞ்ஞானி களின் முயற்சிகளால் ஒரு புதிய கத்திரிக்காய் உருவாக்

கப்பட்டுள்ளது. இந்த கத்திரிக்காயை பயிரிட அனுமதி அளிக்கப்பட்டிருப்பது எவ்வளவு தவறு என்பதை சொல்லுகிறது அவருடைய கட்டுரை. பி.டி. (பேகிலஸ் துரண்ஜெனிஸெல்) கத்திரிக்காய் என்று பெயர் சூட்டப் பட்ட இந்த கத்திரிக்காய் தான் உலகிலேயே மரபணு மாற்றத்தின் விளைவாகப் பிறந்த முதல் காய்.

கத்திரிக்காய் நிறைய விளையும் நாடான இந்தியாவைக் குறி வைத்து வேண்டுமென்றே விஞ்ஞானம் என்ற பெயரால் மக்களை டெஸ்ட்ரேட்டுகளாக மாற்றும் இந்த ஆராய்ச்சி எவ்வளவு தப்பு என்பதைச் சொல்லுகிறது அவரது கட்டுரை.

இந்த பி.டி. கத்திரிக்காயை உபயோகப்படுத்தினால், பூச்சி கொல்லி மருந்துகள் தேவையேயில்லை என்பதெல்லாம் வெறும் கண் துடைப்பு.

கத்திரிக்காயின் விதையிலேயே, மரபணு மூலம் உருவாக்கப்பட்ட விதையிலேயே, பூச்சிக் கொல்லி மருந்திருக்கிறது என்றால் அந்த விதை எவ்வளவு அபாயகரமானது, எவ்வளவு வீரியமான விஷ விதை என்பதை ஆதாரத்தோடு விளக்குகிறது அவர் கட்டுரை.

அது மட்டுமில்லை. ஆர்கானிக், இயற்கை வழி விவசாயம் செய்வது எவ்வளவு எளிமை, எவ்வளவு நன்மை என்பதையும் வலியுறுத்துகிறார்.

வேப்பங்கொட்டை, இலை இவை எல்லாமே பூச்சி கொல்லி மருந்துகளாக உபயோகிக்கலாம். அதோடு மண்புழு வளர்ப்பு என நிறைய ஈஸி ஸ்டெப்ஸ் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இவை எல்லாம் ஹரிணி தான் கம்ப்யூட்டரில் டைப் செய்து, அப்பாவிடம் ஃப்ரூப் ரீடிங்குக்கு மீண்டும் திருச்சிக்கு அனுப்பினாள்.



இன்னும் கொஞ்சம் இருக்கு போல அவர் கட்டுரை முடிய. முடிந்த பின் அதைப் பல்கலைக் கழகத்தில் சப்மிட் செய்ய வேண்டும்.

ஆராய்ச்சி செய்யும் ஸ்டுடெண்ட்ஸுக்கு அது உபயோகமாக இருக்கும். இதனால் பெரிதாகப் பணம் ஏதும் கிடைக்காது, அப்பாவிற்கு. ஆனால் ஒரு திருப்தி ஆத்ம திருப்தி. அதுக்குத் தான் அப்பா இவ்வளவு ஆர்வமாக அதைச் செய்கிறார்.

அவள் ஏதும் பேசாமல் மௌனமாக நடந்து வருவதை கவனித்தான் பரத்.

''என்ன ஹரிணி, ரொம்ப பயங்கரமா யோசிச்சுகிட்டு வர்ற. என்ன மேட்டர்'' என்றான் பரத்.

''ம்.. ம். அப்பா பத்தி தான். அவர் இப்ப எழுதிகிட்டு இருக்கற கட்டுரை பத்தி தான் பரத். அப்பா இஸ் எ ஜீனியஸ். ரியலி. அவர் எவ்வளவு நல்லா எழுதறார் தெரியுமா. சிம்பிளா சூப்பர்ப்'' என்றாள் ஹரிணி பெருமையாக.

''ஓ, அதான் நீயும் அவ்வளவு நல்லா எழுதறியா? இம்.. ம். இட்ஸ் ரியலி எ கிஃப்ட். நம்ம மனசுக்கு பட்டதை, அழகா எடுத்துச் சொல்றது, அதுவும் எழுத்து வடிவமா சொல்றது இட்ஸ் வெரி நைஸ் ஹரிணி.

''அப்பாவோட புக் எப்ப ரிலீஸ் ஆகுது. எனக்குத் தருவியா'' என்றான் பரத் ஆர்வமாக.

''ம்.. ம்.. இன்னும் ஒரு மாசமாவது ஆகும் பரத். சி.டி. அண்ட் புக் ரெண்டும் வெளியிடலாம் அப்படின்னு ஒரு எண்ணம் இருக்கு, பாக்கலாம்'' என்றாள் ஹரிணி.

''தட்ஸ் எ குட் ஐடியா. சி.டி. இப்ப நிறைய பேர் யூஸ் செய்றாங்க. தகவல் தொழில் நுட்பத்தோட வளர்ச்சி யால் கிடைத்த பலன் நிறைய. அதில் இதுவும் ஒண்ணு'' என்றான் பரத்.

''ம்.. ம். ஆமாம் பரத். கம்ப்யூட்டர், ஈ.மெயில், சாட் என எவ்வளவு மாற்றங்கள். எல்லாம் நல்ல வழிக்கு பயன்பட்டா சரி'' என சொல்லிக் கொண்டே இருக்கும் போது, ஆசிரமம் வந்து விட்டது.

ஹரிணிக்கு ரொம்பப் பிடித்த இடம் அது. வாரம் ஞாயிற்றுக்கிழமை அவள் அங்கு தான் இருப்பாள். ஆறாவதிலிருந்து எட்டாவது படிக்கும் மாணவர்கள் படிப்பதற்கும், தங்குவதற்கும் அங்கு வசதி உண்டு.

மொத்தமே அங்கே முப்பது பேர் தான் படிக்கிறார்கள். அதனால் அவர்கள் பேர் முதல், எல்லாம் அத்துபடி ஹரிணிக்கு.

அவளைக் கண்டதும் வேகமாக ஓடி வந்தனர் அந்த சிறுமியர்.

''அக்கா. வாங்க அக்கா. எப்படி இருக்கீங்க? சுடிதார் ரொம்ப அழகா இருக்கு அக்கா'' என்றாள் மஞ்சரி எனும் சிறுமி ஆசையாக.

''ஏய். மஞ்சரி, உங்க எல்லார் டிரெஸ்ஸும் ரொம்ப ஜோரா இருக்கு. அப்படின்னு நான் சொல்றதுக்குள்ள நீ முந்திகிட்ட, ரெட்டை வால்'' என செல்லமாக அவள் கன்னத்தைத் திருகினான்.

''ம்.. ம்.. தேங்க்ஸ் அக்கா. அது உங்க அப்பாவா அக்கா. ஜெய்சங்கர் மாமா மாதிரி இருக்கார்'' என்றாள் சிரித்துக் கொண்டு.



''பரவாயில்ல வில்லன் நம்பியார் மாதிரி அப்படின்னு சொல்லாம இருந்தியே அதுவரைக்கும் பரவாயில்ல'' என்றார், ஹரிணியின் அப்பா சிரித்தபடி.

அந்த இடம் கலகலவென சிரிப்பொலி பரவி களை கட்டியது.

''ஹரிணி, கிளம்பலாமா? இப்ப கிளம்பினா, எல்லாம் கரெக்டா இருக்கும்'' என்று பரத் அவசரப்படுத்தினான்.

அதற்குள் அங்கிருந்த அன்னபூரணி டீச்சரும், மங் களம் ஆயாவும் அவள் அருகே வந்தனர்.

''எல்லாம் ரெடி ஹரிணி போகலாமா? பைனாகுலர்ஸ் இருக்கு இல்ல'' என்றனர்.

''ம்.. ம்.. எல்லாம் இருக்கு மிஸ். பரத் எல்லாம் பக் காவா ரெடி செஞ்சிருக்கார். இவர் என்னோட அப்பா. பக்கத்தில இருக்கறவர் ஜேம்ஸ் அங்கிள். அப்பாவைக் குழந்தை போல கவனிக்கறது இவர்தான்.

''அப்பா. இவங்க அன்னபூரணி மிஸ். இங்க இருக்கற குழந்தைகளுக்கு பாடம் சொல்லித் தர்றது இவங்க தான். இவங்க மங்களம் ஆயா'' என பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தாள் ஹரிணி.

''வணக்கம் ஐயா'' என இருவரும் அவரைப் பார்த்து வணக்கம் சொல்ல, அவரும் பதிலுக்கு 'வணக்கம்' என்று சிரித்தவாறே தலை அசைத்தார்.

''கமான் வாங்க எல்லாரும் பஸ்ஸில ஏறுங்க'' என்று பரத் அவசரப்படுத்த குழந்தைகள் எல்லாம் லைனாக ஒருவர் பின் ஒருவராக பஸ்ஸில் ஏறத் தொடங்கினர்.

எல்லாரும் ஏறிய பின் கடைசியாக பரத்தும், ஹரிணி யும் பஸ்ஸில் ஏறினர். டிரைவர் பஸ்ஸை எடுத்தவுடன்

குழந்தைகள் குஷியாக பாட்டு பாடிக் கொண்டு வந்தனர்.

‘‘நவீன், வா இப்படியே ரூமிலேயே அடைஞ்சு கிடந்தா போர் அடிக்கும். கமான் எங்கேயாவது வெளியே போகலாமா?’’ என அவனை தாஜா செய்தான் தருண்.

‘‘நீங்க மட்டும் நான் அண்ணி வேணும். அப்படின்னு கேட்டா எதுவும் சொல்ல மாட்டேங்கறீங்க, நான் மட்டும். ஏன் நீங்க சொல்றபடி கேட்கணும்?’’ என்றான் அழுத்தமாக நவீன்.

‘ம்.. ம்.. நான் சொல்றதை தட்டாம செய்யற நவீன் இப்ப எப்படி எதிர்த்துப் பேசறான் பார்’ என மனதிற்குள் ஆச்சரியப்பட்டான் தருண்.

‘‘சரிடா, இன்னிக்கு தானே நீ சொன்ன. அண்ணாவுக்கு கொஞ்சம் டைம் குடு செல்லம், சரியா’’ என்றான் கோபப்படாமல் சிரித்தபடி -

‘‘சரி. அண்ணா எவ்வளவு நாள் டைம் வேணும், சொல்லுங்க. ஒன் வீக் போதும் தானே’’ என்றான் உற்சாகமாக நவீன்.

‘‘அடப்பாவி. பயங்கர பிசினெஸ் மேனாயிருக்க இப்படி ஒரு டெட்லைன் கொடுக்கற. டேய் ஒன் மன்த் குடுடா ப்ளீஸ்’’ என்றான் தருண்.

‘‘சரி. அண்ணா. அதுக்குள்ள எனக்குப் பிடிச்ச மாதிரி அண்ணி வேணும் இங்க நம்ம வீட்டில’’ என்றான் நவீன்.

‘‘ஏய். இது என்ன புதுக்கதை? உனக்குப் பிடிச்ச மாதிரியா இது வேறவா? சொல்லு எப்படி இருந்தா உனக்குப் பிடிக்கும்?’’ என்றான் எரிச்சலாக.



‘‘ம்.. ம்.. நல்ல ஸ்மைலிங் பேஸா, நல்லா அன்பா பேசணும், திட்டக் கூடாது. எங்க ஹரிணி மிஸ் மாதிரி’’ என்று நவீன் சொல்லவும் நிமிர்ந்தான் தருண். அவன் கண்களில் ஒரு பளபளப்பு.

நவீனின் ஸ்கூலில் தான் அவள் வேலை பார்க்கிறாள் என்பது அவனுக்குத் தெரியும். பட், நவீனின் மிஸ்ஸாக அவள் இருப்பாள் என்பது அவன் எதிர்பார்த்திராத ஒன்று.

‘‘ம்.. ம்.. அப்படியா அவங்க எப்படி இருப்பாங்க? உங்க ஹரிணி மிஸ்’’ என்றான் ஆர்வமாக.

‘‘நல்ல ஒல்லியா. அழகா இருப்பாங்க. அவங்க கிளாஸ் போரே அடிக்காது. யாராவது லேட்டா வந்தா திட்ட மாட்டாங்க. ஹோம் ஒர்க் செய்யலேன்னா திட்டாம நாளைக்கு பண்ணிடு. யூ ஆர் எ குட்பாய், அப்படின்னு சொல்லுவாங்க துறுதுறுன்னு ஏதாவது செஞ்சுகிட்டே இருப்பாங்க.

‘‘எப்பவும் விஷ் பண்ணா, சிரிச்சுகிட்டே, குட்மார்னிங் சொல்லுவாங்க. எனக்கு அவங்களை ரொம்பப் பிடிக்கும்’’ என்றான் லயித்துப் போய் நவீன்.

சரிதான் பையன் சொல்றதப் பாத்தா கண்டிப்பா இது அந்த ஜான்சி ராணி தான். அவள் சிரித்து ஒரே ஒரு முறை பார்த்திருக்கிறேன். அந்தக் குழந்தையை அன்று அணைத்து ஆறுதல் படுத்தியபோது.

ஒரு நொடி தான் அந்தக் குழந்தையாக இருக்கக் கூடாதா என மனம் தவித்ததற்கு அவளுடைய சிரிப்பும், கண்ணில் தெரிந்த அன்பும் தான் காரணமாயிருக்கும் என முடிவு செய்தான் தருண்.

‘‘என்ன, அண்ணா யோசிக்கிறீங்க? ஹரிணி மிஸ்ஸே எனக்கு அண்ணியா வந்தா... வந்தா ரொம்ப நல்லா

யிருக்கும் அண்ணா, ப்ளீஸ்'' என்றான் நவீன் கிட்ட வந்து கண்கள் கலங்கியவாறு.

''சரிடா. நவீன் ஐ வில் ட்ரை. வா நாம இப்ப ஒரு இடத்துக்கு போகலாம். பார்ட்ஸ்ன்னா உனக்குப் பிடிக்கும் தானே. கமான்'' என்றான் தருண் உற்சாகமாக.

''ஐ, அண்ணா, வேடந்தாங்கல் தானே போகப் போறோம். ஜாலி பேப்பரில லாஸ்ட் வீக் போட்டிருந்தாங்க, அந்த பார்ட்ஸ் வர்றது பத்தி. அபிஷேக்கையும் அழைச்சுட்டுப் போகலாம், அண்ணா. அவனுக்கும் பார்ட்ஸ்ன்னா ரொம்ப இஷ்டம்'' என்றான் நவீன் ஆர்வமாக.

''ஷ்யூர். நீ போன் பண்ணி, இன்னும் ஒரு அரை மணி நேரத்தில அவனைத் தயாரா இருக்கச் சொல்லு. அவனை வழியில பிக்அப் பண்ணிட்டு அப்புறம் போகலாம்'' என்றான் தருண்.

நவீன் உற்சாகமாக போன் செய்யப் போவதைப் பார்த்து பெருமூச்சு விட்டான் தருண். இவன் கேட்டு நான் இது வரை எதுவுமே இல்லை என்று சொன்ன தில்லை. பட் இப்ப இவன் கேக்கற ஹரிணி, ஐ ஆம் நாட் ஷ்யூர். என்னுடைய கடந்த காலத்தில் நிறைய பெண்கள், அது எல்லாம் தெரிந்த பின் எந்த நல்ல பெண் என்னை மணக்க வருவாள் என யோசித்தவாறே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான் தருண்.

## 7

**காற்றின்**
**கரங்களுக்கு**
**சிக்காமல்**
**ஆட்டம்**
**காட்டும்**
**வண்ணத்துப் பூச்சி!**
**ரோஜாப் பூவின்**
**நறுமணத்தை**
**ரசித்து**
**அழகாக**
**வண்ணப் பூவாக**
**அதுவும் மாறுகிறது!**
**நான் பூ!**
**நீ வண்ணத்துப் பூச்சி!**
**நினைத்தாலே**
**இனிக்கிறது!**
**எப்போது**
**நிஜமாகும்**
**சீக்கிரம் சொல்!**



வேடந்தாங்கல் வந்தவுடன் குழந்தைகள் உற்சாகமாக கை தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஹரிணியை யும் அந்த சந்தோஷம் தொற்றிக் கொண்டது.

எல்லாரும் பஸ்ஸிலிருந்து ஒருவர் பின் ஒருவராக இறங்கினர். அங்கு வீசிய காற்று, உடலுக்கும் மனதுக் கும் புத்துணர்ச்சி ஊட்டியது.

பைனாகுலர்ஸ் மூலம் தெரிந்த பறவைகளைப் பார்த்து அதிசயித்தாள் ஹரிணி.

வாவ் எவ்வளவு வகையான வண்ண வண்ணப் பறவைகள், பெலிகன், ஸ்டார்க், என ஏதேதோ பெயர் சொன்னான் பரத்.

ஆனால் அதை ஏதும் மனதில் வாங்கிக் கொள்ளாமல், பறவைகளின் அழகில் மனதைப் பறி கொடுத்தாள் ஹரிணி. இயற்கை எவ்வளவு அழகானது, அற்புதமானது என்று ஆச்சரியப்பட்டாள் ஹரிணி.

''ஹரிணி, அங்க ப்ரௌன் கலரில ஷார்ப்பா பீக் பாக்க கழுகு மாதிரி இருக்கு இல்ல, அந்த பர்ட் கிட்ட இருந்து நாம நிறைய லீடர்ஷிப் குவாலிடிஸ் கத்துக்கணும்'' என்றான் பரத் சஸ்பென்ஸாக.

''அப்படியா, என்ன அது? சொல்லு கேட்டுட்டு நானும் கொஞ்சம் என்னோட ஸாஃப்ட் ஸ்கில்ஸை இம்ப்ரூவ் செஞ்சிக்கறேன்'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம்... தன்னோட குஞ்சைப் பிறந்த கொஞ்ச நாளிலேயே மரத்திலிருந்து, இல்லேன்னா, ஏதாவது உயரமான இடத்திலேருந்து கீழே தள்ளி விடும்'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினான் பரத்.

''அச்சச்சோ, பாவம் ஆச்சே. அதுக்குப் பறக்கத் தெரியாதே'' என்றாள் ஹரிணி பதறியவாறு.

''ம். ம். அங்க தான் மேட்டரே இருக்கு. தள்ளி விட்டுட்டு, கீழே அது விழறதுக்கு முன்னாடி போய் பிடிச்சிடும் தாய்ப் பறவை.

''குஞ்சுகள் பறக்கறதுக்கு, பயத்தைப் போக்க அது இப்படிச் செய்யுது. அப்படின்னு கண்டு பிடிச்சிருக்காங்க'' என்றான் பரத்.

''அதே மாதிரி ஒரு நல்ல லீடர், தன்னுடைய டீமில் இருப்பவங்களைத் தானா கத்துக்கறதுக்கு, வாய்ப்பு கொடுக்கணும்.



''ஆனா, தப்பா நடக்கும் போது, போய் உதவிக்கரம் நீட்டணும். அது தான் குட் லீடர் ஷிப் அப்படித் தானே கரெக்டா?'' என்றாள் ஹரிணி.

''குட். ஐ நோ. யூ ஆர் ஸ்மார்ட்'' என்றான் பரத் சிரித்தவாறு.

''பரத் அந்தப் பக்கம் போகலாமா? நிறைய பர்ட்ஸ் இருக்கு பாரு'' என்று கைபிடித்து அவனை அழைத்தாள் ஹரிணி.

பைனாகுலர் வழியாகப் பறவைகளை நவீனோடு பார்த்துக் கொண்டிருந்த தருணின் கண்களில் அந்தக் காட்சி பட்டது.

சிரித்தவாறே, அந்த இளைஞனின், கையைப் பிடித்து, நடந்து கொண்டிருந்த ஹரிணி அவன் கண்களில் பட்டாள்.

ஒரு நிமிடம் அந்தப் புதிய இளைஞன் மேல் ஒரு பொறாமை உணர்வு அவனை ஆட்கொண்டது. யாராக இருக்கும் அவன், இவள் பழகுவதைப் பார்த்தால் க்ளோசான ரிலேஷன்ஷிப் போல தெரிகிறதே என குழம்பினான்.

பைனாகுலரில் வீல்சேரில் தெரிந்த அந்த பெரியவரைப் பார்த்தவுடன் அவன் மனம் ஆயாசமடைந்தது. என்ன இன்றைய பொழுது எனக்கு இப்படி இருக்கிறது?

காட். நான் பார்க்கிறதெல்லாம் கனவா இருக்கக் கூடாதா? என அவன் மனம் கெஞ்சியது. ஹரிணி அந்தப் பெரியவரிடம் குனிந்து ஏதோ சொல்ல அவர் அதற்கு சிரிப்பது அவனுக்குத் தெரிந்தது.

சரி... வேறு வழியில்லை. அவர்களுக்குத் தெரியாமல் அவர்களை வாட்ச் செய்யணும் என்று முடிவு செய்து கூலிங்கிளாஸைப் போட்டுக் கொண்டு அவர்களை நோக்கி நடந்தான் தருண்.

ஹரிணியும், பரத்தும் சுவாரசியமாக பேசிக் கொண் டிருந்ததால் பின்னால் பைனாகுலர் வழியாகப் பார்ப்பது போல் பாவ்லா செய்து கொண்டிருந்த தருணை கவ னிக்கவில்லை.

''ஹரிணி, நாளைக்கு, எனக்கு ஆழ்வார்பேட்டையில தான் வொர்க். காலையில டிராப் பண்ண முடியுமா?'' என்றான் பரத்.

''அட, நீ வேற, என் ஸ்கூட்டியே எனக்குக் கிடைக் குமா அப்படின்னு சந்தேகமா இருக்கு'' என நடந்ததை யெல்லாம் கடகடவெனச் சொன்னாள் ஹரிணி.

''அட. நல்ல இண்ட்ரஸ்டிங் கேரக்டரா இருப்பான் போல இருக்கு. நீ சொல்றதப் பாத்தா பணக்காரனா இருப் பான் போல இருக்கு. எதுக்கும் பீ கேர்புல் ஹரிணி'' என்று பரத் சொன்னவுடன் அவன் மேல் கோபம் இன்னும் அதிகமானது தருணுக்கு.

''கமான் பரத். எனக்கு பணக்காரர்களைக் கண்டாலே எவ்வளவு வெறுப்பு அப்படின்னு உனக்குத் தெரியும். அப்பா இப்படி வீல் சேரில் முடங்கி இருப்பதுக்குக் காரணம் பணக்காரன், ஒரு திமிர் பிடித்த பணக்காரன் தான்.

''ஐ ஹேட் தெம். எனக்கு மட்டும் சட்டம் போடும் உரிமை இருந்தால், கம்யூனிஸ்ட் போல், பணக்காரர் களிடம் இருந்து பிடுங்கி இல்லாதவர்களுக்குக் கொடுத்து விடுவேன்.



''என்னுடைய வாழ்க்கை, அப்பாவின் விபத்துக்கு பின் எப்படி மாறி விட்டது என்பது எனக்கு மட்டும் தான் தெரியும் பரத்.

''ஹாஸ்பிடல், மருந்து, நாளை என்ன ஆகும் என்ற பயம், ஸ்கூல் ஃபீஸ் கட்ட அப்பா பட்ட கஷ்டம், இரவில் அழுதது, தூக்கம் தொலைத்தது... ஐ ஜஸ்ட் காண்ட் ஃபர்கெட் இட் பரத்'' என்று சொல்லிக் கொண்டே இருந்தவள் அதற்கு மேல் அடக்க முடியாமல் அழ ஆரம்பித்தாள்.

''ஷ்... ஷ்... ஹரிணி. கமான். அழாத, ப்ளீஸ்'' என அவள் கையைப் பிடித்து பரத் சமாதானம் செய்வதைப் பார்த்த தருணிற்கு கோபம், வெறுப்பு எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு பரத்தின் மேல் வந்தது.

ஹரிணிக்கு... பணக்காரர்கள் என்றால் பிடிக்காதா? ஸோ, என்னை கண்டிப்பாகத் திருமணம் செய்ய மறுப் பாள். என்ன செய்வது இதற்கு... என்ன செய்யலாம் என யோசித்தவாறு சிகரெட் ஒன்றை பற்ற வைத்தான்.

பரத் அவளிடம் ஏதோ பேசி சமாதானம் செய்வது வேறு அவனுக்கு எரிச்சலை அதிகமாக்கியது. சட்டென பொறி தட்டியது போல் ஒரு யோசனை. அவளை எப் படியாவது தன்னைக் காதலிக்கும்படி செய்தால் காதலித்து விட்டால் பின் திருமணம் முடிந்த பின் அவளுக்குத் தெரியும்படி செய்யலாம்.

அப்புறம் கழுத்தில் தாலி ஏறிய பின் அவள் சும்மா இருப்பாள் என யோசித்தாலும் மனதின் ஒரு மூலையில் பயம் இருந்தது. இது நடக்குமா? என்னால் முடியுமா? என முதல் முறையாக ஒரு பயம் அவனை ஆட்கொண்டது.

அவர்கள் திரும்பி நடப்பதைப் பார்த்த தருண் சட்டென வேறு பாதையில் அவர்கள் கண்ணில் படாத படி நடக்க ஆரம்பித்தான்.

''நவீன் போகலாமா? பார்ட்ஸ் எல்லாம் போக ஆரம் பிச்சுடுச்ச, பாரு, வீட்டுக்குப் போகலாமா?'' என்றான் பைனாகுலரில் மூழ்கியிருந்த நவீனைப் பார்த்து,

''சரி, அண்ணா போகலாம். ரொம்ப நல்லா இருக்குது எல்லாமே, ஐ என்ஜாயிட் இட்'' என்றான் குஷியாக.

''ஆமாம் அங்கிள். ரொம்ப தேங்க்ஸ்'' என்றான் கூட இருந்த அபிஷேக்கும்.

''கமான் பாய்ஸ். இட்ஸ் எ பிளஷர் ஃபார் மீ. எனக்கு ஒரு புது கோல், முயற்சி இன்னிக்கு தோணினதுக்குக் காரணம் நாம இங்க வந்தது தான்.

''ஐ ஹேவ் டூ தேங்க் யூ ஒன்லி'' என்றான் தருண் சிரித்தவாறு.

''போகலாம் அண்ணா'' என நவீன் ஒரு கையைப் பிடித்துக் கொள்ள, இன்னொரு பக்கம் அபிஷேக் கையைப் பிடித்துக் கொள்ள தருண் உற்சாகமாக நடந்தான்.

அவர்கள் வருவதற்குள் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என முடிவு செய்து கடகடவென வேகமாக நடந்தான் தருண்.

சூரியன் சிவப்பு பந்து போல், அழகான சின்னப் பந்து போல் தோன்றியது அவன் கண்களுக்கு. இதமான மஞ்சள் வெயில், நம்பிக்கை அளிப்பதாக இருந்தது அவனுக்கு. 'ஹரிணி இன்னும் ஒரு மாதத்தில் உனக்கும் எனக்கும் திருமணம், நடக்கும் கண்டிப்பாக நடக்கும்' என மனதிற்குள் சொன்னவாறு நடந்தான் தருண்.



அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் மெது வாக லேட்டாக எழுந்தாள் ஹரிணி. நாளைக்கு ஸ்கூட்டி இல்லாட்டி எப்படி ஸ்கூலுக்குப் போவது? நேத்தே போன் வரும் என நினைத்தேன். வரவில்லை.

பஸ்ஸில் போகவே பிடிக்கவில்லை. லேடிஸ் ஸ்பெ ஷல் வருமா, காலையில் எனத் தெரியவில்லை. ஸ்கூட்டி கிடைக்குமா என யோசித்தபடி இருந்தாள்.

சரி போய் சமையலுக்கு காய் ஏதாவது வாங்கலாம் என முடிவு செய்து அருகில் இருந்த காய் கடைக்கு நடக்க ஆரம்பித்தாள்.

அவளைப் பார்த்தவுடன் சிநேகமாக சிரித்தான் காய் கடை பையன் மகேஷ்.

''அக்கா, வாங்க. போணி பண்ணுங்க. நீங்க போணி பண்ணிங்கனா தான் சும்மா அன்னிக்கு பிச்சு உதறும் வியாபாரம்'' என்றான் சிரித்தபடி.

''ஏய். போதும். ஐஸ் வெச்சது. எனக்கு கேரட் கால் கிலோ, உருளை கால்... ம்... அப்புறம் வெங்காயம் கால், தக்காளி கால்... இஞ்சி நூறு... போதும்'' என்றாள்.

''அக்கா, உங்க கதை 'ஆகாயப் பறவை' தொடர் ரொம்ப நல்லாயிருக்கு அக்கா. வர்ற வாரம் முடிஞ்சுடுமா அக்கா.

''அப்புறம் அடுத்த கதை, அதே பத்திரிகையா இல்ல வேறவா அக்கா'' என்றான் ஆர்வமாக.

''அதே, பத்திரிகை தான். ஆமாம் ஆகாயப் பறவை யில உனக்கு என்ன பிடிச்சிருக்கு'' என்றாள் ஆவலாக.

''ம்.. ம். அந்தக் கதை எங்கக்கா கதை மாதிரி இருக்கு. அக்கா, குடிகார கணவன், இரண்டு குழந்தைங்க காசு காசு எனப் பறக்கும் மச்சான்.''

என சொல்லும் போதே குரல் கம்மியது அவனுக்கு.

''ஏய், மகேஷ் என்னடா இது. உங்க அக்கா இப்படி இருக்கா'' என்றாள் மெதுவாக.

''ம்.. ம்.. எப்பவும், அடி உதைன்னு அவ வாழ்க்கை அப்படியே ஓடுது. குழந்தைங்க இல்லேன்னா அவ எப்பவோ தற்கொலை செஞ்சுகிட்டு இருப்பா'' என்றான்.

''டேய். அடுத்த வாரம் என் கதையில வர்ற கதா நாயகி மாதிரி உன் அக்காவை முடிவு எடுக்கச் சொல்லு. கண்டிப்பா எல்லாம் சரியாயிடும். உங்க அக்கா இங்க வந்தா நான் அவங்க கிட்ட பேசறேன். நீ கவலப்படாத'' என்றாள் ஆதரவாக.

''சரிங்க அக்கா. நான் சொல்லியிருக்கேன். மேடம் நம்ம கஸ்டமர் தான். ஸ்கூல் டீச்சர். பந்தா இல்லாமல் பேசுவாங்க. ரொம்ப நல்ல டைப் அப்படின்னு. அப்புறம் நல்லா அழகா சிரிப்பாங்க. பாக்க சிம்ரன் மாதிரி இருப் பாங்க, அப்படின்னு'' என்றான் கொஞ்சம் வெட்கத்தோடு.

''அடி படவா சிம்ரனா. இந்த சினிமா ஆசை போகாதே உன்னை விட்டு. இந்தா நூறு ரூபா சில்லரை அப்புறம் வாங்கிக்கறேன். லேட்டாச்சு, இனிமே தான் சமையல் செய்யணும்'' என்று சொல்லியவாறே காய் பையைத் தூக்கிக் கொண்டு நடந்தாள்.

கடைக்கு சற்று தள்ளி தருண் தன்னை கவனிப்பதை அந்தப் போக்குவரத்து நெரிசலால் அவளால் பார்க்க முடியவில்லை.

சிகரெட் பிடித்தவாறு அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த தருண், அடுத்து என்ன செய்வது என கடகடவென யோசித்தான்.



வீட்டிற்குச் சென்று நெட்டில் ஹரிணி என்ற பெயர் போட்டு கூகிள் இணைய தளத்தில் தேடினான். பின் தமிழ் இலக்கியம் மேலும் சர்ச்சை குறுக்கித் தேடினான்.

நிறைய வலைத்தளம் ஹிட்டாக லிஸ்ட் செய்யப் பட்டது. அதில் ஒன்றில் அவளது போட்டோவும் அவளைப் பற்றிய குறிப்பு, அவள் எழுதிய சிறுகதைகள், கட்டுரைகள் வெளியாகி இருந்தது.

முதலில் ஏனோ தானோ என்று படிக்க ஆரம்பித்தவன் பின் ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தான். வரதட்சணை தர மறுக்கும் பெண், கல்யாணமே ஆகா விட்டாலும் பரவா யில்லை. என்னை எனக்காகக் கல்யாணம் செய்ய வரு பவன் வரும்போது வரட்டும், இல்லாவிட்டால் நான் காலம் முழுக்க உங்கள் பெண்ணாக இருக்கிறேன் என்று சொல்லும் தீபிகா.

குடிகாரக் கணவனைத் திருத்த முயலும், அருக்காணி, அது பலனளிக்காமல் போகவே குழந்தையை அழைத் துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி மகளிர் சுய உதவிக் குழுவோடு உதவி சுயம்மாக நிற்கும் அருக் காணி.

ஒரு அழகான பெண்ணை சந்தேகப்படும் கணவன் முதலில் அதை பொசசிவ்னெஸ் என நினைத்து பெருமைப் படும் பெண், பின் அதுவே ஒரு சுருக்கு கயிறு போல் கழுத்தை நெரிப்பது போல் தெரிய, நாளடைவில் மனச்சிதைவுக்கு ஆளாகி விடுவோமோ என பயந்து, விவாகரத்து கேட்கும் அனாமிகா என பெண்களைச் சார்ந்து இருந்த அவள் கதைகளைப் படித்த பின் பெண்கள் மேல் தான் இவ்வளவு நாள் வைத்திருந்த கருத்து எல்லாம் உடைந்து விட்டது போல் உணர்ந்தான் தருண்.

அவள் மேல் சட்டென ஒரு மதிப்பும் மரியாதையும் பரவியது. அவளுடைய எழுத்தில் அவள் வயதுக்கு மீறிய முதிர்ச்சி தெரிந்தது.

அதுக்கு என்ன காரணம் என மண்டையை உடைத்துக் கொண்டான் தருண். அவள் வயதுக்கு லைட்டாக மில்ஸ் அண்ட் பூன் டைப்பில் சும்மா ரொமான்ஸ் மாதிரி எழுதுவதை விட்டு விட்டு, இப்படி கனமான கதைகள் ஏன் ஹரிணி என மனதிற்குள் கேட்டுக் கொண்டான்.

இவள் மாதிரி ஒரு பெண் அம்மாவாக இருந்திருந்தால் என் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என ஒரு நொடி யோசித்தவன் சட்டென அதிர்ந்தான்.

'என்ன ஆச்சு எனக்கு? அவள் என்னைக் காதலிக்கும்படி செய்ய வேணும் என திட்டமிட்டு விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக நான் என் மனதை அவளிடம் இழந்து கொண்டிருக்கிறேன்.

'காட். இவள் சாதாரணப் பெண் இல்லை. ஐ நீட் டு ஹேண்டில் திஸ் வெரி கேர்புல்' என தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் தருண்.

'ஹரிணி நீ எனக்கு சவாலாகவே இருப்பாய் என ஏதோ ஒன்று உள்ளுணர்வு சொல்கிறது. நான் இதுவரை கடவுளிடம் ஏதும் வேண்டிக் கொண்டதில்லை.

'பட் முதல் முதலாக நான் கேட்கிறேன். எனக்கு ஹரிணி வேணும். என் மனைவியாக கடைசி வரை என்னிடம் அன்பு செலுத்த ஒரு ஜீவன் வேணும் அது அவள் மட்டும் தான். அவளால் மட்டுமே முடியும். என் பாவங்களை அவள் பாதங்களில் நான் சமர்ப்பிக்கிறேன், என்னையும் தான்' என்று வேண்டியபடி தூங்கிப் போனான் தருண்.



# 8

**வானத்து**
**மேகம்**
**கீழே**
**நீலக் கம்பளியாக!**
**நீ நடக்கின்ற**
**பாதை**
**முழுவதும்**
**நட்சத்திரங்கள்**
**பூக்களாக**
**சிதறி**
**இருக்கின்றன!**
**மழைத்**
**துளி ஒன்று**
**செல்லமாக**
**உன் முகத்தில்**
**பட்டுத் தெறிக்கிறது!**
**சட்டென விழித்தேன்!**
**இனிமையான கனவு தான்!**
**ஆனால்**
**உன்னைக் காட்டிலுமா**
**இனிமை?**

தருண் கண் விழித்தபோது மணி நான்கு. வெயில் லேசாக அவன் பால்கனியைத் தாண்டி படுக்கையில் பரவியிருந்தது.

சே.. சே. இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே என நொந்து கொண்டு முகம் கழுவிக் கொண்டான். ஹரிணிக்கு போன் செய்து ஆபீஸ் வரச் சொல்ல வேண்டும் என முடிவு செய்தான்.

தனியாக வந்தால் தேவலை என மனதில் நினைத்தவாறு, செல்போனில் அவளுடைய பெயரைத் தேடி போன் செய்தான்.

ஹாலில் கதை எழுதிக் கொண்டிருந்த ஹரிணி மொபைலின் குயில் சத்தம் கேட்கவே, ரூமிற்கு சென்று போனை எடுத்து ''ஹரிணி ஸ்பீக்கிங்'' என்றாள்.

ஒரு நிமிடம் ஒத்திகை செய்து வைத்ததெல்லாம் மறந்து போக ஸ்கூல் மாணவன் மாதிரி ஒரு கொஸ்டின் பேப்பரை பார்த்தால் எப்படித் தவிப்பானோ அப்படித் தவித்தான் தருண்.

ஹரிணி அதற்குள் மீண்டும் ''ஹலோ'' என்று சொல்ல, சுதாரித்துக் கொண்டு தருண் ''ஹலோ மேடம். உங்க ஸ்கூட்டி ரெடி, எங்க ஆபீஸ் வந்தீங்கன்னா, பைசா கொடுத்துட்டு எடுத்துட்டுப் போகலாம்'' என்றான் மெதுவாக.

''ஓ. ஸ்கூட்டி ரெடியா? தேங்க்ஸ். ம். ம். உங்க பேர் சொல்லுங்க? உங்க ஆபீஸ் எங்க சொல்லுங்க? நான் வந்து எடுத்துக்கறேன்'' என்றாள்.

''ம்ம். சாரி, என் பேர் சொல்ல மறந்துட்டேன் ஐ ஆம் தருண். கிண்டி ஏ.பி.டி. தெரியுமா ஸ்பிக் கிட்ட, அதுக்குப் பக்கத்துல நவீன் சர்வீஸ் சென்டர் அப்படின்னு இருக்கு. அங்க வந்துடுங்க. இன்னும் ஒரு ஒன் ஹவர்ல வரமுடியுமா ப்ளீஸ்'' என்றான்.



''ஓகே. வரேன். எவ்வளவு அமௌண்ட் அப்படின்னு சொல்ல முடியுமா? ப்ளீஸ். நான்... நான்... என்கிட்ட இல்லைன்னா, என் பிரண்ட்ஸ் யார் கிட்டயாவது வாங்கிட்டு வரணும்'' என்றாள் மெதுவாக.

''ம். ஹரிணி. டயர் மாத்தினது, ஓவர் ஆல் செய்தது எல்லாம் சேர்ந்து ஒரு... சிக்ஸ் ஹண்ட்ரட் ஆகுது. சாரி, மாசக் கடைசி. என்கிட்டேயும் இல்லை. இருந்தா நானே உங்ககிட்ட இப்ப கொடுத்துட்டு அப்புறம் வாங்கிடுவேன்'' என்றான் தருண்.

மனதிற்குள் 'சாரி ஹரிணி, உன்னிடம் பணம் வாங்கி... சே, என்னிடம் இருக்கிறது, தேவைக்கு அதிகமாக இன்னும் பத்து தலைமுறை உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு, பட் இப்படிப் பொய் சொல்லி உன்னிடம் இருந்து பணம் வாங்குகிறேன்.

'சாரி, டியர்' என மனதிற்குள் ஆயிரம் முறை சாரி கேட்டான் தருண்.

''ஓ... இட்ஸ் ஓ.கே. ஐ கேன் மேனேஜ். என் கிட்ட இருக்கு. இன்னும் ஒன் ஹவரில அங்க வரேன்'' என்று சொல்லிவிட்டு போனை கட் செய்தாள் ஹரிணி.

அவளிடம் பேசி முடித்த பின், கடகடவென ஆபீஸுக்கு கிளம்பினான் தருண். அவள் வருவதற்குள் செக்யூரிட்டியிடம் சொல்லி விட வேண்டும். அவள் வரும்போது அவளை உள்ளே விடச் சொல்லணும்.

அப்புறம் நான் தான் அங்க பாஸ் அப்படின்னு அவகிட்ட சொல்லக்கூடாது. அவளைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு வொர்க்கர், ஆர்டினரி வொர்க்கர், டிப்ளமா படிப்பு. தட்ஸ் ஆல் என தனக்குள் முடிவு செய்து

கொண்டு, அதுக்கு ஏத்த மாதிரி, நடப்பது என யோசித்துக் கொண்டே வண்டி ஓட்டினான் தருண்.

அப்பாவிடம் சொல்லிவிட்டு ஹரிணி தலையை மட்டும் வாரி பின்னல் போட்டுக் கொண்டு பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள்.

இந்தக் காரில் ஹரிணியோடு 'எப்போது நான் போகப் போகிறேன். ம்.. ம் ஐ விஷ் இட் ஷுட் ஹேப்பன்ஸ் ஃபாஸ்ட்' என்று நினைத்து பெருமூச்செறிந்தான், தருண்.

கிண்டி போக வேண்டிய பஸ் உடனே பஸ் ஸ்டாண்டில் வந்தது. அதுவும் காலியாக வந்தது ஹரிணிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

'ம்.. ம்.. சண்டே அதுவுமா, இவ்வளவு காலியா? ம்.. ம்.. மழை தான் வரப் போகுது' என நினைத்தவாறு பி.பி. பதினெட்டில் ஏறி உட்கார்ந்தாள்.

'ம்.. ம்.. தருணைப் பார்த்தா பணக்கார லுக் இருந்தது. பட் என்கிட்ட பைசா இல்ல. அப்படின்னு இன்னிக்கு சொல்றான்.

'அன்னிக்கு வாக் போகும்போது, அவன் டிரெஸ் பார்த்தா, அப்படித் தெரியலை. அதோட அன்னிக்கு மழையில பார்த்த அப்ப கூட, ஒரு பெரிய காரில, நல்ல பெரிய காரில இல்ல வந்தான். ஒரு வேளை அது அவன் ஃப்ரண்ட் யாரோட கார் ஆக இருக்குமா?' என நினைத்த வாறே பஸ்ஸில் உட்கார்ந்து இருந்தாள்.

கிண்டி வந்தவுடன் இறங்கி நடக்க ஆரம்பித்தாள். வாட்சும் இல்லாததால், வேகமாக லேட்டாகிப் போயிடப் போகுது என ஓட்டமும் நடையுமாகப் போனாள்.



ஸ்கூட்டியில் ஆபீஸ் போகும்போது அவள் அந்த சர்வீஸ் சென்டரை நிறைய தடவை பார்த்திருக்கிறாள். அதனால் இடம் கண்டு பிடிக்க வேண்டிய நேரம் மிச்சம் என நினைத்தவாறு நடந்தாள்.

அந்த சென்டர் வந்தவுடன், அங்கிருந்த ரிஜிஸ்தரில் சைன் செய்துவிட்டு உள்ளே போக முயன்றாள்.

''மேடம் தருண் சார், அங்க கேரேஜில இருக்கார். கார் ரிப்பேர் பாத்துட்டு இருக்கார். நேரே போங்க. அங்க தான் இருக்கார்'' என்று வழிகாட்டினார்.

''தேங்க்ஸ்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் ஹரிணி.

அது ஒரு பெரிய சர்வீஸ் சென்டர். சண்டே என்பதால் ரிசப்ஷன் காலியாக இருக்கு போல என நினைத்தவாறு ரிசப்ஷனை தாண்டி கேரேஜுக்குள் சென்றாள் ஹரிணி.

கார்களும் நிறைய டூ வீலர்களுமாக அந்த இடம் ஃபுல்லாக இருந்தது. இதில் நான் எங்கே இவனைத் தேடுவது என சுற்றும் முற்றும் பார்த்தாள்.

காலடிச் சத்தம் கேட்டவுடன் அலர்ட்டாக தருண் பாதி கால் வெளியே தெரியும்படி, ஒரு காரின் பின்னே படுத்த வாறு, ரிப்பேர் செய்வது போல் நடித்துக் கொண்டிருந்தான்.

சற்று முன்னே சென்ற ஹரிணி, பார்வையால் அவன் எங்கே என்று துழாவினாள். கீழே படுத்திருந்த தருணை அவள் கவனிக்காமல், நடந்ததால், சட்டென அவன் கால் மேல் இடறி, அவன் கால் மேலே விழுந்தாள் ஹரிணி.

அதற்குள் மனதிற்குள் சிரித்துக் கொண்டே, வெளியே சிரிக்காமல் அடக்கிக் கொண்டு கார் அடியிலிருந்து நகர்ந்து நகர்ந்து வெளியே வந்தான் தருண்.

''அப்பாடா, நீங்க தானா ஹரிணி, நான் ஒரு நிமிஷம் யாரோ தீவிரவாதி வந்திட்டான், அப்படின்னு பயந்து போய்ட்டேன், அப்பா, இப்ப தான் மூச்சே விட முடியுது'' என பொய்யாகப் பயந்தான்.

''சாரி, சாரி, நான் உங்களைத் தேடிகிட்டு இருந்ததுல இங்க.. படுத்திருப்பீங்க, அப்படின்னு நினைக்கல. கவனிக்காம கீழ விழுந்துட்டேன்'' என்றாள் உடையை சரி செய்தபடி.

''ம்.. ம்.. பரவாயில்ல, வாங்க உங்க ஸ்கூட்டியை பாருங்க. சும்மா எப்படி இருக்கு பாருங்க'' என்று வேண் டும் என்றே தமிழில், ஆங்கிலம் கலக்காத தமிழில் பேசி னான் தருண்.

அவன் சட்டையில் இருந்த க்ரீஸ், யூனிபார்ம் மேலே இருந்த க்ரீஸ், கைகளில் இருந்த க்ரீஸை எல்லாம் ஹரிணியின் விழிகள் ஒரு நிமிடம் கவனித்தது.

அவனும் அதை கவனித்தான், ஆனால் கண்டு கொள்ளாத படி நடந்து சென்றான். மௌனமாக அவளும் அவன் பின்னே சென்றாள்.

அவள் ஸ்கூட்டியைப் பார்த்தவுடன் அவளுக்கே ஆச்சரியமா இருந்தது. புதுசு போல் நல்ல பளபளன்னு ரொம்ப நீட்டாக இருந்தது.

''ரொம்ப தேங்க்ஸ், பாக்கவே அழகா இருக்கு'' என்று சிறு புன்னகையோடு அவள் சொல்ல தருண் அதை ரசித்தான். குழி விழும் அவள் கன்னத்தைத் தொட வேண்டும் என்று எழுந்த உணர்வை அடக்கினான்.

''சரி, வாங்க, பில் ரெடியா இருக்கு. அங்க ரிசப்ஷன் கௌண்டரில், தள்ளுங்க நான் இதை அங்க வரைக்கும்



தள்ளிக் கொண்டு வர்றேன்'' என்று சொல்லிக் கொண்டே அவள் ஸ்கூட்டியைத் தள்ளிக் கொண்டு ரிசப்ஷன் நோக்கி நடந்தான்.

அங்கே டேபிள் மேல் இருந்த பில்களைப் புரட்டி னான். பொய்யாக ஆனால் சீரியசாக தேடுவது போல் தேடி, அவளிடம் ஒரு பில்லை நீட்டினான்.

''இன்னிக்கு சண்டே அப்படிங்கறதால ரிசப்ஷனிஸ்ட் லீவ், அதான், நானே நேத்தே அவங்ககிட்ட ரெடி பண்ணச் சொன்னதாலே கரெக்டா எடுத்து வெச்சிருக் காங்க'' என்றான் நம்பும்படி.

''ஓ இட்ஸ் ஓ.கே. ரொம்ப தேங்க்ஸ் தருண். ம். ம். அப்புறம் என் வாட்ச்சையும் குடுக்கறீங்களா? நான் அன்னிக்கு தர வேண்டிய முன்னூறு ரூபாயையும் உங்களுக்கு தர்றேன் இப்ப'' என்றாள்.

இது தருண் எதிர்பார்க்காத ஒன்று. என்ன செய்வது என ஒரு நிமிடம் யோசித்தான். அந்த வாட்ச். அவ ளுடையது. ஆனால் அவள் எனக்கு மனைவியாகும் வரை, ஏன் அப்புறம் கூட அது என்னிடமே இருக்க வேண்டும். அவள் கையை அழகாக அலங்கரித்த அந்த வாட்ச். பார்க்கப் பார்க்க ஏனோ ஆசையாக இருந்தது.

''ம்.. ம்.. வாட்ச் தானே.. மேடம். அந்தக் கதையை ஏன் கேக்கறீங்க. நீங்க திட்டிகிட்டே கொடுத்தீங்க இல்ல. அதுக்கு ஏத்த மாதிரி அது என்கிட்ட ஒட்டவேயில்ல அன்னிக்கே பஸ்ல வர்றப்ப யாரோ பிக்பாக்கெட் அடிச் சுட்டான் போல. யார் எடுத்தாலும் அவன் கை விளங் காது மேடம்'' என்று சட்டென ஒரு பொய்யைச் சொன் னான்.

''ஓ... அப்படியா'' என அவள் முகம் வாடுவதை கஷ்டப்பட்டு ஜீரணித்தான் தருண்.

''மேடம் கவலைப்படாதீங்க. இன்னும் ஒரு வாரத்துல சம்பளம் வந்திடும். வந்தவுடன் முதல் வேலையா நான் ஆயிரம் ரூபாய் உங்ககிட்ட கொடுத்திடறேன். சாரி மேடம் ப்ளீஸ்'' என்று கெஞ்சினான்.

''இட்ஸ் ஓ.கே. நீங்க அன்னிக்கு ரொம்பக் கேவலமா பொண்ணுங்களை பத்தி பேசினீங்க, அதான் எனக்கும் சட்டுன்னு கோபம் வந்திடுச்சு. அதான் கோபமா வாட்ச்சை விட்டெறிந்தேன். ம்.. ம்.. நல்ல வாட்ச்'' என்று பெருமூச்சு விட்டாள்.

''என் பிரெண்ட்டை ஒரு பெண் காதலிச்சு கடைசியில பணக்காரன் இல்ல அப்படின்னு தெரிஞ்சு, வேற ஒரு ஆளைக் கல்யாணம் பண்ணிகிட்டா.

''ஏன் மேடம் காதலிக்கும்போது தெரியாதா, பணம் இல்லை, ஏழை அப்படின்னு. அப்புறம் கல்யாணம் அப்படின்னு வரும்போது, சும்மா டயர மாத்தற மாதிரி மனசை மாத்திக்கிட்டு சே... சே'' என்றான் அருவெறுப்பு கலந்த தொனியில்.

மனசுக்குள் டேய் தருண், டயர் அது இதுன்னு பயங்கரமா கலக்கற என்று தன்னையே பாராட்டிக் கொண்டான்.

''இருக்காங்க. சில பெண்கள், அதுக்காக எல்லாரையும், எப்பவும் சந்தேகமா பாக்கறதா? அது தப்பு தானே'' என்றாள் ஸ்கூல் டீச்சர் தோரணையில் ஹரிணி.

''சாரி. மேடம் இனிமே நாம ஃபிரண்ட்ஸ் சரியா'' என கையை ஷேக் ஹேண்ட் செய்கிற மாதிரி அவளிடம் நீட்டினான்.



அவள் தயங்குவதைப் பார்த்து ''ஓ சாரி, கை க்ரீஸா இருக்கு, அப்படின்னு பாக்கறீங்களா. ஒன் மினிட்'' என சொல்லிவிட்டுப் பக்கத்திலிருந்த வாஷ்பேசினில் கையைக் கழுவிவிட்டு டவலில் துடைத்துவிட்டு அவளிடம் நீட்டினான்.

சிரித்தவாறே அவளும் கை குலுக்கினாள். மெத்தென்று இருந்த அவள் கைகள் வாழ்நாள் முழுவதும் என் கைக்குள் இருக்க வேண்டும் என ஒரு பெருமூச்சு வாங்கினான் தருண்.

''சரி மேடம் ரொம்ப லேட்டாச்சு. அப்புறம் இருட்டிடப் போகுது. பாத்து போங்க ஹரிணி மேடம்'' என்றான் வெளியே. ஆனால் மனசுக்குள் அவளுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்றிருந்தது.

அவன் நினைத்தபடி அவள் முகம் ஒரு நொடி வாடியது.

''சரி ரொம்ப தேங்க்ஸ், நீங்க பணக்காரர் அப்படின்னு நினைச்சு நானும் உங்களத் திட்டிட்டேன் சாரி'' என்றாள் மெதுவாக.

''இட்ஸ் ஓ.கே. உங்ககிட்ட திட்டு வாங்கணும் அப்படின்னு எனக்கு எழுதியிருக்கு'' என்றான் தருண்.

''சரி. நான் கிளம்பறேன். ரொம்ப தேங்க்ஸ். ஸ்கூட்டியை அன்னிக்கு சரியான நேரத்துல நீங்க சர்வீஸுக்கு எடுத்துட்டுப் போனீங்க. இல்லீன்னா நான் அன்னிக்கு லேட்டா போய் டிரெயினை மிஸ் பண்ணியிருப்பேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள் ஹரிணி.

அவள் கேட்டைத் தாண்டிப் போகிற வரை அவளையே கண்ணை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்

தருண். 'ம்.. ம்.. இன்னிக்கு ஏதும் சொதப்பாமல் ஒழுங்காக நடிச்சு முடிச்சிட்டேன்.

'இதே மாதிரி டெய்லி. நடந்தா ஐ திங்க் ஐ கேன் கெட் ஹர், லவ். காட் பணக்காரர்களை கண்டா எப்படி எரிஞ்சு விழறா? ஆனால் அது இல்லை, அப்படின்னு தெரிஞ்ச வுடன் ஷீ இஸ் வெரி அப்ரோச்சபிள்.

'ம்.. ம்.. சிரிச்சா ரொம்ப அழகாயிருக்கா. நோ வொண்டர், நவீன், லைக்ஸ் ஹர் எ லாட்' என மனதிற்குள் நினைத்து, தனக்குள் சிரித்துக் கொண்டான். 'ஹோப் ஐ கெட் ஹர் ஃபாஸ்ட்' என்று பெருமூச்சு விட்டான்.

## 9

**கடற்கரை**
**மணல் வெளியில்**
**பல பாதச்**
**சுவடுகள்!**
**அதில்**
**உன்னுடையதை**
**நான்**
**தேடுகின்றேன்!**
**கடற்கரை**
**காற்றில்**
**உன்னுடைய**
**மூச்சுக் காற்று**
**எங்கே**
**என**



**தேடுகின்றேன்!**
**தேடுவது**
**சுகமாக, சுவாரசியமாகத்**
**தான் இருக்கிறது!**
**ஆனால்... உன்னையே**
**தேடும்போது உயிர் வலிக்கிறது!**

**சா**யங்காலம் ஸ்கூல் முடிந்து வந்த ஹரிணி அன்று லைப்ரரி போவது என முடிவு செய்தாள். அப்பா இருந்த ஒரு வாரம் நேரம் கடகடவென போனது.

அப்போது எழுத நேரம் இல்லை, படிக்கவும் நேரம் இல்லை. அப்பா இந்த மாதிரி அடிக்கடி வந்தா நல்லா இருக்கும் என தனக்குள்ளே நினைத்துக் கொண்டாள்.

பால்கனியில் இருந்தபடி வெளியே பார்த்தாள். குல்மொஹர் பூக்கள் சிகப்பும், மஞ்சளுமாக, பூமியைப் போர்த்தியிருந்தது.

'பக்கத்திலேயே வேப்ப மரம். மைனா, அப்புறம் பேர் தெரியாத பறவைகள் வேப்பம் பழத்தை, சாப்பிட்டுக் கொண்டிருந்தன. இயற்கையே வித்தியாசமானது தான்.

'அவ்வளவு அழகான குல்மொஹர் பூக்கள் பூக்கும் மரம்... ஆனால் ஒரு பறவை கூட அங்கே இல்லை. ஆனால் வேப்ப மரம் பார்க்க ரொம்ப சாதாரணமாக எந்த அட்ராக்ஷன் இல்லாமல் இருக்கிறது. அந்த மரத்தை சுற்றி எப்பவும் ஒரு பறவைக் கூட்டம்.

'அப்பியர்னஸ் ஆர் டிசெப்டிவ் என்பது இது தானா? நானும் அது மாதிரி தானே தருணை தப்பாக நினைத்து விட்டேன் பணக்காரன் என்று. சில நேரம் இந்த மாதிரி தப்பான முடிவுகள் எடுத்துவிட்டு, வாழ்க்கையின் கடைசி வரை சுமந்து கொண்டிருக்கிறோம்.

'பட் நல்ல காலம் இப்போதாவது தருணைப் பற்றி தெரிந்ததே' என தனக்குள் நினைத்தவாறு லைப்ரரி போகத் தயாரானாள்.

ஒரு மெரூன் கலர் சுடிதாரை அணிந்து கொண்டு தலையை வாரி, ஒத்தைப் பின்னல் போட்டுக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு லைப்ரரிக்கு கிளம்பினாள்.

அவள் வீட்டில் இருந்து லைப்ரரி ஐந்து நிமிட நடை தான். அதனால் ஹரிணி அங்கே அடிக்கடி போவது வழக்கம். அதுவும் அவள் கதைகள் எழுதுவதால், அங் கிருக்கிற, புக் செக்ஷனில் இருக்கின்ற இப்ப வர்ற புக்ஸ் எல்லாம் எப்படி இருக்கிறது என்று படிப்பது வழக்கம்.

லைப்ரரி வாசல் வரும்போது, லைப்ரரியில் இருந்து அவசரமாக வெளியே வந்து கொண்டிருந்த யாரோ ஒருவன் மேல் மோதினாள் ஹரிணி.

அவள் மூக்கு அவன் சட்டைப் பாக்கெட்டில் இருந்த கூலிங் கிளாஸ் மேல் கூர்மையாக உராய்ந்ததால், சட்டென இரத்தம் குபுக்கென பொங்கியது.

கண்களில் இருந்து வலி பொறுக்க முடியாமல் தன்னிச்சையாக கண்ணீர் வழிந்தது. வலி பொறுக்காமல் 'ஸ் ஸ்' என்று முனகினாள் ஹரிணி.

கண்களைத் துடைத்துக் கொண்டு, சுதாரித்து யார் என்று பார்ப்பதற்குள், ''சாரி, ஹரிணி மேடம் ஸோ சாரி'' என்று தருணின் குரல் அருகில் கேட்டது.

''ஒன் செகண்ட்'' என்று பாக்கெட்டில் இருந்த கர்சீப்பை எடுத்து, அவள் மூக்கை, அதில் இருந்த ரத்தத்தைத் துடைத்தான் தருண்.



பின் ஓடிச் சென்று கர்ச்சீப்பை குழாயில் இருந்த தண்ணீரில் நனைத்து ஓடி வந்தான் தருண். சில்லென்று இருந்த அந்த கர்சீப் இதமாக இருந்தது எரிச்சலுக்கு.

''இப்ப எப்படி இருக்கு? சாரி. எரிச்சல் பரவாயில் லையா? அவசரமா வெளிய வந்ததால, உங்களைக் கவனிக்கல. இனிமே இந்த கூலிங்கிளாஸை நான் போடவே மாட்டேன். ஹரிணி மேல சரியான வன்முறை விரும்பி இது சே சே'' என்றான் தருண் சீரியசாக.

லேசாக சிரித்த ஹரிணி. ''ம்.. ம்.. நானும் ஏதோ யோசனையில இருந்தேன். அதான்... சாரி'' என்றாள் மெதுவாக.

அவள் மூக்கு சிவந்து இரத்தம் வருவது லேசாக மட்டுப்பட்டது.

''இன்னும் எரியுதா ஹரிணி மேடம்? வேணும்னா டாக்டர் கிட்ட போகலாமா?'' என்றான் தருண் கரிசனமாக.

''அச்சச்சோ, இதுக்கெல்லாம் எதுக்கு டாக்டர். இப்ப பரவால்ல எரிச்சல். இன்னும் கொஞ்ச நேரத்துல சரியா யிடும் அப்படின்னு நினைக்கறேன்'' என்றாள் மெதுவாக.

''ரொம்ப சாரி மேடம். சே.. படிக்கறதுக்காக வந்திருப் பீங்க லைப்ரரிக்கு. ஐ ஹேவ் ஸ்பாயில்ட் எவ்ரிதிங்க். அதுக்கு பிராயசித்தமா இன்னிக்கு உங்கள எங்கே யாவது வெளியில அழைச்சுட்டுப் போறேன் ப்ளீஸ்'' என்றான்.

''ஓ.. இதுக்காக நீங்க கஷ்டப்பட வேணாம். ஏற்கனவே டின்னருக்கு ஒரு ஆள், பிரேக் பாஸ்ட்டுக்கு ஒரு இளிச்சவாய், அப்படின்னு இருக்கற பொண்ணு நான்'' என்றாள் கண்களில் குறும்பு கொப்பளிக்க.

''ஓ.. காட். அதை நீங்க இன்னும் மறக்கலியா? ஒரு செலக்டிவ் அம்னீஷியா எல்லாம், வராதா உங்களுக்கு?'' என்றான் அவனும் கிண்டலாக.

''ம்.. ம்.. அதெல்லாம் அரசியல்வாதிகளுக்கும், மேபீ பிசினெஸ் டைக்கூன் அவங்களுக்குத் தான் வரும். நாட் ஃபார் மீ'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம். உங்கள இப்ப பாக்கறப்ப ஒரு தமிழ் பழமொழி ஞாபகம் வருது. சொல்லத்தான் பயமா இருக்கு'' என்று கொஞ்சம் மெதுவான தொனியில் சொன்னான் தருண்.

''பரவாயில்ல, உங்க கூலிங்கிளாஸை விட அது பயங்கரமா இருக்காது. சொல்லுங்க'' என்றாள் ஹரிணி கிண்டலாக.

''பொண்ணு, பாக்க கிளி மாதிரி இருக்கு. அப்படின்னு இப்ப உங்களப் பாத்துச் சொல்லலாம். உங்க மூக்கு கிளி மூக்கு கலர்ல தான் இருக்கு இப்ப'' என்றான் சீரியசாக.

''ஓ... பரவாயில்ல. ஜோக்கெல்லாம் அடிக்கறீங்க, இப்பெல்லாம் பொண்ணு கிளி மாதிரி இருந்தா பத்தாது கல்யாண மார்க்கெட்டில நிறைய பணம், நிறைய நகை, இதெல்லாம் தேவைப்படுது'' என்றாள் சட்டென சீரியசாக.

''வாங்க... இந்தப் புல் தரையில் உட்கார்ந்து பேசலாம். அதுக்குள்ள, உங்க மூக்கும் கொஞ்சம் பழைய நிலைமைக்கு வந்திடும்'' என்று லைப்ரரி வாசலில் இருந்த புல் தரையைக் காட்டினான் தருண்.

''ஓ... ஷ்யூர்'' என்றவாறே அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் உட்கார்ந்தாள். அவனும் சற்றே தள்ளி உட்கார்ந்தான்.



''இப்ப எல்லாம் பொண்ணுங்க, எதிர்பார்ப்பு ரொம்ப ஜாஸ்தி ஆயிடுச்சு மேடம். பணக்காரன், நல்ல ஸ்டேட்டஸ்ல இருக்கறவன், அப்புறம், க்ரீன் கார்ட் ஹோல்டர் இதுக்கு எல்லாம் தான் மதிப்பு.

''அதனால நீங்க ஆண்களைக் குத்தம் சொல்லாதீங்க. சும்மா, டைம் பாஸுக்கு வேணா ஜாலியா பொண்ணுங்க, சாதாரண ஆளுங்ககிட்ட என்னை மாதிரி சாதாரண ஆள்கிட்ட பேசலாம்.

''பட் கல்யாணம் எல்லாம், நான் சொன்ன ஸ்டேட்ஸ் ரிடர்ன், க்ரீன் கார்ட் ஹோல்டர் அந்த மாதிரி ஆளோடு தான்'' என்றான் கசப்பான தொனியில்.

''ஓ... நோ... நீங்க ரொம்ப பின் நோக்கி யோசிக்கறீங்க... தருண். ஆல் ஆர் நாட் லைக் தட்'' என்றாள்.

ஹரிணியும் சற்றே அழுத்தமான தொனியில்.

''ம்.ம். இருக்காங்க... சில பேர், நம்ம நாட்டுப் பெண்களைப் பத்தி யோசிச்சுகிட்டு, வாக் போகும் போது கூட அவங்களைப் பத்தி, அவங்க முன்னேற்றத்தைப் பத்தி நினைச்சுகிட்டு, ரோடில மிரண்டு போய் இருக்கற குழந்தையை அணைச்சு சமாதானப்படுத்தி, ஸ்கூட்டியில ஏத்திகிட்டு ஸ்கூல்ல டிராப் பண்ற பொண்ணுங்க, அதுவும் அழகான கல்யாணமாகாத ஒரு பொண்ணு. கண்களில் எப்பவும் ஒரு அமைதி, துள்ளல் எல்லாம் கலந்து...

''ம்.. ம். என் பக்கத்தில இருக்கா பேர் ஹரிணி, ஹரிணிங்கற பேருக்கு அர்த்தம். மான் போன்ற கண்கள், ரொம்ப கரெக்டான பேர்... சுருக்கினா, இன்னும் மனசுக்கு பிடிக்கற மாதிரி ஹனி...

''ஹனி... ஐ லவ் யூ. என்னைக் கல்யாணம் செஞ்சுப்பீங்களா'' என்றான் சட்டென அவளைப் பார்த்து.

அவன் பேசும்போதே, ஹரிணிக்கு மார்பு படபடத்தது. அவன் சொல்ல வருவது அவளுக்கு அவன் பேசத் தொடங்கும் போதே புரிந்தது. சட்டென அந்த இடம் ரொம்ப அமைதியாக இருந்தது போல் தோன்றியது அவளுக்கு.

முகம் சிவந்து போய் கண்கள் படபடக்க ஏதும் பேசாமல் இருந்தாள் ஹரிணி. அவன் அண்மை ஏனோ ஒரு புது மாதிரி உணர்வைத் தந்தது. அவள் ஏதும் பேசாமல் நெர்வஸாக இருப்பதை தருண் கவனித்தான்.

''பாத்தீங்களா... நீங்க யோசிக்கறீங்க பார். ஏன்னா... நான் பணக்காரன் இல்ல. பட் நான் சொன்னது ஐ மீன் உங்கள கல்யாணம் செய்ய ஆசைப்படறது ரொம்பவே நிஜம். உங்களப் பாத்த முதல் நொடி முதல் என் மனம் அதுக்காக ஏங்கியது.

''ஒரு இன்ப அவஸ்தைப்பட்டது எனக்குத் தான் தெரியும் ஹரிணி.

''உங்கள என் வாழ்க்கை இறுதி நொடி வரை ரொம்ப நல்லா கவனிச்சுப்பேன். ஐ பிராமிஸ் யூ ஹரிணி'' என்றான் அவளைப் பார்த்தவாறு அவள் கண்களை ஆழமாகப் பார்த்தவாறு.

அவன் கண்களில் வழிந்த ஏக்கமும், காதலும், அவளை ஏதோ செய்தது.

''தருண் ப்ளீஸ் விளையாடாதீங்க'' என்று சொல்லி விட்டு கடகடவென லைப்ரரிக்குள் சென்றாள்.



அவள் வழக்கமாக எடுக்கும் புக் செக்ஷன் அருகே சென்றாள். ஆனால் எந்தப் புத்தகத்தைப் புரட்டினாலும் மனம் அதில் ஒன்றிப் போக அறவே மறுத்தது.

தருண் பேசியதே ரீவைண்ட் ஆகி, மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. புத்தகத்தின் பக்கம் எல்லாம் அதையே அவன் பேசுவதையே திரும்பச் சொல்வது போல் ஒரு பிரமை.

'எப்படி இப்படி சட்டென பிரபோஸ் செய்ய முடிந்தது அவனால். அவனைப் பார்த்தது இதுவரை மூணு தடவை தான். அதற்குள்... எப்படி... எப்படி இது என்று சட்டென மனதில் ஒரு ஆயாசம் படர்ந்தது.

'அவன் லைப்ரரிக்குள் இல்லாதது மனதிற்கு நிம்மதியாக இருந்தது. அவள் பேரை சுருக்கி, தைரியமாக எவ்வளவு தைரியமாக ஹனி என்று அழைத்தான்.

'ரொம்ப தைரியம் தான் ஆனாலும் ரொம்ப பழக்கமில்லாத ஒரு பெண் கிட்ட இப்படி தடாலடியா பிரபோஸ் செய்ய 'கட்ஸ்' நிறைய வேணும். அவனைப் பார்த்தால், அவன் ஆறடி உயரம். முகத்தில் தெரிகின்ற தீர்க்கம், கண்களில் இருக்கும் நம்பிக்கை.. காட் என்ன செய்வது?' என திகைத்தாள் ஹரிணி.

ஏதேதோ யோசித்தபடி லைப்ரரிக்குள் பேசாமல் ஒரு புக்கை, புரட்டியவாறு உட்கார்ந்திருந்தாள் ஹரிணி. ஆனால் மனம் தான் புக்கில் பதிய முரண்டு பிடித்தது.

''மேடம் லைப்ரரி மூடணும் மேடம். மணி எட்டு ஆச்சு'' என்று லைப்ரரியன் சொன்னவுடன் சுய நினைவுக்கு வந்தாள் ஹரிணி.

''ஓ... சாரி... நான் டையத்தை கவனிக்கல சார்'' என்று முனகிவிட்டு புக்கை வைத்துவிட்டு லைப்ரரி விட்டு வெளியே நடந்தாள்.

அவன் வெளியே இருக்கிறானா என அவள் கண்கள் புல் தரையைத் துழாவின. லேசாக, நின்று அவள் சுற்றும் முற்றும் பார்ப்பதை, லைப்ரரி பின்னால் இருந்து பைனா குலர் வழியாகப் பார்த்த தருண் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'ஹரிணி, ஐ ஆம் கான்பிடெண்ட் நெள. ஐ வில் மேரி யூ. சீக்கிரம் இது நடக்கும்' என தனக்குள்ளே பேசிக் கொண்டான்.

தன் சட்டைப் பையில் இருந்த ரேபான் கூலிங் கிளாஸை எடுத்து, மெதுவாக முத்தம் கொடுத்தான்.

'காதலுக்கு இப்படி நானே எதிர்பாராத சமயத்தில் சட் டென ஒரு சூப்பர் உதவி செஞ்ச உன்னை நான் மறக் கவே மாட்டேன்' என்றான் மெதுவாக கூலிங்கிளாஸைப் பார்த்து.

அன்றைக்கு லைப்ரரியில் ஹரிணியைப் பார்க்கலாம் என திட்டம் போட்டுத் தான் வந்தான். வெளியே புகை பிடிக்கலாம் என நினைத்துக் கொண்டு வந்தபோது தான், எதிர்பாராமல் அவள் மேல் அவன் கூலிங்கிளாஸ் உராய்ந்தது.

பாவம். ஆனால் வலியால் துடித்துப் போய் விட்டாள் அவள். இன்னிக்கு சும்மா அவளிடம் பேசிக் கொண்டு இருக்கலாம் என்று தான் நினைத்துக் கொண்டு வந்தேன். பட் ஏதோ ஒரு ஈர்ப்பு அவளிடம் இருக்கிறது.



அந்த ஈர்ப்பு சக்தி, என்னை அவளிடம் என் மனதில் இருப்பதை, வெளிப்படையாக பேச உந்தி விட்டது. அந்தக் கண்கள், படபடத்து துடித்தது ஞாபகம் வந்தது.

என்ன ஒரு அழகான, அமைதியான பெரிய கண்கள். அந்தக் கண்களைப் பார்த்துப் பொய் சொல்வது கஷ்ட மாக இருக்கிறது.

நான் பணக்காரன் இல்லை என்று சொன்னது மட்டும் தான் பொய் மை டியர். மத்ததெல்லாம் உண்மை. நான் உன்னை நேசிப்பது உண்மை.

மீண்டும் அவளை இப்போது உடனே சந்திக்க வேண்டும் என துடித்த மனதை அடக்கினான் ம்..ம் நாளைக்குப் பார்க்க வேண்டும். அவளைக் கண்டிப்பாக பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

வானத்தில் முழு நிலவு அமுதைப் பொழிந்து கொண் டிருந்தது. என் வாழ்க்கையில் அவளால் மட்டும் தான் இந்த அமுதைப் பொழிய முடியும். அந்த சிரிப்பு, குழி விழும் கன்னம், இவை எல்லாம் நினைத்தபடி லயித்த வாறு நடந்து கொண்டிருந்தான் தருண்.

நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டுவது போல் ஒரு பிரமை. காற்றில் ஏதோ பூக்களின் நறுமணம் எல்லாம் கலவையாக சேர்ந்து ஒரு இனிமையான மணம் அவன் நாசியில் சேர்ந்தது.

## 10

நீ பேசும்
வார்த்தைகள்
எல்லாம் நான்

பத்திரமாக
சேகரிக்கிறேன்!
ஒரு கவிதைத்
தொகுப்பு வெளியிட!
உன் கண்கள்
பேசும் கவிதைகளை
சேகரிக்கிறேன்!
ஒரு அழகிய படம்
எடுக்க!
நீ நடந்த
பாதையில் உள்ள
பூக்களைச் சேகரிக்கிறேன்!
உன் கால் பாதம்
பட்டதால் மோட்சமடையும்
இந்தப் பூக்களைப் பார்த்தால்
ஏனோ ஒரு பொறாமை!

அன்று காலை எழுந்திருக்கும்போது தலைவலி, தலை பாரமாக இருப்பதை உணர்ந்தாள் ஹரிணி. இரவு சரியாகத் தூங்காதது தான் காரணம்.

தருணின் முகமும், அவன் கண்களும் அவளைத் தூங்க விடாமல், அலைக்கழித்தது. ம்.. ம்.. இது என்ன, இது? பரத்திடம் பழகும்போது, பேசும்போது இந்த மாதிரி ஒரு பொழுதும் ஆனதில்லை.

இவன், தருண் ப்ரபோஸ், செய்த பின் மனதில் ஏதோ ஒரு படபடப்பு, ஒரு புதிய உணர்வு அவள் மனதை ஆக்ரமித்தது என்னமோ உண்மை தான்.

வேண்டாம், அவனைப் பற்றி நினைக்கக் கூடாது. அவன் அடுத்த முறை இதைப் பற்றி பேசினால் மெதுவாக, ஆனால் உறுதியாக மறுத்துவிட வேண்டும் என முடிவு செய்தாள்.



குளித்து விட்டு ரோஜா இதழ் நிறத்தில் இருந்த ஒரு புடவையை அணிந்து கொண்டு ஸ்கூல் கிளம்பத் தயாரானாள்.

இன்னிக்கு நவீனுடன் எப்படியும் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டே கதவைப் பூட்டினாள்.

ஸ்கூட்டியைப் பார்த்தவுடன் மீண்டும் தருண் நினைவு வந்தது. ஸ்கூட்டி இப்போது நல்ல ஸ்மூத்தமாக இருப்பதன் காரணம், அவன் நன்றாக ஸ்கூட்டியை ஓவர் ஆல் செய்தது தான். குட் ஜாப் என அவனைப் பாராட்டியவாறே ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள்.

ஸ்கூலில் அன்று அவளுக்கு நான்கு பீரியட் இருந்ததால் காலையில் நேரம் கடகடவென ஓடியது. லன்ச் டைம் முன்னால் நவீனைப் பார்த்து விட வேணும் என நினைத்தவாறு அவனுடைய க்ளாசிற்குள் நுழைந்தாள்.

அங்கே நவீன் தனியாக ஜன்னல் வழியாக ஏதோ பராக்கு பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்க்க ஏனோ பாவமாக இருந்தது.

''ஹாய் நவீன் குட்மார்னிங். எப்படி இருக்கே?'' என்றாள் சிரித்தவாறு உற்சாகமான குரலில்.

''ம்.. ம்.. குட்மார்னிங் மிஸ். ஐ ஆம்.. பைன்'' என்று வெட்கப்பட்டவாறே சிரித்தான் நவீன்.

அவனுடைய சிவந்த முகமும், திராட்சை போன்ற கண்களைப் பார்த்தவுடன், இவன் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால் இன்னும் அழகாக இருந்திருப்பான் என மனதிற்குள் நினைத்து சிரித்துக் கொண்டாள் ஹரிணி.

''நவீன் லஞ்ச் சாப்பிட்டு முடிச்சிட்டியா'' என்றாள் சிரித்தவாறு.

''இல்லை மிஸ். இனிமே தான். சாப்பிடணும்'' என்றான் மெதுவாக.

''சரி, கிரவுண்ட் வர்றீயா? ரெண்டு பேரும் லன்ச் சாப்பிடலாம். சரியா?'' என்றாள்.

''சரி மிஸ். வாங்க. நான் ரெடி'' என்றான் லன்ச் பேக்கை எடுத்துக் கொண்டு.

''நீ போய்கிட்டே இரு. நானும் லஞ்ச் பாக்ஸ் எடுத்துட்டு வந்திடறேன்'' என்று சொல்லிவிட்டு ஸ்டாப் ரூம் சென்று லஞ்ச் பாக்ஸ் எடுத்து வந்தாள் ஹரிணி.

கிரவுண்டில் மரங்கள் நிறைய இருக்கும். அதனால் வெயில் தெரியாது. நல்ல நிழலாக இருந்த ஒரு இடத்தில் ஹரிணி உட்கார பக்கத்திலேயே அவனும் உட்கார்ந்தான்.

''ம்... ம்.. நவீன். என்ன லஞ்ச் இன்னிக்கு, கொண்டு வந்திருக்க?'' என்றாள்.

''மிஸ். இன்னிக்கு சப்பாத்தி, சைட் டிஷ் டால்'' என்றான்.

''ஓ, குட் சாப்பிடு குட் பாயாக'' என்று சிரித்தவாறே அவளும் சாப்பிடத் தொடங்கினாள்.

''மிஸ்.... உங்கள எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க'' என்றான் திடீரென நவீன்,

''ஓ... தேங்க்ஸ் நவீன். நீயும் தான் அழகா இருக்க. நல்ல கலர். நல்ல அழகான கண்'' என்றாள் சிரித்தவாறு.

நவீன் வெட்கப்படுவதைப் பார்த்து ரசித்தாள் ஹரிணி.



''உங்க வீடு எங்க இருக்கு நவீன். வீட்டில் யார் யார் இருக்காங்க'' என்று மெதுவாகப் பேச்சைத் தொடங்கினாள்.

''ம்.. ம்.. ஆழ்வார்பேட்டையில் இருக்கு மிஸ். நானும் அண்ணனும் தான் மிஸ். வீட்டில எனக்கு அம்மா கிடையாது. நான் சின்னக் குழந்தையா இருந்த அப்பவே அவங்க இறந்து போயிட்டாங்க.

''அப்பா போன இயர் தான் ஹார்ட் அட்டாக் வந்து, ஹாஸ்பிடல்ல இறந்து போயிட்டார். அப்பா ரொம்ப ஸ்வீட். ஐ மிஸ் ஹிம்'' என்றான் மெதுவாக.

''ஓ... சாரி, நவீன். அண்ணா காலேஜ் படிக்கறானா இல்லை ஸ்கூலா'' என்றாள் ஹரிணி பேச்சை மாற்றும் விதமாக.

அதைக் கேட்டு நவீன் கடகடவெனச் சிரித்தான். அவன் விடாமல் சிரித்ததில் அவன் கண்களில் நீர் வந்தது.

''நவீன் சொல்லிட்டுச் சிரி. நானும் சிரிப்பேன் இல்ல'' என்றாள் ஹரிணி.

''மிஸ். எங்க அண்ணா, நிறைய பிசினெஸ் பண்றார். ரொம்ப ரொம்பப் பெரியவர். சிக்ஸ் ஃபீட், ஹி இஸ் அபௌவ் தெர்டி ஏஜ்'' என்றான் பெரிய மனுஷன் தோரணையில் நவீன்.

''ஓ... எனக்குத் தெரியாது நவீன் அதான் ஸ்கூலா காலேஜா, அப்படின்னு கேட்டேன். அண்ணாவுக்குக் கல்யாணம் எப்ப?'' என்றாள்.

''ம்.. ம்.. மிஸ் அண்ணாவுக்குக் கல்யாணமே இஷ்டமில்லை. நான் போன வாரம் நல்லா அழுது அடம்

பிடிச்சு அவர கல்யாணம் செய்யற மாதிரி செஞ்சிருக்கேன்.

''இன்னும் ஒரு மாசத்தில கல்யாணம் செஞ்சுப்பார். பொண்ணு கூட யார் தெரியுமா? நீங்க தான்'' என்று சிரித்தான் நவீன்.

சட்டென அவன் அப்படிச் சொன்னதும் புரை ஏறியது அவளுக்கு. ''நவீன் இப்படி எல்லாம் விளையாடக் கூடாது'' என்றாள்.

''மிஸ். நான் விளையாடல மிஸ். நான் என்னோட அண்ணன் கிட்ட சொல்லிட்டேன். உங்களப் பத்தி நீங்க எவ்வளவு அழகு. சிரிச்சா நீங்க அழகான டிம்பிள் என எல்லாமே சொல்லிட்டேன்'' என்றான் வெகுளியாக.

அதை சீரியசாக எடுக்காமல் சிரித்தவாறு 'நாட்டி பாய்' என அவன் கன்னத்தைக் கிள்ளினாள் ஹரிணி.

அதற்குள் லஞ்ச் முதல் பெல் அடித்தது. இன்னும் ஐந்து நிமிஷத்தில் லன்ச் ஹவர் முடிந்து விடும்.

''சரி, நவீன் இனிமே நீ அந்த மாதிரி லெட்டர் எல்லாம் எழுதக்கூடாது. உனக்கு எப்ப என்கிட்ட பேசணும், அப்படின்னு தோணுதோ, அப்ப எல்லாம், நம்ம பேசலாம். சரியா? யூ ஆர் எ குட் பாய்'' என்றாள் மெதுவாக.

''ஓ.கே. மிஸ். நீங்க சொன்னா ஓ.கே. மிஸ்'' என்றான் நவீன்.

''சரி வா. கிளாஸ் போகலாம்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து அவனுடன் நடக்க ஆரம்பித்தாள் ஹரிணி.

பாவம் நவீன் என்று அவள் மனம் அவனுக்காக பரிதாபப்பட்டது. எவ்வளவு பணம் இருந்தும் சில நேரம்



வாழ்க்கை ஒன்றும் இல்லாதது போல் இருக்கிறது சில பேருக்கு.

சிலருக்கு பணம் இல்லாததால் வாழ்க்கை எதுவும் இல்லாதது போல் இருக்கிறது.

இல்லாவிட்டால், எல்லாமும் இருந்து விட்டால் வாழ்க்கை சப்பென்று இருந்து விடும். அந்த மாதிரி யாருக்காவது இருக்குமா வாழ்க்கை, ரொம்ப நிறைவாக எல்லாமே எப்போதும் சலிக்காமல் இருந்தால் அவர்கள் எப்படி இருப்பார்கள் என யோசித்தபடி ஸ்டாப் ரூம் சென்றாள்.

நவீன் அண்ணன் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான். நவீன் சொன்னதிலிருந்து வீட்டில் தன்னைப் பற்றி பேசியிருப்பது கண்டிப்பாக நடந்திருக்கிறது.

ஸ்கூலில் மிஸ்ஸாக ஒழுங்காக இல்லாமல், சின்னப் பையன், தம்பி மனதில் வேண்டுமென்றே, இந்த மாதிரி எணணங்களைத் தூவி விட்டிருக்கிறாள் என தப்பாக நினைக்காது இருந்தால் அதுவே போதும்.

ஆனால் நவீன் பாவம். சின்ன வயதில் அப்பாவும் இல்லாமல், அம்மாவும் இல்லாமல் எவ்வளவு கஷ்டம். ம்.. ம்.. அண்ணி, வரப் போகிற அண்ணி நல்ல மாதிரியாக இருக்க வேண்டும் என்று மனதிற்குள் நினைத்தவாறு உட்கார்ந்து இருந்தாள் ஸ்டாப் ரூமில் ஹரிணி.

ஸ்டாப் ரூமில் உட்காந்து பரீட்சை விடைத் தாள்களை எல்லாம் கடகடவென திருத்தத் தொடங்கினாள். திருத்தி முடித்த பின் மதிப்பெண்ணை, கம்ப்யூட்டரில் பதிவு செய்தாள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்து. ''மேடம் டீ இந்தாங்க'' என்ற ஹரியின் குரல் மணி ஐந்து தான் என்பதை நிரூபித்தது.

என்ன மழை என்றாலும், என்ன வெயில் என்றாலும், கரெக்டாக ஐந்து மணிக்கு டாண் என்று டீ கொடுப்பது, ஹரியின் ஸ்பெஷாலிட்டி.

''மேடம் அடுத்த கதை, எப்ப மேடம் வரும், அதே புக்குலயா, இல்ல வேற புக்கா மேடம்'' என்றான் ஆர்வமாக,

''ம்.. ம்.. அடுத்த கதை, அதே புக்கில தான் வரும், ஹரி. ஆனா உடனே இல்ல இன்னும் ஒரு மாசம் கேப் கொடுத்துட்டு அப்புறம் தான் வரும்'' என்றாள் சிரித்தவாறு.

''வீட்டில எங்க அம்மாவுக்கு உங்க கதை என்றால் ரொம்ப உசிரு. பெண் குழந்தைகளைக் கருவிலேயே கொல்றது பத்தி ஒரு கதை எழுதியிருந்தீங்க இல்ல அதப் படிச்சுக் காட்டினவுடன் அம்மாவுக்கு ஒரே அழுகை.

''என்னோட அக்காவை, தலைச்சன் குழந்தை பெண்ணாயிருந்தா குடும்பத்துக்கு ஆகாது, அப்படின்னு சொந்தக்காரங்க எல்லாம் சொல்லி, குழந்தையை எங்கேயாவது விட்டுடு என்று சொல்லி, வற்புறுத்திய போது, அம்மாவும் ஒரு நிமிடம் அப்படிச் செய்யலாம் அப்படின்னு நினைச்சாங்க'' என்று நிறுத்தினான் ஹரி.

''அச்சச்சோ... அப்புறம். என்ன ஆச்சு'' என்றாள் ஹரிணி பதட்டமாக.

''அம்மாவுக்கு ஆனா அப்படிச் செய்ய மனசே இல்லை. அப்பாவுக்கும் இஷ்டம் இல்லை. அதனால ரெண்டு



பேரும் சொந்தக்காரங்க பேச்சைக் கேக்காம, காதில வாங்காம, அக்காவை வூட்டுக்குக் கூட்டிகிட்டு வந்திட்டாங்க.''

''இப்ப அக்கா நல்லா படிச்சு, கம்ப்யூட்டரில நல்ல வேலையில இருக்கு மேடம். அக்காவால தான் இப்ப நாங்க எல்லாரும் நல்ல நிலைமையில இருக்கோம். என்னையும் படிக்க வச்சாங்க. ஆனால் எனக்கு அதெல்லாம் ஏறலை மேடம்'' என்றான் ஒரு பெருமூச்சோடு.

''சரி, ஹரி, ரொம்ப நன்றி. உங்க அம்மாவை நான் விசாரிச்சதா சொல்லு. எல்லாரையும் வீட்டுக்கு அழைச்சுட்டு வாயேன், ஒரு நாள்'' என்றாள் சிரித்தவாறு.

''ம்.. ம்.. அழைச்சுட்டு வர்றேன் மேடம். உங்களப் பாத்தா அக்காவும், அம்மாவும் சந்தோஷப்படுவாங்க'' என்று சொல்லிக் கொண்டே டீ கிளாஸை எடுத்துக் கொண்டு போனான் ஹரி.

'மனிதர்களில் எவ்வளவு வகை. எவ்வளவு போராட்டங்கள். பணம், பதவி, புகழ் என்று ஒரு வகை வெறி. இன்னொரு வகை அன்றாட உணவுக்காக, இன்றைக்கு எப்படிப் பொழுதை ஓட்டப் போகிறோம் என்ற வகை.

'சோமாலியாவில் உள்ள குழந்தைகள் நினைவுக்கு வந்தன. எலும்பு துருத்தி, உடலே எலும்பாக, கண்கள் உள்ளடங்கி.. பாவம் எனத் தோன்றியது. அதெல்லாம் பார்த்தால் இந்தியா பரவாயில்லை. இன்னும் வறுமை அவ்வளவு உக்கிரமாக தலை விரித்து ஆடவில்லை. அப்படி எங்கும் ஒரு கேவலம் வரவேண்டாம் கடவுளே' என நினைத்தாள் ஹரிணி.

''மேடம் வீட்டுக்குக் கிளம்பலியா? இன்னும் ஏதாவது வேலை இருக்கா?'' என ஸ்டாப் ரூம் பெருக்கியபடி

கண்ணம்மா கேட்க சட்டென சுய நினைவுக்கு வந்தாள் ஹரிணி.

இப்படி அடிக்கடி யோசனையில் மூழ்கிப் போவது நல்லதா கெட்டதா என்று தெரியவில்லை என்று நினைத்தபடி எழுந்தாள்.

''இதோ, கிளம்பிகிட்டே இருக்கேன் கண்ணம்மா. நீங்க பெருக்கிட்டு ரூமைப் பூட்டிடுங்க'' என்று சொல்லிக் கொண்டே கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

வெளியே நன்றாக இருட்டி இருந்தது. மார்கழி என்பதால் சில்லென்று பனிக்காற்று வீசியது. ஸ்கூல் கேட்டை தாண்டி நடந்து கொண்டிருந்தாள்.

''ஹலோ, மேடம், என்ன இன்னிக்கு வேலை ஜாஸ்தியா? கொஞ்சம் டல்லா இருக்கீங்க'' என்று தருண் குரல் பின்னால் சட்டென கேட்க, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அவனைப் பார்த்தவுடன் சட்டென நேற்று நடந்தது, அவன் பிரபோஸ் செய்தது ஞாபகம் வந்தது. முகம் அவளையறியாமல் சிவந்தது.

''ஹலோ, மேடம் இன்னிக்கு மௌன விரதமா என்ன பதிலே சொல்ல மாட்டேங்கறிங்க'' என்றான் தருண் சிரித்தவாறு.

''ம்.. ம்.. இல்லை. நான் உங்கள இங்க எதிர்பார்க்கலை... அதான்'' என்றாள் மெல்லிய குரலில்.

''ஓ... அதிர்ச்சியில் ஏற்பட்ட மௌனமா? ஏங்க நான் பாக்க.. அவ்வளவு மோசமா இருக்கேனா என்ன? ஏன் நேத்து அப்படி சட்டுன்னு எழுந்திரிச்சுப் போயிட்டீங்க.



''எனக்கு ராத்திரி எல்லாம் தூங்கவே முடியலை. நான் உங்க அளவு படிப்பு, அந்தஸ்து இதெல்லாம் இல்லாம இருக்கலாம்.

''பட்... ஐ லவ் யூ சின்சியர்லி. இது உண்மை ஹரிணி. அதை சொல்லத்தான் வந்தேன். காலையில வந்து பேசணும் அப்படின்னு துடிச்ச மனசை அடக்கி கிட்டேன்.

''காலையில உங்கள டிஸ்டர்ப் செய்ய வேணாம் அப்படின்னு கஷ்டப்பட்டு என்னைக் கண்ட்ரோல், செஞ்சுகிட்டேன்'' என்றான் அவள் கூட நடந்தபடி.

''நீங்க சொல்றது, பேசறது எதுவும், எனக்கு உடன்பாடில்லை. இனிமே இதைப் பத்தி பேசாதீங்க'' என்றாள் அழுத்தமாக.

''ம்.. ம்.. ஓகே எனக்குத் தெரியும். நீங்க படிப்பு, அந்தஸ்து எல்லாம் பாக்கறீங்க. ஹரிணி. பட் ஐ ஆம் கான்பிடெண்ட், நீங்க மனசு மாறுவீங்க, அப்படின்னு, டேக் கேர்'' என்று சொல்லிவிட்டு சிரித்துக் கொண்டே அவளைக் கடந்து, அவளுக்கு கை காட்டியவாறு புள்ளி போல் மறைந்தான்.

இவன் மெக்கானிகல் படிப்பதற்கு பதில், மைண்ட் ரீடிங் படித்திருக்கலாம். கொஞ்சம் கூட முகம் சுருக்காமல், சிரித்தவாறு, எப்படி இவனால், இப்படி எல்லாத்தையும் ஏற்றுக் கொள்ள முடிகிறது. குட் என்று நினைத்தவாறு பஸ் ஸ்டாண்ட் அருகே சென்றாள்.

பெட்ரோல் இல்லாததால், ஸ்கூட்டியை ஸ்கூல் காம்பௌண்ட் உள்ளே நிறுத்தி இருந்தாள். பெட்ரோல் போட பைசா இல்லை. ம். ம். நாளைக்கு சம்பளம் வந்து விடும். அதற்கு அப்புறம் பெட்ரோல் போட்டுக்கலாம்.

ஏதாவது பஸ் காலியாக வரும். இல்லை லேடிஸ் ஸ்பெஷல் வந்தா ரொம்ப வசதி என்று நினைத்தவாறே பஸ் ஸ்டாண்டில் வெயிட் பண்ணிக் கொண்டிருந்தாள்.

## 11

நிலவு
அமுதைப்
பொழிந்து
கொண்டிருக்கும்
அழகான
இரவு!
நதியோரம்
நான்
உட்கார்ந்திருக்கிறேன்!
பூக்களின்
நடுவே உன்
முகத்தை என் கண்கள்
தேடுகின்றன!
கருமையான
இரவில் அந்த
மௌனம் ஏனோ
லயிக்கவில்லை!
நீ என்னருகில்
இல்லாததால் எதுவும்
பிடிக்கவில்லையே!

மறுநாள் சனிக்கிழமை என்பதால், நிதானமாக எழுந்தாள் ஹரிணி. குளித்து விட்டு மெதுவாக காலை டிபன் சாப்பிடும்போது மணி பத்து.



லீவ் நாள் என்றாலே, ஒரு சோம்பல் எப்படியோ, தொத்திக் கொள்கிறது, என்று நினைத்து தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.

சாப்பிட்டு முடித்துவிட்டு, ப்ளேட்டை வாஷ் செய்யும் போது மொபைல் போன் சத்தம் கேட்கவே, யாராயிருக் கும் என யோசித்தவாறே, ரூமிற்குள் சென்றாள்.

பாபா, ஆசிரமத்தில் இருந்து தான் போன். என்னவா யிருக்கும் என யோசித்தவாறே, போனை எடுத்தாள்.

''ஹலோ, நான் ஹரிணி தான் பேசறேன், என்ன ஐயா, சொல்லுங்க'' என்றாள்.

''ஹரிணி, நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும். வர முடியுமா. ஃப்ரியா இருந்தா. வந்துட்டுப் போக முடியுமா'' என்றார் சங்கரன்.

''சரிங்க ஐயா, நான் வர்றேன். இன்னிக்கு சனிக் கிழமை ஸ்கூல் எனக்கு லீவ் தான். அதனால இன்னும் ஒரு அரை மணி நேரத்துல நான் அங்க இருப்பேன்'' என்றாள் ஹரிணி.

நைட்டியைக் கழற்றிவிட்டு, ஒரு சந்தன நிற காட்டன் சுடிதாரை அணிந்து கொண்டாள். தலை வார நேரம் இல்லாததால் ஒரு போனிடெயில் போட்டுக் கொண்டு வீட்டைப் பூட்டிக் கிளம்பினாள்.

நடந்து போகும்போது, 'எதுக்கு சங்கரன் ஐயா சட்டென வரச் சொல்லி இருப்பார். என்ன காரணமாக இருக்கும்?' என யோசித்தவாறே, நடந்து சென்றாள்.

சங்கரன் ஐயா தான் அந்த ஆசிரமத்தை நிறுவி நடத்தி வருகிறார். வயது எண்பது கிட்ட ஆனாலும், சுறுசுறுப்பில் இருபது வயது இளைஞனுக்குச் சமம்.

ஆசிரமத்தின் கணக்கு வழக்குகளைப் பார்ப்பது, குழந்தைகளின் படிப்பை கவனிப்பது, அவர்களுக்கு நல்ல சாப்பாடு வழங்குவது என எல்லாமே பார்த்துப் பார்த்து, செய்வதில் அவருக்கு நிகர் அவர்தான்.

ஆசிரமத்தின் கேட்டைத் திறந்தவுடன், அவளுக்கு, ஏதோ உறுத்தலாக இருந்தது. காரணம் மஞ்சரியை ஆம்புலன்ஸிலிருந்து அப்போது தான் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று கொண்டிருந்தனர்.

'கடவுளே, மஞ்சரிக்கு என்ன உடம்பு சரியில்லையா? ஆம்புலன்ஸ் வரும் அளவுக்கு அப்படி என்னவா யிருக்கும்?' என யோசித்தபடி சங்கரன் ஐயா ரூமிற்குள் சென்றாள்.

ஏதோ யோசனையில் இருந்த சங்கரன் காலடி சத்தம் கேட்கவே நிமிர்ந்து பார்த்தார். ஹரிணியைப் பார்த்த வுடன் அவருக்குப் புது நம்பிக்கையும் தெம்பும் பிறந்தது.

''வாம்மா. ஹரிணி, எப்படி இருக்கம்மா?'' என்றார் கரிசனமாக.

''ம்... ம்... நான் நல்லாயிருக்கேன் ஐயா. நீங்க எப்படி இருக்கீங்க? மஞ்சரிக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா ஐயா? ஆம்புலன்ஸ் பாத்தேன். இப்ப தான் இங்க நுழை யும் போது'' என்றாள் கொஞ்சம் பதட்டமாக ஹரிணி.

''ம்.. ம்.. ஆமாம் ஹரிணி. கடவுள் மேல சில நேரம் கோவம் வருதும்மா. பாவம் இந்தப் பிஞ்சு குழந்தை மஞ்சரி. ஏன் அதுக்கு இப்படி ஒரு கஷ்டம்'' என மேலே பேச முடியாமல் குரல் கம்மியது அவருக்கு.

''ஐயா.. ப்ளீஸ், என்னவென்று சொல்லுங்க. ப்ளீஸ்'' என்றாள் ஹரிணி.



''ம். மஞ்சரி இன்னிக்கு திடீரென்னு மயக்கம் போட்டு விழுந்துட்டா. ரொம்ப நேரம் ஆனதால் மயக்கம் தெளி யாம இருந்ததால டாக்டருக்கு போன் செய்தோம்.

''டாக்டர் வந்து பாத்துட்டு எல்லா டெஸ்ட்டும் எடுக்கச் சொன்னார்.

''எல்லா டெஸ்ட் ரிசல்ட்டும் நார்மலா இருக்கும், அப்படின்னு நினைச்சோம். ஆனா... ஆனா அப்படி இல்ல ஹரிணி'' என்று சொல்லும் போதே அவர் கண் களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''ஐயா, ப்ளீஸ். கண் கலங்காதீங்க. மஞ்சரிக்கு நம்மளால ஆனதை, உதவியைச் செய்யலாம். என்ன உடம்பு ப்ராப்ளம் ஐயா, அவளுக்கு'' என்றாள் மெதுவாக.

''ம்.. ம்.. அவளுக்கு ஹார்ட்டில ஹோல் இருக்காம், ஹரிணி. இதயம் பலவீனமா இருக்காம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் சர்ஜரி செய் யறது நல்லது. அப்படிங்கறாங்க. டாக்டர்ஸ் எல்லாம்...'' என்றார் சங்கரன்.

'பாவம் அந்தக் குழந்தை. சே... ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது? ஒரு உயிரை படைத்து, அதற்கு இந்த மாதிரி சோதனைகள் கொடுத்து சே.. கடவுளே' என மருகினாள் ஹரிணி.

''அப்படியா... ஐயா. சர்ஜரி செய்ய எவ்வளவு ரூபா செலவு ஆகும்? செஞ்சா, மஞ்சரிக்கு அப்புறம் பிரச் சினை ஏதும் இருக்காது இல்ல ஐயா'' என்றாள் தன் துக்கத்தை வெளியே, குரலில் காட்டாமல்.

''ம்.. ம்.. சர்ஜரி, செஞ்சு முடிச்சாச்சுன்னா, அவளுக்கு வாழ்க்கை பூரா இதயம் நார்மலா இருக்குமாம். ஆனா

சர்ஜரிக்கு ஆகற செலவு தான் நம்ம சக்தியை மீறினது. எல்லாம் சேத்து ஐந்து லட்சம் ஆகுமாம் ஹரிணி. அது தான் என்ன செய்யறது அப்படின்னு தெரியலை.

''டாக்டர் நம்ம ஆசிரம நிலைமை பாத்து, எனக்கு சர்ஜரி பீஸ் எல்லாம் எதுவும் வேணாம். ஆனா வெளி நாட்டில் இருந்து சில மருந்துகள், இம்போர்ட் செய்ய வேண்டி இருக்கு. அதான் இவ்வளவு செலவு, அப் படின்னார்'' என்றார் சங்கரன்.

''ஓ... காட். இவ்வளவு பைசாவிற்கு எங்கே போறது? ஐயா. பட் ஏதாவது செஞ்சுதான் ஆகணும். எப்படியாவது மஞ்சரிக்கு அந்த சர்ஜரி சீக்கிரம் நடக்கற மாதிரி செய்யணும்'' என்று பதட்டப்பட்டாள் ஹரிணி.

''புரியுது ஹரிணி. ஆனா எப்படி ஐஞ்சு லட்சத்தை திரட்ட முடியும். யார் நம்மள நம்பி கடன் தருவாங்க. வாங்கினாலும்.. ஒரு பேச்சுக்கு கடன் கிடைச்சாலும், அதை எப்படி.. யார் திருப்பித் தர முடியும்? ரொம்ப குழப்பமா இருக்கும்மா'' என்றார் சோர்வாக.

''ம்.. ம்.. புரியுது. ஐயா. ஆனா எனக்கு ஏதோ ஒரு நம்பிக்கை. உள்ளுணர்வு சொல்லுது. நமக்கு பணம் கிடைக்கும், அப்படின்னு.

''நான் ஸ்கூல்ல பேசி பாக்கறேன். லோன் மாதிரி ஏதா வது தருவாங்களா, அப்படின்னு... அப்புறம். பத்திரிகை யில் அட்வர்டைஸ்மெண்ட் கொடுக்கலாம். அதுல கண்டிப்பா சில நல்ல உள்ளங்கள் உதவி பண்ணுவாங்க. நல்லதே நடக்கும் ஐயா'' என்றாள் மெதுவாக.

''ரொம்ப நன்றி ஹரிணி. எனக்குத் தெரியும். நீயும் பணத்துக்காக ரொம்ப கஷ்டப்படற அப்படின்னு.



அப்பாவோட மருந்து செலவே உனக்கு நிறைய ஆகும். ஆனாலும் எனக்கு உன்னைத் தவிர சொல்றதுக்கு ஆள் இல்லை ஹரிணி. அதனால தான் உன்னை வரச் சொன்னேன்மா.

''நானும் என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு ட்ரை பண்றேன் ஹரிணி. கடவுள் நம்ம முயற்சிக்கு கண்டிப்பா துணை புரிவார் என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கு'' என்றார்.

''சரிங்க ஐயா. நான் கிளம்பறேன். நான் டெய்லி உங்களுக்கு போன் செய்து, இது பத்தி என்ன செஞ் சிருக்கேன்; எவ்வளவு பணம் கலெக்ட் ஆகியிருக்கு அப்படின்னு சொல்றேன்'' என்று சொன்னாள் ஹரிணி.

''சரி. ஹரிணி. பாத்துப் போம்மா'' என்று அவளை வழி அனுப்பினார் சங்கரன்.

ஆசிரமத்தைத் தாண்டி நடந்து வரும்போது ஏனோ ஹரிணிக்கு கண்கள் கலங்கின. ஐயா முன் அழாமல் அடக்கி கொண்டிருந்த கண்ணீர், இனி முடியாது என்பது போல் கண்களிலிருந்து பெருகியது.

'மஞ்சரி, எவ்வளவு உற்சாகமான பெண். காட் ஏன் அவளுக்கு இந்த மாதிரி ஒரு காஸ்ட்லியான வியாதியைக் கொடுத்திருக்கிறாய்?

'ஏன் பணக்காரர்களுக்கு வர வேண்டிய வியாதிகளை ஏழைகளுக்கு கொடுக்கிறாய்? சின்னப் பெண். இன்னும் அவள் வாழ்க்கையில் அனுபவிக்க எவ்வளவோ இருக்கு.

'ஆனால் அதற்குள் அவள் உயிரே ஒரு கேள்வி ஆகி விட்டதே. ஏன் இதெல்லாம் நடக்கிறது? இது விதியா?

முன் ஜென்ம கர்மாவா? ஏன் கடவுளே? ப்ளீஸ் எதுவாக இருந்தாலும் ஒரு நல்ல வழி காட்டு.

'திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை என்பது உண்மை என்றால் கடவுளே நீ உதவி செய்ய வேண்டும். ஏதாவது வகையில் உதவி செய்.

'நூறு கோடிக்கும் மேல் இருக்கும் இந்த நாட்டில் ஒரு ஐந்து லட்சம் கிடைக்க நீ தான் துணை புரிய வேணும்' என துர்க்கையை கண் முன் நிறுத்தி, மனமுருகி வேண்டினாள்.

'நேற்று வரை உற்சாகமாக இருந்த என் மனது இந்த நொடி முதல் சோர்வாக இருக்கிறதே. மனமே ஒரு விசித்திரமான குதிரை.

'அங்கும் இங்கும் ஓடுகிற குதிரை. கட்டுப்படுத்த முடியாமல், ஓடும் ஆர்ப்பரிக்கும் குதிரை. அதனால்தான் மனதைக் கட்டுப்படுத்தி, சக்தியை பாசிடிவாக செயல் படுத்துபவர்களை மகான்கள் என்கிறார்களோ?

'ஆனால் ஒரு உயிர், சக உயிர் கஷ்டப்படும்போது, துடிக்கும்போது தியானம் செய்ய முடியுமா? எனக்கு எதன் மேலும் ஒட்டுதலும் இல்லை எந்தப் பற்றும் இல்லை என்று தியானம் செய்ய முடியுமா?

'அப்படிச் செய்வதால் என்ன பலன்? அந்த உயிர் பிழைக்க தன்னால் முடிந்ததைச் செய்யாமல் வெறும் தியானம் செய்வதில் என்ன பயன்?

'தியானம் தான் பிரார்த்தனையா? பிரார்த்தனையில், வெறும் பிரார்த்தனையால் குணப்படுத்த முடியுமா? எல்லா நோய்களும், வியாதிகளும் ஓடி விடுமா, பிரார்த் தனை செய்தால்?



'அப்படி இருந்தால் நன்றாக இருக்கும். என்னைப் போல் ஏழைகளுக்கு, மஞ்சரி போன்ற அநாதைப் பெண் களுக்கு, சங்கரன் ஐயா போன்ற நல்ல உள்ளங்களுக்கு' என்று நினைத்தவாறே நடந்தாள்.

வீட்டிற்கு போக மனம் இல்லாததால் லைப்ரரிக்கு போவது என முடிவு செய்தாள். புத்தகத்திலும் மனம் பதியவில்லை. சுத்திச் சுத்தி மஞ்சரி முகமே கண் முன் விரிந்தது.

மணியைப் பார்த்தாள். சுவர் கடிகாரம் எட்டு என்றது. சரி, லைப்ரரி மூடப் போகிறார்கள். இனி, இங்கே உட் கார்ந்து ஒன்றும் செய்ய முடியாது. வீட்டுக்குப் போக லாம் என முடிவு செய்து எழுந்தாள்.

வெளியே வானம் நிர்மலமாக இருந்தது. நட்சத்திரமே இல்லை. அமாவாசை என்பதால் இருட்டாக இருந்தது. 'ம்.. ம்.. என் மனமும் அப்படி தான் இருக்கு.' என நினைத்தவாறு நடந்தாள்.

பத்து அடி நடந்து வந்திருப்பாள். சட்டென பவர்கட் ஆனதால் தெரு விளக்கும் அணைந்து எங்கும் கருமை யாக இருந்தது. அந்த இடம் கொஞ்சம் ஜனநடமாட்டம் இல்லாத இடம் என்பதால் ஒரு பயம் திடீரென அவளைச் சூழ்ந்தது.

ம்.. ம்.. கொஞ்சம் வேகமாக நடந்தால், மெயின் ரோட் டுக்கு வந்து விடலாம் என சற்று வேகமாகவே நடந்தாள ஹரிணி.

ஆனால் ஏதோ ஒரு ஆபத்து வரப்போகிறது என உள்ளுணர்வு சொல்லுவது போல் இருந்தது ஹரிணிக்கு. நீண்ட மூச்சு ஒன்று இழுத்துக் கொண்டு, வேக வேகமாக நடந்தாள் ஹரிணி.

ஏதோ பேச்சுக் குரல் ஒரு புதர் பின்னால் கேட்க அந்த இருட்டில் திடுக்கென தூக்கிப் போட்டது அவளுக்கு. அந்த பேச்சுக் குரல், இரு ஆண்களின் பேச்சுக் குரல் அவள் அருகே பின்னே ரொம்ப அருகே கேட்டது.

''டேய், பிடிடா. ஆள் நல்லா இருக்கா. வா சீக்கிரம்'' என ஒருவன் சொல்ல ஏதோ தப்பு நடக்கப் போகிறது என புரிந்து ஓடத் தொடங்கினாள், அவள்.

ஆனால் அதற்குள் அவள் முன்னே ஒரு உருவம் வந்து அவளைத் தரதரவென புதர் அருகே இழுத்துச் சென்றது.

இன்னொரு உருவம் அவள் வாயைக் கத்த முடியாமல் துணி போல் ஏதோ ஒன்றை வைத்து அடைத்தது. தன் கைகளாலும் கால்களாலும், முடிந்த வரை தன்னால் முடிந்த வரை, அவர்களைத் தாக்கினாள் ஹரிணி.

ஆனால் நேரம் ஆக ஆக, பலம் குறையத் தொடங்கியது. புதரில் இருந்த முள் எல்லாம் அவள் முதுகைக் குத்தியது. பலத்தை திரட்டி, எப்படியோ எழுந்து கடகடவென ஓடத் தொடங்கினாள் ஹரிணி.

கண்மண் தெரியாமல் ஓடினாள். அதற்குள் பவர் வந்துவிட வீதி விளக்குகள் எரியத் தொடங்கின. லைப்ரரி போகும் திசையை நோக்கி ஓடத் தொடங்கினாள். பின்னால் அவர்கள் ஓடி வருவது தெரிய, இன்னும் வேகமாக ஓடினாள்.

ஓடியவள் சட்டென எதிரே வந்த ஒரு ஆள் மேல் மோதினாள் ''ப்ளீஸ் என்னைக் காப்பாத்துங்க'' என்று அழுதவாறே கெஞ்சினாள்.

''ஹரிணி, எ.. என்ன ஆச்சு'' என்று தருண் குரல் பதட்டத்தோடு கேட்க, அவன் கைகள் அவளை



அணைத்து சமாதானப்படுத்த, அதற்கு மேல் தாங்க முடியாமல் அவள் அவன் மார்பில் ஒண்டிக் கொண்டு கதறிக் கதறி அழுதாள்.

அவள் உடம்பு பயத்தால் நடுங்குவதை உணர்ந்த தருண் ''ஷ்... ஷ்... ஹரிணி. பயப்படாத. உனக்கு ஒண்ணும் ஆக நான் விட மாட்டேன். ப்ளீஸ், அழாதம்மா'' என்று அவன் கைகள் அவள் முதுகை, தலையை, கூந்தலை வருடி தடவி சமாதானப்படுத்தின.

''தருண் அவங்க.. அவங்க.. எ.. என்னை'' என்று மீண்டும் அந்த பயங்கரத்தை நினைத்து, அடக்க முடியாமல் கேவினாள்.

அவள் முகத்தை, தன் மார்பில் பயந்து போய் ஒண்டி இருந்த, அவள் முகத்தை தன் கையில் ஏந்தினான் தருண்.

''ப்ளீஸ் ஹரிணி. ஒண்ணும் இல்லைடா. பயப்படாத. அவங்க ஓடிட்டாங்க. இங்க யாரும் இல்லைம்மா. ப்ளீஸ், பயப்படாத, அழாதேடா'' என்று சிறு குழந்தையை சமாதானம் செய்வது போல் செய்தான்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் அழுகை, கேவல் நின்றது. அது வரைக்கும் அவளிடம் ''ப்ளீஸ்டா, நத்திங் நத்திங் ஹரிணி'' என்று சொல்லிச் சொல்லி சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான் தருண்.

ஒரு வழியாக தன்னைச் சமாளித்த ஹரிணி மெதுவாக அவன் அணைப்பிலிருந்து விலகினாள். குனிந்து தன் டிரஸ்ஸைப் பார்த்தாள். அங்கங்கே கிழிசல், தோள் பட்டையின் கீழே அதைப் பார்த்தவுடன் மீண்டும் கண்ணில் நீர் முட்டியது.

அதைப் புரிந்து கொண்ட தருண், தன் ஜெர்கின்ஸை கழட்டினான். அதை அவள் மேலே போர்த்தினான்.

''என் பேக்.. எங்கே'' என்று பதறினாள் ஹரிணி.

''ம்.. ம்.. அங்க இருக்கு பாரு'' என்று சொல்லிய வாறு அவள் கையைத் தன் கையுடன் பிணைத்தவாறு நடந்தான். கீழே இருந்த பையை, எடுத்துக் கொண் டான்.

''வா, ஹரிணி. நான் உன்னை உன் வீட்ல விட்டுட்டுப் போறேன்'' என்று சொல்லிக் கொண்டு ஒரு ஆட் டோவைக் கூப்பிட்டான்.

''இங்க பக்கத்துல தான். கொஞ்சம் உடம்பு சரி யில்லை இவளுக்கு அதான். ஏறு ஹரிணி'' என்று ஆட்டோக்காரரிடம் பேசியபடி ஏறினான் தருண்.

ஆட்டோவில் ஏறிய பின்பும். அவள் கைகளைப் பற்றியிருந்த கைகளை அவன் விடவில்லை. அவ னுடைய கைகள் 'பயப்படாதே நான் இருக்கிறேன்' என்று சொல்லுவது போன்ற பிரமை அவளுக்கு.

''வேர் இஸ் யூவர் ஹவுஸ், ரூட். சொல்லு ப்ளீஸ் ஹரிணி'' என்றான் அவளைப் பார்த்து, தருண்.

''ஃபர்ஸ்ட் லெஃப்ட் தர்டு ஹவுஸ்'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''இந்த முதல் லெஃப்டில திரும்பிக்கோங்க. அதுக்கு முன்னாடி அந்த மெடிகல் ஷாப்பில ஒன் செகண்ட் நிறுத்துங்க'' என்று தருண் சொன்னவுடன். ஆட்டோக் காரர், அந்த மெடிக்கல் ஷாப் அருகே, நிறுத்தினார்.



''ஒன் செகண்ட்'' என்று சொல்லிவிட்டு தருண் ஆட்டோவிலிருந்து வேகமாக இறங்கினான்.

ஒரு நொடியில் கையில் ஒரு பையோடு திரும்பி வந்தான்.

''ஹரிணி, உனக்கு சாப்பிட நைட் டின்னருக்கு ஐ ஹேவ் சம்திங்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

''தேங்க்ஸ்'' என்று முனகினாள் ஹரிணி. அதற்குள் வீடு வந்து விடவே, ஆட்டோவை நிறுத்தும்படி சொன் னான் தருண்.

ஆட்டோக்காரரிடம் ஒரு ஐம்பது ரூபாய் நோட்டைத் திணித்து விட்டு, தருண் ஹரிணி கையைப் பிடித்து அவள் இறங்க ஹெல்ப் செய்தான்.

ஹரிணி தன் கைப்பையிலிருந்து, வீட்டுச் சாவியை துழாவி, ஒரு வழியாக எடுத்தாள்.

அதைப் பூட்டு துவாரத்தில் நுழைக்க முடியாமல், அவள் விரல்கள் நடுங்குவதை கவனித்த தருண் 'ஒன் மினிட்'' என்று அவள் கையில் இருந்து சாவியை வாங்கிப் பூட்டைத் திறந்தான்.

கைத்தாங்கலாக அவளை வீட்டினுள் அழைத்துச் சென்றான் தருண். அவளை சேரில் உட்கார்த்தி வைத்து, ஹாலில் லைட், பேன் எல்லாவற்றையும் போட்டான்.

கிச்சனுக்குள் சென்று பாலை சூடு செய்து, ஒரு டம்ளரில் கொண்டு வந்தான்.

''ஹரிணி ம்.. ம்.. பால் சூடா இருக்கு. குடி. யூ நீட் எனர்ஜி'' என்று டம்ளரை நீட்டினான்.

''வேண்டாம் தருண். எனக்கு எதுவுமே பிடிக்கலை. எனக்கு கோவமா வருது. ஐ ஜஸ்ட் ஹேட் இட். ஏன் அப்படி செஞ்சாங்க தருண்?

''எ.. எனக்கு அவங்க யாருன்னே தெரியாது. ஏன். எப்படி ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் இப்படி, கேவலமா வெறித்தனமா? எனக்குப் புரியலை தருண்.

''பெண்ணுக்கும் மனசு ஒண்ணு இருக்கு. அப்படின்னு இவங்களுக்கு தெரியாதா? சே. மிருகங்களை விட இப்படிக் கேவலமா நடக்க இவங்களால எப்படி முடியுது?'' என்று கோபமாக உதடு துடிக்க கண்கள் பட படக்க, அவள் பேசியதைப் பார்த்த தருணுக்கு, சட்டென அவளுக்கு அவர்கள் மேல் இருந்த கோபம் எவ்வளவு என்று புரிந்தது.

எவ்வளவு நியாயமானது இந்தக் கோபம் என்று அவனுக்குப் புரிந்தது. அவள் அருகே மெதுவாக வந் தான் தருண்.

''ம்.. ம்.. ஹரிணி, எனக்குப் புரியுது. உன்னோட கோபம், பெண்களை, அவர்கள் விருப்பம் இல்லாமல், உடன்பாடு இல்லாமல் அடைய நினைக்கறது ஒரு வன்முறை தான்.

''நீ நடக்கும்போது உன் மேல சாக்கடைத் தண்ணி பட்டிருச்சுன்னா, என்ன செய்வ நீ, வீட்டுக்குப் போய் குளிச்சட்டு வேற டிரெஸ் போட்டுட்டு போவ.

''அதே மாதிரி தான் இதுவும். ஸோ. ஜஸ்ட் லீவ் இட். குட் கேர்லா, பாலைக் குடிச்சுட்டு, பிரட் சாப்பிட்டு முடிச்சு, ஒரு மருந்து, மாத்திரை இருக்கு. நாட் எ ஸ்லீப்பிங்



டோஸ். மைல்ட் செடேடிவ். உனக்கு இன்னிக்கு தூக்கம் முக்கியம். ஸோ டேக் இட் அண்ட் கோ டு பெட்'' என்றான் கொஞ்சம் கண்டிப்பாக.

அவன் சொன்னவுடன் கொஞ்சம் மனம் சமாதானம் ஆனது ஹரிணிக்கு.

''ம்.. ம்.. தேங்க்ஸ் தருண். இன்னிக்கு நீங்க வர லைன்னா.. ஐ... ஜஸ்ட் காண்ட் இமேஜின் தட். நினைக்கவே பயமா இருக்கு'' என்று சொல்லும்போதே உடல் நடுங்கியது.

''ம்.. ம். இப்ப மட்டும் இல்ல. இன்னிக்கு மட்டும் இல்லை. எப்பவும், வாழ்க்கை முழுக்க நான் உன்கூட நீ போகிற இடம் எல்லாம், உன் நிழல் மாதிரி வரணும், அப்படின்னு நான் ஆசைப்படறேன் ஹரிணி. அதை மட்டும் யோசிச்சுக் கிட்டு தூங்கு.

''நான் உன் கனவில வருவேன். ஐ ஆம் ஷ்யூர்'' என்றான் அவளைப் பார்த்து சிரித்தவாறு தருண்.

அவன் இப்படிச் சொன்னவுடன் ஹரிணியின் முகத்தில் ஒரு செம்மை படர்ந்தது. சட்டென உடல் எல்லாம் சூடானது போல் உணர்ந்தாள்.

'ஓ... அந்த முரடர்களிடமிருந்து ஓடி வந்து இவனைப் பார்த்தபோது, எவ்வளவு பாதுகாப்பாக உணர்ந்தேன் என் சோகம், அழுகை, கோபம் எல்லாம் ரொம்ப இயல்பாக அவன் மார்பில் கண்ணீராகக் கரைந்ததே.

'அது... அது எப்படி ஆனது, வேறு யாரையும், எந்த ஆணையும் நான் இதுவரை தொட்டுப் பேசியதில்லை. ஆனால்... ஆனால் இவன் தொட்டபோது ஒரு துளி அருவெறுப்பு கூட வரவில்லையே. அது ஏன்?

'காட் நான்.. நான் அவனைக் காதலிக்கிறேனா? இல்லை... இது ஒரு ஆபத்தால் வந்த நெருக்கமா? காதல் இல்லையா? தெரியவில்லையே. கடவுளே... என்ன இது?' என்று குழம்பினாள் ஹரிணி.

## 12

**கடல் அலைகளை**
**நிறுத்திக்**
**கேட்கிறேன்!**
**வீசும்**
**காற்றை**
**நிறுத்திக்**
**கேட்கிறேன்!**
**கூட்டமாகப் பறக்கும்**
**பறவைகளை**
**நிறுத்திக்**
**கேட்கிறேன்!**
**மரக்கிளையில்**
**அமர்ந்து**
**பாடும்**
**குயிலைக்**
**கேட்கிறேன்!**
**நீ எங்கே?**
**நீ எங்கே?**
**என் உடல்**
**மட்டும் இங்கே!**



**உயிர் அலைகிறது**
**உன்னைத் தேடி!**

''சரி.. ஹரிணி. நான் கிளம்பறேன். இந்த மாத்திரையை மறக்காம போடு. இன்னும் ஒரு பிரட் சாப்பிடேன், ப்ளீஸ்'' என்றான் தருண்.

''இ... இல்லை. தருண். ரொம்ப தேங்க்ஸ், போதும் நீங்க பேசிகிட்டே இருந்ததால, நான் நிறைய சாப்பிட்டுட்டேன்'' என்றாள் ஹரிணி சிரித்தவாறு.

''ம்.. ம்.. டெய்லி நான் வரவா? ஐ மீன் நீ நல்லா சாப்பிடுவ அட்லீஸ்ட்'' என்றான் தருண் கெஞ்சலாக.

''ம்.. ம்.. நான் எப்படி இத எடுத்துக்கறேன்னா, குழந்தைங்க... பூச்சாண்டி பாத்தா கூட பயந்து போய் நல்லா சாப்பிடும். அது மாதிரி தான்'' என்றாள் கிண்டலாக.

''நீ சொல்றதில ஒண்ணு கரெக்ட் தான் ஹரிணி'' என்றான்.

''என்னது என்ன கரெக்ட்'' என்றாள் புரியாமல் விழிகள் அகல ஹரிணி.

''ம்.. ம். நீ குழந்தை தான். உன் கண்கள், முகம், எல்லாமே, எனக்கு ஒரு குழந்தையைத் தான் ஞாபகப் படுத்துகிறது. அழகான குழந்தை... ம்.. இந்தக் குழந்தை என்னை பூச்சாண்டி, பூதம் அப்படின்னு என்ன சொன்னாலும் ஐ லைக் இட்'' என்றான், சிரித்தவாறு அவள் கண்களைப் பார்த்துக் கொண்டு தருண்.

'இவன் ஏன் இப்படிப் பேசறான்? சட்டென அவன் தன்னை ஒருமையில் இந்த நிகழ்ச்சிக்கு அப்புறம் அழைப்பதை கவனித்தாள். வயிற்றில் பட்டாம்பூச்சிகள்

பறப்பது போல் ஒரு இனிமையான பரபரப்பான உணர்வு அவளை ஆட்கொண்டது.

அவள் முகத்தைத் தருண் பார்த்துக் கொண்டே இருந்தான். 'ம்.. ம்.. இவளிடம் என்ன ஒரு ஈர்ப்பு சக்தி. இந்தக் கண்களில் வெளிப்படும் அமைதி, சில நேரம் குறும்பு, கோபம்... ம்.. ம்.. ஹரிணி நீ என்னிடம் எவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறாய் என உனக்குத் தெரியாது.

'உன்னைப் பார்த்தாலே என் மனதில் ஒரு புது சக்தி பரவுகிறது. அலை அலையாய், நான் அதில் அமிழ்ந்து போகிறேன் என்பது உனக்குத் தெரியாது' என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''சரி ஹரிணி, நான் கிளம்பறேன். நாளைக்கு ப்ளீஸ் மார்னிங் என்னைக் கூப்பிட முடியுமா. நீ எப்ப முழிப்ப அப்படின்னு தெரியலை. இல்லைன்னா நானே உன்னைக் கூப்பிட முடியும்.

'ஐ வாண்ட் டு நோ இஃப் யூ ஆர் ஓ.கே? ஆல்ஸோ, மை டே வுட் பி கிரேட் உன் கிட்ட பேசினா'' என்றான் தருண்.

''ம்.. ம்.. கண்டிப்பா உங்களை கால் பண்றேன் தருண். மறுபடியும் தேங்க்ஸ் எ லாட்'' என்றாள் மனமார.

மனசே இல்லாமல் அவளுக்கு குட்நைட் சொல்லி விட்டு, வீட்டை விட்டுக் கிளம்பினான் தருண்.

வெளியே வந்தவுடன் அவன் மனதில் புதிய நம்பிக்கை பிறந்தது. 'கண்டிப்பாக ஹரிணியின் மனதில் நான் இருக்கிறேன் என்று தான் தோன்றுகிறது.



'பாவம் ரொம்ப பயந்து விட்டாள். சே, இவளிடம் போய் இப்படி வெறித்தனமாக நடக்க அந்த மிருகங்களுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ தெரியவில்லை.

'அவள் இருந்ததால் தான் நான் சும்மா இருந்தேன். இல்லாவிட்டால் அவர்கள் பின்னால் நான் போய் அவர்களை ஒரு வழி பண்ணியிருப்பேன்.

'பொறுக்கிகள் பலத்தை எப்படி எல்லாம் ஒரு பெண்ணிடம் காட்டுகிறார்கள்' என்று யோசித்தபடி நடந்தான். வானம் தெளிவாக இருந்தது.

அவள் பயந்து நடுங்கி தன்னிடம் ஒண்டியது ஞாபகம் வந்தது. எல்லாம் கனவு போல் இருந்தது. கெட்டதில் ஒரு நல்லது இது தான் போல. இப்படி நடந்ததால் தான் அவள் என்னிடம் நெருங்கி வருகிறாள்.

அவள் கோபப்பட்டு முரடர்களைத் திட்டியது, பின் அவன் சொன்னதைக் கேட்டு சமாதானம் அடைந்தது, என எல்லாமே அவன் கண் முன், மீண்டும் தோன்றியது.

ஆட்டோ எடுத்து வீடு வந்த தருண், அன்று முழுவதும் ஹரிணியை நினைத்துக் கொண்டிருந்தான். இரவு தூங்க முடியாமல் முன்நேரத்தில் தூங்கத் தொடங்கினான்.

மொபைல் போன் சத்தம் கேட்டுக் கண் திறந்தான் தருண். ''ஹனி காலிங்'' என்று திரையில் தெரிய, ஆர்வமாக போனில் 'ஆன்சர் பட்டனை' அழுத்தினான்.

''ஹலோ தருண். நான்.. ஹரிணி பேசறேன்'' என்று அவள் குரல் கேட்டவுடன் ரொம்ப சந்தோஷமாக உணர்ந்தான் தருண்.

''ஹலோ. ஹரிணி. குட்மார்னிங். ஹெவ் ஆர் யூ? எனக்கு வேக் அப் கால் நீ தான் இன்னிக்கு'' என்றான் சிரித்தபடி.

''ஐ ஆம் ஃபைன், உங்க தூக்கத்தைக் கெடுத்திட்டேன், சாரி'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம். கரெக்ட் தான். நீங்க என்னைத் தூங்கவே விடல. நேத்திக்கு முழுக்க நான் உன்னைத்தான் நினைச்சுக் கிட்டு இருந்தேன்'' என்று சொன்னான்.

'ம். ம். உன்னோட கண், மூக்கு, உதடு, முகம் எல்லாமே திரும்பத் திரும்ப கண் முன்னாடி வந்து ரொம்ப டிஸ்டர்ப் செஞ்சுது ஹனி' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''ஓ... தேங்க்ஸ் தருண். நேத்திக்கு நான் ரொம்ப பயந்து போய் இருந்தேன். இன்னிக்கு ஐ ஃபீல் பெட்டர் இன்னும் கொஞ்ச நேரத்தில் ஸ்கூலுக்குக் கிளம்பணும்.

''சாரி, உங்களைத் தூங்க விடாம டிஸ்டர்ப் செஞ்சதுக்கு'' என்றாள் சிரித்தபடி.

''ஐ லைக் இட் ஹரிணி. டெய்லி நீ இப்படி கால் செஞ்சா போதும். என் நாள் இனிய நாளாயிருக்கும்'' என்றான் சிரித்தபடி.

''ஓ... தருண். நீங்க ரொம்ப நல்லாப் பேசறீங்க... நீங்க பேசறதெல்லாம் கேட்டா, எனக்கு குளிர்ல ஜுரமே வந்திடும் போல இருக்கு'' என்றாள் அவளும் சிரித்தபடி.

''இன்னிக்கு உன்னைப் பாக்க முடியுமா, ஹரிணி? சாயங்காலம் ப்ரீயா, இருப்பியா?'' என்றான் ஆர்வமாக.

''ம்.. ம்.. பாக்கலாம் தருண். எனக்கு ஸ்கூல் முடிய எப்படியும் அஞ்சு மணி ஆகும். வீட்டுக்கு போய் சேர ஆறு இல்ல ஆறரை மணி ஆகும்'' என்றாள் தயக்கமாக.

''சரி. நான் இன்னிக்கு டின்னருக்கு வரேன் உங்க வீட்டுக்கு. எனக்காக ஸ்பெஷலாக ஏதும் செய்ய வேணாம். வாட் எவர் யூ ஹேவ் இஸ் ஓகே ஃபார் மி'' என்றான்.



''ஓ... ஷ்யூர். வாங்க தருண்'' என்றாள் ஹரிணி.

''சரி. ஹரிணி. இன்னிக்கு ஈவினிங் பாக்கலாம்'' என்று சொல்லிவிட்டு போனைத் துண்டித்தான் தருண்.

அவன் துண்டித்த பின் சிறிது நேரம் அவன் பேசியதையே நினைத்துப் பார்த்தாள் ஹரிணி. 'நான் அவனுக்கு ரொம்ப உரிமை கொடுக்கிறேனா, சட்டென்று அவன் டின்னர் என்றவுடன் ஒத்துக் கொண்டேனே.

'என்ன ஆச்சு எனக்கு? இது தப்பா? ஆனா எனக்குப் பிடிச்சிருக்கு. அவனுடன் பேசுவது, அவனைப் பார்ப்பது எல்லாமே. நான் அவனை விரும்புகிறேனா?' என தனக்குள் கேட்டபடி லேசாகச் சிரித்தாள் ஹரிணி.

குளித்துவிட்டு, ஒரு பச்சை நிறப் புடவையை அணிந்து கொண்டு, ஸ்கூலுக்கு தயாரானாள் ஹரிணி. இன்னிக்கு, எப்படியாவது, மஞ்சரி பற்றி அவள் சர்ஜரி செலவுக்கு, ஏதாவது ஸ்கூலில் பேசி ஏற்பாடு செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டே ஸ்கூட்டியில் புறப்பட்டாள்.

ஸ்கூலில் இன்று இரண்டாவது பீரியட் மட்டும் தான் எனக்கு. அதனால் பிரின்சியிடம் எப்படியாவது மஞ்சரி பற்றி பேச வேணும் என முடிவு செய்தாள்.

''ஹாய் ஹரிணி, குட்மார்னிங். என்ன டல்லா இருக்க? வீக் எண்ட் ரொம்ப வேலையா?'' என ஸ்டாப் ரூம் நுழைந்தவுடன் வாணி அக்கறையாக விசாரித்தாள்.

''ம்.. ம்.. கொஞ்சம் வேலை ஜாஸ்தி தான் வாணி கரெக்டா கண்டு பிடிச்சுட்ட'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''ஃபேஸ் இஸ் தி இண்டெக்ஸ் ஆஃப். மைண்ட் அப்படிங்கற பழமொழி கரெக்ட்தான் ஹரிணி. அட்லீஸ்ட்

உன்னைப் பொறுத்தவரை, உன் மனசில இருக்கறதை உன் முகம், அப்படியே காட்டிக் கொடுக்குது'' என்றாள் சிரித்தபடி வாணி.

அவளிடம் சுருக்கமாக, மஞ்சரிக்கு வந்திருக்கும் நோய் பற்றியும், அதற்கு தேவையான பணமும் சர் ஜரிக்கு எவ்வளவு ஆகும் என்பதையும் சுருக்கமாகச் சொன்னாள் ஹரிணி.

''ஓ.. ஐ ஆம் சாரி, ஹரிணி. நான் என்னால முடிஞ் சதை கண்டிப்பா உதவி செய்யறேன். நீ பிரின்சி கிட்டேயும் பேசு. அதோட நவீன் அதான் ஆறாம் க்ளாஸ் வால், உன்னோட விசிறி, அவன் கிட்ட பேசிப் பார்.

''அவனோட அண்ணன், ரொம்ப.. ரொம்ப வசதி. பிக் ஷாட். இதெல்லாம் நத்திங் ஃபார் தெம். நம்ம ஸ்கூல் பில்டிங் பண்ட், அதுக்கெல்லாம் நிறைய டொனேட் செஞ்சிருக்காங்க, அவனோட அண்ணன். ஸோ, ட்ரை பண்ணிப் பாரு ஹரிணி'' என்றாள் வாணி.

''ஓ... தேங்க்ஸ் எ லாட். நான் இந்த மாதிரி யோசிக் கவே இல்லை. ரொம்ப தேங்க்ஸ் வாணி'' என்றாள்.

லஞ்ச் டையத்தில் நவீனிடம் பேசுவது என்று முடிவு செய்தாள். 'காட் அது பாசிடிவ்வாக இருக்கணும்' என தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

ஸ்டாஃப் ரூமில் உட்கார்ந்து, தன்னுடைய கிளா ஸுக்கு உண்டான சிலபஸைப் பார்த்துக் கொண்டிருந் தாள் ஹரிணி. ஏனோ தருண் முகம், புக் பக்கத்தில் இருப்பது போல் ஒரு பிரமை.

அவளைப் பார்த்து சிரிப்பது போல், கிண்டல் செய் வது போல பிரமை. 'காட் என்ன ஆச்சு எனக்கு. இப்ப



ஸ்கூல்ல ஸ்டாப் ரூமில உட்கார்ந்து டே ட்ரீம் பண்ணி கிட்டு இருக்கேன்.'

தருண் அந்த ஆபத்துக்குப் பிறகு, ஏனோ தன்னை நெருங்கி வந்து விட்டதை உணர்ந்தாள். 'இது தப்பா, சரியா தெரியவில்லை. பட் சம்திங், ஹேஸ் ஹேப்பண்ட் ஃபார் மீ' என ஒரு பெருமூச்சு விட்டாள்.

அதற்குள் பெல் சத்தம் கேட்கவே, சட்டென சுய உணர்வு பெற்றாள். அவளுடைய பீரியட் வந்துவிடவே, கிளாசிற்குச் சென்றாள்.

நவீன் கிளாஸில் இருப்பதைப் பார்த்தவுடன் அவ ளுக்கு, நிம்மதி ஆனது. கிளாஸில் வழக்கம் போல் இன்வால்வ்டாக, பாடத்தை எடுத்தாள்.

பாடம் எடுத்தபின் அடுத்தது இண்டர்வெல் என ஞாபகம் வந்தது.

நவீனிடம் அப்பவே பேசிவிடுவது என முடிவு செய் தாள்.

''மிஸ். இந்தப் புடவை நல்லாயிருக்கு மிஸ் உங் களுக்கு'' என கிளாஸ் முடிந்தவுடன், நவீன் சொன்ன வுடன் சிநேகமாக அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''நவீன் நான் உன்கிட்ட பேசணும்'' என்று மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள்.

''சொல்லுங்க மிஸ். உங்க பேப்பரில நான் டெஸ்ட் இந்த தடவை ரொம்ப நல்லா செஞ்சிருக்கேன். திருத் திட்டீங்களா மிஸ்?'' என்றான் ஆர்வமாக.

''ம்.. இல்லை நவீன். நான் இன்னும் கரெக்ட் செய் யலை. பட் இது வேற. உன்னால சின்ன ஹெல்ப். உங்க

அண்ணன்கிட்ட நான் ஒரு டொனேஷன் விஷயமா பேசணும், அதான் உன்கிட்ட'' என்று தயங்கினாள்.

''மிஸ். நோ பிராப்ளம். இன்னிக்கு ஸ்கூல் முடிஞ்ச வுடன் அண்ணனை ஆபிஸுல மீட் செய்யலாம். அண்ணா இஸ் எ வெரி நைஸ் பாய். அதனால உங் களுக்கு கண்டிப்பா, நிறைய டொனேட் செய்வார்'' என்றான் பெரிய மனுஷ தோரணையில்.

''தேங்க்ஸ் நவீன். சாயங்காலம், கிளாஸ் முடிஞ்ச வுடன் இங்கேயே வெயிட் பண்ணு. நம்ம போகலாம்'' என்றாள்.

''சரி, மிஸ். டிரைவர் எப்படியும், எனக்கு வெயிட் செய்வார். அதனால, எந்தப் பிரச்சினையும் இல்லை'' என்றான் நவீன்.

''ஓ... தேங்க்ஸ் நவீன்'' என்று சொல்லிவிட்டு கிளாஸை விட்டு வெளியே வந்தாள் ஹரிணி.

ம்.. ம் போகிற காரியம் நல்லபடியாக முடியணும். மஞ்சரிக்கு தேவையான பணம் கிடைக்க வேணும் என நினைத்தவாறே ஸ்டாஃப் ரூம் நோக்கி நடந்தாள்.

தன் வாழ்க்கையைப் புரட்டி, அப்படியே மாற்றப் போகிறது, இந்த சம்பவம் எனத் தெரியாமல் சாயங் காலம் எப்போது வரும் என ஹரிணி ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான்கு மணி ஆன பின் ஸ்டாப் ரூமிலிருந்து வாணி யிடம் சொல்லிவிட்டுக் கிளம்பத் தயாரானாள். ''ஆல் தி பெஸ்ட் ஹரிணி'' என்று வாணி சிரித்தவாறே சொன் னாள்.



''தேங்க்ஸ் வாணி'' என்று சொல்லிவிட்டு கைப் பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் ஹரிணி. நவீன் க்ளாஸில் உட்கார்ந்து, சமர்த்தாக ஏதோ படித்துக் கொண்டிருந்தான்.

''ஹாய் நவீன். போகலாமா?'' என்றாள் உற்சாகமாக.

''ம்.. ம் போகலாம் மிஸ். டிரைவர் அங்கிள் ரெடியாக வெயிட் பண்ணிகிட்டு இருக்கார்'' என்றான்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டு நவீன் நடந் தான்.

''நவீன் உங்க அண்ணாவுக்குத் தெரியுமா, நம்ம இன்னிக்கு அவரைப் பாக்க ஆபீஸ் போறோம் அப் படின்னு?'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம்.. அண்ணாவோட பி.ஏ.வுக்கு போன் செய்து சொல்லிட்டேன். இன்னிக்கு அண்ணா, ஐந்து மணிக்கு மேல ப்ரியாகத்தான் இருக்கிறார். ஆனா மிஸ், நீங்க வரப் போறதைச் சொல்லல. சஸ்பென்ஸா இருக்கட்டும்'' என்றான் மெதுவாக ரகசியம் பேசும் குரலில்.

''ஓ... சஸ்பென்சா? உங்க அண்ணன் உன்னை ஒண் ணும் திட்ட மாட்டார் இல்ல. நான் திடுக்குன்னு இப்படி போய் அப்பாய்ன்மெண்ட் இல்லாம நின்னா'' என்றாள் கொஞ்சம் பதட்டமாக.

''இல்லை, மிஸ். அண்ணா இஸ் வெரி ஸ்வீட். உங்களைப் பாத்து சந்தோஷப்படுவார்'' என்றான் நவீன்.

அதற்குள் கார் அருகே வந்து விட, காரினுள் ஏறினர். வழி முழுவதும் நவீன் உற்சாகமாக ஏதோ பேசியபடி வந்தான். ஹரிணியும் தன் கவலைகளை மறந்து அவ னோடு பொழுதை, ரசித்து அனுபவித்தாள்.

மவுண்ட் ரோடில் அந்த பல அடுக்கு மாடி கட்டிடங்கள் நிறைந்த காம்ப்ளெக்ஸில் அண்டர் கிரவுண்ட் பார்க்கிங்கில் கார், நின்றவுடன் ஹரிணிக்கு பிரமிப்பாக இருந்தது.

லிப்டில் நாலாவது தளத்தில் இருந்த அந்த ஆபீஸில் நுழையும் போது 'ஓ இவ்வளவு பெரிய ஆபீஸா?' என ஹரிணி வியந்தாள்.

இண்டீரியர் டெகரேஷன் ரொம்ப அழகாக இருந்தது. ரிசப்ஷனில் இருந்த சோபா, விரித்திருந்த கார்பெட், சுவரில் இருந்த பெயிண்டிங் என எல்லாமே கவிதை போல் கண்ணைப் பறிக்காமல், ரொம்ப அழகாக இருந்தது.

கண்களை விரித்து சுற்றும் முற்றும், பார்த்து, வியந்த படி நடந்தாள்.

''ஹாய் அங்கிள், அண்ணனைப் பார்க்கணும்'' என்று நவீன் ரிசப்ஷனில் இருந்த ஒரு இளைஞனிடம் சொன்னான்.

''ஓ... கண்டிப்பா. நீங்க தான் போன் செஞ்சீங்களே, பார்க்கலாம். அண்ணன் ஃப்ரீ தான். கூட இவங்களும் மீட் பண்ணனுமா சாரை?'' என்றான் ரிசப்ஷனிஸ்ட்.

''ஆமாம் அங்கிள் தேங்க்ஸ்'' என்று சொல்லிவிட்டு ஹரிணியை பாத்து ''வாங்க மிஸ்'' என்று கை பிடித்து நேர் எதிரே இருந்த ரூமிற்குள் அவளை அழைத்துச் சென்றான்.

உள்ளே லேப் டாப்பில் மூழ்கியிருந்தான் தருண். கதவு திறக்கும் ஓசை கேட்டவுடன், லேப் டாப்பில் இருந்து கண்களை எடுக்காமல் ''கம்மின்'' என்றான்.



''ஹலோ, அண்ணா'' என்று நவீன் குரல் கேட்டவுடன் உற்சாகமாக லேப்டாப்பை விட்டுப் பார்வையை கதவு அருகே செலுத்தினான் தருண்.

நவீன் பின்னே... பின்னே காட் ஹரிணி. ஒரு பச்சை நிற காட்டன் புடவையில், அழகாக, கம்பீரமாக உள்ளே வந்து கொண்டிருந்தாள். தருண் திகைத்துப் போய் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினான்.

அவனைப் பார்த்தாள் ஹரிணி. 'கடவுளே... இவன், இவன் தான் நவீனின் அண்ணனா? சே... சே.. என்னிடம் எப்படி, ஒரு மெக்கானிக் மாதிரி நடித்தான். என்னவெல்லாம் பேசினான். சே...' என கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. கோபம், துக்கம், குழப்பம் எல்லாம் போட்டியிட்டன அவள் முகத்தில்.

ஒரு வேளை டிவின்ஸ் மாதிரி ஏதாவது இருக்குமா என்று குழம்பி, மீண்டும் அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் இருந்த கோபத்தின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், தருண் பதறினான்.

''அண்ணா, இவங்க தான் என்னோட மிஸ் ஹரிணி. நான் சொல்லியிருக்கேன் இல்ல, ரொம்ப நல்ல மிஸ், அவங்க ஒரு டொனேஷன் பத்தி பேசணுமாம் அண்ணா. ப்ளீஸ் அண்ணா. ஹெல்ப் செய்யுங்க'' என்று நவீன் குரல் கேட்டவுடன் இருவரும் எண்ண ஓட்டத்திலிருந்து விடுபட்டு, சுய உணர்வு பெற்றனர்.

''ப்ளீஸ் சிட்டவுன் ஹரிணி, சொல்லுங்க என்ன விஷயமாக என்னைப் பார்க்க வந்தீங்க?'' என்றான் தருண் சமாளித்துக் கொண்டு.

ஹரிணிக்கு பேச்சே எழும்பவில்லை. நாக்கு மேலே ஒட்டிக் கொண்டது. கோபமும் எரிச்சலும் அடிவயிற்றில்

இருந்து புகை போல் கிளம்பியது. 'சே.. என்ன ஒரு ஏமாற்று வேலை இது. இப்ப எதுவும் தெரியாதது போல் ஒரு நாடகம். ஏன் ஏன் அப்படி என்னிடம் நடிக்கணும்?' என மனதிற்குள் வண்டு போல் கேள்வி, குடைந்தது.

நவீன் அவளைப் பார்த்து ''மிஸ், பயப்படாம, சொல்லுங்க மிஸ்'' என்று கையைப் பிடிக்கவும் ஒரு மாதிரி தன்னை சமாளித்துக் கொண்டாள்.

கையில் இருந்த பைலை அவனிடம் நீட்டினாள். அதில் மஞ்சரிக்கு வந்திருக்கும் நோயும், அதற்குத் தேவையான மருத்துவமும், சர்ஜரி செய்வதற்கு ஆகும் தொகையும் மஞ்சரியின் போட்டோவும் இருந்தது. டாக்டர் சொர்டிபை செய்த டீடெய்ல்ஸ், டாக்டர் சீல், எல்லாமே இருந்தது.

ஏதும் பேசாமல் அவள் கொடுத்த பைலை வாங்கிப் படித்தான் தருண். அதிலிருந்த விவரங்களை எல்லாம், மனதில் வாங்கினான். ஒரு நிமிடம் கண் மூடி யோசித் தான்.

பின் ஒரு முடிவுக்கு வந்தான். ''நவீன் இங்க நம்ம ஆபீசில், கேண்டினில் ஒரு புது ஃபிஷ் டேங்க், இருக்கு. ஜஸ்ட் ஹேவ் எ லுக் அட் இட். நான் உன் மிஸ்கிட்ட கொஞ்சம் பேசணும், சரியா'' என்றான்.

''ஓ.. சரி அண்ணா. நீங்க அவங்களைத் திட்டக் கூடாது. அவங்க என்னோட ஃபேவரைட் மிஸ்'' என்றான் சிரித்த படி.

'உனக்கு மட்டும் இல்ல எனக்கும் தான்' என்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

''சீ யூ மிஸ்'' என்று சிரித்துக் கொண்டே நவீன் ரூமிலிருந்து வெளியேறினான்.



அவன் சென்ற பிறகு அங்கிருந்த மௌனம் ஏனோ ஒரு சோர்வை ஏற்படுத்தியது, ஹரிணிக்கு.

''ஹரிணி, எப்ப செய்யணும் இந்த சர்ஜரி, மஞ்சரிக்கு'' என்றான் எதுவும் நடக்காதது போல், அவளைப் பார்த்து.

''அதிலேயே எல்லாம் இருக்கு. படிங்க'' என்றாள் ஹரிணி எங்கோ பார்த்தபடி. பின்பு நான் மஞ்சரிக்காக கொஞ்சம் பணிவாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து ''எவ்வளவு சீக்கிரம் செய்யறோமோ, அவ்வளவு நல்லது'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

தருண் பதில் சொல்லாமல், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தெளிவான முகம், ஆனால் கோபத் தால் சிவந்து இருக்கிறது.

என்னைப் பார்க்கப் பிடிக்காமல், எங்கோ பார்க்கிறாள். என்ன ஒரு கண்கள், பெரிதாக பட்டாம் பூச்சி போல் படபடத்துக் கொண்டு கோபத்தை அடக்கிக் கொண் டிருப்பதால் உதடு துடித்துக் கொண்டிருக்கிறது. ஏ.ஸி.யை தாண்டி அவள் நெற்றியில் இருந்த வியர்வை முத்துக்கள் என எல்லாவற்றையும் அவன் விழிகள் ரசனையோடு பார்த்தன.

அவன் தன்னைப் பார்ப்பதை, ஹரிணியால் உணர முடிந்தது. சே... என்று ஒரு கோபம் மீண்டும் அவளை ஆட்கொண்டது.

''சாரி, ஹரிணி, நான் என்ன நடந்தது அப்படின்னு உன்கிட்ட சொல்றேன். ப்ளீஸ் கிவ் மீ'' என்று அவன் முடிப்பதற்குள் ஹரிணியின் வார்த்தைகள் கோபத்தில் பட்டெனத் தெறித்தன.

''நான் எதுவும் கேக்கத் தயாரா இல்லை. நீங்க மஞ்சரிக்கு உதவி செய்ய முடியுமா முடியாதா'' என்றாள் கோபமாக.

''சரி, நான் அவளுக்கு உதவி செய்யறேன். பட் ஒரு கண்டிஷன். இன்ஃபாக்ட் இந்த சர்ஜரிக்கு தேவையான எல்லாம் நானே பாத்துக்கறேன்'' என்று நிறுத்திவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.

என்ன கண்டிஷன் என்று கேள்வி கேட்பது போல் அவள் புருவங்கள் மேலே உயர்ந்தன.

''நீ என்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்'' என்று மெதுவாய் நிதானமாக அழுத்தமாக அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னான் தருண்.

''என்னது'' என்று சன்னமாக அதிர்ந்தாள் ஹரிணி.

''ம்.. ம். சொல்லு, ஹரிணி, நீ சொல்லப் போற முடிவைப் பொறுத்து, நான் இப்பவே, செக்கைக் கொடுத்துடறேன். இல்ல ஆஸ்பிடல் அகௌண்ட் நம்பர் தெரிந்தா, ஐ கேன் டிரான்ஸ்பர் தி பண்ட்ஸ்'' என்றான் தீர்மானமாக.

''விளையாடறீங்க தருண்'' என்றாள் ஹரிணி குரலை உயர்த்தி.

''ம்.. ம்.. ஸ்கூல் டீச்சர் அப்படிங்கறதை, ப்ரூவ் செய்யற ஹரிணி. உன்னோட விளையாடணும், அப்படின்னு தான் ஆசை. அதனால தான் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றேன்'' என்றான் சிரித்தபடி.

கோபத்தால் அவள் முகம் சிவந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, பேசத் தொடங்கினாள்.



''எனக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள துளி கூட இஷ்டம் இல்லை. அதனால் அது தவிர வேறு ஏதாவது சொல்லுங்கள்'' என்றாள் எரிச்சலாக.

''ம்... ம்.. வேற எந்த ஆப்ஷனும் இல்லை ஹரிணி. பால் இஸ் இன் யுவர் கோர்ட்'' என்றான் விடாப்பிடியாக.

''இந்த மாதிரி மிரட்டி, கழுத்தில கத்தி வச்சு கல்யாணம் செய்யச் சொல்றீங்களே, சே... ஆர் யூ நாட் அஷேம்ட் ஆஃப் யூவர்செல்ஃப்'' என்றாள் கோபம் அடங்காமல்.

''நோ, ஹரிணி. நான் ஒரு பிசினெஸ்மேன். இதெல்லாம் எனக்கு தப்பாத் தெரியலை. நீ சீக்கிரம் சொன்னா அதுக்கு ஏத்த மாதிரி சர்ஜரி ஷெட்டியூல் மஞ்சரிக்கு பிக்ஸ் செய்யலாம்'' என்றான் அக்கறையாக.

'ஆமாம் ரொம்ப அக்கறை தான்' என மனதிற்குள் நினைத்து, பொருமினாள் ஹரிணி.

''எனக்கு யோசிக்க டைம் வேணும்'' என்றாள் சட்டென.

''ம்.. ம்.. ஷ்யூர். ரொம்ப நேரம் எடுத்துக்காத ப்ளீஸ் நாளைக்கு காலை, பத்து மணிக்குள்ள நீ சொல்லு. நாட் பியாண்ட் தட்'' என்றான் கறாராக.

''உங்களை மாதிரி ஒரு மோசமான ஆளை, நான் சந்திச்சது கிடையாது. ஐ ஹேட் யூ தருண். ஐ ஹேட் யூ'' என்று கண்கள் கலங்க, கோபமாகச் சொல்லி விட்டுக் கடகடவென ரூமை விட்டு நடக்க ஆரம்பித்தாள் ஹரிணி.

''ஹரிணி இன்னிக்கு டின்னருக்கு, உன்னோட வீட்டுக்கு நான் வர்றேன். ஞாபகம் இருக்கா?'' என்றான் சிரித்துக் கொண்டு ஏதும் நடக்காதவாறு.

சட்டென திரும்பினாள் ஹரிணி. ''நான் வீட்டுக்கு கூப்பிடறது, ஒரு சாதாரண மெக்கானிக்கை, உங்களை இல்லை. எனக்கு பொய் சொல்றவங்களைப் பிடிக்காது. அதுவும், பணக்காரங்களா இருந்தா சுத்தமாப் பிடிக்காது'' என்று கோபமாகக் கத்தினாள்.

''நீ கல்யாணத்துக்கு சரின்னு சொல்லு ஹனி, எல்லாத்தையும், சொத்தெல்லாம் உன் பேரிலேயே மாத்திடறேன்'' என்றான்.

''ஷட் அப் தருண். என் பேரைச் சொல்லி, அப்படிக் கூப்பிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நீங்க செய்யறது கூட ஒரு வன்முறை தான். பிளாக் மெயில் பண்ணி இப்படிக் கல்யாணம் செய்யறது தப்பு. அப்படின்னு தெரியலை உங்களுக்கு'' என்று சீறினாள்.

''ம்.. ம்.. நான் செய்யறது தப்புன்னு எனக்குத் தோணல. ஏன்னா நான் உன்னைக் காதலிக்கறேன். அதுக்காக பொய் சொல்றதில எந்தத் தப்பும் இல்லை. உன் பேரைச் சுருக்கி கூப்பிட இப்ப வேணா உரிமை இல்லாம இருக்கலாம். பட் கல்யாணத்துக்கு அப்புறம், ஹனி அப்படின்னு தான் கூப்பிடுவேன். ஹனி... ஹனி'' என்று ஹஸ்கி வாய்ஸில் லயித்து அழைத்தான் தருண்.

''நீங்க என்னைக் காதலிக்கலாம். பட் நான்... எனக்கு அந்த மாதிரி எதுவும் இல்லை. ஐ ஹேட் யூ தருண். எனக்கு, உங்களைப் பிடிக்கலை. தருண்'' என்று கோபமாகத் தெறித்தன வார்த்தைகள்.

''ம்.. இப்ப வேணா, காதலிக்காம இருக்கலாம், பட் நீ கல்யாணம் முடிந்த பின்... என்னைக் காதலிப்பாய். ஐ ஆம் ஷ்யூர்'' என்றான் லேசான புன்னகையோடு



''நான் இவ்வளவு சொல்லியும், இப்படி வற்புறுத் திறீங்களே, ஏன் இப்படி இருக்கீங்க தருண். சே'' என்றாள் மெலிந்த குரலில்.

''நான் உன்னை வற்புறுத்தலை, ஹரிணி. கமான். நீ தான் டிசைட் செய்யணும்'' என்றான் அழுத்தமாக.

இதற்கு மேல் இவனிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை என்று முடிவு செய்து, மெதுவாக, ரூமை விட்டு நடக்க ஆரம்பித்தாள்.

ஹரிணி போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் தருண். 'காட், எல்லாம் நவீனால் வந்தது. இப்படி இவள் திடீரென வருவாள் என நினைத்தே பார்க்கவில்லை.

'பட் ஒரு நல்ல விஷயம். இந்த சர்ஜரியால. அந்தப் பணத்துக்காக; கண்டிப்பா அவ இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிப்பா.

'அவளுக்கு என்னைப் போக போகப் பிடிக்குமா? இல்லை வாழ்க்கை முழுவதும் அவள் அன்புக்காக நான் ஏங்கிக் கொண்டிருப்பேனா?

'இல்லை அவள் கதைகளில் வருவது போல் சர்ஜரி முடிந்த பின், விவாகரத்து, ஏதாவது கேட்பாளா? ம்.. ம். என் வாழ்க்கையிலும் கல்யாணம் என்று ஒன்று நடக்கப் போகிறது. ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் இட்' என்று மனதிற் குள் சிரித்துக் கொண்டான்.

ரிசப்ஷனை தாண்டி வெளியே வரும்போது ஹரிணி சோர்வாக உணர்ந்தாள். 'என்ன நடக்கிறது என்னோட வாழ்க்கையில. இது எல்லாம் கனவா இருக்கக் கூடாதா?' என மனம் ஏங்கியது.

## 13

**சூரியன்**
**நிலவுக் காதலியை**
**மேகத்திடம்**
**பத்திரமாக**
**ஒப்படைத்துவிட்டு**
**அவசர அவசரமாக**
**சிகப்புப்**
**புள்ளியாகக்**
**கரைந்த**
**ஒரு இனிய**
**பின் மாலைப்**
**பொழுது!**
**அந்த**
**சாலைகளில்**
**விளக்கேதும்**
**இல்லை! ஆனால்**
**எனக்கு மட்டும்**
**பளிச்சென ஒரு மின்னல்!**
**நீ நடந்து வந்து கொண்டிருந்தாய்!**

எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தோம் எனத் தெரிய வில்லை ஹரிணிக்கு. வீட்டுக்கு வந்தவுடன், சோர்ந்து போய் கட்டிலில் விழுந்தாள்.

கல்யாணத்தைப் பற்றி அவள் பெரிதாக கனவு கண்டதில்லை. ஆனால் தனக்கு வரப் போகிற கணவன்



பெண்களை மதிப்பவனாக, விசாலமான எண்ணங்கள் இருப்பவனாக இருக்க வேண்டும் என நினைத்திருக் கிறாள்.

அதற்கும் தருணுக்கும், ஏணி வைத்தால் கூட எட் டாது. காட் அவனுடைய அந்தஸ்திற்கு ஏற்றபடி அவன் விருப்பத்திற்கு ஈடு கொடுக்க எத்தனையோ பெண்கள் வருவார்கள், அதை விட்டு விட்டு, ஏன் என்னை இப்படி வதைக்கிறான்.

அன்றைக்கு நவீன் சொன்னது ஞாபகம் வந்தது. 'மிஸ் எங்க அண்ணன், பொண்ணை கல்யாணத்துக்கு, செலக்ட் செஞ்சிட்டார். நீங்க தான் மிஸ் அது' என்று அவன் சொன்னபோது, அதை லைட்டாக நினைத்தது எவ்வளவு தவறு என்று குமைந்தாள்.

நினைத்து நினைத்து களைத்துப் போனாள். சுவர் கடிகாரம் மணி எட்டு என்று குயில் போல் கூவி ஞாப கப்படுத்தியது. மஞ்சரி கண் முன்னால் தோன்றி மறைந் தாள்.

மேலும் யோசிக்க திராணி இன்றி, தூங்கிப் போனாள் ஹரிணி. 'அக்கா ப்ளீஸ் என்னைக் காப்பாத்துங்க, ப்ளீஸ் ரொம்ப வலிக்குது. என்னால தாங்க முடியலையே' என்று மஞ்சரியின் தீனக் குரல் கேட்க திடுக்கென முழித்தாள் ஹரிணி.

'மை காட், என்ன கனவு இது சே.. ஒரு சின்னப் பெண் வாழ்க்கை, இல்லை உயிர் என் கையில். ஏன் இப்படி ஒரு சோதனை எனக்கு?' என கண் கலங்கினாள்.

கூடாது, அழக்கூடாது, அழுதால் எந்தப் பிரயோஜனமு மில்லை. என்ன செய்வது என்று யோசித்தாள். லைட்டைப்

போட்டு மணியைப் பார்த்தாள். மூன்று தான் ஆகி யிருந்தது. இனி தூக்கம் வராது. என்ன முடிவு செய்வது என குழம்பினாள்.

தருண், சாதாரணமானவன் என்று நினைத்து அவ னுடன் பழகியபோது, அவன் மேல் ஒரு அட்ராக்ஷன் இருந்தது உண்மைதான். ஆனால் இந்தத் தருண் அவன் இல்லை.

இவன் பணத்தில் புரள்பவன். இவனைப் பார்த்தால் கோபமும், எரிச்சலும் தான் வருகிறது. இப்படித் திட்ட மிட்டு என்னை ஏமாற்றுகிறானே என அடி வயிற்றில் இருந்து புகை போல் கோபம் எங்கும் பரவியது.

மின்னல் என ஒரு எண்ணம் தோன்ற இப்படி செய்தால் என்ன என்று யோசித்தாள். தருணிடம் நான் கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன். ஆனால் நவீனுக்கு அண்ணியாக மட்டும் நான் இருப்பேன். மற்றபடி வேறு எந்த பந்தமும் இந்தக் கல்யாணத்தில் கூடாது என திட்டவட்டமாகச் சொல்லி விடலாம்.

தருண் அதற்கு சம்மதிக்க மறுத்தால் என்ன செய்வது, என உள்ளூர ஒரு பயம். ம்.. ம்.. சொல்லிப் பார்க்கலாம். அவன் மறுத்தால், திருமணம் வேண்டாம் எனத் தீர்மானமாகச் சொல்லி விடலாம்.

திருமணத்துக்கு பின் அவன் ஏதாவது அத்து மீறி செய்ய முயன்றால் இருக்கவே இருக்கு கோர்ட், போலீஸ் என நிறைய. அதுவும் பெண்களுக்கு இப்ப சட்டப்படி நிறைய சலுகைகள் இருப்பதால் கண்டிப்பாக பாதுகாப்பு கிடைக்கும் என முடிவு செய்தாள்.

மனம் கொஞ்சம் லேசானது போல் உணர்ந்தாள். உடனே அவனிடம் சொல்லிவிடலாம், போனிலேயே இப்பவே என சட்டென மொபைலை எடுத்தாள்.



ரிங் போனது. அடுத்த ரிங் போவதற்குள்

''ஹாய் ஹனி, என்ன இந்த நேரத்தில கூப்பிடற? நீயும் என்னை மாதிரி ட்ரீம் பண்ணிகிட்டு இருக்கியா. கல்யாணத்தைப் பத்தி?'' என்றான் கிண்டலாக.

சுள்ளென வந்த கோபத்தை அடக்கினாள் ஹரிணி.

''நான் கல்யாணத்துக்கு ஓகே'' என்று எப்படியோ பட்டென சொல்லி விட்டாள் ஹரிணி.

''ம்.. ம்.. ஐநோ தட். எனக்கு நேத்திக்கே தெரியும். இதுதான் உன் பதிலா இருக்கும் அப்படின்னு ஏன்னா உனக்கு...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் முந்திக் கொண்டாள் அவள்.

''எனக்கு மஞ்சரியைப் பிடிக்கும். அதனால தான் ஒத்துகிட்டேன். அதோட எனக்கு நவீன் மேல எப்பவும் பாசம் உண்டு. அதனால தான்'' என்றாள் பட்டென.

''ஓ... குட். தட்ஸ் நைஸ் ஹனி. என்னையும் உனக்கு கண்டிப்பாப் பிடிக்கும். இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்' என்றான் தருண்.

''ஒரு நிமிஷம்... நான் இன்னும் முடிக்கலை, நான் சொல்றதை முழுசா கேட்டுட்டு அப்புறம் சந்தோஷப் படுங்க'' என்றாள் குத்தலாக.

''ம்... ம்.. நீங்க சொல்ல வரதை நான் கரெக்டா கெஸ் செய்யறேன். கல்யாணத்துக்கு அப்புறம் சும்மா வெளி உலகத்துக்கு நாம கணவன் மனைவி மத்தபடி நத்திங் பிட்வீன் அஸ். பட் நவீனை நல்லபடியா நீ பாத்துப்ப அதானே சொல்ல வர்ற'' என்றான் ரொம்ப கூலாக.

ஒரு நிமிடம் ஹரிணி திகைத்தாள். இவன்... எப்படி கரெக்டாக நம்மைப் பற்றி சொல்கிறான். நான் எடுக்கப்

போற முடிவை இவ்வளவு சரியாக எதிர்பார்த்த ஒன்று போல் சொல்கிறானே என திகைத்தாள்.

அவளிடமிருந்து பதில் வராததால் ''ஹரிணி, எனக்கு உன்னைப் பற்றி உன்னை விட நல்லாத் தெரியும். ட்ரஸ்ட் மீ. உனக்குப் பிடிக்காத மாதிரி எதுவும் கல்யாணத்துக்கு அப்புறம் நடக்காது'' என்றான் தெளிவாக.

''தேங்க்ஸ் தருண். தேங்க்ஸ்'' என்றாள் மனமுவந்து ஹரிணி.

''ம்.. ம்.. போய் தூங்கு. ஹரிணி. நைட் ரொம்ப டிஸ்டர்ப்பா தூங்கியிருப்ப. ட்ரை டு கெட் எ குட் ஸ்லீப் நௌ. குட் நைட்'' என்று சொல்லிவிட்டு கட் செய்தான் தருண்.

பரவாயில்லை. ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது. இனி நாளைக்கு அப்பாவிடம் எப்படி இதைச் சொல்வது என யோசித்தாள் ஹரிணி.

அப்பாவிற்கு, மருத்துவச் செலவுக்குப் பணம் தேவைப் படும். அதனால் கல்யாணத்திற்கு அப்புறம் கண்டிப்பாக வேலைக்குச் செல்ல வேண்டும் என முடிவு செய்தாள்.

ஆனால் மனம் அடுத்து நம் வாழ்க்கை எப்படி இருக்கும் என யோசிப்பதை நிறுத்த மறுத்தது. தருண் எப்படிப்பட்டவன்? ஏன் முதலில் சந்தித்தபோது பெண் களை அப்படிக் கேவலமாகத் திட்டினான்?

ஏதாவது லவ் பெயிலியராக இருக்குமா, என யோசித் தாள். எதுவாக இருந்தால் என்ன அவன் நான் சொன்ன துக்கு, சம்மதித்து விட்டான். அது போதும். மேலும் மேலும் யோசித்தால் இதற்கு மேல் அவ்வளவு தான் என முன்நேரத்தில் தூங்கிப் போனாள் ஹரிணி.



## 14

**நீ என்னைப்**
**பார்க்கும்**
**பார்வையில்**
**ஏக்கம்**
**தவிப்பு**
**அன்பு**
**என எல்லாமே**
**ஒரு**
**கலவையாக**
**எனக்குத்**
**தெரிகிறது!**
**கண்களின்**
**உன்**
**கண்களின்**
**பாஷைகள்**
**எனக்கு மட்டும்**
**புரிகிறது!**
**தடைகளைத் தாண்டி**
**எப்போது என்னைக்**
**கரை சேர்க்கப் போகிறாய்?**
**என கெஞ்சும் உன் விழிகள்!**

காலையில் முழித்த ஹரிணிக்கு நேற்று நடந்தது எல்லாம் கனவு போல் தோன்றியது. பரத்திடம் இதைச் சொன்னால் என்ன சொல்வான்?

'நீ ஒரு ஃபூல் ஹரிணி. உன் வாழ்க்கையை நீ பணயம் வைக்கற. உன் கதையில வர்ற ஹீரோயின் அப்படின்னு நினைப்பு உனக்கு' என திட்டுவான் என நினைத்தபடி பெருமூச்சு விட்டாள்.

ஸ்கூல் ஸ்டாப் ரூம் போனவுடன் வாணி தென்படுகிறாளா எனப் பார்த்தாள் ஹரிணி. அவள் இடம் காலியாக இருந்தது.

அவளிடம் நடந்ததை எல்லாம் சொல்ல வேண்டும் என ஏனோ ஒரு ஆவல் அவளை உந்தியது. பேப்பர் திருத்திக் கொண்டிருந்த ஹரிணி ''ஹாய் ஹனி எப்படி இருக்க?'' என்று தருண் குரல் அருகே கேட்க திடுக்கென தலைதூக்கிப் பார்த்தாள்.

அவள் முன் இருந்த டேபிளில் இரண்டு கைகளையும் ஊன்றி, குனிந்து, சிரித்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் தருண்.

ஸ்டாப் ரூமில் இருந்த குமார் சார், இதைப் பார்த்து, இவன் இப்படி, நின்று தன்னிடம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து என்ன நினைப்பார் என பதறினாள்.

''தருண். இது ஸ்கூல் ஸ்டாப் ரூம். கிளம்புங்க'' என்றாள் அடிக்குரலில்.

''ஸோ வாட். என்னோட வா பிரின்சி ரூம் வரைக்கும்'' என்றான் ரொம்ப கூலாக.

''எ.. எதுக்கு இப்ப. நான் வரலை'' என்றாள் மெதுவாக.

''ம்.. ம்.. நம்ம கல்யாணத்தைப் பத்தி சொல்ல. வா... கமான்'' என அவள் கையை லேசாகப் பிடித்தான்.

''கையை விடுங்க. எனக்கு வழி தெரியும்'' என அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சீறினாள்.



''ஓ.கே. வா... சீக்கிரம்'' என அவளுடன் நடந்தபடி ஸ்டாப் ரூமை விட்டு வெளியேறினான்.

''நீங்க இந்த மாதிரி ஸ்கூலுக்கு வரது என்கிட்ட பேசறது எல்லாம் பிடிக்கலை. ஐ டோண்ட் லைக் ஆல் திஸ். தருண்'' என்று ஸ்டாப் ரூமை விட்டு வெளியே வந்தவுடன் படபடத்தாள்.

''கமான் ஹனி. ஏன் இப்படி எல்லா விஷயத்துக்கும் டென்ஷன் ஆகற. நவீனை டிராப் பண்ண வந்தேன். உன்னைப் பாக்கணும் போல இருந்தது.

''தட்ஸ் வொய் ஐ கேம். ஸ்டாப் ரூமில் இருந்த அந்த மாஸ்டர் வேற என்னை ஏதோ வில்லனைப் பார்க்கற மாதிரிப் பாத்தார். எல்லாம் நீ ஸீன் போட்டதால வந்த வினை'' என்றான் பாவம் போல முகத்தை வைத்தவாறு.

''சரி. பாத்துட்டீங்க இல்ல. இப்ப கிளம்புங்க. எனக்கு தெர்ட் பீரியட் கிளாஸ் இருக்கு'' என்றாள் சற்றே இரங்கிய தொனியில்.

''ம்.. ம்.. நீ எடுக்கற கிளாசில நானும் ஒரு மூலையிலே உக்காந்துக்கறேனே.. ப்ளீஸ்'' என்றான்.

''தருண். நான் முதியோர் கல்வி எல்லாம் எடுக்கலை. சின்ன பசங்களுக்குப் பாடம் எடுக்கறேன். அண்டர்ஸ்டாண்ட்'' என்றாள் பொறுமை இழந்து.

''ம்.. ம்.. என்னைப் பாத்தா, அவ்வளவு வயசானவன் மாதிரியா தெரியுது. எங்க என்னைப் பாத்து சொல்லு'' என்றான் சவால் விடுவது போல.

''தருண். ஐ ஆம் நாட் ஃபார் யுவர் கேம்ஸ். பீ சீரியஸ். இப்ப எதுக்கு பிரின்சியைப் பாக்கணும்?'' என்றாள் கண்டிப்பாக.

''நம்ம கல்யாணம் பத்தி பேசறதுக்குத் தான். அடுத்த வாரம், கல்யாணம். வெள்ளிக்கிழமை நாள் ரொம்ப நல்லா இருக்கு அப்படின்னு ஒரு ஜோசியர் சொன்னார்.

''ஐ டோண்ட் பிலீவ் இன் ஆல். எல்லா நாளும் நல்ல நாள் தான். பட் உன்னோட வீட்டில, பார்ப்பாங்க. அதனால தான்'' என்றான் மெதுவாக.

''தருண். அ.. அடுத்த வாரமேவா'' என சொல்லும் போதே நாக்கு தடுமாறியது.

''ம்.. ம்.. இன்னும் ஏழு நாள் இருக்கே அப்படின்னு நான் கேலண்டரை சபிச்சுகிட்டு இருக்கேன். நீ என்னடான்னா இப்படிச் சொல்ற'' என்றான் கிண்டலாக.

''நான்... நான் அப்பாகிட்ட இன்னும் பேசலை. இதப் பத்தி'' என்றாள் மெதுவாக. சொல்லும் போதே குரல் கம்மியது. அப்பா அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை யாகக் கிடைக்க வேண்டும் என ரொம்ப ஆசைப்பட்டார் எனத் தெரியும். ஆனால் இது ஒரு பொம்மைக் கல்யாணம்.

தெரிந்தால் துடி துடித்துப் போவார் என நினைத்த போது கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

''ஷ் ஹரிணி. கண்ட்ரோல் யூவர் செல்ஃப். நீ இப்படி அழுதுகிட்டே போனா பிரின்சி நான் உன்னை பய முறுத்தி மிரட்டி, கல்யாணம் செய்ய சம்மதிக்க வெச் சேன், அப்படின்னு நினைச்சுப்பாங்க'' என்றான் சிரிக் காமல்,

''ம்.. ம். அது உண்மைதானே'' என்று சொல்லிக் கொண்டே கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''உன்னோட அப்பாகிட்ட நான் இன்னிக்கு காலை யில போனில எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன்.



அவர் உடனே கிளம்பி சென்னை வரார்'' என்று அவன் சொன்னவுடன் நம்பாமல் திகைத்தாள் ஹரிணி.

''நீங்க... நீங்க.. என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க மனசுல. அப்பா இஸ் எ ஹார்ட் பேஷண்ட். யூ நோ. என்ன சொன்னீங்க அவர்கிட்ட'' என்று சீறினாள்.

''ஹனி. ஐ டோண்ட் நோ, உனக்கு எப்படி ஸ்கூல் மிஸ் வேலை கிடைச்சது, அப்படின்னு. மேல் மாடி ரொம்ப காலி. உங்க அப்பாகிட்ட நம்ம காதலிச்சு கல்யாணம் செஞ்சுக்கறதா சொன்னேன். மத்தபடி வேற எதுவும் இல்லை'' என்றான்.

அதற்குள் பிரின்சி ரூம் வந்துவிடவே அவனுக்குப் பதிலடி கொடுக்காமல் மௌனமாக ரூம் உள்ளே சென் றாள் அவனுடன் ஹரிணி.

பிரின்சி சசிரேகா தருணை அன்று எதிர்பார்க்காததால்,

''ஹாய் தருண். ஹவ் ஆர் யூ? என்ன சர்ப்ரைஸ் விசிட் பிக் ஷாட் நீ. என்ன மேட்டர், நவீனுக்கு ஹோம் டியூஷன் ஏதாவது வேணுமா? ஹரிணி கேன் ஹெல்ப் யூ'' என்றாள் சிரித்தவாறு.

''ம்.. இனிமே ஹோம் மினிஸ்டரியே இவ தான் மேடம். ஐ லவ் ஹர். பிரபோஸ் செய்தேன். முதலில் ஆட்டம் காட்டினா, மாட்டேன் அப்படின்னு, உங்க கிட்ட சொல்லிடுவேன், அப்படின்னு, மிரட்டினவுடன் கல் யாணத்துக்கு ஒத்துகிட்டா'' என்றான் சிரித்தபடி.

''நோ.. நோ மேம்'' என மேலே பேச முடியாமல் தடு மாறினாள் ஹரிணி.

''ஓ... மேட்டர். இப்படிப் போகுதா? ஐ ஆம் ஹேப்பி தருண். உங்க அப்பாவுக்கு நவீனைக் காட்டிலும் உன்

மேல தான் கவலை அதிகம். ஐ ஆம் ஹாப்பி டு ஸீ.யூ. லைக் திஸ். ஹரிணி ரொம்ப நல்ல டெடிகேட்டட் ஸ்டாஃப்.

''தமிழ் இலக்கியத்துல ரொம்ப ஆர்வம். நிறைய கதை, எழுதியிருக்கா. உனக்குத் தெரியாதது இல்ல'' என்றார் சிரித்தபடி.

''ம்.. கரெக்ட் மேடம். அவளோட கதைகளைப் படிச்ச பிறகுதான் எனக்கு அவ மேலே காதலும், மரியாதையும், ரொம்ப ஆழமாச்சு.

''இட்ஸ் வெரி ரேர் டு ஹேவ் பியூட்டி அண்ட் பிரெயின்ஸ் ஐ அடோர் ஹர். நாட் ஆல் ஆர் பிளெஸ்ட் வித் திஸ்'' என்றான் தருண் உருக்கமாக.

அவன் தன் கதைகளை எப்போது படித்தான். இல்லை இதுவும் சும்மா ரீலா என யோசித்தபடி இருந்தாள் ஹரிணி.

''ஆமாம் தருண். கல்யாணம் எப்ப வெச்சிருக்கீங்க?'' என்றாள் சசிரேகா.

''நெக்ஸ்ட் வீக் மேடம். வெள்ளிக்கிழமை, தான். ரொம்ப நெருக்கமானவங்களுக்கு தான் இன்வைட். என்னோட மாமனாருக்கு வடபழனியில் கல்யாணம் செய்யணும் அப்படின்னு ஆசை. அது முடிஞ்ச பிறகு நைட் ஹோட்டல் சவேராவில ரிசப்ஷன் அண்ட் டின்னர்.

''நீங்க கண்டிப்பா வரணும். வந்து எங்களை ஆசீர்வாதம் செய்யணும்'' என்றான் தருண்.

எனக்கு தெரியாமல் அப்பாவிடம் பேசி இன்னும் என்னென்ன முடிவு செஞ்சிருக்கானோ என திகைத்தாள் ஹரிணி.



''என்ன ஹரிணி. ரொம்ப நெர்வஸா இருக்கே. ப்ரீ. மேரேஜ் டென்ஷன் இஸ் நேச்சுரல். ரிலாக்ஸ். நல்லா லீவ் போட்டுட்டு ரெஸ்ட் எடு'' என்றார் அக்கறையாக.

''ம்.. ம்.. சரி மேடம்'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''கங்கிராட்ஸ், தருண் அண்ட் ஹரிணி. மேட் ஃபார் ஈச் அதர் போல இருக்கீங்க'' என்று சிரித்துக் கொண்டே வாழ்த்தினாள் சசிரேகா.

''தேங்க்ஸ் எ லாட் மேடம்'' என்று தருண் சொல்லிக் கொண்டே ஹரிணியின் முகத்தைப் பார்த்தான்.

அவள் முகம் சட்டென சிவந்ததைப் பார்த்து ரசித்தான்.

''ம்.. ம்.. நாங்க கிளம்பறோம் மேடம். இன்னிலேந்து இவளுக்கு ஒரு மன்த்துக்கு லீவ் கொடுங்க மேடம்'' என்றான் தருண்.

''தருண். ஒன் மன்த் எல்லாம் அதிகம்'' என்று ஹரிணி சொல்லி முடிப்பதற்குள் சசிரேகா ''கமான் தருண். ஐ நோ. நோ ப்ராப்ளம் என்ஜாய்'' என்ற சொல்லியபடி சிரித் தாள்.

அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியாமல், கோபத்தை முழுங்கிக் கொண்டு, அமைதியாக இருந்தாள் ஹரிணி.

''தேங்க்ஸ் மேம்'' என்று சொல்லிவிட்டு ஹரிணி, பிரின்சி ரூமை விட்டு தருணுடன் நடந்தாள்.

''இந்த மாதிரி என்னைக் கேக்காம செய்யறதெல்லாம் ஜஸ்ட் ஸ்டாப் இட். ஒன் மன்த் லீவ் அதிகம். அப்புறம் நம்ம ரொம்ப காதலிச்சு விரும்பி கல்யாணம் செய்யப் போறதா, எல்லார்கிட்டேயும் சொல்றது'' என்று சீறினாள்.

அவன் பதில் ஏதும் சொல்லாமல் அவள் கை மணிக் கட்டை, பிடித்துக் கொண்டு நடந்தான்.

"விடுங்க தருண். என்ன இது. எங்க இப்ப போறோம்?" என்றாள் கீச்சுக் குரலில்.

அதற்குள் ஸ்கூல் காம்பௌண்ட் வெளியே, இருப் பதை உணர்ந்தாள் ஹரிணி.

காரைத் திறந்து, "கமான் ஹரிணி. உட்கார்" என்றான் டிரைவர் சீட் அருகில் அவளை.

சரியான கல்லுளி மங்கன் வாயைத் திறக்க மாட்டேங் கறான் என அவனை மனதிற்குள் திட்டியபடி, காரின் உள்ளே உட்கார்ந்தாள்.

இவனிடம் பேசுவதற்கு பதில் குட்டி சுவற்றில் முட் டிக் கொள்ளலாம் என நினைத்துக் கொண்டு மௌனமாக இருந்தாள் ஹரிணி.

கார் டேஷ் போர்டில் இருந்து ஒரு செக்கை அவளிடம் நீட்டினான். "இந்தா ஹரிணி, இது பிளாங்க் செக். மஞ் சரிக்கு தேவையானதை, சர்ஜரிக்கு தேவையான அமௌண்ட்டை பில் செஞ்சுடு" என்று பேனாவை அவளிடம் நீட்டினான்.

அவள் தயங்கினாள். "கமான் டேக் இட், அமௌண்ட் கூடவே ஃபில் செய். பத்தலைன்னா அப்புறம் செட்டில் செய்யும்போது கொடுக்கலாம்" என்றான் சிரித்தவாறு.

"தேங்க்ஸ் தருண்" என்று சொல்லியபடி செக்கை வாங்கினாள். ஏழு லட்சத்துக்கு எழுதி எல்லாம் செக்கில் கரெக்டாக இருக்கிறதா எனப் பார்க்கும் போது ஏனோ கண்களில் நீர் முட்டியது.



'உன் விலை ஏழு லட்சம் ஹரிணி' என மனசாட்சி கிண்டல் செய்தது. அடக்க முடியாமல் அணை போல் தேங்கி இருந்த கண்ணீர், கண்களில் இருந்து, கோடாக வழிந்து, கன்னங்களில் வழிந்தது.

அதற்கு மேல் அடக்க முடியாமல், ஒரு விம்மல் வெடித்தது. அவளைப் பார்த்துக் கொண்டிருந்த தருண் ஒரு ஆழ்ந்த, நீண்ட மூச்சு வாங்கினான்.

ஏதும் சொல்லாமல் காரை, கியரை நியூட்ரலில் வைத்து விட்டுக் கீழே இறங்கினான். கார் மீது, சாய்ந்தபடி ஒரு சிகரெட்டில் மூழ்கினான்.

'காட். அவள் அழுவதை என்னால் பார்க்க முடிய வில்லை. தினமும் இப்படி அழுது கொண்டிருந்தால் என் மனசாட்சியே என்னைக் கொன்று விடும்.

'ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறாள்? வேறு யாராவது ஒரு பெண்ணாக இருந்தால் இதை இந்த சந்தர்ப்பத்தை எப்படி சந்தோஷமாக அனுபவித்திருப்பாள்.

'வாழ்க்கை முழுவதும், திகட்டத் திகட்ட பணம், நகை, டிரெஸ், ஹை லைஃப் ஸ்டைல் என எல்லாமே அனு பவிக்கலாம்.

'ஆனால் ஹரிணி இஸ் நாட் லைக் தட். இவள் மற்ற பெண்களிடமிருந்து வித்தியாசமானவள். என்னிடம் எந்தப் பெண்ணும் தைரியமாக, இவ்வளவு தைரியமாக சண்டை போட்டதில்லை.

'கூடக் கூடப் பேசியதில்லை. ஆனால் இவள் இப்படி. நான் ஒரு சாதாரண வொர்க்கர் எனத் தெரிந்தபோது என்னிடம் நன்றாகப் பேசினாள். ம்.. ம்.. ஹி இஸ் எ டஃப் கேர்ல்' என பெருமூச்செறிந்தான்.

கார் கதவைத் திறந்து டிரைவர் சீட்டில் அமர்ந்தான் தருண். அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் ஒரு நொடி சந்தித்தன.

அழுது அழுது சோர்ந்திருந்த அவள் கண்களைப் பார்க்க, பரிதாபமாக இருந்தது அவனுக்கு.

''ஹரிணி, நான் பிராமிஸ் பண்ண மாதிரி, உனக்கு விருப்பமில்லாத எதுவும் உனக்கு நடக்காது. ஸோ அதையே நினைச்சு, சும்மா அழுது உடம்பைக் கெடுத்துக் காத'' என்றான் பரிவாக.

''தேங்க்ஸ்'' என்று முணுமுணுத்தாள் ஹரிணி.

''ஹரிணி... உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா, கல்யாணத்துக்கு தேவையானதை, உனக்கு தேவையான நகை... அப்புறம் சாரீஸ் எல்லாம் வாங்கலாமா இப்ப'' என்றான் மெதுவாக.

''எ... எனக்கு எதுவும் வேணாம் தருண். எனக்கு எப்பவும் அதில எல்லாம் ரொம்ப ஈடுபாடு இருந்தது கிடையாது'' என்றாள் மெதுவாக.

''ஓ... என்ன ஒரு அதிசயம் ஹரிணி. நகை, டிரெஸ் மேல அட்ராக்ஷன் இல்லாத ஒரு பெண்ணை இதான் நான் முதல் தடவை லைஃபில பாக்கறது'' என்றான் ஆச்சரியமான குரலில்.

''ம்.. ம்.. உங்களுக்கு நிறைய பெண்களைத் தெரியும் போல இருக்கு. உங்க ஸ்டேடஸ், ரசனை, அதுக்கு ஏத்த மாதிரி ஒரு பெண்ணைப் பாத்துக் கல்யாணம் செய்ய வேண்டியதுதானே'' என்றாள் வெறுமையான குரலில்.

''ஹரிணி. நீ வேணா என் ஸ்டேட்டஸுக்கு மேட்ச் ஆகாமல் இருக்கலாம். பட் உன்னோட எழுத்து, உன் கண்களில் பணக்காரர்களைப் பார்த்தா தெரியற கோபம், வெறுப்பு இதெல்லாம் எனக்குப் பிடிச்சிருக்கு ஹரிணி.



''உனக்குத் தெரியாது ஹரிணி. நீ முதல் தடவை என் மேல வந்து மோதினப்ப, அப்ப உன் மேல கோபம் இருந்தது உண்மை.

''பட் நீ வந்து என்கிட்ட, பேசின பார், தைரியமா திரும்பி வந்து மூச்சு வாங்கிகிட்டே பேசின பாரு. ஐ லைக் இட்'' என்று நிறுத்தினான், ஒரு நிமிடம்.

''போதும் தருண். பொய் சொல்லாதீங்க. நீங்க சொல்ற எதையும் நான் நம்பத் தயாரா இல்லை'' என்றாள் மெதுவாக.

''நம்பறதும், நம்பாததும் உன் இஷ்டம் ஹரிணி. பட் நான் சொல்ல வேண்டியதை, சொல்லிடறேன். நான் உன்னை இரண்டாவது தடவை பாத்தது, மவுண்ட் ரோடு அருகில்.

''நீ மிரண்டு போயிருந்த ஒரு குழந்தையை, ஸ்கூல் போற ஒரு பெண்ணை, சின்னப் பெண்ணை, அணைத்து சமாதானப்படுத்திக் கொண்டிருந்தது.

''ட்ரஸ்ட் மி ஹரிணி. காரில் இருந்து உன்னைப் பார்த்த அந்த நொடி, என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத ஒன்று.

''நான்... நான் அந்தக் குழந்தையாக... உன் அணைப்பில் இருக்கக் கூடாதா என ஏங்கியது நிஜம். என் கண் முன்னே அடிக்கடி தோன்றும் காட்சி அது'' என்று ஏக்கமான குரலில் மெதுவாக சொன்னான் தருண்.

ஹரிணியின் மார்பு படபடத்தது. அவன் சொல்வதெல்லாம் உண்மை எனப் புரிந்தது. அவன் சொன்ன வார்த்தைகளில் அவள் மனம் கரைந்தது.

அவனே தொடர்ந்தான் ''நான் அறுபது வயது அடைந்தால் கூட எனக்கு புத்துணர்வைக் கொடுக்கும் ஒரு இனிமையான அனுபவம் அது ஹரிணி. அதற்கு அப்புறம் தான் நீ என் மனதில் ஆழமாகப் பதிந்தாய்.

''பின் ஹோட்டலில் நடந்த அந்த எதிர்பாராத சந்திப்பு. உனக்கு உதவுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. உன்னை வேண்டுமென்றே சீண்ட வேண்டும் என்று தான், நான் அப்படி ப்ரேக் ஃபாஸ்ட், டின்னர் என்று ஒரு ஆள் தேடுபவள் என உளறினேன்'' என்று சொல்லி விட்டு அவள் முகத்தை காரைச் செலுத்தியபடியே பார்த்தான்.

அவள் முகம், ரொம்ப அமைதியாக, நிர்மலமாக இருப்பதை உணர்ந்தான்.

''உன்னோட வாட்ச்சை, என் முன்னாடி, நீ தூக்கி விட்டெறிஞ்சப்ப உன்னோட கோபத்தை, தன்மானத்தை ரசித்தேன்.

''நவீன் படிக்கிற ஸ்கூலிலே தான் நீ டீச்சரா வேலை பாக்கற, அப்படின்னு உன் விசிட்டிங் கார்டைப் பாத்து தெரிஞ்சுகிட்டேன். உன்னை அடிக்கடி சந்திக்கலாம் அப்படின்னு நினைச்சு சந்தோஷப்பட்டேன்.

''ஹரிணி, ஹோப் யூ ஆர் நாட் ஸ்லீப்பிங்'' என்றான் சிரித்தபடி அவளைப் பார்த்து.

''இல்லை தருண். நான் கேட்டுகிட்டு தான் இருக்கேன். நான் ஒண்ணும் அவ்வளவு தூங்கு மூஞ்சி இல்ல'' என்றாள் ஹரிணி சற்றே கோபமாக.

''ஓ.. சாரி, நீ ஸ்கூல் மிஸ் இல்ல. யூ வோண்ட் ஸ்லீப். நீ பாடம் எடுக்கும்போது பசங்க தானே தூங்குவாங்க...'' என்றான் கேலியாக.



''ம்.. ம். நான் கிளாஸ் எடுக்கும்போது யாரும் தூங்க மாட்டாங்க. என் கிளாஸ் நல்லா இண்ட்ரஸ்டிங்கா இருக்கும். அதனாலதான்... அதனால தான் நான் லாஸ்ட் இயர் பெஸ்ட் அவுட் ஸ்டாண்டிங் டீச்சர் அவார்ட் வாங்கினேன்'' என்று பொரிந்தாள்.

''ஏய் ஹரிணி... நான் சும்மா, விளையாட்டுக்குத் தான் சொன்னேன். கோபப்படும்போது, உன் முகம் ரொம்ப ரசிக்கும்படி இருக்கு.

''சின்னக் குழந்தைங்க, சாக்லேட் தராட்டி, எப்படி மூஞ்சியை உம்முன்னு தூக்கி வெச்சுப்பாங்களோ, அப்படி இருக்கு உன் முகம்'' என்றான் சிரித்தபடி.

அவன் தன்னிடம் வேண்டுமென்றே சீண்டி விளையாடுகிறான் என தெரிந்தவுடன் ஹரிணியின் முகம் சிவந்தது.

''ம்.. ம். இன்னிக்கு முழுசா எல்லாத்தையும் உன் கிட்ட சொன்னாத்தான் எனக்கு நிம்மதி'' என்று தொடர்ந்தான்.

''நவீன் வீக்எண்ட்ல ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கறதை கவனிச்சேன். மெதுவா பேசினப்ப, அவன் ரொம்ப நாளா, அப்பா இறந்ததிலிருந்து, எல்லாத்தையும் மனசில வெச்சு புழுங்கிக்கிட்டு இருந்தது புரிஞ்சுது.

அம்மா, இல்லாத ஏக்கம் எப்படி இருக்கும் அப்படின்னு எனக்கு நல்லாத் தெரியும் ஹரிணி. அந்த வலியை நான் நிறைய அனுபவித்து இருக்கிறேன்'' என்று ஒரு பெரு மூச்சு வாங்கினான்.

அவன் முகம் கடினமானது போல் தோன்றியது ஹரிணிக்கு. அவன் முகத்தில் இருந்த சிரிப்பு காணாமல் போனதை உணர்ந்தாள்.

''தருண், ப்ளீஸ் காரைப் பாத்து ஓட்டுங்க. நீங்க ரொம்ப ஃபாஸ்ட்டா, திடீர்னு டிரைவ் பண்றீங்க'' என்றாள் பதட்டமாக.

''சாரி. ஹரிணி. நவீன் ஒரு அண்ணி வேணும் அப் படின்னு கேட்டப்ப, எனக்கு என்ன சொல்றது அப் படின்னு தெரியலை.

''ஹரிணி ப்ளீஸ் நான் உன்கிட்ட எதுவும் மறைக்க விரும்பல. ஐ ஆம் நாட். நாட் எ க்ளீன் பேச்சிலர். சாரி, உன்னைப் புண்படுத்தணும் அப்படின்னு சொல்லல. பட் உன்கிட்ட நான் எதையும் மறைக்க விரும்பலை.

''நவீன் உன்னைப் பத்தி சொன்னான். நீ சிரிப்பதை, குட் பாய் என முதுகைத் தட்டி என்கரேஜ் செய்வதை, உன் கன்னத்தில் நீ சிரித்தால் விழும் குழி என எல்லாவற் றையும் சொன்னான்'' என்று அவன் சொல்லும் போது ஹரிணி வேறு புறம் திரும்பிக் கொண்டாள்.

வெளியே இருக்கும் காட்சிகளில் மனம் பதியவில்லை. தருண் நான் பேச்சிலர் இல்லை என்று சொன்னதே காதில் விழுந்து கொண்டிருந்தது.

ஏனோ அவன் மேல் ஒரு கோபம் திடீரென ரொம்ப வலுவாக அவளை ஆக்ரமித்தது. இதனால் தான் மற்ற பெண்ணை மணக்காமல் தன்னை, மணக்க விரும்பி னானா என நினைத்தபோது மனம் ஆயாசமடைந்தது.

அதற்கு பின் தருண் பேசிய எதுவும் அவள் காது களில் விழவில்லை. அவள் மனம் வெறுமையாக இருந்தது.



## 15

**இரவு...**
**ஒரு**
**துடிப்பான**
**விடியலுக்கு**
**முன்**
**தோன்றும்**
**அமைதியான**
**நேரம்!**
**எங்கும்**
**மௌனம்!**
**நிலவும்**
**வானத்தின்**
**மடியில்**
**அழகாகத்**
**தூங்குகிறது!**
**மலர்கள்**
**சோம்பி**
**கிளைகளில்**
**துவண்டு தூங்குகின்றன!**
**நான் மட்டும் தூங்கவில்லை**
**நினைவுகளும் தூங்கவில்லை!**

ஹரிணி வீட்டிற்கு, தருண் காரில் இருந்து இறங்கி வரும்போது மணி நான்கு. அந்த வெயில் இதமாக இருந்தது மார்கழிக் குளிருக்கு.

பர்சில் இருந்த சாவியை எடுத்து பூட்டைத் திறந்தாள் ஹரிணி.

அவளுக்கு தன் மேல் கோபம் என்று புரிந்தது தருணுக்கு. இவ்வளவு... நல்ல பெண், அன்பான பெண் ஆனால் என் வாழ்க்கையில் ரொம்ப லேட்டாக சந்திக்கிறேன்.

இது தான் விதி போல என எண்ணி வருந்தினான். ''ஹரிணி.. ப்ளீஸ். நான் உன்னிடம் எதையும் மறைக்கக் கூடாது, அப்படின்னு தான் சொன்னேன். ஐ ஆம் சாரி'' என்று சொல்லிவிட்டு கடகடவென காரில் ஏறி அதை ஸ்டார்ட் செய்தான்.

வீட்டிற்குள் வந்த ஹரிணி, ஏதும் செய்யத் தோன் றாமல் ஜன்னல் வழியே ஆகாசத்தைப் பார்த்தாள். வானம் ரொம்பத் தெளிவாக இருந்தது.

'இதே வானம் இன்னும் கொஞ்ச நேரத்தில் களை கட்டி விடும். அழகழகாக நட்சத்திரங்கள் கண் சிமிட்டும் எனக்கு மட்டும் தான் வானம் சொந்தம், நான் தான் அழகு என் முன்னால் நீங்கள் எல்லாம் நத்திங் என்பது போல வட்டமாக நிலா பவனி வரும்.

'தருண் ஏன் தருண் இப்படி என் வாழ்க்கையை புரட்டிப் போட்டு விட்டீங்க? தெளிந்த நீரோடை ரொம்ப சுவாரசியமில்லை, ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் ரொம்ப அழகு.

'மீண்டும் மீண்டும் கரையைத் தொட வேண்டும் என ஆவலோடு ஓடி வரும் அலைகள் அழகு. என் வாழ்க் கையும் அப்படி மாறி விட்டதே.

'நீரோடையிலிருந்து, ஆர்ப்பரிக்கும் கடலாக' என நினைத்தபடி ஆழ்ந்த பெருமூச்சு வாங்கினாள்.



காலிங்பெல் சத்தம் கேட்கவே யாராக இருக்கும் என நினைத்தவாறு வாசல் கதவு அருகே சென்றாள்.

கதவைத் திறந்தவள் அப்பாவையும், ஜேம்ஸ் அங் கிளையும் பார்த்து சந்தோஷப்பட்டாள்.

''வாங்க, அப்பா, வாங்க அங்கிள்'' என ஆசையாக வரவேற்றாள்.

''ம்.. ம். ஹரிணி. நல்லா இருக்கியாடா? மாப்பிள்ளை போன் பண்ணி என்கிட்ட எல்லா விவரமும் சொன்னார். எனக்கு... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குடா.

''நீ சொல்லலை பாரு என்கிட்ட மாப்பிள்ளை கரெக்டா சொல்லிட்டார். ஏன்டா அப்பாகிட்ட சொல்லலை. பயமா என்ன உனக்கு?'' என்று பாசமாக தோளை தட்டிக் கொடுத்தார்.

''அப்பா இல்லை... எனக்கு.. எனக்கு'' என வார்த்தை கள் வராமல் தடுமாறினாள் ஹரிணி.

''அட நீங்க வேற.. என்ன இருந்தாலும் பெண் குழந்தை களுக்கு வெக்கமா இருக்காதா அப்பாகிட்ட இதைப் பத்தி பேச'' என்று ஜேம்ஸ் துணைக்கு வர நிம்மதியாக இருந்தது ஹரிணிக்கு.

அவள் தலை குனிந்து நின்ற தோற்றம் அதை உறுதிப் படுத்துவது போல் தோன்றியது நாராயணனுக்கு. ஏதும் சொல்லாமல் சிரித்தபடி இருந்தார்.

''அப்பா, காப்பியா, டீயா என்ன சாப்பிடறீங்க?'' என் றாள் ஹரிணி பேச்சை மாற்றும் விதமாக.

''ஹரிணி. நீ கல்யாணப் பெண். ஜம்முன்னு அப்படி சேரில் உட்கார். நான் நல்லா டீ போடுவேன்'' என்று சொல்லியபடி ஜேம்ஸ் கிச்சன் உள்ளே சென்றார்.

''என்ன ஹரிணி. முகம் எல்லாம் வாடி இருக்கு. உடம்பு சரியில்லையாடா?'' என்றார் நாராயணன் அக் கறையாக.

''இ... இல்லைப்பா. நான் இன்னிக்கு ஸ்கூல் கூடப் போகலை. த... தருண் வந்திருந்தார், வெளியே போய்ட்டு இப்ப தான் வந்தோம்'' என்றாள் மெதுவாக.

''ஓ... சரி... சரி.. வெளியில அலைஞ்சது தான் டயர்டா இருக்கு. போய் முகம் அலம்பிட்டு ரெஸ்ட் எடும்மா'' என்றார் பாசமாக.

அதற்குள் டீ வந்துவிட மூவரும் டீயைக் குடிக்க ஆரம் பித்தனர்.

''ஹரிணி. மாப்பிள்ளைக்கு சொந்தம் அவர் தம்பி மட்டும் தானாம். தம்பி இல்லை என்னோட பையன் மாதிரி அவன் அப்படின்னு சொன்னார்.

''அதனால கல்யாணத்துக்கு சொந்தக்காரங்க யாரும் வரமாட்டாங்களாம். ஆனா நிறைய பிரண்ட்ஸ் வருவாங்க போல.

''அதோட அவர்கிட்ட வேலை பாக்கற அவர் ஸ்டாப் எல்லாரும் வருவாங்களாம். நான் சொல்லிட்டேன், நான் சர்வீஸில இல்லை.

''நானும், ஹரிணி அம்மாவும் காதலிச்சு கல்யாணம் செய்ததால், இரண்டு பக்க சொந்தமும் விட்டுப் போச்சு. அதனால, நீங்க பெரிசா எதிர்பார்க்காதீங்க கூட்டம் எல்லாம். அப்படின்னுட்டேன் மாப்பிள்ளை கிட்ட'' என்றார் உற்சாகமாக.

வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள்ளை, மாப்பிள்ளை என அப்பா தருணை அழைப்பதை ஆச்சரியமாகப் பார்த்தாள்.



''அப்பா நைட், டின்னர் என்னப்பா செய்யட்டும். சப்பாத்தி போடவா?'' என்றாள் ஹரிணி.

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம் ஹரிணி. மாப்பிள்ளை ஏழு மணி கிட்ட வீட்டுக்கு வராராம். நம்ம எல்லாம் வெளிய போய் டின்னர் சாப்பிடலாம் அப்படின்னார்'' என்றார் சிறுபிள்ளை உற்சாகத்தோடு.

''ஓ... எப்ப சொன்னார் அப்பா. உங்க கிட்ட எ.. என் கிட்ட அதெல்லாம் சொல்லலையே'' என்றாள் ஆச் சரியமாக.

''ம்.. ம்.. நான் வந்தவுடன், போன் பண்ணேன்டா ஸ்டேஷனில் இருந்து... அப்ப தான்டா சொன்னார்'' என்றார் நாராயணன்.

''ச... சரி அப்பா. அப்ப நான் எதுவும் செய்யலை. நீங்க, கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க. இங்க... இந்த ரூமில படுங்க அப்பா. அங்கிள் நீங்களும் ரெஸ்ட் எடுங்க'' என்றாள் பரிவாக.

தருண் ஏன் இப்படிச் செய்கிறான்? இப்படி எல்லா வற்றிலும் தன் மூக்கை நுழைக்கிறான். டின்னர் இப்ப ரொம்ப முக்கியம் என மனதிற்குள் அவனை வறுத்து எடுத்தாள்.

மொபைல் சத்தம் கேட்கவே ரூமிற்குள் விரைந்து சென்றாள். தருண் காலிங் என மொபைல் ஸ்க்ரீனில் தெரிய ஒரு நொடி யோசித்து விட்டு ஆன்ஸர் பட்டனை அழுத்தினாள்.

''ஹலோ, ஹரிணி ஸ்பீக்கிங்'' என்றாள் மெதுவாக.

''ஹரிணி. நான் தருண் பேசறேன். இன்னிக்கு ஏழு மணிக்கு ரெடியா இரு. அப்பாவும் அங்கிளும் நம்ம கூட

டின்னருக்கு வராங்க. நான் கரெக்டா ஏழு மணிக்கு வர்றேன்'' என்றான் தருண்.

''அது, தான் அப்பா கிட்ட எல்லாம் சொல்லிட்டீங்க இல்ல. அப்புறம் ஏன் என்கிட்ட இப்ப சொல்றீங்க'' என்று சீறினாள்.

''ம்... ம்... ஹரிணி. உன் அப்பா முன்னால கொஞ்சம் ஒழுங்கா நடந்துக்க. ஐ மீன் இப்ப கத்தற மாதிரி கோபமா பேசாத. ஹீ மே நாட் லைக் திஸ். அதச் சொல்லத்தான் கூப்பிட்டேன்'' என்று சொல்லி விட்டு அவள் பதில் சொல்லும் முன் போனைத் துண்டித்தான்.

'என் அப்பா கிட்ட எப்படி இருக்கணும் அப்படின்னு எனக்குத் தெரியாதா? புதுசா சொல்ல வந்துட்டான். எல்லா விஷயத்திலையும் ஹி இஸ் போக்கிங் ஹிஸ் நோஸ்.

'திஸ் இஸ் ரியலி டூ மச்' என மனதிற்குள் குமைந்தாள் ஹரிணி. மணியைப் பார்த்தாள் ஆறு. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவன் வந்துவிடுவான் என நினைக்கும் போது ஏனோ ஒரு எரிச்சல் வந்தது.

ஜன்னல் வழியே பார்த்தாள் தோட்டத்தை. ஒரு அணில் இன்னொரு அணிலைத் துரத்திக் கொண்டிருந்தது. பறவைகள் கூட்டம் கூட்டமாக வானத்தில் எங்கோ போய்க் கொண்டிருந்தன.

'எப்படி கரெக்டாக ஒத்துமையாக, டெய்லி இந்த நேரத்தில் பறக்க முடிகிறது. இந்தப் பறவைகளுக்கு யார் அதைக் கற்றுக் கொடுத்தனர்.

'பறவைகள் கவலைப்படுமா. அப்படி இருந்தால் எதை பத்தி? தன் குஞ்சுகளைப் பத்தியா? இரை கிடைக்குமா,



அப்படின்னா?' என ஏதேதோ யோசித்தபடி உட்கார்ந்து இருந்தாள்.

''ஹேய் ஹரிணி, நீ இன்னும் கிளம்பலையா? இட்ஸ் செவன் நௌ'' என தருண் குரல் அருகில் மிக அருகில் கேட்க திடுக்கிட்டுத் திரும்பினாள்.

ஒரு நீல நிற டி.ஷர்ட்டும், ரொம்ப கேஷுவலாக ஜீன்ஸ் அணிந்து கொண்டு தன் ரூமில் அவன் நின்று கொண்டு சிரிப்பதைப் பார்த்து சட்டென பதறினாள் ஹரிணி.

''நீங்க.. நீங்க எப்ப வந்தீங்க'' என்றாள் யாரோ அவள் சஞ்சரித்துக் கொண்டிருந்த உலகத்தில் வந்து அவளை டிஸ்டர்ப் செய்ததைப் போல.

''ம்... ம்... வந்து ஒரு அஞ்சு நிமிஷம் முப்பது வினாடி ஆகுது. நீ ஜன்னல் வழியா இயற்கையை ரசிச்சுப் பாத்துகிட்டு இருந்த.

''நான் உன்னை ரசிச்சுப் பாத்துக்கிட்டு இருந்தேன். இப்ப கூட கூப்பிட இஷ்டம் இல்லை தான். பட் மாமா பாவம். சீக்கிரம் சாப்பிட்டா சீக்கிரம் தூங்கப் போவார். அதான்... ஐ டிட் நாட் ஹேவ் எ சாய்ஸ்'' என்றான் சிரித்தபடி.

ஹரிணி முகம் சிவந்தது. இவன்.. 'இவன் எப்படி இப்படிப் பேசுகிறான்? சிரித்துக் கொண்டே என்ன திட்டினாலும் கவலைப்படாம, நான் இப்படித் தான் அப்படிங்கற மாதிரி.

'ஒரு வேளை தான் சிரித்தால் ரொம்ப ரசிக்கும்படி இருக்கிறது, என யாராவது சொல்லியிருப்பார்களா,

அவனிடம்... அதனால் தான் இப்படியா?' என யோசித்துக் கொண்டிருந்தாள்.

''ஏய் என்ன இன்னிக்கு என்னமோ புதுசா பார்க்கற மாதிரி என்னைப் பாக்கற? சீக்கிரம் கிளம்பு'' என்று சிரித்தபடி அவள் முகம் முன்னே சிட்டிகை போட்டான் தருண்.

''ம்.. ம்... பைவ் மினிட்ஸ் குடுங்க. ஐ வில் கெட் ரெடி'' என்று முனகினாள் ஹரிணி.

''கண்டிப்பா, நான் வெயிட் பண்றேன். டேக் யுவர் டைம்'' என்று சொல்லியபடி ரூமிலிருந்து சென்றான் தருண்.

அவன் போன பின்பு தான் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது ஹரிணியால். அவன் பார்வையும், குறுகுறு வென தன்னைப் பார்த்த அவன் கண்களும், அவன் சிரிப்பும் ஏனோ தன்னை அலைக்கழிப்பதுபோல் உணர்ந் தாள் அவள்.

தன் மேலேயே கோபம் வந்தது. 'யாரிடமும் இந்த மாதிரி நான் உணர்ந்ததில்லை. பரத்திடம் கூட ஒரு நல்ல நட்பு தான். பட் இது... இது வேறு ஏதோ போல் தெரிகிறதே.

'நோ.. இப்படி இருக்கக் கூடாது. ஐ ஷுட் நோ டு மேனேஜ் மை செல்ஃப்' என தனக்குள் முனகியபடி ஒரு ப்ளூ சல்வாரை கப்போர்டில் இருந்து எடுத்து அணிந் தாள்.

தலையை ஒற்றைப் பின்னல் பின்னி, ரப்பர் பேண்ட் போட்டு முடித்தாள். லேசாக பவுடர் போட்டு நெற்றியில் விபூதிக் கீற்றை வைத்தாள்.



ஏனோ கைப்பையை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வரும்போது, நெர்வஸாக உணர்ந்தாள். அப்பாவும் தருணும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

அவள் வருவதைப் பார்த்தவுடன் பேச்சு தடை பட்டது.

''வாடா ஹரிணி. மாப்பிள்ளை வந்து டிரெஸ் செலக்ட் செய்யணும், அப்படின்னு வெயிட் பண்ணிகிட்டு இருந்தியாம், எல்லாம் அவர் என்கிட்ட சொல்லிட்டார்'' என்றார். வாய் முழுவதும் சிரிப்புடன் அப்பா கிண்டல் அடிப்பதைப் பார்த்து ஹரிணிக்கு சட்டென கோபம் வந்தது.

அடக்கிக் கொண்டு தருணை முறைத்தாள். அவன் அதைக் கண்டு கொள்ளாமல் சிரித்தபடி நாராயணனைப் பார்த்து ''மாமா, பாத்தீங்களா கோவத்தை? உங்ககிட்ட சொல்லிட்டேன். அப்படின்னு என்னை முறைக்கறதைப் பாருங்க'' என்றான் சிரித்தபடி.

அவன் கண்களில் மின்னிய குறும்பும், குரலில் தெரிந்த கிண்டலையும் பார்த்து ஹரிணிக்கு இன்னும் எரிச்சல் வந்தது.

அவள் முறைப்பதைப் பார்த்து ஜேம்ஸும், நாராய ணனும், கடகடவெனச் சிரித்தனர்.

''வா ஹனி. லேட்டாச்சு பாரு. மாமா சீக்கிரம் தூங் கினா, நல்லது தானே'' என சொல்லியபடி அவள் அருகில் வந்து ரொம்ப கேஷுவலாக தோள் மேல் கை போட்டான் தருண்.

அவள் காதருகே, ''மாமாவுக்காகத் தான். எனக்கு எப்பவும் இப்படி இருக்கப் பிடிக்கும், உன்னோட தோளில

கை போட்டு நடக்க, பட் உனக்குப் பிடிக்காது. ஆனா பொறுத்துக்க'' என்று கிசுகிசுத்தான்.

உதடு துடிக்க, கண்கள் படபடக்க மேலும் ஏதும் பேசாமல் மெதுவாக நடந்தாள்.

''ப்ளீஸ் தருண். கையை எடுங்க'' என்று இரண்டடி நடந்த பின் முணுமுணுத்தாள்.

அவன் சிரித்துக் கொண்டு, ''ஓகே ஹனி'' என்றான் சத்தமாக வேண்டுமென்றே.

காரில் அவள் பின்னால் உட்கார முயன்றபோது, ''ஹனி முன்னால வந்து உட்கார். மாமாவும், அங்கிளும் பின்னாடி இருக்கட்டும். இரு ஒன் செகண்ட் நான் மாமா உட்கார ஹெல்ப் செய்யறேன்'' என்று சொல்லியவாறு நாராயணனின் வீல் சேரை பின்னால் வைத்தான்.

பின் கைத்தாங்கலாக ஜேம்ஸ் உதவியோடு அவரைத் தூக்கி அலாக்காக பின்னால் வசதியாக உட்கார்த்தி வைத்தான். அது டாட்டா சுமோ வண்டி என்பதால் வசதியாக இருந்தது.

முன்னால் டிரைவர் சீட்டில் உட்கார்ந்து ஃபர்ஸ்ட் கியர் போட்டான் தருண். காரின் மென்மையான பெர்ஃபியூம் மணம் எல்லாருடைய நாசியையும் நிறைத்தது.

சி.டி.யில் ''மன்றம் வந்த தென்றலுக்கு'' பாடல் ஓடிக் கொண்டிருந்தது.

''பாட்டு நல்லா இருக்கா, ஹனி?'' என்று அவளைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான் தருண்.

ஏதும் சொல்லாமல் அவனைப் பார்வையால் எரித்தாள் ஹரிணி.



''மாப்பிள்ளை, இந்த படம் ஹரிணிக்கு ரொம்பப் பிடிக்கும். டி.வி.யில எப்ப வந்தாலும் பாப்பா'' என்றார் நாராயணன் நேரம் காலம் தெரியாமல்.

''ஓ... ஹனி, நாளைக்கு உனக்கு சி.டி. வாங்கித் தர்றேன். எப்ப வேணாலும் பாக்கலாம். நல்ல பிலிம் அது. அதுவும் இப்ப எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்குது'' என்றான் கண்களில் குறும்பு மின்ன.

ஏதும் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டு, பொறுமையை இழக்காமல் உட்கார்ந்திருந்தாள் ஹரிணி.

அதற்குள் கிண்டிக்கு முன்னால் இருந்த அந்த நட்சத்திர ஹோட்டல் முன் வண்டியை நிறுத்தினான் தருண்.

காரில் இருந்து இறங்கி அவன் பின் கதவை திறந்து, நாராயணன் இறங்குவதற்கு உதவி புரிந்தான். அதற்குள் அங்கிருந்த செக்யூரிட்டி ''சார் நீங்க போங்க. நாங்க பத்திரமா அழைச்சுட்டு வர்றோம்'' என்றான் தருணைப் பார்த்து,

''ஓ.கே. தேங்க்ஸ்'' என்று அவனிடம் கார் சாவியைக் கொடுத்துவிட்டு ''வா டார்லிங்'' என்றான் சிரித்தபடி சத்தமாக அவளைப் பார்த்து.

''லுக் தருண். என் பொறுமைக்கும் எல்லை உண்டு. ஐ ஜஸ்ட் காண்ட் டாலரேட் ஆல் திஸ் நான்சென்ஸ். என்னை இப்படி எல்லாம் கூப்பிடாதீங்க'' என்றாள் அவனுக்குக் கேட்கும் குரலில்.

''ம்.. ம்.. மாமா நம்மள தப்பா நினைக்கக் கூடாது. அதனால் தான். நீ தான் மௌன ராகம் படம் பாத்திருக்க

இல்ல, நிறைய தடவை'' என்றான் வெள்ளைப் பற்கள் மின்னச் சிரித்தவாறு.

சட்டென அந்த சிரிப்பை, ஒரு நிமிடம், ஒரு நொடி ரசித்தாள் ஹரிணி. கண்களில் குறும்பு மின்ன, அவன் சிரித்தது மனதை அலைக் கழித்தது.

காட் என்ன நினைப்பு இது. இது தப்பு. இது சரியில்லை என யோசித்தவாறு பேசாமல் நடந்தாள் ஹரிணி.

ஏற்கனவே டேபிள் புக் செய்திருந்ததால் தருணுக்கு அந்த இடத்தைக் காட்டினார், ஹோட்டல் சீருடையில் இருந்த ஒருவர்.

''இந்த டேபிள் தான் சார். என்ன சார் ரொம்ப நாளாச்சு இங்க வந்து'' என்றார் அவர் தருணைப் பார்த்து.

''ஆமாம் ராவ். வொர்க் டைட்டா இருந்தது. ம்.. ம்.. இன்னொரு நல்ல நியூஸ். என்னோட உட்பி இவ. நெக்ஸ்ட் வீக் கல்யாணம்'' என்றான் ஹரிணியின் கையைப் பிடித்தபடி.

''ஓ... கங்கிராட்ஸ் சார். கங்கிராட்ஸ் மேடம். உட் காருங்க சார்'' என்று வாயெல்லாம் சிரிப்பாக அவர்களை உபசரித்தார்.

அங்கிருந்த சோபாவைக் காட்டி ''உட்கார் ஹரிணி'' என்றான். அவள் அருகில் அவன் உட்கார்ந்து கொண் டான்.

எதிரில் இருந்த நாற்காலிகளை சுட்டிக் காட்டி நாராயணனையும், ஜேம்ஸையும் உட்காரச் சொன்னான் தருண்.



''ம்.. ம்.. இந்த ஹோட்டல்ல, எல்லா அயிட்டம்ஸும் ரொம்ப நல்லா இருக்கும். இந்தாங்க மெனு கார்ட்'' என்று நீட்டினான்.

''மாப்பிள்ளை, நீங்க என்ன ஆர்டர் செய்றீங்களோ, அதைச் சொல்லுங்க. ஆனா எனக்கு ஒரு பிளேட் சப்பாத்தி போதும். ஜேம்ஸ் நான் இருக்கேன்னு டோண்ட் மைண்ட். நீ நான்வெஜ் சாப்பிடு'' என்றார் சிரித்தபடி நாராயணன்.

''நான் நான்வெஜ்ஜே சாப்பிடறதை நிறுத்தியாச்சு சார். நான்வெஜ் சாப்பிடறதால, நம்ம உடம்புக்கு எந்த சத்தும் இல்லை. அதோட மாரடைப்பு, புற்றுநோய் இதெல்லாம் வரதுக்கு ரொம்ப சான்ஸ் ஜாஸ்தி.

'அதனால உங்க வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம், நான் எல்லாத்தையும் நிறுத்திட்டேன்'' என்றார் ஜேம்ஸ்.

''ஓ... நீங்க எல்லாம்... வெஜிடேரியனா?'' என்றான் சீரியசாக.

''ஆமாம். மாப்பிள்ளை, ஹரிணிக்கு எப்பவும் நான் வெஜ் பிடிக்காது. அவ அம்மாவும் அப்படித்தான். நான் மட்டும் வீட்டில நான்-வெஜ்.

''அப்புறம் நானும் திருந்திட்டேன்'' என்றார் சிரித்தபடி.

''அப்ப நானும் சீக்கிரம் உங்க கட்சியில சேர்ந்து விடுவேன் போல'' என்றான் தருணும் சிரித்தவாறு.

எதிலும் பட்டுக் கொள்ளாமல் மெனு கார்டையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஹரிணி.

''என்ன ஹரிணி, டல்லா இருக்காடா?'' என்று நாரா யணன் கேட்கவும் ஹரிணி தலை நிமிர்ந்தாள்.

''இ... இல்லைப்பா, தலை லேசா வலிக்குது, அதான்'' என்றாள் மெதுவாக.

''ஏன் ஹரிணி. இங்கேயே இரு... நான் பிடிச்சு விடறேன்'' என அவள் அருகில் வந்து உட்கார்ந்து, தன் கை விரல்களால் அவள் நெற்றிப் பொட்டை தடவி விட்டான்.

''ரொம்ப வலிக்குதா. ஹனி சூடா சூப் குடி. சரியாகும்'' என்று சொல்லியபடியே மசாஜ் செய்து கொண்டிருந்தான்.

ஹரிணிக்கு அப்பாவின் முகத்தைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. தருண் தொடுவது வேறு ஏதோ ஒரு புது உணர்வை ஏற்படுத்தியது.

முகம் சிவக்க, தலை குனிந்தபடி, அவள் உட்கார்ந்து இருப்பதை அவன் ரசனையோடு பார்த்தான்.

''போதும்.. போ... போதும் தருண் ப்ளீஸ்'' என முனகினாள் ஹரிணி.

''இட்ஸ் ஓகே ஹனி'' என்று சொல்லிக் கொண்டே பிடிவாதமாக கையை எடுக்காமல் தொடர்ந்து மசாஜ் செய்து கொண்டிருந்தான் தருண்.

ஹரிணி தான் இருப்பதால் கூச்சப்படுகிறாள் என நினைத்து நாராயணன் கண்களால் சைகை காட்டினார், ஜேம்ஸுக்கு. அவனும் அதைப் புரிந்து கொண்டு தலை ஆட்டினான்.

''மாப்பிள்ளை... நாங்க இந்த ஹோட்டல் எப்படி இருக்கு, அப்படின்னு சுத்திப் பாத்துட்டு வர்றோம். நீங்க பேசிக்கிட்டு இருங்க'' என்று சொல்லிக் கொண்டே எழ முயன்றார்.



ஜேம்ஸும் அவரை வீல் சேரில் வைத்து, தள்ளிக் கொண்டு சென்றார். அவர்கள் போனதும் ஹரிணி ''தருண் கை எடுங்க. போதும் உங்க நடிப்பு'' என சொல்லும் போதே குரல் உடைந்தது. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''எனக்கு... எனக்கு இதெல்லாம் பிடிக்கலை'' என்று அழத் தொடங்கினாள். அவள் அழுவதைப் பார்த்தான் தருண்.

''சாரி ஹரிணி. இனிமே உன்னைத் தொந்திரவு செய்ய மாட்டேன்'' என்று சொல்லும் போது அவன் கண்களில் தெரிந்த வெறுமை ஏனோ ஹரிணியின் மனதை டிஸ்டர்ப் செய்தது.

## 16

**என் தோட்டத்தில்**
**பூக்கள் பூக்கவில்லை!**
**என் வீட்டில்**
**நிலவு அமுதைப்**
**பொழியவில்லை!**
**மாமரக் கிளையில்**
**உள்ள**
**குயிலும்**
**சோக கீதம்**
**பாடுகிறது!**
**என் கண்களில்**

**தூக்கம்**
**தொலைந்து**
**ரொம்ப**
**நாட்கள்**
**ஆகிவிட்டன!**
**என் தனிமைத் தீ**
**என் உயிரைக்**
**கொல்லுகிறது!**
**ஏன் கண்மணி?**

அந்த நிகழ்ச்சிக்கு பின்பு தருணின் நடவடிக்கையில் நிறைய மாற்றங்கள், ஹரிணியிடம் ரொம்பக் கொஞ்ச மாகப் பேசினான். ஆனால் மற்றவர்களுக்கு அது தெரிய வாய்ப்பில்லை.

ஆனால் ஹரிணிக்கு அது புரிந்தது. அவன் முகத்தில் இருக்கும் சிரிப்பு மிஸ்ஸிங். ஆனால், அதை மறைத்துக் கொண்டு அவன் பேசிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் ஒரு கப்போர்ட் கொள்ளும் அளவுக்கு, அவ ளுக்கு புது உடைகள் வந்து இறங்கின. அப்பாவிற்கும் அங்கிளுக்கும் வேறு நிறைய உடைகள்.

''மாப்பிள்ளைக்கு ரொம்ப நல்ல மனசுடா. எல்லாருக்கும் இப்படி மாமனாரைக் கவனிக்கணும் அப்படின்னு தோணாதுடா. டெய்லி என்கிட்ட ஒரு அரை மணி நேரமாவது பேசிடுவார்.

''எவ்வளவு ஒரு பிசிமேன் தருண், பட் ஹி மேனேஜஸ் டைம் ஜஸ்ட் டு டாக் டு மி'' என அப்பா



அவனை வானளவு புகழ்ந்தும் தள்ளியது எரிச்சல் வந்தது ஹரிணிக்கு.

'இவ்வளவு நாள் உங்ககூட இருந்த என்னைவிட இப்ப வந்த... புது ஆள் உங்களுக்கு உசத்தியாப் போய்ட்டார் இல்லப்பா' என வாய் வரை வந்த வார்த்தைகளை அடக்கினாள் ஹரிணி.

நாட்கள் கடகடவென ஓடியது. பரத் ஆபீஸ் விஷய மாக சிங்கப்பூர் சென்றிருந்தான். அதனால் அவனுக்கு ஈ.மெயில் மூலம் கல்யாண இன்வைட் அனுப்பினாள் ஹரிணி.

அனுப்பிய பத்து நிமிஷத்தில் பரத்திடம் இருந்து போன் ''ஹரிணி வாட்... வாட் எ சர்ப்ரைஸ்.. ஐ ஆம்... சர்ப்ரைஸ்ட் ஹரிணி. எ... எப்படி இது, இவ்வளவு சட்டுன்னு.

''தருண் இஸ் எ வெரி சக்ஸஸ்... புல் பிசினஸ்மேன். எப்படி லவ் வந்தது உங்களுக்கு இடையே. நீ என்கிட்ட கூட சொல்லலை பார்'' என உரிமையாகக் கோவித்துக் கொண்டான்.

அதற்கு மேல் பொறுக்க முடியாமல், ஹரிணி நடந் ததை எல்லாம் பரத்திடம் கொட்டித் தீர்த்தாள். சொல்லி முடித்த பின் மனம் லேசானது போல் உணர்ந்தாள்.

எதிர்முனையில் நீண்ட மௌனம் பரத்திடம் இருந்து. எந்த பதிலும் வரவில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டு பரத் பேசத் தொடங்கினான்.

''ஹரிணி... நீ இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கல்யாணம் செஞ்சுக்கணுமா? கொஞ்சம் யோசிச்சுப் பாரேன் ஹரிணி'' என்றான் மெதுவாக பரத்.

''இ... இல்லை பரத். எல்லாம் முடிஞ்சு போச்சு. என் விலை ஏழு லட்சம் தெரியுமா... ஸெவன் லாக்ஸ்'' என வெறுப்பாக சிரித்தாள் ஹரிணி.

''ஹரிணி... நான் வேணா, தருண் கிட்ட பேசிப் பாக்கவா. உன்னோட பிரண்டா இருந்துகிட்டு, நான் இது கூட செய்யலைன்னா, என் மனசாட்சி என்னைக் குத்திக் குதறும்'' என்றான் கெஞ்சலாக பரத்.

''வே... வேணாம், பரத். உன்கிட்டப் பேசி முடிச்ச பிறகு, ஐ ஃபீல் பெட்டர். மஞ்சரி சர்ஜரி நல்லபடியா முடிஞ்சா அது போதும் பரத்'' என்றாள் பெருமூச்சோடு ஹரிணி.

''ஹரிணி. பெண்கள் விடுதலை, முன்னேற்றம் அப்படின்னு எவ்வளவு கதைகள் பெண்கள் பத்தி நீ எழுதியிருக்க. உன் வாழ்க்கையே இப்படி கேள்விக் குறியாகணுமா? சே இது தான் விதியா ஹரிணி?

''இந்த மாதிரி ஒரு வாழ்க்கைக்கு எப்படி ஹரிணி உன் மனசு ஒப்பும்?'' என்று மாய்ந்து போனான் பரத்.

''ம்... ம்.. தெரியலை பரத். ஒரு நல்ல விஷயம் நவீன் அந்த வீட்ல இருப்பது. ஐ லைக் ஹிம். அவனுக்காக கொஞ்சம் பொறுமையா இருப்பது நல்லது அப்படின்னு தோணுது'' என்றாள் தன்னைச் சமாளித்துக் கொண்டு ஹரிணி.

''சரி... ஹரிணி. என்ன பிரச்சினை என்றாலும், என்கிட்ட சொல்லத் தயங்காதே. நான்.. நான் கண்டிப்பா உனக்கு உதவி செய்வேன் ஹரிணி'' என்றான் அக்கறையோடு பரத்.



''ஷ்யூர் பரத். உன்னைத் தவிர இந்த மேட்டர் யாருக்கும் தெரியாது. அதனால நான் உன்னைத் தான் அப்ரோச் செய்வேன்'' என்று லேசாகச் சிரித்தாள் ஹரிணி.

''தட்ஸ் குட். ஹரிணி. நான் நெக்ஸ்ட் வீக் மறுபடியும் கூப்பிடறேன். டேக் கேர்'' என்று சொல்லி மனசே இல்லாமல் போனைத் துண்டித்தான் பரத்.

'சே... ஹரிணி எவ்வளவு நல்ல பெண். சமூக அக்கறையும், சமூக உணர்வும் அதிகம் நிறைந்த பெண்.

'மற்ற பெண்களைப் போல், ஜாலியாக ப்யூட்டி பார்லர், ஃபிலிம் என ஆர்வம் இல்லாத பெண். எல்லாத்திலும் தனித்துவம் நிறைய நிரம்பிய பெண்.

'சே... அவள் வாழ்க்கை இப்படியா ஆக வேண்டும்? இதெல்லாம் யோசித்தால் கோபம் வருகிறது, இந்த சமூக அமைப்பு மேல். இப்படி ஹரிணி போன்ற அப்பாவிப் பெண்களை எக்ஸ்பிளாயிட் செய்யும் தருண் போன்ற பணக்காரர்கள் மேல்.

'அதற்கு ஹரிணியா பலி ஆக வேண்டும். ஏழு லட்சங்கள் என்னிடம் இருந்தால் அவன் முகத்தில் விட்டெறிந்து ஹரிணியைக் காப்பாற்றி இருக்க மாட்டேனா?' என குமைந்தான் பரத்.

அந்த வாரம் கடகடவென ஓடியது. ஹரிணிக்கு, கல்யாண நாள் நெருங்க நெருங்க ஏனோ ஒரு பயம் மனதை ஆட்கொண்டது.

மஞ்சரிக்கு சர்ஜரி முடிந்து விட்டது, ஒரு நல்ல செய்தியாக வந்தது ஹரிணிக்கு. தான் செய்தது நல்லதுக்கே என தன்னைத் தேற்றிக் கொண்டாள் ஹரிணி.

ஹரிணிக்கு மஞ்சரியைப் பார்க்க ஆசையாக இருந்தது. ஹாஸ்பிடலுக்குப் போகாமல், நேராக பாபா ஆசிரமம் போய் பார்ப்பது என முடிவு செய்தாள்.

ஆசிரமத் தலைவரிடம் பேசிவிட்டு வரப் போவதைச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

ஆசிரம கேட் அருகே சென்றவுடன் அங்கே படகு போன்ற நீல நிற காரைப் பார்த்தவுடனே தருண் இருக் கிறான் என புரிந்து கொண்டாள் ஹரிணி.

தயக்கத்துடன் உள்ளே சென்றாள். அவள் உள்ளே சென்றவுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

“அக்கா, இந்த டிரெஸ் ரொம்ப நல்லா இருக்கு அக்கா. அக்கா உங்க பேச்சு நாங்க எல்லாம் காய்'' என பொய் யாக கோபப்பட்டனர்.

''ஏய், ஏன் திடீர்னு கோவம் என் மேல. மஞ்சரி எங்கே?'' என்றாள் சிநேகமாகச் சிரித்தபடி.

“ம்.. ம்.. அக்கா உங்களுக்கு கல்யாணம், அப்படின்னு எங்ககிட்ட சொல்லவே இல்லை. ரொம்ப மோசம் அக்கா நீங்க'' என செல்லமாகக் கோபித்துக் கொண்டனர்.

''ஓ... சாரிடா செல்லம். அப்படி எல்லாம் இல்லை. நான் வந்ததே இப்ப மஞ்சரியைப் பாத்துட்டு உங்கள எல்லாம் கல்யாணத்துக்கு இன்வைட் செய்யத் தான்'' என்றாள் ஹரிணி கெஞ்சலாக.

“ம்.. ம்.. அக்கா, தருண் மாமா எங்க எல்லார்கிட்டயும் கல்யாணம் பத்தி சொல்லி இன்வைட் பண்ணிட்டார்.



வாங்க அவர் கிட்ட போகலாம்'' என அவள் கையைப் பிடித்து இழுத்து உரிமையோடு சென்றனர்.

அங்கே தருண் கும்பலாக பசங்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். கிரிக்கெட் மட்டையைப் பிடித்துக் கொண்டு பாலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவன் அங்கே ஹரிணியை எதிர்பார்க்கவில்லை.

அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் பாட்டுக்கு தன்னிடம் வந்த பந்தை விளாசினான். அது நேராக ஹரிணியின் முழங்கையை உரசி மைதானத்தில் உருண்டு ஓடியது.

''மாமா... வேணும்னே, அக்காவை டார்கெட் பண்ணி அடிக்கறீங்க. கரெக்டா...'' என்று எல்லாப் பசங்களும் புடை சூழ்ந்து கொண்டு கத்தினர்.

''அச்சச்சோ... நான் அப்படி எல்லாம் செய்யலை. அந்த மாதிரி செஞ்சா உங்க அக்கா காளி அவதாரம் எடுப்பா. அது எனக்கு மட்டும் தெரியும்.'' என்றான் பயந்த தொனியில் தருண்.

ஹரிணி அவனை முறைக்க, ''பாத்தீங்களா, நான் சொன்னேன் இல்ல, உங்க அக்கா என்னை முறைக்கறா'' என்றான் பாவம் போல.

எல்லாரும் சிரிக்க ஹரிணி முகம் சிவந்தது.

''வா. ஹரிணி. மஞ்சரியைப் போய் பாக்கலாம்'' என சிரித்துக் கொண்டே சொன்னான் தருண்.

அவனுக்கு பதில் ஏதும் சொல்லாமல் அவனைப் பின் தொடர்ந்தாள் ஹரிணி. ஆசிரமப் பசங்களும் அவர்கள் பின்னால் பேசியபடி, உற்சாகமாக வந்தனர்.

ஆசிரமத்தில் உடம்பு சரியில்லாத குழந்தைகள் இருப்பதற்கு தனியாக ஒரு அறை உண்டு. அங்கே இருந்த கட்டிலில் படுத்திருந்தாள் மஞ்சரி.

தருணும், ஹரிணியும் வெளியில் இருந்த குழாயில் கை கால் கழுவிவிட்டு உள்ளே சென்றனர்.

கட்டிலில் மஞ்சரி ஏதோ புக் படித்துக் கொண்டிருந் தாள். அவளைப் பார்த்தவுடன் உற்சாகமாக எழுந்து உட்கார்ந்தாள்.

''வாங்க அக்கா... கங்கிராட்ஸ்'' என்றாள் வெட்கம் கலந்த புன்னகையோடு, மஞ்சரி.

''ஏய்... எப்படி இருக்க மஞ்சரி? சர்ஜரி நல்லபடியா முடிஞ்சது ரொம்ப சந்தோஷம். இவர்... இவர் தான் தருண், இவர் தான் உன் சர்ஜரிக்கு வேண்டிய பண உதவி செய்தார்'' என்று அருகில் இருந்த தருணைக் காட்டினாள்.

''ரொம்ப தேங்க்ஸ் மாமா'' என்று நன்றியோடு தருணைப் பார்த்தாள் மஞ்சரி.

''மஞ்சரி, தேங்க்ஸ் எல்லாம் நீயே வச்சுக்கோ. ரிசப்ஷ னுக்கு நீயும் வர்ற, நீ வந்தா எங்க இரண்டு பேருக்குமே சந்தோஷமா இருக்கும். சரி ரெஸ்ட் எடு'' என்றான் பரிவாக.

''ம்... ம்... கண்டிப்பா வர்றேன் மாமா. எல்லாரும் வருவோம். அக்காவோட கல்யாணத்தை எப்படி மிஸ் பண்ணுவோம்?'' என எதிர் கேள்வி கேட்டாள் மஞ்சரி.

''தட்ஸ் குட். சரி நல்லா ரெஸ்ட் எடு, மஞ்சரி. டேக் கேர்'' என்று சிரித்தபடி சொன்னான் தருண்.



''ஹரிணி, போகலாமா?'' என்றான் அவளைப் பார்த்து.

ஹரிணிக்கு மஞ்சரியைப் பார்த்தவுடன் தன் விலை ஏழு லட்சம் என மனம் மீண்டும் சோர்ந்து போனது. கண்கள் சட்டெனக் கலங்கின.

அவள் முகம் சோர்ந்து இருப்பதை தருண் கவனித் தான். ''வா, ஹரிணி நாம சங்கரன் சாரைப் பார்த்துட்டுப் போகலாம்'' என்றான் பொதுவாக.

''ம்.. ம்.. சரி'' என்று முனகியபடி அவனைப் பின் தொடர்ந்தாள் ஹரிணி.

ரூமில் உட்கார்ந்து கணக்குப் பார்த்து கொண்டிருந்த சங்கரன் அவர்களைக் கண்டதும் சிரித்தபடி வரவேற்றார்.

''வா ஹரிணி, தருண் வாங்க. உட்காருங்க. கல்யாண வேலை எல்லாம், ரொம்ப நல்லா போய்கிட்டு இருக்கா? ஏதாவது உதவி வேணும்னா, சொல்லுங்க'' என்றார் சங்கரன்.

''எல்லா வேலையும் முடிஞ்சுது ஐயா. எனக்கும், சொந்தம் அப்படின்னு சொல்ல யாரும் இல்லை. ஃபிரண்ட்ஸ் சர்க்கிள், கம்பனி ஸ்டாஃப் இவங்க எல்லாம் தான். நீங்களும் பசங்களும் கண்டிப்பா வரணும் ஐயா'' என்று வரவேற்றான் தருண்.

''ஹரிணி, தருண் நம்ம பசங்களுக்கு புது டிரெஸ் எல்லாம் ஆளுக்கு ஆறு வாங்கி அனுப்பிச்சிருக்கார். அதோட ரிசப்ஷனுக்கு வரதுக்கு பஸ் வேற ஏற்பாடு செஞ்சிருக்கார்.

''பசங்க எல்லாம் ரொம்ப குஷியா இருக்காங்க. அதோட, ஆசிரமத்துக்கு கட்டிடம் புதுப்பித்து தர்றது,

புஸ்தகங்கள் வாங்கி தர்றது என நிறைய செய்யறதா தருண் சொல்லியிருக்கார்.

''ரொம்ப சந்தோஷமா இருக்கு. பணம் இருந்தாலும் கொடுக்க மனசு வேணும் ஹரிணி. அது தம்பிகிட்ட அதிகம் இருக்கு'' என்றார் சிரித்தபடி.

ஹரிணிக்கு அதைக் கேட்டவுடன் ஏனோ மனம் துள்ளியது. 'தருணுக்கு இங்கே வரணும் என்று அவசியம் இல்லை. இந்தக் குழந்தைகளோடு நேரம் செலவழிக்க வேண்டும் என எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

'ஆனால் இந்தக் குழந்தைகளோடு அவனும் அவர் களுக்கு சமமாக விளையாடுகிறான்.அவர்களுக்காக நிறைய செலவிடுகிறான். கட்டிடம் கட்ட, லைப்ரரி அப்படின்னு. ஏன் தருண்?' என்று மனதிற்குள் கேட்டு கொண்டாள்.

அவன் மேல் இருந்த ஒரு மாயத்திரை அவனைப் பற்றி அவள் நினைத்திருந்த, தவறான பிம்பம் சிதறியது போல் உணர்ந்தாள் ஹரிணி.

''ஹரிணி போகலாமா? என்ன யோசனை, பயங்கரமா?'' என தருண் குரல் அருகே கேட்க சட்டென நிஜ உலகுக்கு வந்தாள் ஹரிணி.

''என்னம்மா, தருண் பக்கத்தில இருக்கும்போதே கனவு காண்ற'' என்று சங்கரன் சொன்னவுடன் ஹரி ணிக்கு கூச்சமாக இருந்தது.

''அதெல்லாம் இல்லை ஐயா'' என்று முனகினாள் ஹரிணி.

''நீங்க ரெண்டு பேரும், ரொம்ப நல்ல ஜோடி. தருண், ஹரிணி ரொம்ப நல்ல பொண்ணு. அம்மா இல்லாதவ. இந்த ஆசிரமத்துக்கு சனி, ஞாயிறு எல்லாம் தவறாம வந்து பசங்களுக்குப் பாடம் சொல்லித் தருவா.



''நீங்க ரெண்டு பேரும் காதலிச்சுத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க. இருந்தாலும், என் கடமை, இது. வாழ்க்கையில ஈகோ ஏதும் இல்லாமல், ஒருத்தொருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்துப் போறது நல்லது'' என்றார் பரிவாக.

''ம்..ம்.. கண்டிப்பா ஐயா. ஹரிணி மாதிரி ஒரு நல்ல பெண், வாழ்க்கைத் துணையா அடைய நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும்.

''நவீனும், நானும் ஆர் ரியலி லக்கி டு ஹேவ் ஹரிணி இன் அவர் ஹவுஸ்'' என்றான் மனம் திறந்து, தருண்.

ஏனோ ஹரிணிக்கு தருணை அந்த நொடியில் ரொம்ப பிடித்தது. எனக்குத் தெரியாமல் இவனுக்கு இன்னொரு முகம் இருக்கிறதா?

அவன் குரலில் இருந்த ஏக்கமும், உண்மையும் அவள் மனதை ரொம்ப தொட்டது. திடீரென தன் மேல் பயம் வந்தது.

'நான்.. நான் என்னையறியாமல் தருணை விரும்பத் தொடங்கி விடுவேனா? அவன் சாதாரண மெக்கானிக் எனத் தெரிந்த போது, என் மனம் சஞ்சலப்பட்டது நிஜம்.

'பட் அவன் பணக்காரன் எனத் தெரிந்த போது அதே மனம் எரிச்சல்பட்டது, கோபப்பட்டது அதுவும் உண் மையே. எப்படி இருக்கும் என் வாழ்க்கை' என யோசிக்கத் தொடங்கினாள் ஹரிணி.

# 17

பூ இங்கே
நறுமணம் அங்கே!
வானம் இங்கே
நிலா அங்கே!
இரவு இங்கே
கருமை அங்கே!
கடல் இங்கே
நீலம் அங்கே!
வீணை இங்கே
நாதம் அங்கே!
நான் இங்கே
நீ அங்கே!
உயிர் இங்கே
உடல் அங்கே!
தனிமை
எத்தனை நாள்!
சொல்
கண்மணி?

திருமண நாளும் வந்தது. ஹரிணிக்கு அன்று பதட்டமாகவே இருந்தது. எல்லாரும் காலை 7 மணி அளவில் வடபழனி கோவில் செல்லத் தயாராக இருந்தனர். நவீனும், தருணும் காலை ஆறு மணி அளவிலேயே அவர்கள் வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்தனர்.



பட்டு வேஷ்டி சட்டையில் தருண் வித்தியாசமாகத் தெரிந்தான் ஹரிணியின் கண்களுக்கு. ஏனோ தன் ரூமிலேயே கட்டிலில் அமர்ந்திருந்தாள் ஹரிணி.

மனதில் ஆயிரம் கேள்விகள். இனம் புரியாத பயம். அம்மா இருந்திருந்தால் நன்றாக இருக்கும் என நினைத்து மருகினாள்.

ஒரு கருநீல பட்டுப் புடவையில், தலைக்கு குளித்து விட்டு, லூசாக பின்னல் போட்டபடி ஹாலுக்குள் வந்தாள் ஹரிணி.

அவளைப் பார்வையால் விழுங்கினான் தருண். நவீன் ஓடி வந்து ''மிஸ் இந்த டிரஸ்ஸில நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க'' என்று சொல்லியவாறு கை பிடித்தான்.

''டேய், அண்ணின்னு கூப்பிடு'' என்று தருண் கண்டிப்பாகச் சொல்ல எல்லோரும் சிரித்தனர்.

''சரி எல்லாரும் கிளம்பலாமா? நேரம் நல்லா இருக்கு'' என்று நாராயணன் சொல்ல எல்லாரும் சரி என்பது போல் தலை ஆட்டியவாறே நடந்தனர்.

ஜேம்ஸ் அங்கிள் வீட்டைப் பூட்டி விட்டு அவர்கள் பின்னால் சென்றார் காரை நோக்கி. ஹரிணி அவருடன் கடைசியாக, பேசியபடி நடந்தாள்.

டிரைவர் இருந்ததால் தருணும் அவர்களுடன் உட்கார்ந்து கொண்டான். ''அண்ணி நான் உங்க மடியில உட்காரணும்'' என்று நவீன் கொஞ்சலாகக் கேட்க, சிரித்தபடி தலை அசைத்தாள்.

தருண் அவள் அருகே உட்கார நவீன் ஜம்மென அவள் மடியில் உட்கார்ந்தான்.

நவீன் உற்சாகமாக ஏதோ பேசியபடி இருக்க தருணும் ஹரிணியும் அதில் கலந்து கொண்டு வந்தனர். தருண் மேல் படாமல் ஜாக்கிரதையாக தள்ளியே உட்கார்ந் திருந்தாள் ஹரிணி.

நாராயணனும், ஜேம்ஸும் பின்னால் உட்கார்ந்து பேசி சிரித்தபடி இருந்தனர். டிரைவர் திடீரென லெஃப்ட் டர்ன் எடுக்க, சட்டென நிலை தடுமாறி, தருண் மேல் சாய்ந்தாள் ஹரிணி.

''சாரி'' என அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவன் ஏதும் சொல்லாமல் ''டிரைவர் பாத்து ஒட்டுங்க. எந்த அவசரமும் இல்லை'' என்றான்.

ஏனோ ஒரு ஏமாற்றம் ஹரிணியின் மனதை ஆக்ர மித்தது. 'தான் அவன் மேல் சாய்ந்ததற்கு சாரி கேட் டாயிற்று. பின் ஏதோ வேண்டுமென்றே அவள் விழுந் தாற் போல் அவளைப் புறக்கணித்தால் என்ன அர்த்தம்?' என மனதிற்குள் யோசித்துக் கொண்டிருந்தாள்.

கோவில் செல்லும் போது, ஹரிணியின் மனம் படபடத்தது. அடக்கியபடி, மௌனமாக நடந்தாள்.

கோவிலில் முன்கூட்டியே எல்லா விவரமும் தெரிவித்து பணமும் செலுத்தி இருந்ததால், அன்றைக்கு கல்யாணத்திற்கு எல்லாம் தயாராக இருந்தது.

மற்ற கல்யாணங்கள் போல், உற்றார் உறவினர் யாரும் இல்லை. தகதகவென எரியும் ஹோம குண்டம் எதிரே அமரும் போது, ஏதோ ஒரு புதிய உணர்வு ஹரிணிக்கு.

ஹோம குண்டம் எதிரே இருந்த ஐயர் அவர்களைப் பார்த்து சிநேகமாக சிரித்தார். ''உட்காருங்கோ, அந்தக்



காலம் மாதிரி நிறைய மந்திரமெல்லாம் இப்ப கிடை யாது.

''நிறைய இடத்துல சி.டி. போட்டு விட்டுடறா. ம்.. ம்.. எங்கள மாதிரி வைதீகம் படிச்சவாளுக்கு தான் சிரமம்'' என தங்களுடைய சோகத்தைப் புலம்பினார்.

''ம்.. ம். உங்களுக்கு என்ன வேணுமோ அது கிடைக்கும், இன்னிக்கு. அதனால சீக்கிரம் ஆரம்பிங்க'' என தருண் சொன்னவுடன் சிரித்தபடி மந்திரம் சொல்லத் தொடங்கினார் அவர்.

மந்திரத்தை சமஸ்கிருதத்தில் சொல்லிவிட்டு பின் தமிழில் சொன்னதால் புரிந்த கொள்ள ஏதுவாக இருந்தது.

ஹரிணியின் கையை அழுந்தப் பற்றி, 'பஞ்ச பூதங் களின் சாட்சியாக இவளைக் கைப் பிடிக்கிறேன்... மனம், வாக்கு, காயம் இவறறால் நான் இவளை அன்றி வேறு ஒரு பெண்ணை, சுவீகரிக்க மாட்டேன்' என தருண் சொல்லி கொண்டிருக்கும் போதே ஒரு இனம் புரியாத சந்தோஷம் அவன் மனதை ஆக்ரமித்தது.

மஞ்சள் கயிற்றை ஹரிணியின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சு போடும் போது தருண் 'எனக்காகவே ஒரு ஜீவன்... இவள் என் மனைவி. கடைசி வரை இந்த பந்தம் நிலைக்க வேண்டும்' என மனதிற்குள் பிரார்த்தித் தான்.

தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்த ஹரிணி, உள்ளுக் குள் பயந்தாள். இது.. இந்தக் கல்யாணம் எப்படி இருக்கும். ஒரு ஒப்பந்தக் கல்யாணம் தானே இது. அதை.. அதைத் தாண்டி பரஸ்பரம் அன்பெல்லாம்

இருக்காது போல என தனக்குள் நினைத்தபடி இறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள்.

ஹரிணியின் கைகளைப் பிடித்தபடி ஹோம குண் டத்தை வலம் வந்தான் தருண். பின்பு இருவரும் நாராயணன் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினர்.

''ரெண்டு பேரும் நல்லா சந்தோஷமா, இருக்கணும். மாப்பிள்ளை, ஹரிணி ரொம்ப பொறுப்பு தெரிஞ்ச பெண். அவ அம்மா இல்லாம வளர்ந்த பெண்.

''சில நேரம் எதையாவது போட்டு குழப்பிகிட்டு, மனசை இறுக்கமா வெச்சிருப்பா. அப்புறம் கொஞ்சம் நேரம் ஆனவுடன் யோசிச்சு, அவளே அதை விட்டு வெளியில வந்திடுவா.

''அதனால, நீங்க அவளப் பாத்து கவனிச்சுக்கோங்க. எனக்கு உடம்பு இந்த மாதிரி ஆன பிறகு, என்னை... என்னை கவனிச்சது இவ தான் மாப்பிள்ளை..'' என மேலே பேச முடியாமல் கண் கலங்கினார்.

ஹரிணிக்கும் கண்கள் கலங்கின. ''மாமா. நீங்க கவலைப்படாதீங்க. ஐ லவ் ஹரிணி எ லாட். நான் என்னை விட அவளை ரொம்ப நேசிக்கறேன். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், அவளுக்கு நான் எந்த சங்கடமும் குடுக்க மாட்டேன்.

''அதோட வீட்டிலேயும், மாமனார், மாமியார், நாத்த னார் என யாரும் இல்லை. நவீனுக்கு ஹரிணியை ரொம்ப பிடிக்கும். அதனால நீங்க எதுக்கும் கவலைப் படாதீங்க'' என ஆறுதல் சொன்னான் தருண்.



தருண் சொன்னதே ஹரிணியின் காதுகளில் திரும்பத் திரும்ப கேட்டு கொண்டிருந்தது. ஐ லவ் ஹரிணி எ லாட் என அவன் சொன்னதே அவள் மனதை அலைக் கழித்தது.

'நான்.. நான் மாறிவிட்டேனா..? பழைய ஹரிணி இல்லையா நான்.. கொஞ்சம் கொஞ்சமாக என் சுயத்தை விட்டுக் கொடுக்கிறேனா?

'ஏன்.. ஏன் அப்படி ஆனது? பணக்காரர்கள் மேல் எனக்கு இருந்த கோபம் எரிச்சல் எல்லாம் என்னவாயிற்று. இது தான் மஞ்சள் கயிறு மாஜிக்கா?' என யோசித் தாள்.

'சே... அதெல்லாம் இல்லை. தருணின் நடவடிக்கை களில் எனக்கு மாற்றம் தெரிகிறது. அதனால்.. அத னால் தான் நான் மெதுவாக அவன் வசம் ஈர்க்கப்படு கிறேன்.

'இது நல்லதா? நானும் இந்த பணக்காரத்தனத்தில் அமிழ்ந்து என்னை இழந்து விடுவேனா? என்னுடைய கோபம் இவ்வளவு தானா? ஒரு வேளை இந்த வாழ்க் கைக்கு நான் என் அடிமனதில் ஏங்கியிருக்கேனா?

'பணம், அதனால் வரக்கூடிய பெனிபிட்ஸ், நகை, உடை, அந்தஸ்து என.. காட்! நானும் இதற்கு அடிமை யாகி விடுவேனா?' என மனதில் ஏதேதோ எண்ணங்கள் விசுவரூபமெடுக்க ஹரிணி சட்டென தருணின் கைகளி லிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டாள்.

அவள் முகத்தை திரும்பி கூர்ந்து கவனித்தான் தருண். மனதிலிருந்த, குழப்பங்கள் எல்லாம் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

ஒரு ஆழ்ந்த மூச்சு, வாங்கினான் தருண். 'ஹரிணி ஏன் இப்படி ஒரு வட்டம் உனக்குள்ளே போட்டு கொண்டு வெளியே வர மறுக்கிறாய்.

'உன்னுடைய அகராதியில் தப்பு செய்தவர்களுக்கு அதுவும் பணக்காரர்களுக்கு, மன்னிப்பே கிடையாதா ஹரிணி?' என மனதிற்குள் கேட்டபடி, யோசித்தவாறு இருந்தான் தருண்.

''போகலாமா மாப்பிள்ளை, வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுத்தாத்தான், ரிசப்ஷனுக்கு ரெடியாக முடியும். ரெண்டு பேரும் இல்லை டயர்டா ஆயிடுவீங்க. கல்யாணம் நல்லபடியா முடிஞ்சது. எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்றார் நாராயணன் சிரித்தபடி.

''வாங்க மாமா கிளம்பலாம். நீங்க சொல்றது கரெக்ட் தான். ஹரிணி போகலாமா? இல்லை. நீ அப்புறம் ரிசப்ஷனில தூங்கி விழுந்திடப் போற. உன் ஸ்டூடெண்ட்ஸ் எல்லாம் வருவாங்க. அப்புறம் அவங்க கிளாஸ்ல தூங்கினா, உன்னால கேள்வி கேட்க முடியாது'' என்றான் சீரியசாக.

''ம்...ம். எனக்கு, சிரிப்பே வரலை'' என்றாள் ஹரிணி அவனுக்கு மட்டும் கேட்குமாறு கோபம் கலந்த குரலில்.

''உங்க அப்பாவுக்காகவாவது கொஞ்சம் முகத்தை சிரித்தபடி வெச்சுக்கோ. அவர் நேத்தே, நமக்குள்ள ஏதாவது பிரச்சினையா? ஏன் ஹரிணி டல்லா இருக்கா, அப்படின்னு என்கிட்ட ரொம்ப நேரம் கேட்டுகிட்டே இருந்தார்'' என்றான் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

ஏனோ... ஒரு ஆயாசம் படர்ந்தது. வாழ்க்கை பூரா இந்த மாதிரி ஒரு முகமூடி மாட்டிகிட்டு, இருப்பது எவ்வளவு கஷ்டம்?



'அப்பா.. என்னைப் புரிந்து கொள்ளுங்களேன் ப்ளீஸ்' என மனதிற்குள் கெஞ்சினாள். அவள் ஏதும் பேசாமல் மௌனமாக, இருப்பதைப் பார்த்த தருண், ஏன் இப்படி தனக்குள் சுருங்கிக் கொள்கிறாள். இவளை எப்படி ஹேண்டில் செய்வது, என யோசித்துக் கொண்டு இருந்தான்.

காரில் திரும்பிச் செல்லும்போது நவீன் களைப்பால் அவள் மடியிலேயே படுத்து உறங்கிவிட்டான். தலையை ஹரிணி மடி மேல் வைத்து காலை தருண்மேல் நீட்டியபடி நன்றாக அசந்து தூங்கிவிட்டான்.

''ஹரிணி, அவன் தலை வச்சுப் படுத்திருக்கறது கஷ்டமா இருக்கா? நான் வேணா என் மேல படுக்க வச்சுகிடட்டமா?' என தருண் அக்கறையாக கேட்டான்.

''அதெல்லாம் இல்லை... ஐ ஆம் ஃபைன்'' என்றாள் ஹரிணி.

'ம்..ம்... நவீனுக்காகவாவது அட்லீஸ்ட் இந்த மாதிரி சந்தோஷங்கள் நிலைத்து இருக்கட்டும். என்னுடைய இளம் பருவம் மாதிரி இறுக்கமாக, எந்தப் பிணைப்பும் இல்லாமல் குழப்பமாக, இருக்க வேண்டாம்' என மனதிற்குள் யோசித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய வயதில் தான் ரெசிடென்ஷியல் ஸ்கூலில் படித்தது ஞாபகம் வந்தது. அது ஒரு கிறுத்துவ மிஷனரி. அவனுக்கு பாடம் நடத்திய ஸிஸ்டர் பேர் மெர்ஸி. பெயருக்கு ஏற்ற மாதிரி கருணை பொங்கும் கண்கள்.

அவன் தன் சோகங்களில் மூழ்கி மூச்சு முட்டும் போது, கருணைக் கரங்களை நீட்டிக் கரை சேர்த்த ஜீவன்.

அந்த அன்பும் அரவணைப்பும் கிடைத்ததும் கொஞ்ச நாட்களே.

ஸிஸ்டர் கேன்சரால் இறந்த பின், அவன் ரொம்ப தனியாக ஆகிவிட்டான். யாருடனும் பேசாமல், பழகாமல் அவன் ஒரு தனித் தீவு போல ஆகிவிட்டான்.

தன் வாழ்க்கையில் சந்தோஷமான தருணங்கள் ஏன் ரொம்ப நேரம் நிலைக்கவில்லை? மெர்ஸி சிஸ்டர் இறப்புக்கு பின் ஏனோ அன்பும், கருணையும், தன் மீது செலுத்தக் கூடிய ஜீவன் ஒருவரும் இல்லை.

அம்மாவைப் பற்றிய செய்திகள் அப்பப்ப பத்திரிகை யில் வந்து அவனிடமிருந்த கொஞ்ச நஞ்ச சந்தோஷத் தையும் பறித்து விடும்.

அதற்கு பின் மீண்டும் பசங்க சீனியர் பாய்ஸ் ''உன் அப்பா யாருடா? இப்ப பத்திரிகையில உன் அம்மா வோடா போஸ் குடுத்திருக்காரே.. அவரா? இல்லை போன மாசம் இன்னொருத்தர் தாடி வெச்சுகிட்டு இருந் தாரே அவரா?'' என சீண்டுவர்.

தருண் ஏதும் சொல்லாமல், கசப்பை எல்லாம் விழுங்கிக் கொண்டு, அந்த இடத்தை விட்டு அகன்று விடுவான். அவனிடம் இருந்து எந்த ரீ ஆக்ஷனும் இல்லாததால், சீனியர் பசங்க அவனைச் சீண்டுவதை விட்டு விட்டனர்.

மனதில் பட்ட காயங்கள், வலிகள் எல்லாவற்றையும் மறக்க தருண் வெறி பிடித்தவன் போல் படித்திருக் கிறான். அம்மாவின் பணமே வேண்டாம், அது சாக் கடை என்பது அவன் மனதில் ஆழமாகப் பதிந்தது.



அதனாலேயே நிறைய வேலை பார்த்தான். பெட் ரோல் போடுவது, ஹோட்டலில் ஸ்டுவர்டாக இருப்பது, பேப்பர் போடுவது என.. எத்தனை எத்தனை வேலை கள்.

அந்த ஸ்கூல் பாதிரியார் ஜோசப் நினைவுக்கு வந்தார். ஒரு பணக்காரப் பையன் இப்படி வேலை பார்ப்பது, அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் அவனிடம் ஏதும் கேட்காமல் அவனிடம் ஆதரவாக நடந்து கொள்வார். அவரது அழகான புன் னகை நினைவுக்கு வந்தது.

நான் இருக்கிறேன், கவலைப்படாதே, என அந்த சிரிப்பு, சொல்வது போல் ஒரு பிரமை தருணுக்கு. விடுமுறை நாட்களில் மற்ற பசங்க எல்லாரும் வீட்டுக்குப் போகும்போது, இவன் மட்டும் போகாமல் இருப்பதை கவனித்து, ஒரு நாள் மெதுவாக அவனிடம் கேட்டார்.

''வே.. வேண்டாம்... ஃபாதர். எனக்கு அம்மா பேரளவில் தான். அப்பா.. அப்பா யாருனே தெரியாது'' என சொல்லும் போதே கண்களில் நீர் முட்டியது தரு ணுக்கு.

அவன் கையைப் பிடித்து, ஆறுதல் படுத்தினார் ஜோசப். அதற்கு பின் அவன் பெற்றோர் பற்றி எதுவும் கேட்கவில்லை.

ஆனால் நிறைய நல்ல விஷயங்கள் பேசினார். வாழ்க்கைக்குப் படிப்பு மட்டும் பத்தாது. சுறுசுறுப்பு, உற்சாகம், டிஸிப்பிளின் என நிறைய.

அவரும் ஆனால் ஒரு வருட காலமே அவனுடன் இருந்தார். பின்பு மாரடைப்பால் திடீரென இறந்து விட

அதற்கு பின், தான் ரொம்பத் தனியாக ஒரு தீவு போல் மாறியது, ஞாபகம் வந்தது.

ம்..ம்.. அதற்குப் பின் நிம்மதியின்றி வாழ்ந்தது ஞாபகம் வந்தது. பிசினெஸ், செய்து கொஞ்சம் கொஞ்சமாக கால் பதித்து பின் பெரிய அளவில் எல்லாத் துறையிலும் தனக்கென ஒரு முத்திரை பதித்தது என.. எல்லாமே நினைவுக்கு வந்தது. நவீனாவது நிம்மதியாக இருக்க வேண்டும் என பெருமூச்செறிந்தான் தருண்.

## 18

**அந்தி வானம்**
**சூரியன்**
**வலம் வருகிறான்!**
**குளிர் காலம்**
**எனக்கு மட்டும்**
**தணல் போல்**
**இருக்கிறது!**
**அது ஏன்?**
**வசந்த காலம்**
**தோட்டம்**
**எங்கும்**
**பூக்கள்!**
**ஆனால்**
**என்**



**மனதில் ஒரு**
**பூ கூட பூக்கவில்லை!**
**அது ஏன்?**
**பதில் உன்னால்**
**மட்டுமே சொல்ல முடியும்!**
**ஆனால்**
**நீ எங்கே?**

அன்று ஈவினிங் ரிசப்ஷனுக்கு தயாராகிக் கொண்டிருந்தனர் எல்லாரும்.

''அண்ணி இந்தப் புடவை கட்டிக்கோங்க'' என்று நவீன் குரல் கேட்டவுடன் சுயநினைவுக்கு வந்தாள் ஹரிணி.

இனி வாழ்க்கை தனக்கு எப்படி இருக்கும் என அடிக்கடி கனவுலகத்தில் ஆழ்ந்து விடுவது வழக்கமாகப் போய் விட்டது என தன்னையே நொந்து கொண்டாள்.

''ஏன் அண்ணி, கலர் பிடிக்கலையா? அண்ணாவுக்கு ப்ளூ கலர் ரொம்ப பிடிக்கும். இந்தப் புடவை கட்டினா நீங்க கடல் தேவதை மாதிரி இருப்பீங்க அப்படின்னு, அண்ணன் இதை செலக்ட் செய்தார், தெரியுமா?'' என்றான் சிரித்தவாறு நவீன்.

ஹரிணியின் முகம் சிவந்தது. 'ஒரு சின்னப் பையனிடம் என்னவெல்லாம் சொல்லி இருக்கறதைப் பார்' என தருணை மனதிற்குள் திட்டினாள்.

''ம்...ம். நீ கொண்டு வந்து கொடுத்ததால நான் இதை, இன்னிக்கு கட்டிக்கறேன். சரியா. தேங்க்ஸ் நவீன்'' என்று சொல்லியபடி புடவையை வாங்கிக் கொண்டாள் ஹரிணி.

கடல் வண்ண நீலத்தில், அழகான வேலைப்பாடுகள் நிறைந்திருந்தது அந்தப் புடவை. இவ்வளவு விலை உயர்ந்த புடவை எல்லாம் ஏன் வாங்கினான் தருண்? இனி, இந்த மாதிரி எல்லாம் தனக்கு ஏதும் வாங்கக் கூடாது என நிச்சயமாக சொல்லி விட வேண்டும் என நினைத்துக் கொண்டே புடவையை அணிந்து கொண் டாள்.

அவள் ரூமில் இருந்த ஆள் உயர கண்ணாடியில் தன்னைப் பார்த்த போது, சட்டென ஏதோ ஒரு புது உருவத்தைப் பார்ப்பது போல் உணர்ந்தாள்.

நான் இவ்வளவு அழகா என.. அவளே தன்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். லேசான ஒப்பனை செய்து கொண்டு, ரூமை விட்டு வெளியே வந்தாள் ஹரிணி.

ஹாலில் சோபாவில் தருண் அப்பாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பதை கவனித்தாள் ஹரிணி. அவள் வருவதை கவனித்த தருண், கண்டு கொள்ளாமல், அப்பாவிடம் பேசிக் கொண்டிருப்பதை அறிந்த ஹரிணி யின் மனதில் ஏனோ ஒரு ஏமாற்றம்.

அதை அவள் கண்கள் வெளிப்படுத்தின. தருணின் பார்வையும், அவளது விழிகளும் ஒரு நொடி சந்தித்தன.

தருண் அவள் கண்களில் இருந்த ஏமாற்றத்தை கவனித்தான். ''ஹரிணி, உனக்குத் தான் வெயிட்டிங். வா கிளம்பலாமா. நவீன் கமான். வா வா'' என்று உற்சாகமாக அவனை அழைத்தான் தருண்.

காலையில் பார்த்த, தருணுக்கும் இப்போது இருக்கிற தருணுக்கும் எவ்வளவு வித்தியாசம். காலையில் பட்டு வேஷ்டி சட்டையில் கம்பீரமாக இருந்தான்.



இப்போது ஒரு ப்ளூ, கலர் ஷர்ட் அண்ட் பேண்டில் ரொம்ப கேஷுவலாக இருக்கிறான் என மனதிற்குள் நினைத்தபடி, அவனையே தன்னையறியாமல் பார்த்து கொண்டிருந்தாள்.

''ஹரிணி.. ஆர் யூ ஓகே. கிளம்பலாமா?'' என தருண் மீண்டும் குரல் கொடுக்க, தன்னை சுதாரித்துக் கொண்டு சரி என்பது போல் தலை அசைத்தாள் ஹரிணி.

''ஹரிணி, ரிசப்ஷன் முடிஞ்சுட்டு, நாங்க கிளம்பலாம், அப்படின்னு இருக்கோம்டா. நாளைக்கு ஒரு ப்ரோக்ர முக்கு, என்னைப் பேச கூப்பிட்டு இருக்காங்க.

''முன்னாடியே ஒத்துக் கிட்டது. அதனால, போய் ஆகணும். நான் அப்புறம் வந்து பார்ப்பேன். சரியாடா'' என்று அப்பா சொன்னபோது கண் கலங்கியவாறு ''சரி'' என்று முனகினாள் ஹரிணி.

அந்தப் பெரிய நட்சத்திர ஹோட்டலில், அன்று அவர்கள் ரிசப்ஷனுக்கு கூட்டம் அலைமோதியது. தருணின் ஆஃபீஸிலிருந்து நிறைய பேர் வந்திருந்தனர்.

எல்லார் பார்வையும் நீ ரொம்ப லக்கி என சொல்வது போல் உணர்ந்தாள் ஹரிணி. கல்யாணத்தைக் காட்டிலும் ஏனோ அப்போது ரொம்ப நெர்வசாக உணர்ந்தாள் ஹரிணி.

பாபா ஆசிரமத்துக் குழந்தைகள், ஸ்கூலில் அவளுடன் பணி புரியும், ஸ்டாஃப். இவர்களைப் பார்த்தவுடன் மனம் சற்று லேசானது.

மேடையில் எல்லாரும் வந்து கை குலுக்கி வாழ்த்து சொன்னார்கள். அவர்கள் எல்லாரையும், அவளுக்கு சிரித்தவாறு அறிமுகப்படுத்தினான் தருண்.

அதில் ஒரு பெண், ரொம்ப அழகாக, மாடல் போல் இருந்தாள். நல்ல ஒப்பனை வேறு செய்து இருந்தாள். ரத்த சிவப்பு நிறத்தில், மெல்லிசாக ஒரு புடவை அணிந்து இருந்தாள்.

மேடை ஏறி வந்தவள் தருணைப் பார்த்து, ஏளனமாகப் புன்னகைத்தாள். ''தருண் எங்கே இருந்து புடிச்சே இந்த கண்ட்ரி கேர்லை'' என்று இகழ்ச்சியாக, சத்தமாகச் சொன்னாள்.

''தாரிணி, மைண்ட் யுவர் வெர்ட்ஸ். அப்பியரன்ஸ் ஆர் டிசெப்டிவ் என்பதை நான் புரிந்து கொண்டதே உன்னால் தான். இப்ப நீ போகலாம்'' என்றான் கடுமையான குரலில்.

அவள் சொன்னதைக் கேட்டவுடன், அவமானத்தால் ஹரிணிக்கு முகம் சிவந்தது. அதைக் காட்டிலும் தருண் சொன்னது உள்ளத்தைத் தைத்தது.

அவளைக் காட்டிலும் நான் அழகு கம்மி என்கிறானா? இல்லை நான் அழகே இல்லை என்கிறானா? என்ன சொல்ல வர்றான் என குழம்பினாள்.

''அவள் சொன்னதை, மனதில் போட்டுக் குழப்பிக் காத. ஷி இஸ் ஆல் நட்ஸ் அண்ட் கிரேஸி'' என்றான் மெதுவாக.

''நட்ஸ் அண்ட் கிரேஸி ஆன் யூ. ரைட். அவளை மாதிரி ஒரு பெண் தான் உங்களுக்கு மனைவியா ரொம்ப பொருத்தமா இருப்பா'' என்று மெலிந்த குரலில் சொன்னாள் ஹரிணி.

''கமான் ஹரிணி. போர் அடிக்காத'' என அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே, மஞ்சரியும், சங்கரனும் நடுவே



வர, ஆசிரமக் குழந்தைகள் எல்லாம் கூடவே மேடைக்கு வந்தனர்.

மஞ்சரியைப் பார்த்ததும் ஹரிணிக்கு கண்கள் பனித்தது. 'கடவுளே நன்றி. பழையபடி இந்தக் குழந்தை நன்றாக ஓடி ஆட வழி காட்டினாயே ரொம்ப நன்றி' என்று மனதிற்குள் உருக்கமாக வேண்டினாள் ஹரிணி.

அந்தக் குழந்தைகள் தயாரித்த வாழ்த்து அட்டையை, ஆவலுடன் வாங்கிக் கொண்டாள் ஹரிணி.

''பசங்களா.. எல்லாரும் நல்லா சாப்பிடணும்''என்று தருண் சிரித்தபடி சொல்வதை ரசித்தாள்.

''ஹரிணி. உன்னை இந்த மணக்கோலத்துல பாக்க ரொம்ப சந்தோஷமா இருக்கு. தருணை நல்லா கவனிச்சுக்கோ'' என்றார் சங்கரன் அக்கறையாக.

''ம். ம். ரொம்ப நன்றி ஐயா. வந்ததுக்கு'' என சிரித்தபடி சொன்னாள் ஹரிணி.

ஆசிரமத்து குழந்தைகள் எல்லாம் புது உடை அணிந்து உற்சாகமாக ஓடுவதைப் பார்க்கும் போது, அவள் மனம் சந்தோஷமாக இருந்தது.

தருண் தான் செலவழித்து இருக்கிறான், இதற்கெல்லாம் என தெரிந்த போது அவன் மேல் ஒரு அன்பு சுரந்தது, அவளை அறியாமல்.

வந்தவர்கள் எல்லாரும் வாழ்த்தி முடித்த பின், இருவரும் சாப்பிட டைனிங் ஹால் சென்றனர். ஏதோ யோசித்தபடி நடந்தாள் ஹரிணி.

ஒரு இடத்தில் கார்பெட் தடுக்கி விழப் போனாள். அவள் உடன் நடந்து வந்த தருண், சட்டென அவள் கையைப் பிடித்து, சரியாக நிற்க உதவினான்.

''தேங்க்ஸ், புடவை.. தடுக்கிடுச்சு'' என்று மெதுவாகச் சொன்னாள். அதைக் காதில் வாங்காத மாதிரி ஏதும் சொல்லாமல் நடந்து போய் கொண்டிருந்த தருண் மேல் ஏனோ கோபம் வந்தது.

'நான் வேணும்னே விழுந்த மாதிரி இல்ல, நடந்துக் கறான். சே.. எல்லாம் இந்தப் புடவையால் வந்தது' என எரிச்சல் அடைந்தாள் ஹரிணி.

அங்கே டைனிங் ஹாலில் எல்லாரும் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்பாவும் ஜேம்ஸ் அங்கிளும் தங்களுக்கு வெயிட் பண்ணுவதைப் பார்த் தாள் ஹரிணி.

''வாங்க மாப்பிள்ளை, வா ஹரிணி, வந்து சாப்பிடுங்க'' என உபசரித்தார் நாராயணன்.

''ம்...ம். பயங்கரப் பசி மாமா. ஹரிணி மாதிரி காத்தைக் குடிச்சுட்டு என்னால இருக்க முடியாது'' என்றான் தருண் கிண்டலாக.

''அவள் எப்பவுமே, இப்படித்தான், மாப்பிள்ளை, ரொம்ப சரியா சாப்பிடமாட்டா. கதை எழுதறதுல இருக் கற ஆர்வம் சாப்பாட்டிலயும் இருக்கணும் அப்படின்னு சொல்லி சொல்லி, நான் அலுத்துப் போய்ட்டேன்'' என் றார் நாராயணன்.

''இனிமே அந்தக் கவலை எல்லாம் உங்களுக்கு வேணாம். இன்னும் ஒரு மாசத்தில பாருங்க, ஹரிணி எப்படி இருக்கா, அப்படின்னு'' என்றான் தருண் சிரித்த படி,

'இது என்ன ரெண்டு பேரும் சேர்ந்து, நான் ஸ்கூல் டீச்சர் அப்படிங்கறதை மறந்துட்டு ஏதோ எல்.கே.ஜி



ஸ்டூடண்ட் மாதிரி இல்ல நடத்தறாங்க' என மனதிற்குள் சிரித்து கொண்டாள் ஹரிணி.

'அப்பாவிடம் ரொம்ப நாள் தெரிந்தவர் போல் தருண் பேசி சிரிப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏன் தன்னால் மட்டும் அப்படி அவனிடம் சட்டுன்னு இயல்பாகப் பழக முடியவில்லை.

'அதற்குக் காரணம், அவன் பணமா.. இல்லை அவன் கடந்த கால வாழ்க்கையா? அதை இப்போது கூட ஒரு பெண் வந்து ஞாபகப்படுத்தி விட்டுப் போனாளே.

'ஓ.. காட். இந்த மாதிரி டெய்லி யாராவது ஒரு பெண் வருவாளா. வந்து என் மனதைக் குத்திக் காயப்படுத்து வாளா?

'இது.. இது ஏன் எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை?' என மனம் குமைந்தாள் ஹரிணி. ஏதோ சாப்பிட்டேன் என பெயர் பண்ணி முடித்தாள்.

சாப்பிட்டு முடித்த பின் அப்பாவும் ஜேம்ஸ் அங் கிளும் ஊருக்கு கிளம்ப ரெடியாக இருப்பதை ஹரிணி கவனித்தாள்.

''ஹரிணி. கிளம்பறேன்டா. உனக்கு நான் தனியா எதுவும் சொல்ல வேண்டியதில்லை. நீ மத்த பொண் ணுங்க மாதிரி, ஒரு ஜாலியான வாழ்க்கை வாழ்ந்தது இல்ல.

''சின்ன வயசிலிருந்தே, உனக்கு பொறுப்பு ஜாஸ்தி. இனிமேயாவது வாழ்க்கையை நல்லா அனுபவிச்சு சந்தோஷமா இருடா'' என்று அப்பா சொன்னபோது கண்கள் கலங்கின ஹரிணிக்கு.

அதை அடக்கிக் கொண்டு, ''சரிப்பா, ஜாக்கிரதையா போங்க'' என்றாள் மெதுவாக ஹரிணி.

''மாப்பிள்ளை ஹரிணியைப் பாத்துக்கோங்க. இது வரை நான் அவளுக்கு பெரிசா எதுவும் செஞ்சிடலை. ஆனா அவ தான் என்னை.. தாயைப் போல கவனிச்சிருக்கா'' என மேலே பேச முடியாமல் கண் கலங்கினார்.

''அப்பா.. ஏன் அப்பா, அப்படி எல்லாம் சொல்றீங்க? அம்மா இல்லாத குறை தெரியாம என்னை வளத்தீங்க இல்ல அப்பா. எனக்காக வேறு ஒரு கல்யாணம் செய் யாம... அப்பா...'' என்று அவர் கைகளைப் பிடித்து கதறி னாள் ஹரிணி.

''ஷ்.. என்ன இது. ரெண்டு பேரும் இப்படி மாத்தி மாத்தி அழுதீங்கன்னா.. மாமா. நீங்க எதுக்கும் கவலைப் படாதீங்க.

''ஹரிணியை எந்த குறையும் இல்லாம நான் பார்த்துக் கறேன். ஹரிணி கண்ட்ரோல் யுவர்செல்ஃப் ப்ளீஸ். மாமா கொஞ்சம் வேலை எல்லாம் முடிந்தவுடன், திருச்சியில் இருந்து இங்கேயே வந்திடுவார். ஐ ப்ராமிஸ் யூ'' என்றான் சமாதானப் படுத்தும் குரலில்.

''நிஜமாவா அப்பா'' என்றாள் ஆச்சரியமாக ஹரிணி.

''ஆமாம் ஹரிணி. இன்னும் கொஞ்சம் நாள் கழித்து, இங்க வரதா சொல்லி இருக்கேன்'' என்றார் நாராயணன்.

''தேங்க்ஸ் அப்பா. எனக்கு இதைக் கேட்டவுடன் ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்றாள் உற்சாகமாக.

''சரிம்மா, புறப்படறோம். டிரைவர் வாசல்ல வெயிட் பண்ணிகிட்டு இருக்கார். நைட் பதினொன்னுக்குள்ள



போய் சேர்ந்திடலாம். இப்ப கிளம்பினா சரியா இருக்கும்'' என்றார் நாராயணன்.

''வா ஹரிணி. வாசல் வரை போய் டிராப் பண்ணிட்டு வரலாம். நவீன் வா நீயும்'' என்று தொலைவில் விளை யாடிக் கொண்டிருந்த நவீனை அழைத்தான் தருண்.

மூவரும் நடக்க, முன்னால் ஜேம்ஸ் நாராயணனை சேரில் வைத்து தள்ளியவாறு நடந்தார்.

வாசலில் 'இனோவா' ரெடியாக இருந்தது. அப்பா உட்காருவதற்கு தருண் உதவி செய்வதை ஹரிணி ஆர்வமாகப் பார்த்தாள்.

அவன் மேல் வைத்திருந்த தப்பான அபிப்ராயங்கள் எல்லாம் நொறுங்குவது போல் உணர்ந்தாள் ஹரிணி. கொஞ்சம் கொஞ்சமாக மனம் அவனிடம் செல்வதை உணர்ந்து திகைத்தாள்.

இதற்கு இடம் கொடுக்கக் கூடாது என பிடிவாதமாக மனதைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

காரில் உள்ளிருந்த நாராயணனும், ஜேம்ஸும் கை காட்ட ஹரிணி, நவீன், தருண் மூவரும் பதிலுக்கு கை அசைத்தனர். காற்று இதமாக வீசியது.

## 19

என் வீட்டு
தோட்டத்து
ரோஜாக்கள்
உன்

**பெயரைச்**
**சொன்னால்**
**இன்னும்**
**சிகப்பாகிறது!**
**அது ஏன்?**
**உன் மேல்**
**ஏற்பட்ட**
**பொறாமையா?**
**இல்லை**
**உன்னோடு**
**போட்டி போட**
**முடியாததால்**
**வந்த**
**கோபமா?**
**சொல் கண்மணி?**

வீட்டுக்கு ரிசப்ஷன் எல்லாம் முடிந்து திரும்ப காரில் போகும்போது, ஏனோ ஹரிணியின் மனது, பதட்டமாக இருந்தது.

தருண் அவளுக்கு வாக்குறுதி கொடுத்தது உண்மை தான். ஆனால் நவீனுக்கு, அண்ணியாக மட்டும் அந்த வீட்டில் இருக்க விடுவானா என மனம் சஞ்சலப் பட்டது.

தன் மனதில் இருந்த தைரியம் எல்லாம் எங்கோ தொலைந்து போனது போல் ஒரு உணர்வு. பின் சீட்டில்



காரில் அவள் அருகே உட்கார்ந்திருந்த தருணை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

உல்லாசமாக ஏதோ பாட்டை முணுமுணுத்து கொண்டு இருந்தான். நவீன் அவன் தோள் மேல் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

தருண் முகத்தையே சில நொடிகள் பார்த்துக் கொண டிருந்தாள் ஹரிணி. உதட்டில் தவழும் சிரிப்பு, நல்ல கம்பீரமான முகம், நினைத்ததை நடத்தி முடிக்கும் பிரகாசமான கண்கள் என யோசித்தபடி இருந்தாள்.

''என்ன ஹரிணி, ஏதாவது வேணுமா?'' என அவன் சட்டென திரும்பிக் கேட்டவுடன் அவளுக்கு அவமான மாக இருந்தது.

''இல்லை, கொஞ்ச நேரமா என்னையே பாத்துகிட்டு இருந்த.. அதனால தான் கேட்டேன்'' என்றான் ரொம்ப சாதாரணமாக அவளைப் பார்த்து புன்னகைத்தவாறு.

அப்போது தான் உறைத்தது, கார் மிரரிலிருந்து அவள் செய்வது எல்லாம் நன்றாகத் தெரிவது. அது வழியாக அவனும் அவளைப் பார்த்திருந்திருக்கிறான் என்பது புரிந்தவுடன் அவள் முகம் சிவந்தது.

''இ.. இல்லை.. ஒண்ணும் வேணாம். எனக்கு டயர்டா இருக்கு'' என்று பொய் சொன்னாள்.

''ம்.. ம்.. அப்படியே ரெஸ்ட் எடு. இன்னும் பத்து நிமிஷம் தான்... அப்புறம் வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுக்கலாம்'' என்றான் சிரித்தவாறு.

'இவனால் இப்படி எப்படி சிரிக்க முடிகிறது? பதட்டம் இல்லாமல், நான் மட்டும் ஏன்.. ஏன் இப்படி மனதை

அலைபாய விடுகிறேன். நானும் கூலாக இருப்பேன்' என தீர்மானித்தாள் ஹரிணி.

வீடு வந்தவுடன் தூங்கிக் கொண்டிருந்த நவீனை தோளில் தூக்கியபடி தருண் நடந்தான். அவன் பின்னாடியே அவளும் நடந்தாள்.

''ஹரிணி ஷர்ட் பாக்கெட்டில் கீ இருக்கு. கொஞ்சம் எடுத்து திற... இல்லை எடுத்து கணேசன்கிட்ட குடு. அவர் திறப்பார்'' என சொன்னான் தருண்.

கொஞ்சம் தயக்கத்தோடு, அவன் சட்டை பாக்கெட்டை துழாவினாள் ஹரிணி. பர்ஸ் ஒன்று தட்டுப்பட்டது. அப்புறம் ஏதோ காகிதங்கள்.

"இ.. இல்லையே இங்க'' என்றாள் மெதுவாக, அவனைப் பார்த்து.

அவன் கண்களில் குறும்பு கொப்பளிப்பது போல் தோன்றியது.

''ம்..ம். பேண்ட் பாக்கெட்டில் இருக்கா பாரு ப்ளீஸ்'' என்றான் சிரித்தபடி.

''நவீனை நான் தூக்கறேன். நீங்களே எடுங்க'' என்றாள் எரிச்சலாக.

''உன்னால இவனைத் தூக்க முடியாது... இரு நான்.. எங்க வெச்சேன்..'' என்று ஒரு நொடி யோசித்தான்.

''கணேசன், கார் உள்ள வீட்டு சாவி, இருக்கு. கொஞ்சம் அதை எடுங்க, எடுத்துத் திறங்க'' என்று குரல் கொடுத்தான்.

ஹரிணி முறைப்பதைப் பார்த்தவுடன்.. ''ம்..ம்.. இப்பதான் ஞாபகம் வந்தது ஹரிணி. நிஜமா..'' என்றான் சிரித்தபடி.



கதவைத் திறந்தவுடன் நவீனை தன்னுடைய பெட்ரூமுக்கு தூக்கியபடி சென்றான் தருண். ஹரிணியும் பின் சென்றாள்.

நவீனை மெதுவாக படுக்கையில் போட்டான் தருண். ''நீங்க போங்க.. நான் இவன் ஷூவையெல்லாம் கழட்டி விடறேன்'' என்றாள் ஹரிணி.

''ஓகே..'' என்று சிரித்தபடி சொல்லிவிட்டு பாத்ரூம் உள்ளே சென்றான் தருண். இரவு நேரத்தில் குளித்து விட்டு தூங்குவது அவனது வழக்கம்.

நன்றாகக் குளித்து விட்டு, ஒரு ப்ளூ டி.ஷர்டும், ஷார்ட்ஸும் அணிந்து கொண்டு, தலையைத் துவட்டியபடி, பாத்ரூமை விட்டு வெளியே வந்தான் தருண்.

ஹரிணி, அங்கிருந்த சேரில் சாய்ந்து கண் மூடி இருப்பதைப் பார்த்தான். 'தூங்கும்போது எவ்வளவு அழகாக இருக்கிறது இவள் முகம்.

'நான் பார்க்கிறேன் என தெரிந்தால் உடனே அந்த முகத்தில் ஒரு இறுக்கம் வந்துவிடும். ஆனால் இது தான் இவளோட இயல்பான முகம். பாவம் ரொம்ப டயர்டா ஆயிட்டா போல இருக்கு' என தனக்குள்ளே, சிரித்து கொண்டான்.

அரைத் தூக்கத்தில் இருந்த ஹரிணிக்கு, யாரோ தன்னை உற்று பார்ப்பது போல் ஒரு உணர்வு. சட்டென கண் முழித்தவள் திடுக்கிட்டாள்.

தருண் தரையில் முழங்காலிட்டபடி, நாற்காலி மிக அருகில்.. இருந்தபடி அவளை குறுகுறுவென பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. எவ்வளவு நேரமாக இப்படி

நடந்து கொண்டிருக்குதோ சே.. என தன்னையே நொந்தபடி கண்கள் படபடக்க எழுந்திருக்க முயன் றாள்.

''ஹரிணி ரொம்ப டயர்டா இருக்கா? இப்ப தான் உன்னை எழுப்பலாமா, அப்படின்னு யோசிச்சேன். அதுக்குள்ள நீயே முழிச்சுட்ட''என்றான் சாதாரணமாக.

ஷார்ட்ஸ் அணிந்து தலை துவட்டிக் கொண்டிருந்த அவன் அருகாமை, அவளுக்கு என்னவோ போல் இருந்தது. மார்பு படபடத்து.

சற்று முன்பு இருந்த ஹரிணி வேறு, இப்போது இருக்கும் இவள் வேறு என தனக்குள்ளே யோசித்தபடி எழுந்தான் தருண்.

''ஹரிணி நீ இங்கேயே படுத்துத் தூங்கறதுன்னா, தூங்கலாம். இல்லை உன் ரூமிலே தூங்கறதுன்னா தூங்கு'' என்றான் சிரித்தபடி.

''நான் என் ரூமுக்கே போறேன்'' என்று அவனைப் பார்க்காமல் எழுந்து நடந்தாள், வேகமாக.

''ஓ.கே. நானும் அப்ப அங்க வர்றேன்'' என அவன் சொன்னவுடன் பிரேக் போட்டாற் போல் நின்றாள் ஹரிணி.

அவள் திணறுவதை ரசித்த தருண். ''உன் ரூமிலே இருக்கறதை எல்லாம் உனக்கு எது எங்க அப்படின்னு சொல்ல வரேன். நத்திங் மோர் தேன் தட்'' என்றான் மெதுவாக.

டேபிள் டிராயரில் இருந்து இரண்டு கீயை எடுத்துக் கொண்டு ''வா ஹரிணி'' என்றான்.



அவள் ரூம் ரொம்ப அழகாக இருந்தது, பிங்க் வண் ணத்தில் அவர்கள் பெயிண்ட் செய்து, தரையெல்லாம் இளம் பச்சை நிற கார்பெட் விரித்து ரொம்ப ரசிக்கும்படி இருந்தது.

''இந்த ரூமை உனக்காக ரீ மாடல் செய்தேன். உனக்கு பிடிக்கும் என நினைக்கிறேன். இந்த வாட்ரோப் முழுவதும் உனக்குத் தேவையான டிரெஸ் இருக்கு. அப்புறம் இதில் நகை... ரொம்ப கனமானது நீ அணிய மாட்டாய். அதனால் ரொம்ப டிரெண்டியாக செயின், வளையல்... எல்லாம் நானே உனக்காக பாத்துப் பாத்து செலக்ட் செய்தேன். அப்புறம்'' என அவன் பேசி முடிப்பதற்குள் ஹரிணிக்கு பொறுமை பறந்து போனது.

''இதெல்லாம் வாங்கிக் கொடுத்து... வாட் டு யூ வாண்ட் பேக் ஃப்ரம் மி. சே... நீங்க ரொம்பக் கேவல மானவர் தருண். எனக்கு இதெல்லாம் வேணாம். லீவ் மீ அலோன்'' என கத்தினாள் ஹரிணி.

அவன் முகத்தில் இருந்த சிரிப்பு காணாமல் போனது. கண்களில் சட்டென ஒரு ஏமாற்றமும், வெறுமையும் குடி கொண்டது. ஏதும் பதில் சொல்லாமல் அவளை அவன் கண்கள் ஆழமாகப் பார்த்தன.

'ஏன் இப்படி எல்லாம் பேசற ஹரிணி?' என்று கண் டிப்பது போல் தோன்றின அவளுக்கு, அவன் கண்கள்.

கடகடவென ரூமை விட்டு வெளியேறினான் தருண். அவன் போன பின் தலை மேல் கை வைத்து சற்று நேரம் யோசித்தாள் ஹரிணி.

'நான் ஏன் அப்படிக் கத்தினேன் அவன் செய்தது, அப்படி என்ன பெரிய தப்பா? உனக்கு நகையும்,

டிரெஸ்ஸும் வாங்கி வைத்திருக்கிறேன் என்று சொன்னான்.

'உனக்குப் பிடிக்கவில்லை என்றால் ''நோ.. தேங்க்ஸ். எனக்கு இதெல்லாம் வேணாம். அப்படின்னு சொல்லி இருக்கணும். அதை விட்டுவிட்டு இப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் செஞ்சு சே ஹரிணி யூ ஆர் ராங்' என அவள் மனசாட்சி பேசியது.

'நானாக ஏதோ உள் அர்த்தம் கற்பித்து அவன் சாதாரணமாகச் செய்வதைப் பெரிதாக ப்ளோ அப் செய்கிறேனா? காட்! இது தப்பு' என தன்னையே நொந்து கொண்டாள்.

கப்போர்டை மூடலாம் என நினைத்து அருகே சென்றாள். அங்கே கடைசி இரண்டு ரேக் முழுவதும் புத்தகங்கள். ஆர்வமாக எடுத்தாள்.

எல்லாமே அவளுக்குப் பிடித்த தொகுப்பு. கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், முதல் சேத்தன் பகத் புத்தகம் வரை நல்ல கலெக்ஷன் அங்கே இருந்தது.

சே... பாவம் கஷ்டப்பட்டு இவ்வளவு வாங்கி வந்திருக்கான். ஒரு சின்ன தேங்க்ஸ் கூட சொல்லாமல் மனசு வருத்தப்படும்படி பேசி விட்டேனே. சரியான ராட்சஷி நான் என தன்னையே கடிந்து கொண்டாள்.

அங்கிருந்த அட்டாச்டு பாத்ரூமில் குளித்து விட்டு, ஒரு நைட்டியை எடுத்து அணிந்து கொண்டாள். அந்தக் கட்டிலின் பஞ்சு மெத்தையில் படுத்தவளுக்கு தூக்கம் வரவில்லை. ரொம்ப நேரம் புரண்டு புரண்டு படுத்தாள். பின் கடைசியாக முன்நேரத்தில் தூங்கினாள்.



அன்று காலை சீக்கிரமாகவே முழித்து விட்டான் தருண். ஹரிணி நேற்று இரவு சொன்னது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

'காட். ஏன் அப்படி எல்லாம் நினைத்தாள்? என் கடந்த கால வாழ்க்கையைப் பற்றி தெரிந்ததால் தானே இப்படி எல்லாம் என்னைப் பற்றி கேவலமாக நினைத்து விட்டாள்.

'ஒருவன் தப்பு செய்து விட்டால், அது அவன் வாழ்க்கை முழுக்க ஒரு நிழல் போல் தொடர்ந்து வருமா? அவன் திருந்தினால் கூட பழைய குப்பைகள் விடாமல் அவனைத் துரத்துமா?' என ஏதேதோ எண்ணியபடி ஜன்னல் வழியே தெரிந்த லானைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

காலையில் ஏதேதோ பறவைகள் சத்தம் கேட்க, கண் விழித்தாள் ஹரிணி. தான் படுத்திருப்பது எந்த இடம் என ஒரு நொடி புரியாமல் விழித்தாள்.

பின், நடந்தது எல்லாம் நினைவுக்கு வந்தது. தருண் கட்டிய மஞ்சள் கயிறு இதெல்லாம் கனவு இல்லை நிஜம் என சிரிப்பது போல் ஒரு பிரமை அவளுக்கு.

கடகடவென குளித்துவிட்டு, ஒரு பிங்க் நிற புடவையை அணிந்து கொண்டாள். கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளுக்கு தான் இவ்வளவு அழகா? என பிரமிப்பு ஏற்பட்டது.

தலை காயாததால் விரித்துவிட்டு மேலே பட்டர் பிளை கிளிப் ஒன்றை பொருத்தினாள். கிச்சன் உள்ளே சென்றாள்.

''குட்மார்னிங் மேடம். நீங்க காலையில என்ன குடிப்பீங்க காபியா, இல்லை டீயா?'' என்றான் சமையல்காரன்.

''ம்.. ம்.. காபி போதும். நானே கலந்துக்கறேன், கொஞ்ச நேரம் ஆகட்டும்'' என்றவள் தயங்கினாள்.

அவள் தயக்கத்தைப் புரிந்து கொண்டவர் போல் அவர்,

''ஐயா, காபி தான் குடிப்பார். வாக் போயிருக்கார், இப்ப வர்ற நேரம் தான் மேடம்'' என்றார்.

''ஓ... தேங்க்ஸ். நான் அவருக்கு காபி ரெடியா கலந்து வெச்சிடறேன்'' என சொல்லியபடி காபியைக் கலந்தாள். ரொம்ப ஸ்ட்ராங்காகவும், இல்லாமல் லைட்டாகவும் இல்லாமல் கலந்து, கப்பில் ஊற்றினாள்.

''அதோ ஐயா வர்றார் மேடம்'' என உற்சாகமாக ஜன்னல் வழியே பார்த்துவிட்டு, குரல் கொடுத்தார்.

''ம்.. ம்.. நான் இதை எடுத்துட்டுப் போறேன்'' என ஆர்வமாக, கப்பை டிரேயில் வைத்து, விரைவாக ஹாலை நோக்கி நடந்தாள்.

ஹாலில் அவன் இல்லாததால் ஒரு நிமிடம் யோசித்தவள் அங்கே ரூமில் இருப்பான் என நினைத்தவாறு அவன் ரூம் அருகே சென்றாள்.

ரூம் கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைந்தாள் ஹரிணி. அங்கே தருண், டி ஷர்ட்டை கழற்றி விட்டு இன்னொரு ஷர்ட்டைப் போட்டு கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

''ஐ... ஆம் சாரி, நான் உங்களுக்கு காபி எடுத்துகிட்டு வந்தேன். அப்புறம்... அப்புறம் வர்றேன்'' என்று திக்கித் திணறி சொன்னாள். அதற்குள் அவள் முகம் சிவந்தது.



''பரவாயில்லை ஹரிணி. நான் இதைத் திட்டம் போட்டுச் செய்யவில்லை என்பதை நீ புரிந்து கொண்டால் போதும்'' என்றான் வெறுமையான குரலில்.

அவன் நேற்று இரவு நடந்ததை, தான் நடந்து கொண்டதைக் குத்திக் காட்டுகிறான் என அவளுக்குப் புரிந்தது.

''சாரி... நேத்து நடந்ததுக்கு சாரி தருண்... தேங்க்ஸ் ஃபார் தி புக்ஸ். மத்ததெல்லாம் நகை... எல்லாம் வேணாம்'' என்றாள் மெதுவாக, டிரேயை நீட்டியபடி.

''நான் உனக்காக வாங்கினேன். உன் இஷ்டம்'' என்றான் காபி கப்பை எடுத்தபடி.

''உங்களுக்கு காலையில என்ன பிரேக்பாஸ்ட் செய்யணும்? சொல்லுங்க'' என்றாள் ஹரிணி.

''ம்.. அதெல்லாம் முத்து பாத்துப்பார். நீ ஸ்ட்ரெயின் பண்ணிக்காத'' என்றான் மொட்டையாக.

அதற்குள் நவீன் முழித்து விட்டான். ''அண்ணா, குட் மார்னிங். அண்ணி, குட் மார்னிங். ம்.. ம் காலையில அழகா இருக்கீங்க நீங்க'' என்றான் சிரித்தபடி.

அவன் சொல்வதை ரசித்துக் கடகடவெனச் சிரித்தாள். ''நவீன்.. காலையில மட்டும் தான் நான் அழகா?'' என்றாள் சிரித்தவாறு ஹரிணி.

''அப்படி எல்லாம் இல்லை. நீங்க எப்பவுமே அழகு. கரெக்ட்தானே அண்ணா'' என்றான் தருணைப் பார்த்து,

''ம்.. ம்.. நீ சொன்னா, கரெக்ட் தான்டா. இன்னிக்கு ஸ்கூல் இருக்கு. ஞாபகம் இருக்கு இல்ல சாருக்கு'' என்றான் தருண்.

''ம்.. ம்.. அண்ணி மட்டும் வீட்டில இருப்பாங்க. நான் மட்டும் ஸ்கூல் போகணுமா? நான் போகலை'' என்றான் தீர்மானமாக.

''நவீன். நீ ஸ்கூல் போறதுக்கு, உனக்குப் பிடிச்ச டிபன், பூரி கிழங்கு ரெடி பண்றேன். ஓகேவா? குட்பாயா ஸ்கூல் போனேன்னா, ஈவினிங் வெளியில போகலாம். வா பிரஷ்... செய்யலாம்'' என அவன் கையைப் பிடித்து செல்லமாக இழுத்தாள்.

நவீன் உற்சாகமாக ஹரிணி பின் செல்வதைப் பார்த்து, தருணுக்கு திருப்தியாக இருந்தது. 'பரவாயில்ல என் கிட்ட இருக்கற கோவத்தை இவளிடம் காட்டாமல் அன்பாக ஆசையாக இருக்கிறாளே அது போதும்' என நினைத்துக் கொண்டான்.

## 20

நான்கு
சுவர்களுக்குள்
நான்...
நான்
மட்டும் இருக்கிறேன்!
என் மூச்சுக்
காற்று கூட
இடி போல்
பெரிதாகக்
கேட்கிறது!



காற்று கூட
புக முடியாத
இடத்தில்...
எப்படி நீ
நுழைந்தாய்?
ஓ...
நீ வெளியே
எங்கும் இல்லை!
என்னுள்ளே...
என் உயிரினில்
இருக்கிறாய்!

நாட்கள் மெதுவாக ஊர்வது போல் ஒரு உணர்வு ஹரிணிக்கு. தருண் அவளை எந்த விஷயத்திலும் தொல்லை தரவில்லை.

நவீன் இருப்பதால் வீடு அவளுக்குப் பிடித்தது. எந்த வேலையும் இல்லாமல் சும்மா இருப்பது எவ்வளவு பெரிய கஷ்டம் என்பதை அவள் அப்போது தான் புரிந்து கொண்டாள்.

காலையில் நவீன் தருண் இருவரும் எட்டரை மணிக்கு, கிளம்பி விடுவார்கள். நவீனுக்கு லஞ்ச் பேக் செய்து, வாட்டர் பாட்டிலில் தண்ணீர் ஊற்றி வைப்பது, அவன் யூனிபார்மை எடுத்து ரெடியாக வைப்பது என எல்லாமே அவள் விரும்பி செய்வாள்.

இருவரும் டைனிங் டேபிளில் உட்காரும்போது, அவர்களுக்கு சாப்பாடு பரிமாறுவதும் அவள் தான். ஒரு

வாரமாகவே அவள் தான் செய்கிறாள். நவீன் இன்னிக்கு டிபன் நல்லாயிருக்கு அண்ணி. அப்படின்னு ஏதாவது சொல்வான்.

ஆனால் தருண், வாயே திறக்க மாட்டான். எப்பவும் இப்போதெல்லாம் அவன் முகம் இறுக்கத்துடன் இருப்பது போல் தோன்றும் ஹரிணிக்கு. 'ஒரு வாரத்துக்கு முன் அவனைத் திட்டியதற்கு சாரியும் கேட்டாகி விட்டது.

'பின் சும்மா கோபப்பட்டுக் கொண்டு முகத்தை உம்முன்னு வைத்திருந்தால் என்ன அர்த்தம். சே... சரியான கல்லுப் பிள்ளையார்' என மனதிற்குள் அவனை திட்டித் தீர்த்தாள்.

'காட்! நானா இப்படி நினைக்கிறேன். அவன் என்னை இக்னோர் செய்தால் நியாயப்படி நான் சந்தோஷப்பட வேணும். அப்படி இல்லாமல் இப்படி அவன் உம்முன்னு இருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சி செய்வது எவ்வளவு ஒரு முட்டாள்தனம் என தன்னையே நொந்து கொண்டாள்.

ஒரு வாரமாக, காலை நேரம் தவிர மத்த நேரம் எல்லாம் பெரிதாக, வேலை ஏதும் செய்யாததால் ஏதோ ரொம்ப சோம்பேறியாக ஆகி விட்டது போல் ஒரு உணர்வு.

இன்னிக்கு ஏதாவது உருப்படியாக செய்ய வேண்டும் என முடிவு செய்தாள். ம.. ம்.. தருண் ரூமை ஒதுங்க வைத்தால் என்ன.. என்று தோன்றியது.

அன்று அவன் கப்போர்டைத் திறந்த போது பார்த்தாள். துணிகள் எல்லாம் கொஞ்சம் கலைந்து, தாறு



மாறாக இருந்தன. பாவம் காலை எட்டரைக்கு போனால் நைட் வர பத்து மணி ஆகிவிடுகிறது.

அதற்கு பின் சாப்பிட்டு முடித்த பின், தூங்கத் தான் தோணும். பின் அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கே முழித்து விடுகிறான். எக்சர்சைஸ், வாக் என நேரம் ஓடிப்போய் விடுகிறது அவனுக்கு.

பணக்காரனாக இருந்தாலும் இப்படி சுறுசுறுப்பாக சிஸ்டமேடிக்கா இருக்கிறானே என தனக்குள் பல முறை வியந்து கொண்டாள் ஹரிணி.

காலை சாப்பாட்டை முடித்த பின், தருண் ரூமிற்குள் சென்றாள் ஹரிணி. அவன் வார்ட்ரோபில் இருந்த ஷர்ட் பேண்ட் எல்லாம் அழகாக அடுக்கி வைத்தாள்.

பின் கட்டில் அருகே வந்து, தலையணையை எடுத்து மெத்தையை இலேசாகத் தட்டினாள். தட்டும் போது ஏதோ கீழே தெறித்து விழுந்தது போல் தோன்ற, கார்ப்பெட்டை குனிந்து பார்த்தாள்.

வாட்ச் போல் தெரிய அதை எடுத்தாள் ஹரிணி. 'காட் இது என்னோட வாட்ச் தான் இது... இது தொலைந்து விட்டது அப்படின்னு சொன்னானே. பொய்யா அது? ஏன்... அப்படிச் சொன்னான்?' என ஏதோ தோன்ற மெத்தையைத் தூக்கிப் பார்த்தாள்.

அங்கே அவளுடைய பிங்க் புடவை ஒன்று இருந்தது. இங்கே வந்து ஒரு நாள் அவள் அதை அணிந்திருக் கிறாள். அப்புறம் அதைத் தேடினாள். கிடைக்காததால் விட்டு விட்டாள். வேறு எங்காவது இருக்கும் என லைட்டாக விட்டாள்.

இன்று தன் வாட்சும், புடவையும் அங்கே, தருண் மெத்தையில் அடியில் இருப்பதைப் பார்த்தவுடன் மார்பு

படபடத்தது. அவன் இவ்வளவு நேசிக்கிறானா என்னை என்று உணர்ந்தபோது அவள் மனம் முழுவதும், ஆனந்த அலைகள்.

'எனக்குத் தெரியாமல் என் வாட்ச், புடவை என சுருட்டி வச்சிருக்கிற இடத்தைப் பார்' என தருணை செல்லமாகத் திட்டினாள். இவ்வளவு அன்பு இருப்பவன் ஏன் என்னைக் கண்டு கொள்ளாமல், இருக்கிறான் என யோசித்தாள்.

'ம்.. ம்.. நான் சொன்னதுக்கு மதிப்பு கொடுத்து சும்மா இருக்கிறான் என்றால் ஹி இஸ் எ ஜெம். நான் வந்த கொஞ்ச நாட்களில் அவன் என்னிடம் ரொம்ப கண்ணிய மாக நடந்து கொள்கிறான்.

'அவன் நினைத்தால் அவன் பணத்தைக் காட்டி, ரொம்ப ஈஸியாக, என்ன வேண்டுமானாலும் செய்ய லாம். பட்.. ஏதும் செய்யாமல் என் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து, இப்படி கண்ட்ரோல்டாக இருப்பது எவ்வளவு கஷ்டம்...'

ஏனோ அன்று மனம் லேசானது போல் உணர்ந்தாள் ஹரிணி. மனம் உற்சாகமாக இருந்தது. சரி மற்ற இடங்கள் எல்லாம் க்ளீன் செய்யலாம். வேறு ஏதாவது சர்ப்ரைஸ், இனிய சர்ப்ரைஸ் கிடைக்கும் என நினைத்தவாறு, அவன் கப்போர்டை நோக்கி நடந்தாள்.

அவன் கப்போர்டில் நிறைய பைல்கள் இருந்தன. ஆபீஸ் டாகுமெண்ட்ஸ் அப்புறம் அவள் எழுதிய நாவல் கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஓ... இவன் இதெல்லாம் படித்திருக்கிறானா என ஆச்சரியப்பட் டாள்.



கப்போர்டில் லாக்கர் உள்ளே கொஞ்சம் தயக்கத் தோடு, கையை விட்டு துழாவினாள் ஹரிணி. உள்ளே டைரி போல் ஏதோ தெரிய அதை எடுத்தாள்.

ம்.. ம்.. டைரியே தான். யாருடையது என புரட்டிப் பார்த்தாள். தருண் என பெயர் இருந்தது. மற்றவர்கள் டைரியைப் படிப்பது அநாகரிகம் என முதல் பக்கத்தில் ஒரு குறிப்பு இருந்தது.

சற்று தயங்கியவள், ஒரு நொடி யோசித்தாள். பின் டைரியை எடுத்துக் கட்டிலில் அமர்ந்தாள். மெதுவாகப் புரட்டத் தொடங்கினாள்.

தருண் தன்னுடைய மனக் குமுறல்களை எல்லாம் அந்த டைரியில் கொட்டுவது வழக்கம். ஹரிணி மெது வாக படிக்கத் தொடங்கினாள்.

'அம்மா.. ஏன் அம்மா நீங்க இப்படி இருக்கீங்க? என் ஃபிரண்ட்ஸ் முன்னால எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு. நேத்து உங்களோட வந்தவர் தான் என் அப்பாவா என நான் கேட்டவுடன் ஏன் உங்களுக்கு அவ்வளவு கோபம்.

'என்னைக் கன்னத்தில் அடித்து விட்டுப் போய்ட்டீங்க. ஆனா, அன்னிக்கு முழுக்க நான் பட்ட வேதனை எனக்குத் தான் தெரியும். ஏன் அம்மா.. என்னோட மத்த ஃபிரண்ட்ஸ் எல்லாருக்கும் அம்மா, அப்பா எல்லாரும் இருக்காங்க.

'ஆனா... எனக்கு மட்டும் ஏன் அம்மா இப்படி?' என்று ஒரு பத்து வயது சிறுவனின் கதறல் அதில் இருந்தது.

'அம்மா இன்று வந்த மேகசினில் நீங்கள் இப்போது வேறு யாரோடு நெருக்கமாக இருக்கிறீர்கள் என

போட்டிருக்கு. ஏன்... அம்மா... இப்படி எல்லாம் நடந்து கொள்றீங்க?

'எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. உங்களை எதிர்த்துப் பேசுவதால் தான் என்னை ரெசிடென்ஷியல் ஸ்கூலில் சேர்த்தீங்க, அப்படின்னு நினைச்சேன். பட் அது உண்மை இல்லையாம்.

'நீங்க இந்த மாதிரி நடந்துக்க நான் தடையா இருக்கறதால என்னை இங்க இந்த ஸ்கூலுக்கு அனுப்பிசிட்டதா இங்க மத்த பசங்க எல்லாரும் சொல்றாங்க.

'அம்மா ஐ ஹேட் யூ. ஐ ஆம் அஷேம்ட் ஆஃப் யூ' என பதினைந்து வயது தருணின் வெறுப்பும், அவமானமும் அதில் எதிரொலித்தது.

'நவீனை நான் தூக்கியபோது எவ்வளவு ஒரு இனிமையான அனுபவம். ஒரு பூக்குவியல் போல் எவ்வளவு அழகு அவன்.

ம்.. ம்.. நவீனின் அப்பாவே எனக்கு அப்பாவாக இருக்கக் கூடாதா... கரண். எவ்வளவு நல்லவர். அம்மா நீ ஏன் இவரை வாழ்க்கையில் முதலில் சந்திக்கவில்லை.

'நீ இப்போது என் கூட இல்லை அம்மா. பட், நான் நவீன் கரண் அப்பா என எல்லாரும் உன்னைப் பற்றி எப்பவும் பேசுவோம்.

'அப்பா எவ்வளவு பேசினாலும், ஒரு விஷயம் என் மனம் ஒப்பவே ஒப்பாது. என்னுடைய சின்ன வயசு சந்தோஷங்கள், அம்மாவின் அன்பு, பாசம் இதெல்லாம் இல்லாமல், நான் பட்ட கஷ்டங்கள், ஏக்கங்கள் சொல்லவே முடியாது. அதை எல்லாம் மறந்து, தூக்கி எறிந்து



விட்டு, இறந்தாலும், அவங்க தப்பை என்னால் மன்னிக்க முடியாது' என பிடிவாதமாக, எழுதியிருந்த இருபது வயது தருணின் கோபம் எதிரொலித்தது அதில்.

அத்துடன் அந்த டைரி முடிந்திருந்தது. ஹரிணிக்கு அதைப் படித்தவுடன் கண்கள் கலங்கின. தருண் இவ்வளவு... இவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்திருக்கிறானா வாழ்க்கையில்? காட். சின்ன வயசு முதல் கசப்பை எல்லாம் விழுங்கிக் கொண்டு நோ வொண்டர் அவன் பெண்களை அவ்வளவு வெறுக்கிறான்.

அம்மா இருந்தும் எந்தப் பிரயோஜனம் இல்லாமல் இருப்பது ஒரு வகை. ஆனால் நடத்தை... ஒழுக்கம் இதெல்லாம் இல்லை என்றால்... அவன் மனம் எவ்வளவு காயப்பட்டிருக்கும்?

அதோடு அப்பா யார் என்றே தெரியாத அவலம். அது எவ்வளவு வெறுப்பை சிறு வயதில் அவனுக்கு மனதில் விதைத்திருக்கும்?

அதை... அதை எல்லாம் தாண்டி, அவன் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறான் என்றால், அவன் மன உறுதியைப் பாராட்ட வேண்டும்.

இந்த ஒரு வாரத்தில் அவள் பார்த்த வரைக்கும், அவன் ரொம்ப சுறுசுறுப்பாக இருந்தான். அவள் சொன்னபடி, அவளிடம் ரொம்ப கண்ணியமாக நடந்து கொண்டான். அவன் இரவில் தோட்டத்தில் இருந்து புகை பிடிப்பதை அவள் பார்த்திருக்கிறாள்.

அதைத் தவிர... இப்போது அவனிடம் ஏதும் கெட்டப் பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. கல்யாணத்தின்

போது அப்பாவிடம் அவன் எவ்வளவு மரியாதையாக நடந்து கொண்டான்.

எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறான். பாபா ஆசிரம குழந்தைகளுக்கு எவ்வளவு, கட்டிடம் கட்டி லைப்ரரி அமைக்க... அவர்களுக்கு புது டிரஸ் என நிறைய.

'ஏன் தருண், ஏன் இப்படி.. உங்களை நான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையா? நீங்கள் பணக்காரர் எனத் தெரிந்தவுடன் உங்கள் அன்பைப் புறக்கணித்தது எவ்வளவு பெரிய தப்பு.

'தருண்... தருண் நான் உங்களைத் தப்பா புரிஞ்சுக்கிட்டேன். ஐ ஆம் சாரி தருண். நீங்கள் என்னை... எவ்வளவு நேசிக்கறீங்க அப்படின்னு நான் இப்ப புரிஞ்சுக்கிட்டேன்.

'என்னுடைய வாட்ச், புடவை இப்படி... எல்லாத்தையும் நைசா எடுத்து வச்சிகிட்டு, மனசில இருக்கறதை எல்லாம் அடக்கி வச்சுகிட்டு இருக்கீங்களா? இருங்க நான் உங்கள என்ன செய்யறேன் பாருங்க' என மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

டைரியை எடுத்த இடத்தில் வைத்தாள். அதேபோல் வாட்ச், புடவை என எல்லாம் அதே இடத்தில் வைத்தாள். தருண் கேட்டால் கப்போர்டில் இருந்த துணிகள் மட்டும் ஒழுங்கு செய்தேன் என சொல்ல வேண்டும் என மனதிற்குள் முடிவு செய்தாள்.

டைரியை மூடும்போது ஒரு போட்டோ கீழே விழுந்தது போல. அதை அப்போது தான் பார்த்தாள் ஹரிணி.



நவீன், தருண் இருவரது ஜாடையும், அந்தப் பெண்ணுக்கு இருந்தது. கண்கள் ரொம்ப கவர்ச்சியாக, அழகாக இருந்தது.

புருவம், மூக்கு, உதடு, கன்னம் என எல்லாமே ரொம்ப திருத்தமாக அழகாக இருந்தது அந்தப் பெண்ணுக்கு. இது தருணின் தாயாகத் தான் இருக்க வேண்டும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஹரிணி.

ம்ம்.. என்ன ஒரு அழகு. ஆளைக் கட்டிப் போடும் கண்கள். மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும் முகம். இவ்வளவு அழகு தான்... இந்தப் பிரச்சினை எல்லாத்துக்கும் காரணமா?

அதுவும் அந்தக் காலத்தில் சினிமாவில் நடிப்பது, பெண்கள் நடிப்பது அவ்வளவு ஈஸி இல்லை. இப்போது மாதிரி ஒரு பாதுகாப்பான புரஃபஷன் இல்லை சினிமா நாற்பது ஆண்டுகள் முன்பு.

ஆனால் பெண்களுக்கு எப்பவும் அவங்க மனசாட்சி தான் வேலி. அதை... அதை எப்படி இவங்களால் உடைத்துக் கொண்டு போக முடிந்தது.

ஒரு சின்னப் பையனை, காயப்படுத்துகிறோம் என தெரியாதா? தன் குழந்தைக்கு தான் தப்பான ரோல் மாடல் எனத் தெரியாதா?

தெரிந்திருக்கும்.. தெரிந்தும் தவறுகள் செய்யத் தூண்டுவது எது? பணமா? புகழா? சேற்றில் இறங்கி ஆகி விட்டது... இனி எப்பவும் கறை தான் வாழ்க்கை... என மனம் லேசாகி மீண்டும் மீண்டும் தப்பு செய்யத் தோணுதா?

விடை தெரியாத கேள்விகள்... குழப்பங்கள் அவள் மனதை ஆக்ரமித்தது.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சோடு அந்த போட்டோவை டைரியில் வைத்து, மீண்டும் கப்போர்டில் அதே இடத்தில் வைத்தாள் ஹரிணி.

'தருண் நான் உங்களை நேசிக்கிறேன். இந்த நொடி முதல். என் மனம் உங்களை விரும்புகிறது தருண்' என தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

கல்யாண ரிசப்ஷன் போது, வந்த அந்த மாடல் போன்ற அழகி... பெயர்... ஆங்.. தாரிணி அவள் ஞாபகம் வந்து ஏனோ மனதை அலைக்கழித்தது.

'தருண்.. அவளைக் காதலித்திருப்பானோ.. பின். ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை? ம்.. ம். என்னை நவீனுக்காக திருமணம் செய்து கொண்டானா.

'காட்... ஏன் இவ்வளவு குழப்பங்கள்? தருணிடம்... தருணிடமே கேட்டு விடலாமா?' என ஒரு நொடி யோசித்தவள் தன்னையே கடிந்து கொண்டாள்.

முட்டாள். தருண் உன்னைப் பற்றி என்ன நினைப்பான். இப்படி எல்லாம் கேட்டால் என அவள் மனசாட்சி எதிர்ப்பு தெரிவித்தது.

ம்.. ம்.. வேண்டாம் இப்படியே விட்டு விடலாம். தருண் எனக்கு இதை எப்படிக் கையாள்வது எனத் தெரியவில்லை.

யாரிடமும் கேட்கவும் முடியாமல், பேசவும் முடியாமல் என்ன அவஸ்தை இது என தனக்குள்ளே மருகினாள் ஹரிணி. ஒரு வழியாக மனதை தேற்றிக் கொண்டு தருண் ரூமிலிருந்து கீழே இறங்கினாள்.



ஹாலில் இருந்த சோபாவில் உட்கார்ந்து டி.வி.யை ஆன் செய்தாள். அதில் அவள் மனம் பதியவில்லை.

## 21

**பூவோடு**
**பேசாத**
**பட்டாம்பூச்சி**
**உண்டா?**
**மழையைப்**
**பார்த்து**
**ஆடாத**
**மயில் உண்டா?**
**நிலவைப்**
**பார்த்து**
**ஏங்காத**
**நட்சத்திரம்**
**உண்டா?**
**அது போல்**
**நான்**
**உன் அன்பு மழையில்**
**ஆயுள் முழுக்க**
**நனைய ஆசைப்**
**படுகிறேன்! எப்போது**
**நிறைவேறும்? சொல்!**

''அண்ணி, எங்க கிளாஸ் எல்லாம், ஒரு வாரம் டூர் போறோம், எஜுகேஷன் டூர். நார்த் இண்டியாவுக்கு, அண்ணன்கிட்ட கேட்டு பர்மிஷன் வாங்கிக் கொடுங்க, ப்ளீஸ்'' என்றான் ஸ்கூலில் இருந்து வந்தவுடன் ஹரிணியிடம், நவீன்.

''ஓ குட். அண்ணா இதுக்கெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டார். எங்க எல்லாம் போற ப்ளான் நவீன்?'' என்றாள் ஹரிணி அவனுக்கு சாப்பாடு டைனிங் டேபிளில் எடுத்து வைத்தபடி,

''ம்.. ம்.. நிர்மலா மிஸ், நாளைக்கு, எல்லாம் டீடெய்லா சொல்லுவாங்க. ஈமெயிலும் பண்ணுவாங்க. தாஜ்மஹால் போறோம் அண்ணி'' என்றான் நவீன் உற்சாகமாக.

''ஓ, ஜாலிதான் நவீன் உனக்கு. நீ இல்லாட்டி எனக்கு போர் அடிக்கும்'' என்றாள் பரிதாபமான குரலில்.

''ம். அண்ணி உங்களுக்குத் தான் அண்ணன் இருக்கார் இல்ல. அதனால போர் எல்லாம் அடிக்காது. அண்ணா பர்மிஷன் கொடுப்பார் இல்ல அண்ணி'' என்றான் தணிந்த குரலில்.

''ம்.. ம்.. நான் வாங்கித் தரேன் கண்ணா, பர்மிஷன். உனக்கு. இப்ப சமத்தா சாப்பிடு, உனக்குப் பிடிச்ச, வெஜிடபிள் புலவ், ரய்தா, பொடேட்டோ ஃப்ரை, வா.. வா சூடா இருக்கும்போதே சாப்பிடு'' என்றாள் ஹரிணி.

''சரி. அண்ணி. எனக்கு வெஜிடபிள் புலவ் ரொம்பப் பிடிக்கும். சாப்பிட்டு முடிச்சுட்டு, ஹோம்வொர்க் செய்யணும். ஹெல்ப் பண்ணுங்க அண்ணி'' என்றான் நவீன்.



''அதெல்லாம் செய்யலாம். இங்க, முதல்ல சாப்பாட்டைப் பாத்து சாப்பிடு. இந்தா ரெய்தா.. இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோ. ஏய் என்ன இப்படிக் கொறிக்கற? நீ ஸ்பூனைக் கீழ வை. நான் ஊட்டி விடறேன்'' என்று சொல்லியபடி ஹரிணி அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

அவனிடம் பேசியபடி, அவனுக்கு சாப்பாடு, ஊட்டினாள் ஹரிணி.

''அண்ணி, நான் உங்க மடியிலே உட்கார்ந்துக்கவா? எனக்கு ஆசையா இருக்கு'' என்று சட்டென நவீன் கேட்க, மனம் நெகிழ்ந்தாள்.

''டேய், நவீன்.. இதுக்கு ஏன் என்னைக் கேக்கற...? வா கீழே உட்காரலாமா'' என்றாள் சிரித்தபடி.

''அண்ணி, தோட்டத்துக்குப் போகலாமா? அங்க உட்கார்ந்து சாப்பிடலாம், ப்ளீஸ்'' என்றான் இறைஞ்சலாக நவீன்.

''வா... வா. நிலா சாப்பாடு சாப்பிடலாம். இன்னிக்கு பௌர்ணமி வேற. வா, போகலாம்'' என்று அவன் கையைப் பிடித்தபடி, நடந்தாள் ஹரிணி.

இன்னொரு கையில் நவீனின் பிளேட்டை எடுத்துக் கொண்டு பேசியபடி நடந்தாள்.

ஹாலைத் தாண்டும்போது தருண், காரை நிறுத்தி விட்டு இறங்குவது ஹரிணிக்குத் தெரிந்தது.

''ஐ அண்ணா வர்றார். ஜாலி. அண்ணி, அவரையும் சாப்பிடக் கூப்பிடுங்க. நம்ம நைஸா அங்கேயே பர்மிஷன் வாங்கலாம், சரியா'' என்று மெதுவாய் காதைக் கடித்தான் நவீன்.

அதற்குள் தருண் நேராக எதிரே வந்துவிட, ஹரிணிக்கு மனம் படபடத்தது. ஒரு நொடி இருவர் கண்களும் சந்தித்தன.

''அண்ணா, வாங்க, நாங்க பௌர்ணமி, நிலா சாப்பாடு சாப்பிடப் போறோம். நீங்களும் வாங்க... ப்ளீஸ்'' என்றான் நவீன் ஜாலியாக.

''ம்.. ம்... நீ கூப்பிடற.. உன் அண்ணி வாயைத் திறக்க மாட்டேங்கறாங்க... நவீன்'' என்றான் தருண் கிண்டலாக.

அவனைப் பார்த்தால், என்ன பேச வேணும் என மனதிற்குள் யோசித்து வைத்தது எல்லாம் மறந்து போனது ஹரிணிக்கு.

ஒர வழியாக தன்னை சமாளித்துக் கொண்டு, தருணைப் பார்த்தாள் ஹரிணி. ''வாங்க... தருண், நீ... நீங்களும் இங்கேயே டின்னர் சாப்பிடலாம்'' என்றாள் மெதுவாக.

ஒரு நீல நிற புடவையில் நிலவு ஒளி பாய தேவதை போல் இருந்த ஹரிணி அழைத்தவுடன் தருண் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

அவள் கண்களில் இவ்வளவு நாள் தெரிந்த கோபம், எரிச்சல் எல்லாம் மறைந்து விட்டது போல் ஒரு பிரமை அவனுக்கு.

''அண்ணா, வாங்க, வாங்க'' என நவீன் கையைத் தொடவும் தருணுக்கு சுய உணர்வு வந்தது.

''ம்.. ம்.. ஹரிணி ஒரு டூ மினிட்ஸ். நான் போய் ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வர்றேன். ஜஸ்ட் டூ மினிட்ஸ்'' என்று கடகடவென உள்ளே சென்றான் தருண்.



''அண்ணி, அண்ணா, நல்ல மூடில இருக்கார். அதனால பர்மிஷன் கிடைக்கும், கரெக்டா?'' என்றான் நவீன்.

''ம்.. ம்.. நானும் அப்படித்தான் நினைக்கறேன்'' என்றாள் ஹரிணி.

செடிகள், பூச்செடிகள் அருகில் மணல் இருக்க அங்கே உட்கார்ந்தனர் ஹரிணியும், நவீனும்.

''நவீன், சாப்பிடு, இந்தா'' என அவனுக்கு வாயில் ஊட்டினாள் ஹரிணி.

கை கால் கழுவிவிட்டு வேகமாக, தோட்டம் நோக்கி நடந்து வந்தான் தருண். 'ஹரிணியிடம் இன்று ஏதோ வித்தியாசம் தெரிகிறது. ஒருவேளை எனக்குத் தான் பிரமையா?' என யோசித்தபடி நடந்தான்.

நிலவு ஒளியில் பூக்களுக்கு இடையே அழகாக உட்கார்ந்திருந்த ஹரிணியை ரசித்தபடியே அவர்கள் அருகில் வந்து உட்கார்ந்தான்.

''வாங்க... நான் போய் உங்களுக்கும் தட்டில் எடுத்துட்டு வர்றேன்'' என எழுந்திருக்க முயன்றாள் ஹரிணி.

''அண்ணி, நீங்களே... இந்தத் தட்டில இருந்து எனக்கு ஒரு வாய், அண்ணனுக்கு ஒரு வாய் ஊட்டுங்க. யார் ஃபாஸ்ட்டா சாப்பிடறாங்க, அப்படின்னு பாக்கலமா?'' என்றான் சவால் விடுவது போல நவீன்.

''ம்.. நான் ரெடி, நவீன். எனக்கு பயங்கர பசி வேற. ஹரிணி கமான்'' என தருண் சொல்ல திணறினாள் ஹரிணி. அவள் முகம் சிவந்தது.

''ப்ளீஸ் தருண். கை நீட்டுங்க. நான் உருட்டிக் கொடுக்கறேன்'' என்றாள் மெதுவாக தலை குனிந்தபடி.

''அதெல்லாம் கிடையாது, அண்ணி, நீங்க அண்ணா வுக்கு வாயில கொடுத்தாத் தான் நான் சாப்பிடுவேன்'' என்றான் தீர்மானமாக, நவீன்.

''ம்.. ம்.. ப்ளீஸ் ஹரிணி. நவீனுக்காக கொஞ்சம் ரூல்ஸ் எல்லாம் ரிலாக்ஸ் செய்யக் கூடாதா மிஸ்'' என்றான் கிண்டலாக தருண்.

ஹரிணியின் கண்களில் வெட்கம் தெரிந்தது. தருண் சட்டென அவள் கையை எடுத்து அவன் வாய் அருகே எடுத்துச் சென்றான்.

ஹரிணி கொஞ்சம் பயந்து போய் அவனைப் பார்க்க ''பயப்படாதே. உன் கை விரலை டேஸ்ட் செய்யணும். அப்படின்னு ஆசையா இருக்கு... ம்.. ம்.. பட் ஐ வில் கண்ட்ரோல் மைசெல்ஃப்'' என்றான் தருண் சிரித்தபடி.

ஹரிணியின் கைவிரல்கள் வழியாக வந்த உணவு தருணிற்கு இனித்தது. 'ம். ம். இதுவரை யாரும் எனக்கு இப்படிக் கொடுத்ததில்லை. ஹரிணி ரொம்ப தேங்க்ஸ்' என்றான் மனதிற்குள்.

முதலில் கூச்சப்பட்ட ஹரிணி, பின் கடகடவென நவீனுக்கும், தருணுக்கும் புலவை ஊட்டி முடித்தாள்.

''ரொம்ப நல்லா இருக்கு ஹரிணி. புலவ் சாப்பாட்டை விட, உன் கையால எனக்குக் குடுத்ததுக்கு ரொம்ப.. ரொம்ப தேங்க்ஸ்.

''எ... எனக்கு நினைவு தெரிஞ்ச வரைக்கும், யாரும் எனக்கு இப்படி சாப்பாடு அன்பா, ஆசையா கொடுத்த தில்லை ஹரிணி. அம்மா உட்பட'' என சொல்லும் போது தருண் கண்கள் சட்டென கலங்கின.



கை கழுவிக் கொண்டிருந்த ஹரிணிக்கு அவன் உணர்ந்து சொன்னது மனதைத் தொட்டது. அவன் கண்களைத் துடைத்து சமாதானம் சொல்லத் துடித்த உணர்வை அடக்கினாள்.

''ம்... ம்... இதுக்கெல்லாம் எதுக்கு தேங்க்ஸ் தருண். இந்தாங்க... தண்ணி குடிங்க'' என்று டம்ளரை அவ னிடம் கொடுத்தாள்.

''நீ சாப்பிடலயா, ஹரிணி? மணி எட்டாகுதே'' என்றான் அக்கறையாக.

''இ... இல்லை இனிமே தான்'' என்றாள் மெதுவாக. மனதிற்குள் தன் மேல் அக்கறையாக விசாரிக்கிறானே என சந்தோஷமாக இருந்தது ஹரிணிக்கு.

''ஒரு நிமிஷம் நான் உனக்கு ஸர்வ் பண்றேன். கிச்சன் போய் எடுத்துட்டு வர்றேன். நவீன் வா நீயும் என்னோட. ஹோம் வொர்க் செய்யணும் இல்ல. நீ ஆரம்பி ஹோம் ஒர்க்கை, அண்ணா வில் கம் இன் டென் மினிட்ஸ்'' என்றான் தருண், நவீனைத் தூக்கியபடி.

''இ.. இல்லை தருண். நான்... நான் அங்கேயே சாப்பிடறேன்'' என அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தருணும் நவீனும் அவள் கண்களுக்கு புள்ளி யாகத் தெரிந்தனர்.

'எவ்வளவு வேகமாக நடக்கிறான். ம்.. ம்.. ரொம்ப இனிமையான பௌர்ணமி இது. தருண் அன்புக்கு இவ்வளவு ஏங்கி இருக்கான். பாவம்.. அவனை கவனிச் சது எல்லாம் வேலையாட்கள் தான் போல' என்று மனமெல்லாம் அவனைப் பற்றியே நினைத்துக் கொண் டிருந்தாள் ஹரிணி.

தருண் வந்தது தெரியாமல் யோசனையில் மூழ்கி யிருந்தாள் ஹரிணி.

''ஹரிணி... என்ன பயங்கரமா யோசனை? அடுத்த கதை... பத்தி யோசிக்கிறியா?'' என்று தருண் குரல் கேட்க, சிரித்தபடி இல்லை என்பது போல் தலை அசைத்தாள்.

''இயற்கை ரொம்ப அழகா இருக்கு இல்ல. பௌர்ணமி நிலா, அதுக்குப் போட்டியா எவ்வளவு அழகான பூக்கள் இங்க இருக்கு. கலர் கலரா, எவ்வளவு நல்லா, அழகா இருக்கு இல்ல தருண்'' என்றாள் இயற்கையை அனு பவித்தபடியே ஹரிணி.

''ம்.. ம்.. இது... எல்லாமே எனக்கும் ரொம்ப அழகா, புதுசாத் தெரியுது ஹரிணி. காரணம் நீ தான். நீ கூடவே இருந்தேன்னா, எப்பவும் மனதில் ஒரு இனிமை... அமைதி இருக்கு ஹரிணி.

''எனக்கு உன்னை மாதிரி அழகா எழுத வராது, பேச வராது. பட்... நான் இப்ப எப்படி ஃபீல் பண்றேன்னா இந்த நொடியே... இந்த சந்தோஷத்தை அனுபவித்தபடியே... உன் மடியில் தலை சாய்த்து, அப்படியே இருந்திடலாம் போல இருக்கு ஹரிணி'' என்றான் குரல் உடைய தருண்.

அவன் சொன்னதைக் கேட்டுத் துடித்தாள் ஹரிணி. சட்டென அவன் கையை எடுத்து தன் கையோடு சேர்த்துக் கொண்டாள்.

''ப்ளீஸ்... ப்ளீஸ் தருண், அப்படி எல்லாம் பேசாதீங்க. நம்ம... நம்ம வாழ்க்கையை இப்ப தான் தொடங்கி இருக் கோம்'' என முடிக்க முடியாமல் அவளும் திணறினாள்.

கண்கள் கலங்க, அவள் பேசுவது... தருணின் மனதைத் தொட்டது. சட்டென அவளை இழுத்து அணைத்தான்.



அவன் தோளில் முகம் புதைத்த ஹரிணி விம்மத் தொடங்கினாள்.

''ஏய்... என்ன இது? ஏன் அழற இப்ப? நான் நான்... செய்யறது பிடிக்கலையா...?'' என்றான்.

அவளைத் தன் அணைப்பில் இருந்து விடுவித்து, அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தியபடி.

அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தான். ''சாரி.. சாரி ஹரிணி. நான் நம்ம ஒப்பந்தத்தை மீறிட்டேன். அதனால தானே அழறே நீ... ஐ ஆம் சாரி'' என்று அவளை விடுவித்தான்.

''வா... சாப்பிடு.. உட்கார்'' என அவன் சொன்னவுடன் கண்களைத் துடைத்தபடி கீழே உட்கார்ந்தாள் ஹரிணி.

அவனே அவளுக்கு புலவையும், கொஞ்சம் ரெய்தாவும் தட்டில் வைத்தான். ''ம்... ம்.. சாப்பிடு ஹரிணி. இப்ப எல்லாம் கதை எழுதறதில்லியா?'' என்றான் பேச்சை மாற்றும் விதமாக.

''ம்... ம்... ஒரு புதுக் கதை எழுதணும். மனசில தீம் இருக்கு. டெவலப் செஞ்சு எழுதணும்'' என்றாள் இயல் பாக ஹரிணி.

''தட்ஸ் குட். எல்லாருக்கும் இந்த டேலண்ட் இல்லை. ஸோ.. டோண்ட் லீவ் இட். உனக்கு என்ன உதவி வேணும்னாலும் கேள். ஐ ஆம் ஹானர்ட் இன் டூயிங் இட்... ஃபார் யூ'' என்றான்.

சிரித்தபடி தலை அசைத்தாள் ஹரிணி. ''நல்லா சாப்பிடு ஹரிணி. நீ இங்க வந்த பிறகு மெலிந்த மாதிரி தோணுது'' என்றான் அக்கறையாக.

''ம்.. ம்.. நான் நல்லா சாப்பிடறேன் தருண். இன் ஃபாக்ட், இங்க வந்து வெயிட் போட்ட மாதிரி எனக்குத் தெரியுது'' என்றாள் சாப்பிட்டபடி.

அவன் கண்கள் அவளை ரசனையோடு வருடியது. ''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை ஹரிணி. நீ எதையாவது நினைச்சுகிட்டு சாப்பாட்டை எல்லாம் குறைக்காதே'' என்றான்.

தருணின் மொபைல் அடிக்க ''ஒன் செகண்ட் ஹரிணி'' என சொல்லிவிட்டு மொபைலின் ஆன்ஸர் பட்டனை அழுத்தினான்.

''ஹாய் தாரிணி... சொல்லு. என்ன விஷயம்...?'' என பேசியவாறே ஹரிணியின் முகத்தைக் கூர்ந்து கவனித் தான் தருண்.

சட்டென அவள் கண்களில் ஒரு கோபம் தெரிந்தது. அதை கவனித்த தருண் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'நோ... தாரிணி. நீ என்ன வேணா சொல்லு. ஐ டோண்ட் மைண்ட். பட் நான் உன்னோட எங்கேயும் அவுட்டிங் வரலை. எனக்கு உன்னோட எங்கேயும் வர இன்டிரஸ்ட் இல்லை.

''இனிமே சும்மா, சும்மா கூப்பிட்டுத் தொல்லை செய்யாதே'' என கட் செய்தான் போனை.

''யார் போனில, எனி ப்ராப்ளம்?'' என்றாள் ஹரிணி கூர்மையாக அவனைப் பார்த்தவாறு.

''ம்.. ம்.. தாரிணி. என்னோட பழைய பிரண்ட் டின்னருக்கு வெளியில கூப்பிட்டா'' என்றான் அவளைப் பார்த்தவாறு.



''ஓ... அன்னிக்கு கல்யாணத்துக்கு கூட ஐ மீன் ரிசப்ஷனுக்கு கூட வந்தாங்களே... அவங்களா?'' என்றாள்.

''யெஸ். யூ ஆர் ரைட். அவதான்'' என்றான் தருண்.

''ஆசையா கூப்பிடறாங்க... போ... போக வேண்டியது தானே கிளம்புங்க'' என்றாள் ஹரிணி வெறுப்பாக.

அவள் முகத்தை பார்த்த தருணுக்கு எல்லாம் புரிந்தது. 'ஷி இஸ் இன் லவ் வித் மீ' என மனசு பரபரத்து சந்தோஷமானது.

கை கழுவிய ஹரிணி, ''நான்... நான் உள்ளே போறேன். நீங்க தாரிணியோட டின்னர் போங்க'' என்று சொல்லி விட்டு எழுந்து இரண்டு அடி எடுத்து வைத்திருப்பாள்.

தருணின் கைகள் பின்னால் இருந்து சட்டென இழுத்து அணைக்க, தடுமாறி அவன் மேல் சாய்ந்தாள். எப்படி அவன் மடி மேல் விழுந்தோம் என யோசிப்பதற்குள் தருண் உதடுகள் அவள் முகத்தில், கண்களில், கன்னத் தில் பதிந்தன. பின் அவளுடைய கைகளை அழுத்த மாகப் பற்றினான்.

''ஹரிணி கல்யாணத்துக்கு முன்... என்னுடைய கடந்த கால வாழ்க்கையை நினைத்து... நானே... என் மேல் வெக்கப்படறேன். பெண்கள் மேல் எனக்கு பெரிசா நல்ல எண்ணம் ஏதும் கிடையாது. அதனால தான் நான் அப்படி நடந்து கொண்டேன். என்னை மன்னித்து விடு.

''ஆனால் நான் எப்ப உன்னை விரும்ப ஆரம்பிச்சேனா அந்த நொடி முதல், என் மனம் முழுவதும் நீதான் ஹரிணி... ஹனி... இருக்கிறாய்.

''இது சத்தியம். இனி... இனி என் வாழ்க்கையில் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் இட

மில்லை. நீ என் மேல் இப்ப கொஞ்சம் நேரம் முன் காட்டினாயே அந்த... அன்பு பாசம் எல்லாம் எனக்கு என் வாழ்நாள் முழுக்க வேணும். நான் இறக்கும் வரை வேணும் ஹனி.

''தருவாயா, ப்ளீஸ்'' என தருண் கெஞ்சவும், மனம் நெகிழ்ந்தாள் ஹரிணி.

''எ... என்ன இது தருண். ப்ளீஸ் இப்படி எல்லாம் பேசாதீங்க'' என்று அவன் உதடுகள் மேல் கைவிரல் களை வைத்துப் பொத்தினாள்.

''ரொம்ப தேங்க்ஸ், ஹரிணி... என்னைப் புரிஞ்சு கிட்டதுக்கு. ஐ லவ் யூ ஹரிணி, உன்னை நான் கட்டாயப் படுத்தி, கல்யாணம் செய்யறதைத் தவிர வேற வழி தெரியலை. உனக்குப் பணக்காரர்களைப் பிடிக்காது எனத் தெரிந்தவுடன் எனக்கு வேற வழி தெரியாமல் தான் நடித்தேன்... மெக்கானிக் மாதிரி'' என்றான் மன்னிப்பு கேட்கும் தொனியில்.

''ம்.. ம்.. உங்களுக்கு எப்படித் தெரியும் எனக்கு பணக்காரர்களைக் கண்டா பிடிக்காது, அப்படின்னு'' என்றாள், ஹரிணி அவன் மடியில் இருந்து எழுந்தபடி.

''ஐ ஓவர் ஹேர்ட்... நீ.. அன்னிக்கு வேடந்தாங்கல் வந்த இல்ல... ஆசிரமத்து பசங்களோட, அப்ப நானும் அங்க இருந்தேன். இட் வாஸ் எ கோயின்சிடென்ஸ்.

''நீயும் உன் பாய் ஃபிரெண்டும் பேசிகிட்டு இருந்ததை நான் கேட்டேன்'' என்றான் அவளை சீண்டும் குரலில்.

ஒரு நிமிடம் யோசித்த ஹரிணி ''பரத் ஒண்ணும் பாய் - பிரண்ட் எல்லாம் கிடையாது'' என்றாள் சற்றே உரத்த குரலில், கோபமாக.



''கூல்.. கூல் டியர். ஐ நோ அபௌட் யூ இப்ப. ஆனா அன்னிக்கு, பரத் மேல. அவ்வளவு எரிச்சல் கோபம் எல்லாம் வந்தது நிஜம் ஹரிணி.

''அப்பதான் உன்னை அடைஞ்சே தீரணும் அப்படின்னு ஒரு வெறி. அதுக்கு முன்னாடியே நம்ம முதல் சந்திப்பு முதல் நீ ரொம்ப வித்தியாசமா, எனக்கு ஒரு சவாலாக இருந்தாய் ஹரிணி'' என்றான் அவள் கையைப் பற்றிய படி.

''வாக் போகும்போது நீ என்னிடம் சண்டை போட் டது... அப்புறம் ஹோட்டலில் கோபமாக வாட்ச்சை விட்டெறிந்தது... அப்புறம் சிக்னலில் ஒரு சின்ன ஸ்கூல் பெண்ணை நீ அணைத்து, சமாதானப்படுத்தியது, உன் ஸ்கூட்டி, மழையில் ரிப்பேர் ஆனது இதெல்லாம் நானா ஏதும் செய்யல, தானா வந்த அதிர்ஷ்டம்...'' என்றான் சிரித்தபடி.

''ம்.. ம்.. அந்த... அந்த... அன்னிக்கு லைப்ரரியில இருந்து வந்த அப்ப அந்த ரவுடிகள்.. அவங்க நீங்க அனுப்பிய ஆளுங்களா தருண்?'' என்றாள் ஹரிணி மெலிந்த குரலில்.

''சே... என்னடா... இப்படிக் கேக்கற? அவங்க யாருன்னு எனக்குத் தெரியாது. நீ அன்னிக்கு பட்ட கஷ்டம் ரொம்ப வேதனையா இருந்தது... ஹரிணி.

''பட் பிளெஸ்ஸிங் இன் டிஸ்கய்ஸ் மாதிரி அந்த இன்சிடெண்ட் நடந்ததால நான் உன்னை ப்ரபோஸ் செய்ய வாய்ப்பு கிடைத்தது. ஹனி.

''நவீனும் அவனுக்குத் தெரியாமல் எனக்கு நிறைய ஹெல்ப் செஞ்சான். நல்ல வேளை ரொம்ப சின்னத்

தம்பியா போய்ட்டான்... இல்லேன்னா... அவன் மேலேயே எனக்குப் பொறாமை வந்திருக்கும்'' என்றான் சிரித்தபடி, தருண்.

''சீ.. பாவம்.. சின்னக் குழந்தை அவன். கமான் தருண்'' என்றாள் உரிமையாக ஹரிணி.

''ம்... ம்... அந்த சின்னக் குழந்தைக்கு விளையாட ஒரு சின்னக் குழந்தை வேணும்... எப்ப ரெடியாகும் ஹரிணி'' என்றான் உரிமையாக.

ஹரிணி பேச முடியாமல் முகம் சிவந்தாள். அவள் தவிப்பை, ரசித்தான் தருண்.

''ஒரே ஒரு சந்தேகம் ஹனி எப்படி உனக்கு இன்னிக்கு திடீர்னு என் மேல பாசம்... அன்பு எல்லாம்'' என்றான் உல்லாசமாக.

''ம்.. ம்.... என்னோட வாட்ச் நிஜமாலுமே, காணோமே தருண்... அப்புறம்... என்னோட ஒரு பிங்க் புடவை காணோம் தருண். பாத்தீங்களா'' என்றாள் கண்களில் குறும்பு மின்ன.

தருண் முகம் அசடு வழிந்தது. ''ஓ... மேடம் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் போனீங்களா.. என் ரூமுக்கு... உன்னை'' என்று செல்லமாகக் கன்னத்தைக் கிள்ளினான்.

''அது மட்டும் இல்லை... ஒரு அநாகரிகமான வேலையும் செய்தேன்'' என்றாள் ஹரிணி மெதுவாக.

''ஹரிணி டைரி எல்லாத்தையும்.. படிச்சியா?'' என்றான் வெறுமையான குரலில்.

''ம்.. ம்.. ஆமாம் தருண். நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கீங்க. அதுவும் சின்ன வயசில, அப்படின்னு ஐ ஆம்



சாரி தருண்'' என்று அவன் கையை அழுத்தமாக தன் கையோடு கோர்த்துக் கொண்டாள் ஹரிணி.

ஒரு ஆழ்ந்த நீண்ட மூச்சு வாங்கினான் தருண். பின் அவள் கையை எடுத்து கண்களில் சட்டென ஒற்றிக் கொண்டான்.

''என்னை அநாதையாக ஆக்கி விட்டு ப்ளீஸ் என்னை விட்டு எங்கேயும் போய் விடாதே ஹரிணி. உன்னுடைய இழப்பை என்னால் தாங்க முடியாது. ஐ காண்ட் லிவ் வித் அவுட் யூ'' என்றான் கம்மிய குரலில்.

''நிச்சயமாகப் போக மாட்டேன் தருண்'' என்று சொல்லும் போது அவளும் கண் கலங்கினாள்.

''தேங்க்ஸ் ஹனி... வா... உள்ள போகலாம். இந்த நாளை என்னால மறக்கவே முடியாது'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான் தருண்.

ஹாலில் இருந்த நவீன் ''அண்ணி... அண்ணா கிட்ட பர்மிஷன் கேட்டீங்களா?'' என்றான் ஆவலாக.

''ஓ... சாரிடா'' என முழித்தாள் ஹரிணி.

''டேய் நவீன்... உங்க அண்ணி என்ன சொன்னாலும் நான் இனிமே தலை ஆட்டுவேன். ஸோ எதுவாயிருந்தாலும் ஐ ஆம் ஓ.கே.'' என்றான் தருண் சிரித்தபடி.

''நவீன் கிளாஸ்ல டூர் போறாங்களாம். நார்த் இண்டியாவுக்கு ஒன் வீக், போல அது தான் கேட்டு கிட்டு இருந்தான். நீங்க வர்றதுக்கு முன்னாடி...'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம்... போய்ட்டு வா... நார்த் என்ன உலக டூர் வேணாலும் போயிட்டு வா... ஐ ஆம் ஃபைன்'' என்றான் தருண்.

''ரொம்ப தேங்க்ஸ்... அண்ணி, அண்ணா... உங்களுக்கும் தேங்க்ஸ்'' என்றான் நவீன் உற்சாகமாக.

''ஓ.கே. சொன்னது நான்.. ஆனா முதல்ல தேங்க்ஸ் அங்கயா... ம்... ம்.. ரொம்ப ஸ்மார்ட்டா நீ'' என்று செல்லமாகச் சீண்டினான்.

## 22

**எப்போது**
**வரப்**
**போகிறாய்?**
**நீ என்னைப்**
**பார்த்தபோது**
**மின்சாரம்**
**பாய்ந்தது!**
**ஏதோ ஒரு**
**பனித்துளி**
**என் உடல்**
**முழுவதும்**
**பரவுகிறது!**
**ஏனோ!**
**உள்ளம்**
**மெல்ல**
**உருகுகிறது!**



**பார்க்கும் இடமெல்லாம்!**
**உன் உருவம் தான்!**
**அது ஏன்?**

ஹரிணிக்கு அன்று காலை விழிக்கும்போது, நேற்று நடந்ததெல்லாம் கனவோ என தோன்றியது. ஆனால் நவீன் அருகே படுத்துத் தூங்கும் தருணைப் பார்த்தவுடன் எதுவும் கனவில்லை என்று தோன்றியது.

தான் தன் ரூமில் இல்லாமல் இன்று தருண் ரூமில் நவீனுடன் இந்த பெட்டில் படுத்திருப்பதே இதுக்கு சாட்சி என தனக்குள் சிரித்தபடி எழுந்தாள்.

சேலையை சரி செய்து விட்டு ஏதோ தோன்ற சட்டென படுத்திருக்கும் தருணைப் பார்த்தாள்.

அவன் விழிகள் ரசனையோடு அவளை வருடிக் கொண்டிருந்தன. ''குட்மார்னிங் ஹனி'' என்றான் அவளைச் சட்டென தன் அருகே இழுத்தபடி தருண்.

''ஷ்... குழந்தை தூங்கறான். என்ன இது தருண்'' என்று பொய் கோபப்பட்டாள் ஹரிணி.

''ம்.. முதல்ல, இவனை இந்த ரூமுக்கு பேக் பண்ணி அனுப்பணும்... நைட்டெல்லாம் தூங்கவே முடியல. நீ நல்லா நவீனை கட்டிப் பிடிச்சுகிட்டு தூங்கற. நான் நீங்க ரெண்டு பேரும் தூங்கற அழகைப் பாத்துக்கிட்டு படுத்துகிட்டு இருந்தேன்... கொட்டக் கொட்ட முழிச்சுகிட்டு'' என்றான் ஏக்கமாக தருண்.

ஹரிணியின் முகமெல்லாம் சிவந்து காது மடல்கள் சூடாயின. மெதுவாக அவன் பிடியில் இருந்து விலகினாள்.

''மெதுவா... பேசுங்க. பாவம் தூங்கறான்'' என்றாள் லேசாகச் சிரித்தபடி.

''ம்.. ம்.. உனக்கு ஒரு சாக்கு. இரு. அவன் டூர் போனவுடன்,. உன்னை... கவனிச்சுக்கறேன்'' என்றான் சிரித்தபடி தருண்.

''இருங்க. நான் உங்களுக்கு காப்பி கலந்து எடுத்துட்டு வர்றேன். ப்ரஷ் பண்ணிட்டு கெட் ரெடி'' என்றாள்.

''சரியான ஸ்கூல் மிஸ் தான் நீ. இன்னிக்கு ஆபீஸ் போகணுமா, அப்படின்னு யோசிக்கறேன்'' என்றான் தருண்.

''ம்.. ம்.. கிளம்பிப் போங்க. இதென்ன ஜஸ்ட் லைக் தட் லீவ் போடறது'' என விரட்டினாள்.

''என்னோட ஆபீஸ் தானே மேடம். என் டைம். ஐ கேன் டேக் லீவ். நான் தான் பாஸ். பட் இன்னிக்கு ஒரு மீட்டிங் இருக்கு. கிரிட்டிகல் ஒன். அதான் யோசிக் கறேன்'' என்றான் தருண்.

''ஒழுங்கா மீட்டிங் எல்லாம் முடிச்சுட்டு வாங்க லீவ் எல்லாம் போட வேணாம்'' என்று சிரித்தபடி சொல்லிய வாறு ரூம் விட்டு வெளியேறினாள் ஹரிணி.

ஓ... என் வாழ்க்கை இப்போது எவ்வளவு இனிமை யாக இருக்கிறது என நினைத்தபடி லேப்டாப்பை ஆன் செய்தான் தருண்.

குளித்துவிட்டு சமையல்காரர் உதவியோடு கடகட வென சமைத்து முடித்தாள் ஹரிணி. நவீனுக்கு, லஞ்ச் பாக்ஸ் பேக் செய்துவிட்டு, காலை சாப்பிடுவதற்கு இட்லி ரெடியாக டைனிங் டேபிளில் வைத்தாள்.



குளித்துவிட்டு வந்த தருண் ''ஹனி இதெல்லாம் ஏன் நீ செய்யற? சமைக்கத் தான் ஆள் இருக்கார் இல்ல... ஏன் காலையில ஸ்ட்ரெயின் பண்ற?

''அதுக்கு பதில் என்னோட டைம் ஸ்பெண்ட் பண்ண லாமே'' என்றான் கண்களில் குறும்பு கொப்பளிக்க,

''ம்... ம்.. ஐ லைக் இட் தருண். எனக்கு சமைக்கப் பிடிக்கும். அதனால தான் நானே இழுத்துப் போட்டு கிட்டு செய்யறேன். சாப்பிடுங்க, நவீன் வா சாப்பிடு'' என்று குரல் கொடுத்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்தபின் கார் அருகே சென்று கை அசைத்தாள் ஹரிணி. தருணும் நவீனும் சிரித்தபடி பதிலுக்கு கை காட்டியபடி சென்றனர்.

தன்னுடைய வாழ்க்கை எப்படி இப்படி சட்டென அழகாக மாறி விட்டது என நினைத்து வியந்தாள் ஹரிணி. ம்.. ம். மனசு தான் எல்லாத்துக்கும் காரணம் என நினைத்தபடி, வீட்டினுள் சென்றாள்.

கதை, இன்னிக்கு எழுதத் தொடங்கணும் என நினைத்த வாறு சாப்பிட்டு முடித்தாள்.

''மேடம்.. உங்களுக்கு ஒரு கொரியர்'' என வேலை யாள் வந்து சொன்னவுடன் இந்த அட்ரசில் எனக்கு யாராக இருக்கும் கொரியர் என நினைத்தபடி வராண்டா சென்றாள்.

''மேடம். நீங்க தான் ஹரிணியா? இங்க சைன் பண் ணுங்க...'' என்றார் டெலிவரி பாய்.

அவர் சொன்ன இடத்தில் சைன் பண்ணி விட்டுக் கொரி யரை, வாங்கிக் கொண்டு உள்ளே வந்தாள் ஹரிணி.

நல்ல கனமாக, பார்சல் போல் இருந்ததைப் பிரித்தாள் உள்ளே ஒரு கடிதம். முட்டாள் ஹரிணி என அட்ரஸ் செய்திருந்ததைப் பார்த்தவுடன் மனம் நெருடியது ஹரிணிக்கு.

மனம் பதை பதைக்க லெட்டரை கடகடவென படிக்க ஆரம்பித்தாள். 'ஒரு கொலைகாரனை, அதுவும் சொந்த அப்பாவை கார் ஏற்றிக் கொல்ல முயன்றவனையே கைப் பிடித்திருக்கும் ஹரிணியே உனக்கு மனசாட்சி இல் லையா?

உன்னுடைய அப்பா கால் ஒடிந்து வீல் சேரில் முடங்கி இருக்கக் காரணம் தருண். அதற்கு தேவையான எல்லா ஆதாரமும் இதில் இருக்கு. நல்லா யோசிச்சு உங்க அப்பா மேல இருக்கற பாசம் உண்மைன்னா இந்த இடத்தைக் காலி பண்ணு. இல்லை பணம் முக்கியம்னா கொலைகாரன் தருணோட இரு' என்று முடிந்திருந்தது அந்தக் கடிதம்.

முகவரி ஏதும் இல்லாமல் வந்த அந்தக் கடிதத்தைப் படித்தவுடன் ஹரிணி துடித்தாள். காட் இது பொய்யாக இருக்கக் கூடாதா என மனம் அலை பாய்ந்தது.

கடிதம் கூடவே டாகுமெண்ட்ஸ், அவற்றைப் பார்த்த ஹரிணி அதிர்ந்தாள். அதில் அப்பா விபத்து நடந்தப்ப வந்த செய்தி, பேப்பரில் வந்தது, போட்டோவுடன் இருந்தது.

அந்த போட்டோ கீழ் பெட்டிச் செய்தி கார் விபத்துக்கு 'நந்தினி ஆட்டோமொபைல்ஸின்' தலைவர் கரண் தன் மகன் பொறுப்பில்லை என விளக்கமளித்துள்ளார் என்று இருந்தது.



'ஓ... நந்தினி தான் தருணின் அம்மா. கரண் தான் நவீனின் அப்பா.. காட் அப்ப.. அப்ப இது உண்மை தான்.

'தருண் நீங்க... நீங்க தான் எங்கப்பா மேல காரை ஏத்திட்டு, மனிதாபிமானம் இல்லாமல், நஷ்ட ஈடு கூட இல்லாமல், தர மனசில்லாமல் இழுத்தடித்து வழக்கை இழுத்தடித்தீர்களா?

'நோ... தருண்.. நோ... உங்களை என்னால ஏத்துக்க முடியாது.

'அப்பா இதெல்லாம் தெரியாமல் நான் இந்தத் தப்பை செய்து விட்டேன்' என மனதுக்குள் அழுதாள் ஹரிணி.

ஏதும் பிடிக்காமல் அன்று முழுவதும் அழுதபடியே இருந்தாள். கடவுளே இது தான் விதியா? நான் தருணிடம் நெருங்கி, மனதளவில் விரும்பும் போது எல்லாம் தெரிகிறது.

'தருண்.. ஏன் இப்படிச் செய்தீங்க? என்னால உங்க மத்த தவறுகளை மன்னித்த மாதிரி இதை மன்னிக்க முடியாது, மறக்க முடியாது' என மனதிற்குள் புலம்பினாள்.

மதியம் இரண்டு மணி அளவில் வீட்டுக்கு போன் செய்தான் தருண். ரிங் போய்க் கொண்டே இருந்தது. ஹரிணியின் மொபைலைத் தொடர்பு கொண்டான்.

அதுவும் ரிங் இடை விடாமல் போக, ஏதோ மனதை உறுத்தவே சமையல்காரரைத் தொடர்பு கொண்டான். அவர் தயங்கியபடி ஹரிணி, அழுது கொண்டிருப்பதைச் சொன்னார்.

அதைக் கேட்டவுடன் தருண் பதறினான். 'என்ன விஷயம்? ஏதோ கொரியர் வந்தவுடன் அழுவதாகச்

சொன்னாரே. ஒரு வேளை மாமாவுக்கு உடம்புக்கு ஏதாவது சரியில்லையா... என்ன இது?' என குழம்பினான்.

சரி வீட்டிற்கு போய் பார்த்து விடலாம் என முடிவு செய்தபடி கார் நோக்கிச் சென்றான். கார் ஓட்டும்போது, தருண் மனசு சங்கடமாக இருந்தது.

ம்.. ம்.. நேற்று தான் வாழ்க்கை ஹரிணியுடன் தொடங்கியது என நினைத்திருந்தேன். பட் இன்னிக்கு என்ன ஆச்சு அப்படின்னு தெரியலையே என யோசித்த படி வண்டியை ஓட்டினான் தருண்.

வீட்டிற்குள் நுழையும் போது பேச்சுக் குரல் கேட்டது. யாராக இருக்கும் என யோசித்தபடி உள்ளே நுழைந்தான் தருண்.

ஹாலில் சோபாவில் ஹரிணி அழுது கொண்டிருப்பது தெரிந்தது. பக்கத்தில் ஹரிணியின் அப்பா அவளை சமாதானப்படுத்துவது தெரிந்தது.

''எ... என்ன ஆச்சு, ஹரிணி. மாமா வாங்க ஏன் ஹரிணி இப்படி அழறா? உடம்பு சரியில்லையா?'' என அவள் நெற்றியை தொட்டுப் பார்த்தான்.

''தருண். டோண்ட் டச் மி. நீங்க.. நீங்க இவ்வளவு மோசமானவரா இருப்பீங்க, அப்படின்னு நான் நினைக் கல ஐ ஹேட் யூ'' என்று கதறினாள்.

''மாப்பிள்ளை... நான் வந்ததிலிருந்து ஹரிணி இப்படி தான் அழுதுகிட்டு இருக்கா. என்னன்னே தெரியலை'' என்றார் மெதுவாக.

''அப்பா.. என்னால ஒரு நிமிஷம் கூட இங்க இருக்க முடியாது. நானும் உங்க கூட வரேன். இந்த கொலை காரனோட என்னால இருக்க முடியாது'' என கத்தினாள் ஹரிணி.



டேபிள் மேல் இருந்த கொரியர் மேல் தருணின் கண்கள் பாய்ந்தன. வேகமாக டேபிள் அருகே சென்று, அதை எடுத்தான் தருண்.

அதில் இருப்பதைப் படித்தவுடன் அவன் மனம் துடித்தது... ம்... ம்... இதுதான் விஷயமா? இது... யார் வேலையாக இருக்கும்? என ஒரு நொடி யோசித்தான்.

பின் ஒரு முடிவுக்கு வந்தவனாக ''சரி ஹரிணி... உன் இஷ்டம். நீ என்ன முடிவு வேணா எடு'' என்றான் வறண்ட குரலில்.

''என்ன மாப்பிள்ளை... அவ.. அவதான் சின்னப் பெண், ஏதோ தெரியாம சொன்னா, நீங்களும்... அப்படி என்ன இருக்கு அந்த லெட்டர் குடுங்க'' என்றார் வீல் சேரைத் தள்ளியபடி.

''வே.. வேண்டாம் மாமா.. ஒண்ணுமில்லை'' என அதை மறைக்க முயன்றான் தருண்.

''அதைக் காட்டுங்க.. அப்ப தான் தருண் உங்கள பத்தி அப்பாவுக்குத் தெரியும்'' என சீறினாள். அவளே அவன் கையில் இருந்து அதைப் பிடுங்கி அப்பாவிடம் நீட்டி னாள். அதைப் படித்த நாராயணனின் முகம் மாறியது.

''ஹரிணி. நீ இப்ப உண்மையைத் தெரிஞ்சுக்கணும். அதுக்கு நேரம் வந்திடுச்சு'' என்று சொல்லும்போதே தருண் குறுக்கிட்டான்.

''மாமா... வேணாம்... ப்ளீஸ்'' என்று தருண் கெஞ்சி னான்.

''இ... இல்லை மாப்பிள்ளை. அவளுக்கு தெரியட்டும். அது தான் நல்லது'' என்று நிதானமாக ஹரிணியைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

''ஹரிணி. நீ நினைக்கிற மாதிரி அந்தக் கார் விபத்துக்கு தருண் காரணம் இல்லை. அவர் அப்பா, காரணமில்லை. நான் தான் காரணம். அன்னிக்கு என்ன நடந்தது அப்படின்னு உன்கிட்ட சொல்லக் கூடாது அப்படின்னு நான் நினைச்சிருந்தேன். பட் இப்ப சொல்ல வேண்டிய நேரம் வந்திடுத்து'' என்று சற்று நிறுத்தினார்.

''மாமா... வேண்டாம். இவ்வளவு நாள் பாதுகாத்த ரகசியம்...'' என தருண் குறுக்கிட்டான் மீண்டும்.

சிரித்தவாறு ''பரவாயில்ல... மாப்பிள்ளை'' என சொன்னவாறு விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார் நாராயணன்.

''ஹரிணி உங்கம்மா இறந்த பின் நான் எந்தப் பெண்ணையும் மனதால நினைக்கல அப்படின்னு நீ இவ்வளவு நாள் நினைச்சுகிட்டு இருந்த.

''பட் அது உண்மை இல்லை. என் கூட என்னோட வேலை பாத்த ஒரு பெண். பேர் மாலா, அவளும் லெக்சரர்தான் காலேஜில.. ரசனைகள் எங்க இரண்டு பேருக்கும் ஒண்ணா இருந்தது.

''என்னைக் கல்யாணம் செய்யவும் அவளுக்கு விருப்பம் தான்'' என்று பெருமூச்செறிந்தார்.

''அப்பா... அப்புறம் நீங்க ஏன் கல்யாணம் செஞ்சுக் கலை ஏன் அப்பா?'' என்றாள் ஹரிணி.

''ம்.. ம். கல்யாணத்துக்கு அப்புறம் நீ வீட்டில் இருக்கக் கூடாது. உன்னை எங்காவது ஹாஸ்டலில் சேர்க்கணும், அப்படின்னு அவ கண்டிஷன் போட்டா.

''எனக்கு அதில விருப்பம் துளிகூட இல்லை ஹரிணி. ஆனா அவளையும் மறக்க முடியாம திண்டாடினேன்.



''அப்ப தான் கொஞ்ச கொஞ்சமா குடிக்க ஆரம்பித் தேன் ஹரிணி'' என்றார் மெதுவாக.

அதைக் கேட்ட ஹரிணி பதறினாள். ''அப்பா நீங்களா... நீங்களா'' என மருகினாள்.

''ம்.. ம்.. விபத்து நடந்த அன்னிக்குத் தான் மாலாவுக்கு கல்யாணம். அதனால நான்.. நான் அன்னிக்கு ஓவரா குடிச்சுட்டு சட்டுன்னு ராங் சைட்ல வந்தேன்.

''கார் ஓட்டிகிட்டு இருந்தது தருண். பிரேக் பிடித் தாலும் அந்த விபத்தை அவரால தடுக்க முடியலை. என்னை ஹாஸ்பிடல்ல சேத்தது, அதுக்கு உண்டான பணம் கட்டியது எல்லாம் தருண் தான்'' என்றார் நாராயணன்.

''அப்பா... ஏன் அப்பா இதெல்லாம் என் கிட்ட சொல்லலை. ஏன்?'' என்று அவர் கைகளைப் பிடித்தபடி மெதுவாகக் கேட்டாள் ஹரிணி.

''நீ என் மேல வெச்சிருந்த மரியாதை, அப்பா ரொம்ப நல்லவர் அப்படின்னு வெச்சிருந்த கோட்டை இடிஞ்சு போயிடக் கூடாது அப்படின்னு தான் நான் இதை மறைச்சேன்.

''அதோட நான் குடிச்சுட்டு வந்தது... பேப்பரில் வரக் கூடாது, அப்படின்னு தருணை கெஞ்சிக் கேட்டுகிட் டேன். அவரும்.. அப்படி ஏதும் வராம பாத்துக்கறேன். அப்படின்னு ப்ராமிஸ் செஞ்சார்'' என்றார் நாராயணன்.

ஹரிணிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. 'தருண்.. தருண் உங்களைப் பத்தி உண்மை தெரியாம நான்... நான் தப்பா நினைச்சுட்டேன்' என மனதிற்குள் புலம்பினாள்.

''தருணை முதலில் பார்த்தவுடனேயே எனக்கு அடையாளம்.. தெரிந்து விட்டது ஹரிணி. நானும் அவரும் பேசினோம்.

''அவர் உன்னை எவ்வளவு விரும்பறார் அப்படின்னு எனக்குப் புரிஞ்சுது. அதனால தான் நான் கல்யாணத் துக்கு சம்மதிச்சேன்.

''அதனால அவர் மேல எந்தத் தப்பும் இல்லைடா. அப்பா... அப்பா மேல தான் எல்லா தப்பும் எ... என்னை மன்னிப்பாயா ஹரிணி'' என்று அவள் கையைப் பற்றியபடி அழுதார் நாராயணன்.

ஏதும் பேச முடியாமல் ஹரிணியும் அவர் கைகளைப் பற்றியபடி அழுதாள். பின் தன்னை சமாளித்துக் கொண்டவள்,

''அப்பா... நீங்க எந்தக் குற்ற உணர்ச்சியும் இல்லாமல் பழையபடி இருங்க அப்பா. எனக்காக நீங்க விரும்பிய பெண்ணை வாழ்க்கையில இழந்திட்டீங்க. உங்க மேல நான் வச்சிருக்கிற மரியாதையும், மதிப்பும் ஜாஸ்திதான் ஆயிருக்கு இப்ப'' என்றாள் மெதுவாக.

''ம்.. ம்.. இப்படி ரெண்டு பேரும் மாத்தி மாத்தி, அழுதுகிட்டு இருந்தீங்கன்னா ஹால்ல போட் ஒண்ணு வாங்கி விடலாமா, அப்படின்னு யோசிக்கறேன்'' எனறான் தருண் சிரிக்காமல்.

''அப்பா... வாங்க.. வந்து ரெஸ்ட் எடுங்க. நீங்க எப்படி இன்னிக்கு கரெக்டா வந்தீங்க. இங்க'' என்றாள் ஹரிணி ஆச்சரியமாக.

''என்னவோ ரெண்டு நாளாவே மனசு கொஞ்சம் டிஸ்டர்ப்பா இருந்தது ஹரிணி. அது தான் இண்டியூஷன் போல, சட்டுன்னு ஜேம்ஸோட புறப்பட்டு வந்திட்டேன்.''



''ஜேம்ஸ் அவர் ஃபிரண்டை பார்க்கப் போயிருக்கார். அண்ணா நகர் வரைக்கும். இப்ப வந்திடுவார்'' என்றார் நாராயணன்.

''சரிம்மா.. நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன்'' என்று வீல் சேரை தள்ள முயன்றார்.

''இருங்க... மாமா...'' என சொல்லியபடி தருண் சேரைத் தள்ளினான். அவர் கட்டிலில் படுக்க உதவி செய்தான்.

பின் ஹாலிற்கு வந்தான். அங்கே ஹரிணி ஜன்னல் வழியாக வெளியே தோட்டத்தைப் பார்த்து கொண் டிருப்பது தெரிந்தது.

மெதுவாக அவள் தோளைத் தொட்டு, தன்புறம் திருப் பினான். அவள் கண்களில் இருந்து வழிந்த நீரை துடைத் தான்.

''சாரி.. சாரி தருண்'' என மேலும் பேச முடியாமல் அவன் மார்பில் சாய்ந்து அழத் தொடங்கினாள் ஹரிணி.

''ஏய்.. என்ன இது.. ஒரு ஸ்கூல் மிஸ் இப்படி எப்பப் பார் அழுதுகிட்டு...'' என்று அவள் தலையை வருடிய படி சமாதானப்படுத்தினான்.

அழுகையும் சிரிப்பும் கலந்து வர ஹரிணி, அவனைக் காதலோடு பார்த்தாள்.

''தருண்... உண்மை தெரியாம நான். நான் உங்களை ரொம்ப மோசமா திட்டிட்டேன் சாரி'' என்றாள் மெலிந்த குரலில்.

''பரவாயில்ல ஹரிணி. என் மேல இருக்கற உரிமை யில நீ என் மேல கோபப்படற, அப்படின்னு நினைச்சா எனக்கு சந்தோஷமா இருக்கு.

''இதுவரை யாரும் என்னை இப்படி திட்டினதில்ல. பட் நீ என்னைக் கடிந்து பேசறப்ப உனக்கு என் மேல எவ்வளவு

காதல் அப்படின்னு எனக்குப் புரியுது'' என்றான் அவள் நெற்றியில் புரண்ட கேசத்தை ஒதுக்கியபடி.

''தேங்க்ஸ் தருண் ஐ ஆம் லக்கி. உங்கள மாதிரி ஒருத்தர வாழ்க்கைத் துணையா அடையறதுக்கு. யார் தருண் இந்தப் பார்சலை அனுப்பியிருப்பா?'' என்றாள் ஆச்சரியமாக.

''ம்.. ம்.. தாரிணி வேலையா இருக்கும். நான் உன்னைக் கல்யாணம் செய்தது அவளுக்குப் பிடிக்கலை அதான். ரிசப்ஷனில உங்க அப்பாவைப் பார்த்திருப்பா. அப்பவே... இந்தப் பிளானைப் போட்டிருப்பா'' என்றான் கசந்த குரலில்.

''ம்.. ம்.. நடக்கறது எல்லாம் நன்மைக்கே அப்படிங்கற மாதிரி. இதுவும் நல்லதுக்கே..'' என ஹரிணி அவன் கைகளைப் பற்றினாள்.

''நீ என் கூட இருந்தா எப்பவுமே எனக்கு நல்லது தான். இனிமேலாவது டீச்சரம்மாவுக்கு என் மேல சந்தேகம் எதுவும் வராதுன்னு நினைக்கறேன். ம்.. ம்.. இனிமேலாவது என்னை நல்லா கவனிப்பாங்க. அப்படின்னு நினைக்கறேன்'' என்றான் கண்களில் குறும்பு மின்ன தருண்.

''ம்... ம்... நல்லா கவனிக்கறதுன்னா என்ன?'' என்றாள் கண்கள் அகல ஹரிணி.

''அடக் கடவுளே. இந்த மாதிரி ஒரு மக்கு மிஸ்ஸை வெச்சுகிட்டு என் பாடு கஷ்டம் தான்'' என்று சிரித்தபடி அவள் கையைப் பற்றினான் தருண்.

ஹரிணியும் உடன் சிரிக்க, அந்த இடமே சிரிப்பு அலைகளால் நிரம்பியிருந்தது. வெளியே இருந்த மாமரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு குயில் இனிமையாகப் பாடியபடி பறந்தது. இனி இவர்கள் வாழ்க்கையில் எப்போதும் இனிமைதான்!

*